டி.எஸ்.சொக்கலிங்கம்
எழுதிய



1945

தமிழர் புரட்சி

பத்திரிகைத்துறை பேராசிரியர்

டி. எஸ். சொக்கலிங்கம்

எழுதிய

1945
தமிழர் புரட்சி

மயிலைநாதன் திரட்டியது

*

வெளியிடுவோர் :

" ஜனயுகம் " காரியாலயம்

259, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

முதற் பதிப்பு: நவம்பர், 1957

சமர்ப்பணம்

*

நான் பத்திரிகை தொழிலுக்கு வர காரணமாய் இருந்தவரும், தமிழ் நாட்டின் மாபெரும் தேச பக்தருமான டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அவர்களின் நினைவாக இந் நூலை சமர்ப்பிக்கின்றேன்.

----டி. எஸ். சொக்கலிங்கம்

விலை ரூ. ~~2-0-0~~ 1-00

பேராசிரியரின் இதர நூல்கள்:

ஜவாஹர்லால் நேரு, நேதாஜி போஸ், காமராஜ்
அல்லி விஜயம், எனது முதல் சந்திப்பு
பாய் பரமானந்தன், கர்ப்பத்தடை
முதலியன

THIS TAMIL BOOK ENTITLED
"1945 TAMILS REVOLUTION"
IS PUBLISHED BY
THE 'JANAYUGAM' OFFICE, MADRAS-1.
(PHONE: 55706)

உதயம் அச்சகம், சென்னை-2.

பதிப்புரை

இது வரை நாங்கள் வெளியிட்ட நூல்களெல்லாம் கடமையுணர்ச்சியால் உந்தப்பட்டு வெளிவந்தவையாகும். ஆனல் "1945 தமிழர் புரட்சி" எனும் இந்நூலே ஒரு கௌரவத்தை தேடிக்கொள்ளுவதற்கென்றே "ஜனயுகம்" காரியாலயத்தார் மூலம் வெளியிடுகிறோம். அதற்குக் காரணம், இந்நூல் தமிழகத்தின் தலை சிறந்த வீரர்களுள் ஒருவரால் எழுதப்பட்டுள்ளது என்பதுதான். ஒரு காலத்தில் தமிழர்கள் வீரமுள்ளவர்களாக இருந்திருக்கலாம். இது பழங்கதை. ஆனல், இன்றைய நிலைமையில் தமிழகத்திற்குள்ள பஞ்சங்களுள் தலையாய பஞ்சமாய் இருப்பது, வீரர்கள் அதிகமில்லாத பஞ்சமேயாகும். இப்படிக் கூறுவதற்கு தமிழர்கள் என்ற முறையில் நாங்கள் வெட்கப்படவில்லை; வேதனையே கொள்ளுகின்றோம். ஏனெனில், உள்ளத்திலுள்ள உண்மையான கருத்துக்களை கூறுவதற்கு இன்றைக்கு எத்தனை பேர்கள் துணிவுடன் முன் வருகிறார்கள் என்பதை நாங்கள் நன்கறிவோம். உண்மையை எடுத்துச் சொன்னல் தங்களை பல விதமான ஆபத்துக்கள் சூழ்ந்துவிடும் என்கிற கோழைகளே இன்று தமிழக அரசியலில் மலிந்து கிடக்கிறார்கள். எழுத்தாளர் உலகமும் இதற்கு முற்றிலும் விதிவிலக்கானதல்ல.

வீரம் என்றாலே அச்சமின்றி அபாயகரமான பிரச்னைகளில் தலையிடுவதுதானு என்று சிலருக்கு கேட்கத் தோன்றும். அப்படியானல் உண்மையும் நியாயமும் நிறைந்துள்ள பிரச்னைகளை வேறு யார்தான் மேற்கொள்ள முடியும்? அப்படிச் செய்வது தானே வீரம்? பேராசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் அத்தகைய வீரத்திற்கு ஒரு இலக்கணமாய் திகழ்கிறார் என்பதை இந்நூலை வாசிக்கும்

நியாய புத்தியுள்ளவர்கள் ஏற்பார்கள். இவரைப் போன்றவர்கள் இன்று தமிழகத்தில் சிலர் தான் இருக்கிறார்கள். ஆம், வெகு சிலரே இருக்கிறார்கள். மனித வாழ்வில் இன்பத்திற்கான சந்தர்ப்பங்கள் மிக சொற்பம். அத்தகைய சந்தர்ப்பங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, அனந்தமாயுள்ள வீரத்திற்கான சந்தர்ப்பங்களை தயங்காமல் மனவுறுதியோடு ஏற்றிருக்கிறார் பேராசிரியர். அந்தசந்தர்ப்மகங்களோ,'முழுக்க முழுக்க அபாயத்தை வரவேற்பதைப் போன்ற சந்தர்ப்பங்களாகவே உள்ளன. நமது இக்கூற்றை மெய்ப்பிக்க இந்நூல் ஒரு எடுத்துக்காட்டு.

வீரத்தின் பிரதான அம்சம் சமயோசித அறிவேயாகும். இந்நூலில் அதனை நெடுகக் காணலாம். இந்நூலிலுள்ள வாசகங்களில் தான் எவ்வளவு தெளிவும் உண்மையும் நிறைந்துள்ளன ! வீரர்களுடைய வாசகங்களில்தான் இவை இருக்கும். இத்தகையோருடைய எழுத்துக்கள்தான் இன்று நமக்குத்தேவை. இந்த தேவை-பஞ்சம் நீங்குமானால், நம் தாயகத்திற்குள்ள சகல பஞ்சங்களும் பகலவனைக் கண்ட பனிபோல் விரைவில் நீங்கும். இதில் எங்களுக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

இவ்வளவு காரணங்களையும் முன்னிட்டே நாங்கள் பேராசிரியரின் இந்நூலை வெளியிட முயற்சித்தோம்; வெற்றியும் கண்டோம். இதனை வெளியிட எமக்குக் கிடைத்த அனுமதியை பெறுதற்கரிய ஒரு கௌரவமாகவே கொள்ளுகிறோம். அதற்காக பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்நூலை தமிழகம் நல்ல முறையில் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக இந்நூலை அச்சிட்டுத்தந்த " உதயம் " அச்சகத்தினருக்கும், அழகிய சித்திரம் வரைந்துதவிய ஓவியர் 'பார்த்தன்' அவர்கட்கும் எமது நன்றி உரித்தாகுக !

வணக்கம்

பொறி பதிப்பகத்தார்

முன்னுரை

உலகத்திலுள்ள எந்த நாட்டின் போராட்ட சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, அங்கெல்லாம் பொதுவாக மக்கள் தங்கள் நலனை பாதுகாத்துக் கொள்ளவும், தங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த சக்திகளை வீழ்த்தவுமான பல புரட்சிகளை செய்திருப்பதைக் காணலாம் ஒவ்வொரு நாட்டினுடைய நிலைமைக்கும், சமூக அமைப்பிற்கும், காலத்திற்கும் தகுந்தவாறு அவரவர்களுடைய போராட்டங்களின் தன்மைகள் வேறுபட்டிருந்தாலும்; போரட்டங்களின் தத்துவம் மட்டும் ஒரே தன்மையதாய் இருப்பதைக் காணலாம். முதலில் 'வாழு-வாழ விடு' என்று ஆதிக்கக்காரர்களை நோக்கி மண்டியிட்டவர்கள், அதற்குரிய சிறிதளவு பயனையும் அடையாதபோது, தங்கள் ஒன்று பட்ட பலத்தினால் பிறகு எச்சரித்ததையும், அதற்கும் விட்டுக்கொடுக்காதபோது, தொடர்ந்து கிளர்ச்சியிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டதையும், எதற்குமே எதிரி பணியமாட்டான் என்கிற நிலைமை ஏற்பட்ட பின்பு, இறுதியாக ஒரு மகத்தான மாறுதலைக் காணும் பெரும் புரட்சிகளில் ஈடு பட்டதையும் சரித்திரம் நமக்கு போதிக்கும். நாட்டிற்கு நாடு நடந்த ஒவ்வொரு புரட்சிக்கும் போராட்டத்திற்கும் வெவ்வேறு பெயர்கள் சூட்டப் பட்டிருக்கலாம்: அடிமை-ஆண்டான் போராட்டமாகவோ, விவசாயி-நிலப்பிரபு போராட்டமாகவோ, தொழிலாளி-முதலாளி போராட்டமாகவோ,ஏழை-பணக்காரன் போராட்ட மாகவோ, அவை எத்தகைய பெயரைச் சூட்டப்பட்ட போராட்டமாக இருந்தாலும் சரி, அவை எல்லாமே அடக்கப் பட்டிருந்தோர் ஆதிக்கக்காரர்களை எதிர்த்து நடத்திய தன்மான போராட்டங்களாகவே இருந்திருப்பதைக் காணலாம்.

அந்த முறையில் தமிழ் நாட்டில் 1945-ஆம்ஆண்டு ஒரு மகத்தான புரட்சி நடந்திருக்கிறது. புரட்சி என்றாலே ரத்தக்களரி என்று பொருள் கொள்ள முடியாது; ஒரு பெரிய

மாறுதலேயே புரட்சி என்கிற வாசகம் குறிக்கும். அவரவர் நிலைக்கும், நினைப்பிற்கும், விருப்பத்திற்கும் தகுந்தாற்போல அந்த புரட்சிக்கு பல்வேறு பெயர்களை சூட்டியிருக்கலாம். அதனை ஒரு சாரார் 'காங்கிரஸுக்குள் பிராமணர்-பிராமணரல்லாதார் போராட்டம்' என்றோ, மற்றொரு சாரர் 'காமராஜ்-ராஜாஜி கோஷ்டிச் சண்டை' என்றோ, பிறிதொரு சாரார் 'தேசிய கோட்டைக்குள் ஆரிய-திராவிட போராட்டம்' என்றோ பல்வேறு பெயர்களிட்டு அழைத்திருக்கலாம். என்றாலும், அந்த புரட்சியில் நாம் மேலே கூறியுள்ள புரட்சிகளின் உள்ளடக்கத்தையும் தத்துவத்தையும் காணலாம்.

நம்முடைய சமூகத்தில் பன்னெடுங் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தவர்கள், மதத்தின் பெயராலும் ஜாதிகளின் பெயராலும் இழிவானவர்களாக கருதப்பட்டு வந்தவர்கள், போதிய திறமையோ தகுதியோ இல்லாதவர்கள் என்று சிறுமைப்படுத்தப்பட்டுவந்தவர்கள்,அவர்கள் எந்த ஸ்தாபன கட்டுக் கோப்புக்குள்ளாக பிணைக்கப்பட்டிருந்தாலும் சரி, எந்தப் போர்வையில் இருந்து கொண்டு எவரும் இனி தங்களை ஆதிக்கங்கொள்ள முடியாது என்பதை உணர்த்திய புரட்சியாகவே அது திகழ்கிறது; தேசியத்தின் பெயராலோ, சர்வ தேசியத்தின் பெயராலோ, இனி எவரும் எவர் மீதும் எக்காலத்தும் ஆதிக்கம் வகிக்க முடியாது என்பதை அந்த புரட்சி போதனை செய்கிறது; எளியோரை வலியோர் வாட்டி வதைக்கவோ, படித்த வர்க்கம் --- பணக்கார வர்க்கம் எனப்படுவோர் இனி எவரையுமே ஏய்த்துப் பிழைக்கவோ முடியாது என்பதை அந்த புரட்சி மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

அந்த புரட்சியின் வெளித்தோற்றத்தைக் கண்டு சிலர் எரிச்சல் கொண்டிருக்கலாம்; வேறு சிலர் சபித்தும் இருக்கலாம். ஆனல், நம்முடைய சமூக அமைப்பின் தன்மையையும், நம்முடைய சமூகத்தின் முதுகெலும்பாக உள்ள கீழ்த்தட்டிலிருக்கும் பெருவாரியான மக்களுக்கு ஜாதி-மத ஆசாரத்தின் பெயரால் இதுவரை இழைக்கப்பட்டு வந்

துள்ள கொடுமைகளின் வரலாற்றையும், அவர்கள் பொருளாதாரத் துறையில் பின்தங்கிக் கிடக்கும் தாழ் நிலையையும் சரித்திரக் கண்கொண்டு நியாய புத்தியுடன் சீர்தூக்கிப் பார்த்தால், அந்த புரட்சியின் உள்ளடக்கமான தத்துவத்தின் உயர்வை உதாசீனப்படுத்த முடியாது என்பதை உணரலாம்; அதற்குரிய உண்மையான காரணங்களை அறியலாம்; அதற்கு சரியான பரிகாரம் தான் என்ன என்பதையும் காணலாம்.

அந்த முறையிலே 1945-ஆம் ஆண்டில் தமிழ் நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெயரால் நடந்த அந்த புரட்சி எத்தகையது என்பதை அறிந்து கொள்ள '1945 தமிழர் புரட்சி' எனும் இந்நூல் பெரிதும் உதவுகிறது. ஏதோ சில குறிப்புகளை வைத்துக்கொண்டு, இன்றுள்ள நிலைமைக்குத் தகுந்தபடி காரணங்களை கற்பித்து, மிகைப்படுத்தியோ அல்லது எதையாவது குறைத்து மதிப்பிட்டோ எழுதப்பட்டதல்ல இந்நூல்; தமிழ் நாட்டின் தேசிய வளர்ச்சிக்கும், அரசியல் விழிப்பிற்கும், தமிழ் வசன அபிவிருத்திக்கும் காரணமாயுள்ள பெரியார்களுள் முன்னணியில் நிற்கும் பத்திரிகைத்துறை பேராசிரியர் உயர்திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள், தமது "தினசரி" பத்திரிகையில் '1945 புரட்சி' நடந்த காலத்தில், அவ்வப்போது எழுதி வந்துள்ள தலையங்கங்களின் தொகுப்பே இப்படி ஒரு நூல் வடிவாகத் திகழ்கிறது. சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமைகளை, சில சரித்திர ஆதாரங்களை வைத்துக்கொண்டு இன்று கணிப்பதை விட, அந்தந்த நேரங்களில் பேராசிரியர் தீட்டிய தலையங்கங்கள் ஆதார பூர்வமானதாகவும் (ஏன் அதிகார பூர்வமானது என்றும் கூறலாம்), அன்றிருந்த நிலைமைகளை தெளிவாக உணர்த்தக்கூடியதாகவும், அவற்றிற்குக் காரணம் என்ன என்பதை சரியாக நிர்ணயிக்க கூடியதாகவும் இருக்கும் என்பதை எவரும் மறுக்க இயலாது.

வன்மை மிகுந்த அவருடைய பேனா முனையில் உருவான இந்நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் ("தினசரி" தலையங்கங்கள்) நகைச்சுவை ததும்புவதையும், கூடவே தீவிர உணர்ச்சி பெருகிடுவதையும் காணலாம்; தாயகத்தின் மீதும் தம் மக்கள் மீதும் அவருக்குள்ள பாசத்

தையும் பற்றுதலையும் காணலாம்; மாசற்ற அவரது தேச பக்தியை நூல் முழுவதிலும் காணலாம்; எதிரிகளின் பொய்ப் பிரசாரங்களை அவர் உடனுக்குடன்--காலம் தாழ்த்தாமல் தவிடுபொடியாக்கி, அம்பலப்படுத்தி சந்தி சிரிக்க வைக்கும் அற்புதத்தை நெடுகக் காணலாம்; சுயநலமிகளிடமும் தேச விரோதிகளிடமும் அவர் காட்டும் தாட்சண்யமற்ற கண்டிப்பையும் கடுமையையும் எதிலும் காணலாம்; ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுகின்ற பல்வேறு பிரச்னைகளையும் சமாளிக்க தமிழ் நாட்டு தேசியவாதிகளுக்கு அவர் எத்தகைய யோசனைகளை கூறிவந்துள்ளார், எப்படியெப்படி வழிகாட்டியுள்ளார் என்பதை எங்கும் பார்க்கக் காணலாம்; இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழ் நாட்டின் எதிர்காலத்தை அவர் எவ்வளவு துல்லியமாக, தீர்க்க தரிசனமாக கண்டறிந்து வழிவகைகளை கூறிவந்துள்ளார் என்பதை ஆரம்பம் முதல் இறுதி வரையில் காணலாம். அவரது எழுத்துக்கள் இன்றைக்கும் எதிர்காலத்திற்கும் தமிழ் மக்களுக்கு தேவையானதொரு சிறந்த சிந்தனைக் களஞ்சியமாக, என்றென்றும் பாதுகாத்து வைக்கத் தகுந்த பொக்கிஷமாகத் திகழ்கிறது.

இதனை என்னால் இயன்ற வரையில் முறையாக ஒழுங்குபடுத்தி தேதி வாரியாக தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். தமிழகத்தின் ஒரு தலைசிறந்த பெருமன்னரின் எழுத்துக்களை தொகுத்தளிக்கும் வாய்ப்பு கிட்டியதற்காக நான் பெருமைப்படுகிறேன்; பெருமகிழ்ச்சி கொள்ளுகிறேன். இதைத் தொகுக்க அனுமதி அளித்த பேராசிரியருக்கு எனது உளம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சென்னை--1.
1-11-1957

அன்பன்,
மயிலைநாதன்

1945 தமிழர் புரட்சி

—❋—

1942 ஆகஸ்டு இயக்கம் காரணமாக பிரிட்டிஷ் சர்க்கார் தேசீயத் தலைவர்களை சிறையில் அடைத்து வைத்திருந்த காலத்தில், காங்கிரஸின் சுய ஆட்சி கோரிக்கையின் முக்கியத்துவத்தை உணராமல், ஆகஸ்டு தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று கூறியவர்களையும், காங்கிரஸ் தொலைந்தாக வேண்டுமென்று கூறியவர்களையும் குறிப்பிட்டு பேராசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் எழுதிய தலையங்கம் பின்வருமாறு :---

காங்கிரஸ் வாழ்க !

1942 ஆகஸ்டில் காங்கிரஸ் மீது சர்க்கார் அடக்கு முறைகளை பிரயோகித்ததை பார்த்து சந்தோஷ மடைந்த பேர்வழிகளும் உண்டு. "இதோடு காங்கிரஸ் தொலைந்தது" என்று அவர்கள் நினைத்தார்கள். காச்கிரஸ் மீது சர்க்கார் சாட்டிய குற்றங்களுக்கு அவர்களும் தாளம் போட்டார்கள். "இப்பேர்ப்பட்டவர்களிடம் இனி ஆட்சியை கொடுப்பது நடக்காது" என்று அக்காலத்தில் உள்நாட்டு மந்திரியாயிருந்த மாக்ஸ்வெல் உறுமினார். நடந்ததற்கு மன்னிப்பு கேட்டு, இனி அப்படி செய்வதில்லை என்பதற்கு வாக்குறுதியும் வேண்டுமென்று லார்ட் லின்லித்கோ ஆர்ப்பாட்டம் செய்தார். ஜின்னாவும் சர்க்காருடன் சேர்ந்து கொண்டு, ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்கினால் தான், மகாத்மாவுடன் பேச முடியும் என்று சொன்னார். இவ்வளவு தாக்குதல்களையும் காங்கிரஸ் தாங்கிக்கொண்டது. அதனால்

காங்கிரஸ் நசுங்கிவிட வில்லை. 1942-ல் காங்கிரஸ் தொலைந்து போயிற்று என்று நினைத்தவர்கள் இன்று ஏமாந்தார்கள். காங்கிரஸ் நசுங்கி போயிற்றென்றோ, மாண்டு போயிற்றென்றோ யாராவது சொன்னால், அதை நீங்கள் நம்ப வேண்டாம் என்று ஜவாஹர் கர்ஜிக்கிறார். அது மட்டுமல்ல; 1942-ல் உயிரை தியாகஞ் செய்தவர்களுக்கும், இன்னம் ஜெயிலில் இருப்பவர்களுக்கும் தமது மரியாதையை தெரிவிக்கிறார்.

இதுதான் ரொம்ப முக்கியமானது. செய்த காரியம் சரியா, தப்பா என்பது வேறு விஷயம். “அவர்கள் தங்கள் நாட்டின் விடுதலைக்காக தியாகங்கள் செய்ததற்காக நான் தலை வணங்குகிறேன்” என்று ஜவாஹர் சொல்லுகிறார். இந்த வார்த்தைகள் உயிர் துறந்தவர்களின் பந்துக்களுக்கும், ஜெயிலில் இன்னம் வாடிக் கொண்டிருப்பவர்களுக்கும், தூக்கு மேடையை எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் தேவாமிர்தம் போல இருக்கும். யார் என்ன சொன்னாலும் சரி, 1942-ல் கஷ்ட நஷ்டமடைந்தவர்களுக்கு இந்த தேசமே கடமைப்பட்டிருக்கிறது. இன்று பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்கு அதிக சுதந்திரம் கொடுக்க முன் வருகிறார்கள் என்றால், அதற்கு காரணம் காங்கிரஸ்காரர்கள் செய்த தியாகமேயாகும். முஸ்லிம் லீகின் உருட்டலுக்காக பிரிட்டிஷ் சர்க்கார் எதுவும் செய்ய வில்லை. ஏனெனில், ராஜீய சமரசம் செய்யும்படி பிரிட்டிஷ் சர்க்காரை கட்டாயப்படுத்துவது காங்கிரஸின் தியாகந்தான். அந்த தியாகத்தின் காரணத்தினால் பலன்கள் வரும்போது, அப்பொழுது தான் லீகர்கள் குறுக்கிட்டு தங்கள் பங்கை பற்றி பயமுறுத்துகிறார்கள். லீகர்கள் தங்களுடைய முயற்சியினால் பலன் பெற முடியுமானால், முன்னாலேயே அவர்கள் பாகிஸ்தான் பெற்றிருக்க வேண்டும். எனவே தற்சமயம் எது கிடைப்பதாய் இருந்தாலும், அதற்கு காரணம் காங்கிரஸின் தியாகந்தான் என்பதை அவர்கள் உணர வேண்டும். அம்மாதிரி உணர்ந்தால், ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்க

வேண்டுமென்ற பல்லவியை அவர்களும் பாடிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்காமலே மகாத்மாவுடன் ஜின்னு பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இன்று ஆகஸ்ட் திர்மானத்தை பற்றி எதுவும் பேசாமலே காங்கிரஸையும் மகாத்மாவையும் வைஸ்ராய் அழைத்திருக்கிருர். காங்கிரஸ் மாண்டு போகவில்லை ; முன்னைவிட அதிகமான பலமுள்ளதாகவே இன்று விளங்குகிறது. இவ்வளவு தூரம் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியிருப்பது காங்கிரஸ்தான். இன்னம் இந்தியாவை உயர்த்தவே அது பாடுபடுகிறது. இதை அறிந்து முஸ்லிம் லிக் நடந்தால் சிம்லா மகாநாட்டில் இந்தியா பெரிய பெரிய காரியங்களை சாதிக்கலாம். லிகர்களுக்கு இது புரியுமா? தாங்கள் சொல்லுகிறபடி கேட்காவிட்டால் இப்பொழுதுள்ள ஆட்சியே போதும் என்பதுதான் லிகர்கள் கட்சி. இப்பொழுதுள்ள ஆட்சியை பற்றி ஜவாஹர் நன்ருய் வர்ணித்திருக்கிருர். ஆட்சியை நடத்துகிறவர்கள் நாணயஸ்தர்களாய் இருந்தாலும், ஆட்சி முழுவதும் ஊழல் நிறைந்திருக்கிறது என்பதே ஜவாஹரின் அபிப்பிராயம். வங்காள பஞ்சம் ஒன்றே அதை நிரூபிக்க போதுமானது. ஆகவே ஆட்சியை மாற்றவேண்டுமென்று ஜவாஹர் சொல்லுகிருர். எத்தனை பஞ்சம் வந்தாலும் சரி இந்த ஆட்சியே போதுமென்று லிகர்கள் சொல்லுவதாய் இருந்தால், கடவுள்தான் அவர்களுக்கு கண் திறக்கவேண்டும். ஆனல் ஒரு விஷயம். லிகர்கள் என்ன தான் முட்டுக்கட்டை போட்டாலும், தற்கால ஆட்சியை மாற்ருமல் காங்கிரஸ் விடப்போவதில்லை. —(20-6-'45)

* * *

ஆகஸ்டு இயக்கம் காரணமாக பிரிட்டிஷ் சர்க்கார் தலைவர்களை சிறைபடுத்தி வைத்திருந்ததைத் தொடர்ந்து இந்த உபகண்டம் பூராவும் பிரிட்டெழுந்த பொது ஜன எழுச்சியைக் கண்ட பிரிட்டிஷார் தலைவர்களுடன் சமரசம் பேச தயாராஞர்கள். அவர்கள் இந்த முயற்சியில் வெற்றி காண்பதற்காக முதற்படியாக தலைவர்களை ஒவ்வொருவராக

விடுதலை செய்யப்பட்டார்கள். அப்படி விடுதலையானவர்களில் இன்றைய முதலமைச்சர் உயர்திரு. கே. காமராஜ் அவர்களும் ஒருவர். அந்த நேரத்தில் பேராசிரியர் தீட்டிய தலையங்கம் இது :—

ஸ்ரீ காமராஜ் விடுதலை

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ. காமராஜ் விடுதலையானதை வரவேற்கிறோம். சிம்லா மகாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள வேண்டுமானால், எல்லா காங்கிரஸ்காரர்களையும் முதலில் விடுதலை செய்யவேண்டுமென்று வற்புறுத்த காங்கிரசுக்கு உரிமையுண்டு. என்றாலும் அதனால் மகாநாட்டுக்கு இடையூறு வரவேண்டாம் என்பதற்காக அதை வற்புறுத்தவில்லை. இம்மாதிரி ராஷ்டிரபதி சொல்லுகிறார். இவ்வளவு தூரம் காங்கிரஸ் பெருந்தன்மையோடு நடந்து கொண்டது. இதன் மூலம் தங்கள் கடமையை செய்ய வேண்டிய அவசியத்தில் சர்க்காரை காங்கிரஸ் வைத்துவிட்டது. அதாவது, காங்கிரஸ் கேட்காவிட்டாலும் தாங்களாக காங்கிரஸ்காரர்களை விடுதலை செய்ய வேண்டிய கடமை சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. சென்னை சர்க்கார் இதை உணர்ந்திருப்பதை கண்டு சந்தோஷமடைகிறோம். கொஞ்சங் கொஞ்சமாக காங்கிரஸ்காரர்களை சென்னை சர்க்கார் விடுதலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னை சர்க்காரே இந்த காரியத்தை செய்கிறார்களா, அல்லது இந்திய சர்க்காரின் உத்தரவுப்படி செய்கிறார்களா என்று கேட்கவில்லை. எப்படி இருந்தால் என்ன? விசாரணை எதுவுமில்லாமல் வருஷக் கணக்காய் ஜெயிலில் போட்டிருப்பது ரொம்ப அநியாயம். காங்கிரஸ்காரர்களை ஜெயிலில் போட்டதால் தேசமெங்கும் ஊழல்கள் பெருகிவிட்டன. எத்தனையோ கண்ட்ரோல் உத்தரவு போட்டும் பலன் ஏற்படவில்லை. சர்தார் பட்டேல் சொல்லுகிறபடி சர்க்காருக்கு கண்ட்ரோல் ஏற்பட்டிருக்கிறதே

யோரிய லஞ்சத்திற்கு கன்ட்ரோல் இல்லை. அதுபாட்டிற்கு வளர்ந்து கொண்டே போகிறது. இதனால்தான் காங்கிரஸி டம் எப்படியாவது பதவியை கொடுத்துவிட வேண்டு மென்று பிரிட்டிஷ் சர்க்கார் தவிக்கிறார்கள். இந்த நிலைமை யில், சிம்லா மகாநாடு ஆரம்பமானதுமே, காங்கிரஸ்காரர்களை விடுதலை செய்ய ஆரம்பித்திருப்பது ஆச்சரியமல்ல.

காங்கிரஸ்காரர்கள் ஜெயிலிலிருந்த இத்தனை வருஷங்களி லும் இந்த தேசு ஆட்சியில் லீகும், ஹிந்து மகாசபையும் கலந்தே இருக்கின்றன. சர்க்காரில் கலந்து கொள்ளவில்லை யென்று லீக் சொல்லி வந்த போதிலும், வைஸ்ராயின் நிர் வாக சபையிலுள்ள எல்லா முஸ்லிம்களும் லீகை ஆதரிப் பவர்கள்தான். உணவு மந்திரியாய் இருப்பவர் ஹிந்து மகா சபைக்காரர். வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்ட சமயத்தில் அவர்தான் உணவு மந்திரியாய் இருந்தார். அச்சமயம் வங் காளத்தில் லீக் மந்திரி சபைதான் இருந்தது. ஆகவே, வங்காள பஞ்சம் ஏற்பட்டதானது அந்த இரண்டு கட்சியா ரின் நிர்வாக ஊழலை அம்பலத்திற்கு கொண்டு வந்தது. பஞ் சத்தினல் மாண்டவர்கள் லட்சக்கணக்காய் இருந்தாலும் அநேக லீகர்கள் கோடிக்கணக்காய் சம்பாதித்து விட்டார் கள். காங்கிரஸ் தலைவர்கள் வெளியில் இருந்து, காங்கிரஸ் நிர்வாகம் நடந்து வந்திருக்குமானல், இந்த கோர சம்பவம் ஏற்பட்டிருக்கவே முடியாது. எனவே, காங்கிரஸ்காரர்களை ஜெயிலில் வைத்திருப்பது தவறு என்பதை சர்க்கார் உணர்ந்து தற்சமயம் விடுதலை செய்து வருவதைக் கண்டு சந்தோஷமடைகிறோம். ஸ்ரீ. காமராஜ் தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர். உண்மையான தேச பக்தர். அவர் வெளியே இல்லாததால் காங்கிரசுக்குள் எத்தனையோ பிரச்னைகள் ஏற்பட்டன. அவருடைய விடுதலையினல் அந்த பிரச்னைகள் அடிபட்டுப் போகின்றன. முக்கியமான காரியங்கள் நடைபெறவிருக்கும் இச்சமயத்தில் ஸ்ரீ. காம ராஜின் விடுதலை தமிழ் நாட்டின் ராஜீயத்திற்கு பேருதவி யாய் இருக்கும். —(2-7-'45)

❋ ❋ ❋

திருச்செங்கோட்டிலிருந்து ராஜாஜி

“ஆகஸ்டு இயக்க சமயத்தில் காங்கிரஸிலிருந்து விலகிய ராஜாஜி இச்சமயம் மீண்டும் காங்கிரஸில் சேர முயற்சித்தார். அதை ஏராளமான பேர்கள் எதிர்த்தார்கள். எதிர்த்ததற்கான காரணத்தை கவனிக்கவேண்டும்.

1942-மே மாதம் அலகாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெற்றது, பாகிஸ்தானைப் பற்றி ராஜாஜி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அது நிறைவேறவில்லை. சாதகமாக 15 வோட்டுகள்தான் கிடைத்தன. பாதகமாக 120 வோட்டுகள் விழுந்தன. அதனால் ராஜாஜி காரியக் கமிட்டியிலிருந்தும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்தும் ராஜிநாமா செய்தார். அதோடு அவர் நிற்கவில்லை. தீர்மானம் தோற்றுப் போனாலும், தம்முடைய கிளர்ச்சியை விடப்போவதில்லை என்று ராஜாஜி பயமுறுத்தினார். தென்னாட்டை பிரித்துவிடப்போவதாகவும் வீம்பு கூறினார். இவையெல்லாம் மக்களுக்கு கொதிப்பை உண்டுபண்ணின. காங்கிரஸுக்கு விரோதமாக ராஜாஜி இப்படி கிளம்பியதைப் பார்த்து அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு காங்கிரஸ் நோட்டீஸ் கொடுத்தது. ஜூலை 12-ந்தேதி மகாத்மாவே ராஜாஜிக்கு கடிதம் எழுதி, காங்கிரஸ் அங்கத்தினர் பதவியையும், அசெம்பளி பதவியையும் ராஜிநாமாசெய்யும்படி சொன்னார். ராஜாஜி ராஜிநாமா செய்தார். பின்னால் அதே வருஷம் ஆகஸ்டு மாதம் நடந்த போராட்டத்தையும் எதிர்த்தார். எதிர்த்தது மட்டுமல்ல, ஜெயிலுக்கு சென்றவர்களை கேலியாயும் பேசினார். இவ்வளவும் செய்தது போதாதென்று, சென்னையில் மந்திரி சபையை அமைக்க ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை மூலம் முயற்சியும் செய்தார். இவையெல்லாம் தேசபக்தர்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணின. இவ்வளவையும் செய்த ராஜாஜி, பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸோடு சமரசம் பேச ஆரம்பிக்க சமயத்

தில் மறுபடியும் காங்கிரஸில் சேர முயற்சித்தால், ஜெயிலில் வாடிய தேசபக்தர்களுக்கு எவ்வளவு மனவருத்தம் ஏற்பட்டிருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை,

காங்கிரஸிலிருந்து ராஜிநாமா செய்த ராஜாஜி, திடீரென்று திருச்செங்கோட்டிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக ஒரு செய்தி வந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவருக்கு தெரியாமலேயே திருச்செங்கோடு தேர்தல் நடைபெற்றது தான் பெரிய அதிசயம். இதைப் பார்த்ததும் திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று காமராஜ் ஒரு அறிக்கை விட்டார். ஏற்கெனவே இருந்த எதிர்ப்பை திருச்செங்கோடு தேர்தல் இன்னும் அதிகமாய் வளர்த்தது. ராஜாஜியை காங்கிரஸில் சேர்க்கக்கூடாது என்ற கிளர்ச்சி பலமாய் ஓங்கியது"—("காமராஜ்" என்ற நூலில் பேராசிரியர்)

* * *

ராஜாஜி விவகாரம்

ராஜாஜி விவகாரம் பற்றி தமிழ் நாட்டில் இன்னமும் விவாதம் நடந்து கொண்டிருப்பது வருந்தத்தக்கது. ராஜாஜி காங்கிரஸில் சேரலாமா கூடாதா என்பது பிரச்னையே அல்ல. அவரை காங்கிரஸில் சேரக்கூடாது என்று யரோ தடுப்பதாக சிலர் பிரசாரம் செய்து வருகிறார்கள். அது வெறும் புளுகு. யார் வேண்டுமானாலும் காங்கிரஸில் சேரலாம், அதை யாராலும் தடுக்க முடியாது. சந்தேகம் யாருக்காவது இருந்தால், தமிழ்நாடு காங்கிரஸ் பிரஸிடென்ட் ஸ்ரீ. காமராஜ் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலிருந்து அந்த சந்தேகம் நீங்கிவிடும். அப்படியானால் தற்சமயம் வாதப் பிரதிவாதங்கள் எதற்காகத்தான் நடக்கின்றன? திருச்செங்கோடு தேர்தலுக்காக நடக்கிறதா? அந்த தேர்தல் செல்லுபடியாகாதென்று தமிழ்நாடு காரியக் கமிட்டி தீர்மானம் செய்திருக்கிறது. மேலும் அந்த தேர்தல்

சட்டப்படி நடந்ததா இல்லையா என்ற சர்ச்சைக்கும் தற்சமயம் அவசியமில்லை. ஏனெனில் பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, மாகாண கமிட்டிகளிலுள்ள காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்ய ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. மாகாண கமிட்டி அங்கத்தினர்கள் கூடி காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்யவேண்டும் என்பதுதான் அந்த தீர்மானம். எனவே ராஜாஜி மாகாண கமிட்டிக்கு வர வேண்டுமென்று யாராவது விரும்பினால், திருப்பரங்குன்றத்தில் நடக்கப்போகும் மாகாண கமிட்டியில் அவருடைய பெயரை பிரேரிக்கலாம். ஆகவே திருச்செங்கோடு தேர்தலை பற்றி இனியும் விவாதம் நடத்திக்கொண்டிருப்பது அர்த்தமில்லாத விஷயம். அப்படியானால் எதற்காகத்தான் தற்சமயம் வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன? ராஜாஜி மீண்டும் பிரதம மந்திரியாக வரவேண்டும் என்பது ஒரு காரணமாய் இருக்கலாம். ஆனால் அதை பகிரங்கமாக யாரும் இது வரை சொல்லவில்லை. காங்கிரஸுக்குள் அவரை வர விடாமல் தடுப்பதுபோல சிலர் பிரசாரம் செய்கிறார்களேயொழிய, பிரதம மந்திரியாக அவர் வரலாமா கூடாதா என்பதை பற்றி பகிரங்கமாக வாதப் பிரதி வாதங்கள் நடக்கவில்லை, அதுவே இந்த வாதங்களுக்கெல்லாம் அடிப்படையான காரணமாய் இருக்குமானால், இந்த கட்சி வாதங்களை ஆரம்பித்த புத்திசாலிகளைக் கண்டு இரங்க வேண்டும்.

ஏனெனில், பிரதம மந்திரியாக யார் வருவதென்பது தமிழ்நாடு காரியக் கமிட்டியின் கையில் இல்லை. அதுதான் ராஜாஜியை பிரதம மந்திரியாக வரவிடாமல் எதிர்த்து வருகிறதென்று நினைத்துக்கொண்டு அதை தாக்குவது விவேகமில்லாத வேலை. ஏனெனில் காரியக்கமிட்டியை தாக்குவதென்று ஆரம்பித்தால் தமிழ் நாட்டில் இரண்டு கட்சிகள் ஏற்படும். தமிழ் நாட்டிலிருந்து யாராவது ஒருவர் பிரதம மந்திரியாக வருவதென்றால் அவருக்கு தமிழ்நாட்டு

சட்ட சபை அங்கத்தினர்களின் பூர்ண ஆதரவு இருந்தாலொழிய அது சாத்தியமே இல்லை. ஏனெனில் எந்த தமிழ் நாட்டாராய் இருந்தாலும் ஆந்திரர்கள் கண்டிப்பாய் எதிர்ப்பார்கள். தமிழ் நாட்டார் பிளவில்லாமல் ஒரு குறிப்பிட்ட நபரை ஆதரிக்கிறார்கள் என்று தெரிந்தால்தான் தங்கள் எதிர்ப்பு பிரயோசனப் படாதென்று ஆந்திரர்கள் கண்டு கொண்டு சும்மா இருப்பார்கள். ஆகவே தமிழ் நாடு காரியக் கமிட்டியை தற்சமயம் தாக்கி பிரசாரம் செய்பவர்கள் தமிழ் நாட்டில் இரண்டு கட்சிகளை உண்டு பண்ணுகிறார்கள். அம்மாதிரி இரண்டு கட்சிகளாக பிரிந்தால், ஒரு கட்சிதான் ராஜாஜி பிரதம மந்திரியாக வருவதை ஆதரிக்கும். இம்மாதிரி பிளவு ஏற்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்ட ஆந்திரர்களில் பலர், ஒரு ஆந்திரரையே பிரதம மந்திரியாக கொண்டு வர முயற்சிப்பார்கள். ராஜாஜிக்கு வோட் கொடுக்க மாட்டார்கள். ஆகவே தமிழ் நாட்டில் பிளவு ஏற்படுவதால் ராஜாஜி உள்பட எந்த தமிழருமே பிரதம மந்திரியாக வர முடியாமல் போய்விடும். அப்படியானால் காரியக்கமிட்டியை எதிர்த்து நடக்கும் பிரசாரம் எந்த வழியில் ராஜாஜிக்கு உதவி செய்யப் போகிறது? எதுவுமில்லை. உதவிக்கு பதில் கெடுதியே செய்யும். எந்த விதமாக பார்த்தாலும் தற்சமயம் நடக்கும் வாதப்பிரதி வாதங்களுக்கு அவசியமே இல்லை. இதனால் தமிழ்நாட்டு காங்கிரஸ் வேலைகளுக்கு பாதகமே ஏற்படும். ராஜாஜிக்கு நன்மை செய்ய வேண்டுமென்றோ ஆதரவு தேட வேண்டுமென்றோ யாராவது விரும்பினால், அவர்கள் வாதப்பிரதி வாதங்களில் இறங்குவதால் கெடுதியே ஏற்படும். அவர்கள் வாயை மூடிக்கொண்டு சும்மா இருப்பதே நல்லது. —(16-10-45)

* * *

உண்மை பறி போகிறது !

யுத்தம் ஆரம்பித்தால் "உண்மை" என்ற சாதுமகன் முதல் முதலில் களபலியாய் இருக்குமென்று சொல்லுவ

துண்டு. தமிழ் நாட்டில் ஆரம்பமாயிருக்கும் ராஜாஜி விவகார பிரசார யுத்தத்தை பார்க்கும்போது, இதில் கூட அந்த "உண்மை" என்ற சரக்கு பலியாய் விட்டதாக தெரிகிறது. சென்ற ஞாயிறன்று வெளியான "கல்கி" பத்திரிகை "பட்டணம் பறி போகிறது" என்ற தலைப்புடன் தலையங்கம் எழுதியிருக்கிறது. ராஜாஜியின் சேவையை பற்றியோ, திறமையை பற்றியோ ஆட்சேபிப்பவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆனல், அதற்காக தமிழ் நாட்டில் சேவை செய்தவர்களோ, திறமையுள்ளவர்களோ கிடையாது போல எழுதுவது தமிழரை அவமதிப்பதாகும். அதோடு உண்மையை பலியிடுவதுமாகும். எதற்காக இந்த பிரசார யுத்தம் நடக்கிறது என்று கேட்டால் "கல்கி" விசித்திரமாக பதில் சொல்லுகிறது. பிரதம மந்திரி யார் என்னும் பிரச்னை இப்பொழுது கிளம்ப வேண்டியது இல்லை என்று கல்கி கூறுகிறது. ரொம்ப சந்தோஷம். அந்த சனியனை பற்றிய பேச்சே இப்பொழுது கிடையாதென்றல் பிரசார யுத்தம் இவ்வளவு மூர்க்கமாய் நடக்க வேண்டிய அவசியமே இல்லை.

"கல்கி" சொல்லுவது உண்மையானல், 'ராஜாஜிக்கு பதில் பட்டாபியா?' என்ற செய்தியை அவ்வளவு ஆத்திரத்தோடு பிரதானமாய் "கல்கி" பிரசுரிக்க வேண்டிய அவசியமென்ன? அது ஒரு புதிராகவே இருக்கிறது. என்றலும் கல்கி சொல்லுவதை ஒப்புக்கொள்ளுகிறோம். அப்படியானல் வேறு எதற்காகத்தான் யுத்தம் நடக்கிறது? திருச்செங்கோடு தேர்தல் தகாறில்தான் இந்த யுத்தமே ஆரம்பமாயிற்று. அதுதான் அடிப்படையான காரணமாய் இருக்குமா என்று பார்த்தால் அதையும் "கல்கி" மறுக்கிறது. "திருச்செங்கோடு தேர்தல் முக்கியமான விஷயமே அல்ல. அதை காரணமாகக்கொண்டு கட்சிகளின் பலாபலத்தைப் பரீட்சை செய்ய வேண்டிய அவசியமில்லை" என்று கல்கி சொல்லுகிறது. அட பாவமே, அப்படியானல் திருச்செங்கோடு தேர்தல் பிரச்னை திருப்பரங்குன்றம் கமிட்டி கூட்டத்தில்

வாய்போவதில்லையா? இந்த விஷயத்தில் கட்சி பலத்தை பரிட்சை செய்ய வேண்டிய அவசியமில்லையென்று எப் பொழுது "கல்கி"க்கு தோன்றியது? தமிழ் நாடெங்கு மிருந்து தன்னுடைய பிரசாரகர்களின் ரகசிய அறிக்கை கிடைத்த பின்புதான் தன் பலமும் மாற்ருன் பலமும் தெரிந்ததாயிருக்கலாம். அப்படியானுல், அதைப்பற்றிகுறை சொல்ல நாம் விரும்பவில்லை. ஏனெனில், டங்கொர்க் செய் கிறவர்களை விரட்டிக்கொண்டு போவதில் அர்த்தமில்லை. அது சரியல்ல. முன்பே திருச்செங்கோடு தேர்தலை முக்கியமான விஷயமாக தான் கருதவில்லை என்று "கல்கி" சொல்லலாம். அது உண்மையானல் செப்டம்பர் 16வ கல்கி எழுதிய "பெரிய பதவியும் சின்ன புத்தியும்" என்ற மகா அற்பத்தனமான அந்த தலையங்கம் அவசியமில்லையே! திருச்செங்கெடு தேர்தலுக்கான வசைமாரிகளை தவிர வேறு அதில் என்ன இருக்கிறது? இருந்தாலும் "கல்கி" சொல்லும் சமாதானத்தை இதிலும் ஏற்றுக்கொள்ளுகிருேம். அப்படி யானல் இந்த பிரசார யுத்தத்திற்கு வேறு என்னதான் காரணம்?

இதற்கு "கல்கி" சென்ற வாரப் பத்திரிகையில் பதில் சொல்லும்போது, 'ராஜாஜி வேண்டும் என்று சொல்லு கிறவர்கள் தமிழ்நாட்டின் நன்மையை முன்னிட்டே அவ் விதம் சொல்லுகிருர்கள். நம்மை பொறுத்த வரையில் இது தவிர வேறு காரணமே கிடையாது' என்று கூறு கிறது. வேறு காரணம் இல்லை யென்பதை அறிந்து ரொம்ப சந்தோஷமடைகிருேம். தமிழ் நாட்டின் நன்மையை முன்னிட்டு ராஜாஜி வரவேண்டும் என்று சொல்லுவதும் சிறந்த லட்சியந்தான். ஆனல் அதற்காக மற்றவர்களை எதற்காக "கல்கி" அவமானப்படுத்த வேண்டும் என்பது தான் புரியவில்லை. அவமானப்படுத்துவது மட்டுமல்ல, தன்னுடைய பிரசார யுத்தத்தால் உண்மை என்ற அரும் பெருள் வஸ்துவை பரலோகம் அனுப்பவும் அஞ்சவில்லை. கல்கி கூறும் வாதங்களை கவனிப்போம்.

25 வருஷங்களுக்கு முன்னால் சென்னை மாகாணம் தேசிய துறையில் மிகவும் பின் வாங்கியிருந்ததாம். சென்னைக்கு இருளடைந்த மாகாணம் என்று பெயராம். ராஜாஜி வந்த பின்புதான் சென்னைக்கும் தமிழ்நாட்டுக்கும் பெயரும் பெருமையும் வந்தனவாம்.

இது சரித்திரம் அறியாதவர்களின் உளறல். 25 வருஷங்களுக்கு முன்னால் இந்தியா முழுவதுமே சென்னை மாதிரிதான் இருந்தது. எல்லா மாகாணங்களுமே சென்னை மாதிரிதான் இருளடைந்து இருந்தன. மகாத்மா என்ற சூரியன் 25 வருஷங்களுக்கு முன்னால் ராஜீயத்தில் பிரவேசித்தார். இந்தியா முழுவதும் பிரகாசமடைந்தது. மகாத்மாதான் அந்த பிரகாசத்திற்கு காரணம். தவிரவும் "கல்கி" சொல்லுகிறபடி சென்னை மாகாணம் 25 வருஷங்களுக்கு முன்னால் மற்ற மாகாணங்களைவிட இருளடைந்திருக்கவில்லை. இந்திய தேசீய காங்கிரஸை தோற்றுவிப்பதற்கான முக்கியமான கூட்டங்கள் சென்னையில்தான் நடந்தன. பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸில் முதல் தீர்மானத்தை பிரேரித்தவர் சென்னை வாசியான ஸ்ரீ. ஜி சுப்பிரமணிய ஐயர்தான். முதல் சுதேசி கப்பல் கம்பெனியை ஆரம்பித்தவர் சென்னை வாசியான ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளைதான். எனவே வெகு காலத்திற்கு முன்பேயே சென்னையும் தமிழ்நாடும் பிரகாசமாய்த்தான் இருந்தன. மற்ற மாகாணங்களைவிட அதிகமான பிரகாசத்தோடும் இருந்தன. அந்த பிரகாசத்திற்கு காரணமான ஐயரும், பிள்ளையும் இந்தியா வெங்கும் பிரபலமாய் இருந்தார்கள். சென்னை இருளடைந்திருக்கவில்லை. அடுத்த விஷயத்தைக் கவனிப்போம்.

கராச்சியிலுள்ள "டெய்லி கெஜட்" என்ற பத்திரிகை ராஜாஜியை எதிர்ப்பவர்களை வெகு மென்மையாய் கண்டிக்கிறது என்று "கல்கி" சொல்லுகிறது. அதோடு நிறுத்தியிருந்தால் நன்றாய் இருந்திருக்கும். அப்படி செய்யவில்லை. உண்மையின் சோதனைக்காக தமது வாழ்க்கையையே

அர்ப்பனாய் செய்தாகாந்ரானின் "சத்திய சோதனை" என்ற புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்த "கல்கி" ஆசிரியர், அந்த டெயிலி கெஜட் ஆசிரியர் தமிழ் நாட்டை சேர்ந்தவர் அல்ல என்று சத்தியம் செய்கிறார். ராஜாஜியை குறித்து இவ்வளவு பரிந்து எழுதுவதற்கு அந்த டெயிலி கெஜட் ஆசிரியருக்கு வேறு எக்காரணமும் இல்லையென்றும், வடக்கேயுள்ளவர்களின் மனம் எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது, ராஜாஜியிடம் அவர்களுடைய மதிப்பு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதையே இது காட்டுகிறதென்றும் கல்கி சொல்லுகிறது.

இவ்வளவும் பச்சை புளுகுகள். ஏனெனில் டெயிலி கெஜட் ஆசிரியர் வடநாட்டார் அல்ல. அசல் தமிழர்; மதுரையை சேர்ந்தவர். அவர் பெயர் மந்திரேஸ்வர சர்மா என்ற எம். எஸ். எம். சர்மா. எத்தனையோ பத்திரிகாலயங்களிலிருந்து குட்டிக்கரணம் அடித்து, கடைசியில் டெய்லி கெஜட்டிற்கு போய் சேர்ந்திருக்கிறார். பத்திரிகையாளர்கள் எல்லாரும் அவரை அறிவார்கள். அவர் மேலே சொல்லியபடி எழுதியதை கண்டு ஆச்சரியப்பட மாட்டார்கள். அதற்கு அடுத்த வாதத்தை கவனிப்போம்.

தமிழ்நாட்டு காங்கிரஸுக்கு ராஜாஜியின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதை காட்டக்கூடிய சம்பவம் ஒன்று சென்ற வாரம் நடந்திருப்பதாக "கல்கி" சொல்லுகிறது. அதாவது ஸ்ரீ. சத்தியமூர்த்தி புகழுடன் வகித்து வந்த சென்னை நகர் அசெம்பிளி ஸ்தானத்திற்கு குண்டூர் நரசிம்மராவ் என்ற ஆந்திரர் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறாராம். ஆந்திராவோடு சென்னையை சேர்ப்பதற்கு இது முதல் படியாம். தமிழ் நாட்டின் நலன்களை பாதுகாப்பதில் கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டுமென்று "கல்கி" எச்சரிக்கை செய்திருந்ததாம். அது ரொம்ப அவசியமானதென்று இப்பொழுது தெரிந்து விட்டதாம். இதை பார்க்கும் போது "பட்டணம் பறிபோகிறதே!" என்ற எண்ணம் "கல்கி" க்கு தோன்றுகிறதாம். இதையெல்லாம்

முன்னிட்டுத்தான் ராஜாஜியின் காங்கிரஸ் தொண்டு தமிழ் நாட்டுக்கு அவசியமானதென்று அது கருதுகிறதாம்.

இதை பார்த்தால், ராஜாஜியை இழுத்து வைத்து அவமானப்படுத்த வேண்டுமென்ற சூழ்ச்சியோடு "கல்கி" எழுதுகிறதா, அல்லது அறியாத்தனமாக ராஜாஜியை அவமானப்படுத்துகிறதா என்பது புரிய வில்லை. ஏனெனில் சென்னைக்கு யாரை நிறுத்தப்போகிறார்கள் என்பதும், யாரை தமிழ் நாடு கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது என்பதும் இனிமேல்தான் தெரியவேண்டும். குண்டூர் நரசிம்மராவை நிற்பதாய் வைத்துக் கொள்ளுவோம். அதனால் என்ன குடி முழுகி போய்விடும்? ஆந்திராகாரர் வகித்து வந்த "வர்த்தகத் தொகுதி" தமிழரான ஸ்ரீ. ராமலிங்கம் செட்டியாருக்கு கிடைக்கவில்லையா? இதனால் 'வர்த்தகம் பறி போகிறது' என்று ஆந்திரர்கள் கூச்சல் போட்டால், அதை நியாய மென்று "கல்கி" ஒப்புக்கொள்ளுமா? அது கிடக்கட்டும். புகழ்பெற்ற சத்தியமூர்த்தியின் ஸ்தானத்திற்கு கெத்தா ரங்கைய நாயுடுவை முன்னால் போட்ட போது 'பட்டணம் பறி போகிற'தென்று "கல்கி" ஏன் கதறவில்லை? ராஜாஜி ஏன் அதை நிறுத்தவில்லை? அச்சமயம் பறிபோகாத பட்டணம், இப்பொழுது எப்படி பறிபோய்விடும்? குண்டூர் நரசிம்மராவை போட்டு விட்டால் பட்டணம் பறிபோகிறதென்று சொல்லுவது, மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதாக லீகர்கள் சொல்லுவதை போலவே இருக்கிறது. ராஜாஜியின் தொண்டு தமிழ் நாடு காங்கிரசுக்கு கிடைத்து வந்த காலத்தில் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயனை மதுரை—ராமநாதபுரம், திருநெல்வேலி தொகுதிக்கு நிறுத்தினார்கள். அந்த அம்மையாருக்கும் அந்த ஜில்லாக்களுக்கும் சம்பந்தமே இல்லை. அதனால் அந்த ஜில்லாக்களை கன்னடக்காரர்கள் விழுங்கப் பார்க்கிறார்கள் என்று சொல்லுவது பொருத்தமாய் இருக்குமா? அதை விட குண்டூர் நரசிம்மராவ் நியமனம் எந்த விதத்தில் மோசமானதாய் விட்டது? "கல்கி" கூறும் மற்றொரு அபாண்டத்தை பார்ப்போம்.

ஸ்ரீ காமராஜ் நாடார் சுற்றுப் பிரயாணத்தின் போது எதையோ அறிந்து விட்டதாகவும், அதனால் தான் சென்னைக்கு திரும்பியதும், ராஜாஜி காங்கிரஸுக்குள் வருவதில் ஆட்சேபணை இல்லையென்று அறிக்கை விட்டதாகவும் "கல்கி" சொல்லுகிறது. இதனால் காங்கிரஸை தங்கள் சொந்த சொத்தாக கருதும் குறுகிய நோக்கமுள்ளவர்களின் செல்வாக்கு ஸ்ரீ காமராஜ் நாடார் விஷயத்தில் குறைந்திருக்கிறதாம்.

இது ரொம்ப விஷமத்தனமான அபிப்பிராயம். பிரதம மந்திரி பதவியை தங்கள் சொத்தாக பாவிக்கிறவர்களுக்கு தான் இம்மாதிரி கோணல் புத்தி தோன்றும். சுற்றுப் பிரயாணத்தில் ஸ்ரீ காமராஜ் தெரிந்து கொண்டது ஒன்றே ஒன்றுதான். அது பிரதம மந்திரி பதவியை பற்றியதல்ல. யாரையோ காங்கிரஸுக்குள் வரவிடாமல் யாரோ தடுப்பதாக யாருடைய கூலிப் பட்டாளங்களோ ரொம்ப தீவிரமாக புளுகிணி பிரசாரம் செய்திருப்பதையே ஸ்ரீ. காமராஜ் கண்டார். அதை மறுப்பதற்காகவே அவர் சென்னை திரும்பியதும், யார் வேண்டுமானாலும் காங்கிரஸில் சேரலாம் என்று அறிக்கை வெளியிட்டார். தமிழ் நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டியில் ராஜாஜி மீது விரோதம் இல்லாதவர் ஒருவர் உண்டென்றால், அவர்தான் காமராஜ். அந்த கமிட்டியில் மந்திரி பதவிக்கு ஆசைப்படாதவர்கள் சிலராவது உண்டென்றால் காமராஜ்தான் அவர்களில் முதல் ஆசாமி. அப்பேர்ப்பட்டவரை கண்டபடி தூற்றுவதோ, தாக்குவதோ தமிழ்நாட்டின் நன்மைக்கு அடுத்ததல்ல. "கல்கி" கோஷ்டியார் இனியாவது அதை உணருவார்களென்று எதிர்பார்க்கிறோம். கடைசியாக "கல்கி" செய்யும் விண்ணப்பத்தை ஆலோசிப்போம்.

"காங்கிரஸுக்குள் ராஜாஜி வந்து தொண்டு செய்வதற்கு வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று "கல்கி" சொல்லுகிறது.

யாருக்கு யார் வசதி செய்து கொடுப்பது? ராஜாஜியை போன்றவர்களுக்கு எந்த வசதிதான் அவசியமானது? எதுவுமில்லை. 1937-ம் வருஷம் நடந்த சட்ட சபை தேர்தல் சமயத்தில் தமிழ் நாட்டு காங்கிரஸில் எந்த விதமான பதவியிலும் ராஜாஜி இல்லை. காங்கிரஸை விட்டு விலகி இருந்தவர் அப்பொழுதுதான் திரும்ப வந்து சேர்ந்தார். காங்கிரஸில் வசதி செய்து கொடுத்தபடியோ, ஸ்தானம் கொடுக்கும்படியோ அவர் கேட்கவில்லை. ஏனெனில் ராஜாஜிக்கு அவை அவசியமில்லை. பார்லிமெண்டரி போர்டில் ஸ்தானம் வேண்டுமென்றும் அவர் கேட்கவில்லை. அதனால் காங்கிரஸோடு சேர்ந்து வேலை செய்ய முடியாமல் போய் விட்டதா? அல்லது அபேட்சகர்களை தேர்ந்தெடுத்ததில் பெரிய தவறு ஏற்பட்டு விட்டதா? எதுவுமில்லை. அதே மாதிரி இப்பொழுதும் அவர் செய்யலாம். அப்படியிருக்க எதற்காக இந்தப் பிரசார யுத்தம் நடக்க வேண்டும்? எதற்காக காரியக் கமிட்டியை தூற்ற வேண்டும்? ஸ்தானங்கள் வேண்டுமென்று ஏன் வற்புறுத்த வேண்டும்! 1936-37-ல் இல்லாத அவசியம் இப்பொழுது என்ன வந்துவிட்டது? இவற்றையெல்லாம் கல்கி கோஷ்டியார் கவனிக்க வேண்டும்.

என்னவோ பறிபோகிறது போல் அலறி புடைத்துக் கொண்டு உண்மையை பறி கொடுத்து பிரசாரம் நடத்துவது தமிழ் நாட்டுக்கு நல்லதல்ல. பணத்தாலும், பத்திரிகை ஏஜென்ஸியாலும், துவேஷ பிரசாரத்தாலும் தமிழ்நாட்டை புரட்டி விடலாமென்று யாராவது நினைப்பதாய் இருந்தால், அவர்கள் முக்காடு போடப் போவது நிச்சயம். ராஜாஜிக்கு உண்மையாக அவர்கள் நன்மை செய்ய விரும்பினால், எதிர் பிரசாரத்தை உடனே அவர்கள் விட வேண்டும். இந்த உண்மை அவர்களுடைய மூளையில் ஏறவிட்டால், அதற்காக ரொம்ப ரொம்ப இரங்குகிறோம். —(22-10-45)

* * *

உடும்பு வேண்டாம்.

உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும் என்ற நிலைமைக்கு நாது கீழ்பாக்கம் சகோதர சஞ்சிகை வந்திருக்கிறது. 28உ பத்திரிகையில் அது எழுதும்போது, "தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் ராஜாஜி தடுப்பு பிரசாரத்தை நிறுத்த வேண்டு" மென்று முறையிடுகிறது. ஆகவே தமிழ் நாடு காரியக்கமிட்டியின் செல்வாக்கு எவ்வளவு இருக்கிறதென்பது இப்பொழுது தான் அதற்கு புரிந்திருப்பதாக தெரிகிறது. இந்த பிரசார யுத்தத்தை ஆரம்பித்ததே கீழ்பாக்கம் கோஷ்டிதான். ஆரம்பத்திலேயே வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருந்தால், "பிரசாரத்தை நிறுத்துங்கள்" என்று தமிழ்நாடு காரியக் கமிட்டியை பார்த்து கதற வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்காது. திருச்செங்கோடு தேர்தல் பிரச்னை மறைந்து, அதற்கு பின்னால் பிரதம மந்திரி பிரச்னையும் மறைந்து, கடைசியாக தடுப்பு பிரசாரத்தை நிறுத்த வேண்டும் என்ற பிரச்னைக்கு கீழ்பாக்கம் சஞ்சிகை வந்திருக்கிறது. உடும்பு வேண்டாம், கையை விட்டால் போதும் என்பதுதான் இதற்கு அர்த்தம். ஆனால், உடும்பின் வாயில் கையை கொண்டு வந்து கொடுத்த பிறகு உடும்பு வேண்டாம் என்று சொன்னவுடன் அது கேட்கவா போகிறது? வினை விதைத்தவன் வினையை அறுத்துதானே ஆக வேண்டும்? துவேஷ பிரசாரத்தை ஆரம்பித்தவர்கள் அதன் பலனை அநுபவிக்காமல் எப்படி தப்பமுடியும்?

"சூரியன் கிழக்கேதான் உதிக்கும் என்று நாம் ஏற்கனவே சொல்லியதை போலவே சூரியன் கிழக்கே தான் உதயமாயிற்று" என்று டம்பமடிப்பது சில பிரகிருதிகளுக்கு வழக்கம். அதேமாதிரி, குண்டூர் நரசிம்ம ராவை பற்றி கீழ்பாக்கம் கோஷ்டி ஆக்ஷேபனை செய்தது பலித்து விட்டதாக அடி சஞ்சிகை பெருமையடிக்கிறது. குண்டூர் நரசிம்ம ராவ் சிபார்சை பற்றி சென்ற வாரமே நாம் எழுதி

யிருக்கிறேன். சிபார்சுகளையெல்லாம் பார்லிமெண்டரி கமிட்டி அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. அம்மாதிரி கட்டாயம் இருக்குமானால் பார்லிமெண்டரி போர்டின் அங்கீகாரத்திற்கு அனுப்ப வேண்டிய அவசியமே இல்லை; தேர்தல் கமிட்டிகளே நியமித்து விடலாம். பார்லிமெண்டரி கமிட்டி ஒப்புக் கொண்டு பிரசுரித்த பின்புதான் முடிவான நியமனமாகும். அதற்கு முன்னால் யாரையோ நியமிக்கப் போவதாக யாரோ கூச்சல் போடுவதற்கு அர்த்தமில்லை.

'தமிழ் நாடு தேர்தல் கமிட்டி சிபார்சு செய்த ஆறு பேர்களில் இருவரை பார்லிமெண்டரி கமிட்டி ஒப்புக் கொள்ளவில்லை' என்று கீழ்பாக்கம் சஞ்சிகை சொல்லுகிறது. இது உண்மை என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், அந்த இருவரில் குண்டூர் நரசிம்மராவும் ஒருவர் என்று ஷை சஞ்சிகை சொல்லுவது உண்மைக்கு விரோதமானது (பொய் என்ற வார்த்தைக்கு பதிலாக இதை உபயோகிக்கிறோம்). தமிழ்நாடு கமிட்டி சிபார்சு செய்த இரண்டு பேர் யார் என்பதை இனி வெளியிட்டே ஆக வேண்டும். ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஒருவர். ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் மற்றொருவர்- சிபார்சுகள் நிராகரிக்கப்பட்டதை பற்றி ஷை சஞ்சிகை சரடு விட்டுக்கொண்டு போகும் போது, இம்மாதிரி நிராகரிப்பதற்கு காரணம் "அதிருப்திகரமான சிபார்சுகளும் ஆட்சேபங்களும்| தான் என்று சாதிக்கிறது. அப்படியானால், ஷை இரண்டு சிபார்சுகளும் அதிருப்திகரமானவையும் ஆட்சேபணைகரமானவையும் ஆகும் என்று ஏற்படுகிறது. ஆகவே ஸ்ரீ. டி. டி.கிருஷ்ணமாச்சாரியாரையும் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயனையும் கீழ்பாக்கம் கோஷ்டியார் ஆதரிக்கவில்லை என்பதுதான் அர்த்தம். இந்த விஷயம் நமக்கு ரொம்ப ஆச்சரியத்தை கொடுக்கிறது. ஏனெனில் ஷை இருவரும் ராஜாஜியை ஆதரிப்பவர்கள். அப்படியிருந்தும் தமிழ் நாடு கமிட்டி பெருந்தன்மையுடன் அவர்களை சிபார்சு செய்தது. ராஜாஜியை ஆதரிப்பவர்களை ராஜாஜிக்காக பிரசாரம்

செய்வதாக சொல்லும் கீழ்பாக்கம் கோஷ்டியே எதிர்ப்ப தென்றல் அது பெரிய ஆச்சரியமல்லவா? அதைத்தான் ஷை சஞ்சிகை சென்ற 28-ந்தேதி இதழில் செய்திருக் கிறது.

ஆகவே, அந்த இரண்டு பெயர்களையும் பார்லி மெண்டரி போர்ட் ஒப்புக் கொள்ளவில்லையென்றால், அதனல் தமிழ்நாடு கமிட்டிக்கு எவ்வித அவமானமும் ஏற் படவில்லை. பச்சையாக சொன்னல், ராஜாஜியை ஆதரிப் பவர்களை பார்லிமென்டரி கமிட்டி ஒப்புக்கொள்ள விரும்ப வில்லை என்றே வியாக்கியானம் செய்ய வேண்டும். இந்த வியாக்கியானத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படமால், கீழ்பாக்கம் கோஷ்டியார் மௌனமாய் இருந் திருக்கலாம். அப்படி செய்யாமல் வெளிப்படுத்திவிட்டார் கள். அல்லது வெளிப்படுத்துவதற்கான வாதங்களை கிளப்பிவிட்டார்கள். இம்மாதிரி ராஜாஜி கட்சியை அவ மானப்படுத்துவதற்கு என்ன காரணம் என்பது நமக்கு புரியவில்லை. இத்தகைய நண்பர்களிடமிருந்து ராஜாஜி காப்பாற்றப்படவேண்டும் என்று பிரார்த்திப்பதை தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

அடுத்தபடியாக நமது கீழ்பாக்கம் சகோதர சஞ்சிகை மற்றொரு அபத்தத்தை அஞ்சாமல் வெளியிடுகிறது. அதா வது தற்சமயம் ஏற்பட்டிருக்கும் தமிழ்நாடு தேர்தல் கமிட்டி ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மட்டும் அடங்கியதாம். அந்த கமிட்டியில் வேறு சிலரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி; சில பெயர்களை கொடுத்திருக்கிறது. எதற்காக சேர்க்க வேண்டுமாம் தெரியுமா? தமிழ் நாட்டில் எல்லா கட்சிகளும் கட்டுப்பாடாக நின்று மாகாண தேர்தல் களுக்கு நபர்களை சிபார்சு செய்ய வேண்டுமாம் இது வெறும் ஞான சூன்யம். ஏனெனில், தற்சமயம் தேர்தல் கமிட்டி என்பதே கிடையாது. இருந்தால் அல்லவா புதிய நபர்களை சேர்க்க முடியும்? முன்னல் இருந்ததேர்தல் கமிட்டி இந்தியா சட்ட சபைக்கு அபேட்சகர்களை பொறுக்குவதற்

காக மட்டுமே ஏற்பட்டது. அபேட்சகர்கள் தங்கள் நிய மனங்களை தாக்கல் செய்வதோடு அந்த கமிட்டியும் போய் விடுகிறது. மாகாண தேர்தலுக்கு இனிமேல்தான் கமிட்டி யை நியமிக்க வேண்டும். இதைக் கூட புரிந்து கொள்ள முடியாமல் தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு உபதேசம் செய்ய முன் வருவதுதான் ரொம்ப பரிதாபமாய் இருக் கிறது.

கடைசியாக கீழ்பாக்கம் சஞ்சிகை ஒரு சிறந்த உண்மையை வெளியிடுகிறது. அதாவது:—"உண்மையை பொய் என்று சாதிப்பதலும் ஆபாசமான வசை மொழி பிரயோகத்திலும் தமிழ் மக்களை திருப்பிவிட முடியாது. அந்தக் காலம் மலையேறி விட்டது". அடடா, என்ன அருமை யான உண்மை! அதை அப்படியே ஆமோதிக்கிறோம். அந்த சஞ்சிகைக்கு இன்று தோன்றிய இந்த உண்மை: "பெரிய பதவியும் சின்ன புத்தியும்" என்ற அற்பத்தனமான தலையங்கத்தை எழுதுமுன்பு அதற்கு தோன்றியிருக்கக் கூடாதா? தோன்றியிருந்தால் எவ்வளவு அழகாய் இருந் திருக்கும்! போகட்டும், இப்பொழுதாவது ஞானோதயம் ஏற்பட்டதற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

கடைசியாக ஒரு எச்சரிக்கை; பொய் பிரசாரம், பணம், காலிகளை ஆகியவைகளை கொண்டு கெப்பெல்ஸ் வேலை செய்வது சென்னையோடு நின்று போகுமென்றும், திருப் பரங்குன்றத்தோடு போகுமென்றும் நினைக்கிறோம். திருப் பரங்குன்றத்திலும் தங்கள் கைச்சாக்கை காட்டி வெற்றி பெறலாமென்று முயற்சி செய்தால், அதனால் விபரீதங்களே ஏற்படும்: அவ்விதமே ஏற்பட்டால் அதற்கு காரணமானவர் களை தமிழ் நாடு சும்மா விடாது. —(29-10-45)

* * *

திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றத்தில் நடந்த காங்கிரஸ் ஊழியர் மகாநாடு கண்கொள்ளா காட்சியாய் விளங்கியது. தேசத்தின் உணர்ச்சி எப்படி இருக்கிறது என்பதை அந்த மகாநாடு வெளிப்படுத்தியது. ஊழியர்களின் அபிப்பிராயத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கௌரவித்து தீர்மானங்களை நிறைவேற்றி இருப்பது பாராட்டத் தக்கது; ஏனெனில், சென்ற சில மாதங்களாக தமிழ்நாடெங்கும் சண்டமாருத பொய் பிரசாரங்களை சிலர் செய்து வந்தார்கள். கீழ்ப்பாக்கம் கோஷ்டி இதற்கு தலைமை வகித்தது. இந்த பிரசாரங்களினால் உண்மையான பிரச்னைகளை மறைப்பிவிட முடியவில்லை என்பதை திருப்பரங்குன்றம் காட்டியது. மகாத்மாவுக்கும் ராஷ்டிரபதிக்கும் தந்திகள் பறந்தன. விஷயங்களை தவறாக அவர்களுக்கு தெரிவித்து அவர்களுடைய பதில்களை கொண்டு பிரதிநிதிகளை தவறான வழியில் திருப்பி விடலாம் என்ற எண்ணத்துடன் முயற்சிகள் செய்யப்பட்டன. அந்த முயற்சிகள் எல்லாம் பரிதாபகரமாய் தோல்வியுற்றன. சென்னையிலுள்ள சில பணக்கார பத்திரிகைகள் வகுப்புவாத பிரசனைகளை கிளப்பிவிட்டு ஏமாற்றபார்த்தன. அந்த வேலைகளும் தோல்வி யடைந்தன. கடைசியாக சரியான வழியை திருப்பரங்குன்றத்தில் கூடிய தேசபக்தர்கள் நாட்டிற்கு காட்டியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் கிளப்பிவிடப்பட்ட பிரச்னைகள் இரண்டே இரண்டுதான். ஒன்று திருச்செங்கோடு தேர்தல்; மற்றொன்று மாகாண தேர்தல் கமிட்டியில் கீழ்ப்பாக்கம் கோஷ்டியாரை சேர்ப்பது. இந்த இரண்டிலும் தமிழ்நாடு காரியக்கமிட்டியின் தீர்ப்பே சரி என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் செய்தது. செல்லாத திருச்செங்கோடு தேர்தல் செல்லாதுதான் என்று கமிட்டி தீர்மானித்திருப்பதை பாராட்டுகிறோம். நெற்றிக்கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொல்லிய நக்கீரரையே இது ஞாபகமூட்டுகிறது. மாகாண தேர்தல் கமிட்டியை காரியக்

கமிட்டியே அமைத்துக் கொள்ளலாம் என்று மாகாண கமிட்டி தீர்மானித்து, காரியக்கமிட்டி மீது அதற்குள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையையே காட்டுகிறது. எனவே எதிர்கட்சியார் கிளப்பிய இரண்டு பிரச்னைகளிலும் காரியக் கமிட்டி பூர்ண வெற்றியடைந்தது. எவ்வளவு மோசமாக விஷம பிரசாரம் செய்துங்கூட எதிரிகளுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. பரிபூர்ணமாக எதிர் கட்சி தோல்வி யுற்றது. இதோடு விஷம பிரசாரத்தை நிறுத்தி விட்டு மாகாண கமிட்டியின் தீர்ப்பை ஒப்புக் கொள்ளுவதுதான் கண்ணியமும் ஒழுங்குமாகும். அதை விட்டு, மறுபடியும் எதிர்கட்சியார் பொய் பிரசாரத்தில் இறங்கி இருக்கிறார்கள். ஸ்ரீ. காமராஜ் ஏதோ ராஜாஜிக்கு வாக்குறுதி கொடுத்து கடிதம் எழுதியதாகவும், அதன் மீதே எதிர் கட்சியார் எதிர்ப்புகளை நிறுத்திக் கொண்டதாகவும் பொய் பிரசாரம் செய்து வருகிறார்கள். இது வெறும் புளுகு. எனவே காங்கிரஸ் ஊழியர்கள் இதை நம்ப வேண்டாம். ஊழியர்களின் மனதை கலைக்கவே இம்மாதிரி பிரசாரம் செய்யப்படுகிறது. அந்த வலையில் ஊழியர்கள் அகப்பட்டுக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். ஊழியர்கள் மகாநாட்டில் செய்த தீர்மானங்களை கௌரவித்தே மாகாண கமிட்டியின் தீர்மானங்கள் அமைந்திருக்கின்றன என்பதை ஊழியர்கள் பிரசாரம் செய்ய வேண்டும். ஊழியர்கள் மகாநாட்டை அற்புதமாய் நடத்திய ஸ்ரீ சிதம்பர பாரதியையும், மாகாண கமிட்டி கூட்டத்தை கண்ணியமாகவும் திறமையாகவும் நடத்திய ஸ்ரீ. காமராஜையும் பாராட்டுகிறோம். —(2-11-45)

* * *

விஷம பிரசாரம்

"திருப்பரங்குன்றத்தில் நடந்ததென்ன? உண்மையை அறிய வெளியான விவரங்கள் போதவில்லை" என்று கோவை பத்திரிகை "[illegible]" கூறுகிறது. திருப்

பரங்குன்றத்தில் நடந்த விஷயங்கள் ரொம்ப தெளிவானவை. அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் அவற்றை சுலபமாய் புரிந்து கொண்டனர். வராமல் இருந்தவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும் என்ற சூழ்ச்சி பலமாய் நடந்தது. இதற்கு சில பத்திரிகை நிருபர்கள் தான் காரணம். அவர்களுடைய எஜமானர்களின் உத்தரவுப்படி அவர்கள் நடப்பதாய் இருக்கலாம். எனவே அவர்கள் மீது குற்றஞ் சொல்ல நாம் விரும்பவில்லை. உண்மையான நிலைமையை ஜனங்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே இதை எழுதுகிறோம். தொழிற்கட்சிக்கு விரோதமாக பணக்கார பத்திரிகைகள் சென்ற தேர்தலில் ஒன்று சேர்ந்ததை போல தமிழ்நாடு காரியக்கமிட்டிக்கு விரோதமாக சென்னையிலுள்ள பல பத்திரிகைகள் ஒன்று சேர்ந்தன. ஆரம்பத்திலிருந்தே விஷயங்களை திரித்து கூற முயற்சித்து வந்தன. கடைசியாக திருப்பரங்குன்றம் கூட்டங்களை பற்றியும் அதேமாதிரி திரித்து கூறின. அதனால் தான் 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைக்கு கூட உண்மையை அறிய வெளியான விவரங்கள் போதவில்லை' என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகைகளை பற்றக் கூட நமக்கு புகாரில்லை. தன்னுடைய இஷ்டப்படி கொள்கையை அமைத்துக்கொள்ள ஒவ்வொரு பத்திரிகைக்கும் உரிமையுண்டு. ஆனால் பத்திரிகைகளுக்கு செய்திகள் கொடுக்கும் செய்தி ஏஜன்ஸிகள் அம்மாதிரி செய்ய முடியாது செய்யவும் கூடாது. வெவ்வேறு கொள்கைகளை கொண்ட பத்திரிகைகளுக்கும் செய்திகளை சப்ளை செய்து வருவதால் கண்டிப்பான நடு நிலைமையில் அந்த ஏஜென்ஸிகள் இருந்தாக வேண்டும். அசோஸியேட்டட் பிரஸ் என்ற ஏஜென்ஸி இந்த நடுநிலைமையை கைக் கொண்டிருந்தால் திருப்பரங்குன்றத்தை பற்றி ஏற்பட்டுள்ள பொய்ப்பிரசாரத்தை வெகு தூரம் குறைத்திருக்கலாம். ஆனால் அ.பி. அப்படி நடக்கவில்லை.

திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று மதுரை அ.பி. நிருபருக்கு ஸ்ரீ. காமராஜ் கொடுத்த பேட்டி அப்

படியே அமுங்கி போயிற்று. அதற்கு என்ன காரணம், யார் பொறுப்பு என்பது இதுவரை தெரியவில்லை. அதிலிருந்தே அ. பி. யின் போக்கே விசித்திரமாய் இருக்கிறது. திருப்பரங்குன்றம் காங்கிரஸ் ஊழியர் மகாநாட்டில் பெரிய குழப்பம் ஏற்பட்டது போல மதுரை அ. பி. செய்தி அனுப்பியது. ஸ்ரீ. கோபால்சாமி ஐயரை அடுத்ததாக செய்தி அனுப்பியதோடு, அவரிடமிருந்து ஒரு அறிக்கையும் வாங்கி அனுப்பியது. அடுத்ததாக சொல்லப்படுவது எவ்வளவு தவறான செய்தி என்பதை அந்த மகாநாட்டில் இருந்தவர்கள் அறிவார்கள். உபசரணை கமிட்டி தலைவர் ஸ்ரீ சிதம்பர பாரதியே அச்செய்தியை இன்று மறுத்திருக்கிறார். ஸ்ரீ கோபால்சாமி ஐயரின் அறிக்கையை மதுரை அ. பி. ஏஜென்ஸி அனுப்பு முன்பு வரவேற்பு கமிட்டி தலைவரின் அபிப்பிராயத்தையும் கேட்டிருக்க வேண்டும். அம்மாதிரிச் செய்யவில்லை. ஏன்? ஒரு தலைப்பட்சமாக செய்திகளை அனுப்ப வேண்டும் என்பதுதான் மதுரை அ.பி. யின் கொள்கையா? அல்லது அப்படிச் செய்யும்படி உத்திரவிட்டதா? இதோடாவது மதுரை அ. பி. யின் விஷமங்கள் நின்றனவா என்று பார்த்தால் அதுவுமில்லை. திருப்பரங்குன்றம் கூட்டங்களெல்லாம் முடிந்த பின்பும் மற்றொரு பெரிய சரடு விட்டது. அதாவது ஸ்ரீ. காமராஜ் ராஜாஜிக்கு கடிதம் எழுதினாராம். இம்மாதிரி புரளி கிளப்பி விட்டது. இதை ஸ்ரீ. காமராஜே மறுத்தார். மறுத்த பின்பாவது அ. பி. மன்னிப்பு கேட்டு வாபஸ் வாங்கியிருக்க வேண்டும். இதுவரை அம்மாதிரி செய்யவில்லை. ராஜாஜி விவகாரம் ஆரம்பமானதிலிருந்தே அ. பி. யின் செய்கை விசித்திரமாய் இருக்கிறது. செய்தி ஏஜென்ஸிக்கு இருக்க வேண்டிய நடுநிலைமையையும் பொறுப்பையும் மறந்து விட்டு, கட்சி கட்டிக்கொண்டு கூத்தாடும் நிலைமைக்கு அது வந்த காரணம் தெரியவில்லை. அதனுடைய இம்மாதிரி நடத்தையால் தான் 'சுதேசமித்திர'னுக்கு கூட விஷயம் புரியாமல் போய்விட்டது. இப்பகுதியிலுள்ள அ. பி. ஏஜென்ஸியில் ஏற்பட்டுள்ள இந்த கோளாறுகளை தலைமை அதிகாரிகள் உடனே விசாரித்து, நடவடிக்கை எடுப்பார்களாக.

—6-11-45

* * *

தமிழ் நாட்டில் பாகிஸ்தான்?

ராஜாஜி விவகாரம் திருப்பரங்குன்றத்தோடு முடிந்து விட்டதாக நினைத்தோம். ராஜாஜி கட்சியார் அந்த நோக்கத்தோடு இருப்பதாய் தெரியவில்லை. சென்ற 29வ சீயாழியில் ஒரு ரகசிய கூட்டம் கூடினார்கள். தமிழ் நாடு காரியக் கமிட்டி கோட்டையை பிடிப்பது எப்படி என்று ராணுவ மந்திராலோசனை நடந்தபடியால் கூட்டம் ரகசியமாய்தான் நடந்தது. பகிரங்கமாய் பிரசாரம் செய்து எதுவும் பலிக்காமல் திருபரங்குன்றத்தில் படுதோல்வி அடைய நேரிட்டபடியால், இனி வேலைகளை ரகசியமாய் நடத்த வேண்டுமென்று அவர்கள் நினைப்பதாயும் இருக்கலாம். கல்கத்தாவில் கூடப் போகும் காரியக் கமிட்டிக்கு, தமிழ்நாடு காரியக் கமிட்டியை பற்றி புகார் செய்து கோட்டையை கைப்பற்ற வேண்டுமென்பதே ராஜாஜி கோஷ்டியின் அடுத்த போர் முறையாய் இருக்கும். வடநாட்டு தலைவர்களை ஆதரிப்பதா என்று பிரசாரம் செய்து வந்தவர்களே இன்று வடநாட்டு தலைவர்களிடம் புகார் சொல்லப் போவது ரொம்ப ஆச்சரியமான விஷயம். எப்படியாவது மந்திரி சபையை கைப்பற்றி விடவேண்டும் என்பதே இந்த கோஷ்டியாரின் தணியாத ஆவலாய் இருப்பதால் அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்ய தயாராய் இருக்கிறார்கள். காரியக் கமிட்டியிடம் என்ன மாதிரிபுகார் செய்யப்போகிறார்கள் என்பதை பற்றி இப்பொழுது ஆராயவேண்டிய அவசியமில்லை. அம்மாதிரி முறையில் வேலை செய்வது நேர்மையா அல்லது நாட்டிற்கு நன்மையா என்பதையே கவனிக்கவேண்டும். இரண்டு கட்சிகள் காங்கிரஸில் இருந்தால் ஒரு பிரிவுதான் ஜெயிக்கமுடியும். மெஜாரிட்டி பலம் இல்லாதவர்கள் எப்பொழுதுமே அதிருப்தி கொண்டு அடுத்த தேர்தலில் வெற்றி பெற முயற்சிப்பார்கள். இது ராஜீய கட்சிகளுக்கு பொருத்தமாய் இருக்கலாம். அதாவது காங்கிரஸுக்குள்ளேயே இருக்கும்

அபேதவாதகட்சி போன்ற தனிகட்சிகளுக்குபொருத்தமாய் இருக்கலாம். அம்மாதிரி இல்லாமல் ஒரே கட்சிக்குள்ளேயே இரண்டு தலைவர்கள் பிரிவினை செய்ய ஆரம்பித்தால் அது வங்காள காங்கிரஸ் கட்சிமாதிரியே வந்து முடியும். சென் குப்தாவும் சுபாஷ் போஸும் அபிப்பிராய பேதம் கொண்டு தனி பிரிவுகளை திரட்டியதால் வங்காள காங்கிரஸ் கமிட்டி பலம் குறைந்தது. ஒரு கட்சிக்குள்ளேயே அம்மாதிரி இரு பிரிவுகளாய் பிரிவது காங்கிரஸுக்கே கெடுதல். அதோடு அம்மாதிரி செய்வதும் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமானது.

மெஜாரிட்டி தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடப்பதுதான் கட்டுப்பாடு. தன்னுடைய இஷ்டப்படி தீர்மானம் நிறைவேறவில்லை என்பதற்காக அதற்கு விரோதமாக பிரசாரம் செய்வது கட்டுப்பாடல்ல. எனவே சியாழியில் கூடிய கூட்டம் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமானது. இம்மாதிரி காரியங்களுக்கு யார் ஆதரவு கொடுத்தாலும் சரி, அவர்கள் தமிழ்நாட்டை பாகிஸ்தான் போட முயற்சிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் நாட்டை பாகிஸ்தான் செய்வது சிலருக்கு நன்மையாய் இருக்கலாம், அல்லது அவசியமாய் இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டுக்கு அது ரொம்ப கெடுதலானது. இந்த பாகிஸ்தான் வேலையை உடனே நிறுத்தும்படி ராஜாஜியை கேட்டுக் கொள்ளுகிறோம். அந்த வேலையை ராஜாஜி கோஷ்டியார் விடவில்லையானால் தமிழ்நாட்டையும் வங்காளத்தை போல ஆக்கும் புண்ணியத்தை அவர்கள் மேற்கொண்டவர்களாவார்கள். எனவே கல்கத்தா காரியக்கமிட்டிக்கு புகார் அனுப்பும் யோசனையை மீண்டும் ஆலோசனை செய்து கைவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அப்படியல்ல, நாங்கள் பின்வாங்கப் போவதில்லை என்று அவர்கள் பிடிவாதம் செய்வார்களானால் அப்புறம் அவர்கள் இஷ்டம். அவர்களை எப்படி நடத்த வேண்டுமென்பது தமிழ் நாட்டாருக்குத் தெரியும். புத்திசாலித்தனமென்பது

குறிப்பிட்ட நபர்களின் ஏகபோக உரிமையல்ல. "எனக்கு புத்திசாலித்தனம் உண்டு. நான் சொல்லுகிறபடிதான் நீங்கள் நடக்க வேண்டும்" என்று சொல்லுவது கட்டாயப் படுத்துவதாகும். சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னால் அந்த கொடுமையிலிருந்து நீங்கியாக வேண்டும். ராஜாஜி கோஷ்டியார் கல்கத்தாவுக்கு காவடி எடுப்பதை விட்டு விடுவார்களென்று நம்புகிறோம். —(1-12-45)

* * *

விஷயம் முற்றுகிறது

ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் சீயாரில் காவடி கட்டி கல்கத்தாவில் கொண்டு செலுத்தியதை நண்பர்கள் அறிவார்கள். அதன் பலனாக காங்கிரஸ் காரியக் கமிட்டி ஸ்ரீ. ஆஸப் அலியை சென்னைக்கு அனுப்புகிறது. டாக்டர் ராஜன் சொல்லியதை பார்த்தால், சட்டசபை தேர்தலில் ராஜாஜி கோஷ்டியார் கலந்து கொள்ள வேண்டும் என்பதே காவடியின் நோக்கம் என்று தெரிகிறது. ராஷ்டிரபதி ஆஜாத், பத்திரிகையாளர்களிடம் பேசிய போது, காங்கிரஸுக்குள் இருக்கும் பல பிரிவுகளையும் கொண்ட பார்லிமெண்டரி போர்டை தமிழ் நாட்டில் அமைக்க முயற்சி செய்யவே ஸ்ரீ. ஆஸப் அலியை அனுப்புவதாக சொன்னார். ராஜாஜியை அந்த போர்டில் சேர்ப்பதா இல்லையா என்பதும் ஸ்ரீ. ஆஸப் அலி செய்யப் போகும் வேலைகளில் ஒன்று என்று ராஷ்டிரபதி சொன்னார். ஆகவே வளைத்து பிடித்து மந்திரி சபை அமைப்பிலேயே விஷயம் வந்து நிற்கிறது. காங்கிரஸுக்கு தொண்டு செய்வதற்காகவே ராஜாஜி தவிக்கிறார் என்று கீழ்பாக்கம் கோஷ்டியார் சொல்லி வந்தார்கள். காங்கிரஸ் சேவை யென்றால் சட்டசபைக்குள் நுழைவது என்பதுதான் அவர்களுடைய அர்த்தம் என்பது இப்பொழுது தெரிகிறது. இதை முதலிலேயே தெளிவாக சொல்லி தங்கள்

பிரசாரத்தை ராஜாஜி கோஷ்டியார் ஆரம்பித்திருக்கலாம். எத்தனையோ விதங்களில் அவதாரம் எடுத்து கடைசியாக ராஜாஜி கோஷ்டியார் உருப்படுத்தியிருக்கும் பிரச்னை, பார்லிமெண்டரி போர்டில் வந்து நிற்கிறது. அதாவது ராஜாஜியை தமிழ் நாட்டு பார்லிமெண்டரி போர்டில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம்.

எதற்காக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நண்பர்கள் கேட்கலாம். எதற்காக சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற பதில் கேள்வியை ராஜாஜி கோஷ்டியார் முன்பே போட்டார்கள். அதற்கு திருப்பரங்குன்றம் பதிலளித்து விட்டது. அங்கு கூடிய தமிழ்நாட்டு காங்கிரஸ் ஊழியர்கள் மகாநாடு ராஜாஜியின் தலைமையை மறுத்து அவருடைய போக்கை கண்டித்தது. மாகாண காங்கிரஸ் கமிட்டி அம்மாதிரி தீர்மானம் எதுவும் செய்யவில்லையே என்று கேட்கலாம், ராஜாஜியை அகௌரவப்படுத்தக் கூடாது என்ற ஒரே நோக்கம்தான் அதற்கு காரணம். அதனால்தான் சாதக பாதக தீர்மானங்கள் எல்லாம் வாபஸ் வாங்கப்பட்டன. ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் திருப்பரங்குன்றத்தின் தீர்ப்பை தெரிந்த பின்பு தங்கள் விஷமப் பிரசாரத்தை நிறுத்திக் கொள்ளுவார்கள் என்று மாகாண கமிட்டி எதிர்பார்த்தது. ஆகவே ராஜாஜியின் போக்கை கண்டித்து அவருடைய கௌரவத்திற்கு பங்கம் ஏற்படக்கூடிய காரியம் எதுவும் வேண்டியதில்லை என்று மாகாண கமிட்டி எதிர்பார்த்தது. அதனால்தான் கண்டன தீர்மானம் எதையும் மாகாண கமிட்டி செய்யவில்லை. ஆகவே ராஜாஜியை ஏன் பார்லிமெண்டரி போர்டில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்பதற்கான காரணங்களை திருப்பரங்குன்றம் சொல்லி விட்டது. காங்கிரஸ் ஊழியர் களின் பெரும்பான்மை அபிப்பிராயத்தை மதிக்காமல் காங்கிரஸ் தலைவர்களோ, கமிட்டிகளோ நடக்க முடியாது. ஆகவே ராஜாஜியை எதற்காக பார்லிமெண்டரி போர்டில்

சேர்க்க வேண்டும் என்பதற்கான காரணங்களை ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் சொல்ல வேண்டும்.

சட்டசபை தேர்தல்களில் ராஜாஜி கோஷ்டியாரின் ஒத்துழைப்பு அவசியம் என்று அந்த கோஷ்டியார் சொல்லுகிறார்கள். தாராளமாக ஒத்துழைக்கட்டும். அப்படி ஒத்துழைப்பதற்கு அவர்களும் பார்லிமெண்டரி போர்டில் இருக்க வேண்டும் என்று சொல்லுவதுதான் புரியவில்லை. காங்கிரஸ் மந்திரி சபைகள் இருந்த போது காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் மந்திரி சபைகளை ஆதரித்தார்கள். அப்படி ஆதரிப்பதற்காக தங்களையும் மந்திரி சபைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எல்லா காங்கிரஸ்காரர்களும் கேட்பதாய் இருந்தால் எப்படி இருக்கும்? அப்படி கேட்பது சரியல்ல என்றால் பார்லிமென்டரி போர்டில் சேர்க்க வேண்டும் என்று கேட்பது மட்டும் எப்படி நியாயமாகும்? காங்கிரஸுடைய நன்மைக்காக ஒத்துழைக்க வேண்டும் என்பது ராஜாஜி கோஷ்டியாரின் உண்மையான நோக்கமாய் இருந்தால், பார்லிமென்டரி போர்டில் யார் இருந்தால் அவர்களுக்கென்ன? பார்லிமென்டரி போர்டில் தாங்கள் இருந்தால்தான் திறமையாக நடக்க முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்களா? அப்படியானால் அதுவும் தவறான அபிப்பிராயம்.

டில்லி அசெம்பளி தேர்தல் நடந்து முடிந்து விட்டது அதற்கு அபேட்சகர்களை தேர்ந்தெடுத்த போர்டில் ராஜாஜி கோஷ்டியார் யாரும் இல்லை. அப்படியிருந்தும் அந்த போர்ட் திறமையாக நடந்து கொண்டது. அது தேர்ந்தெடுத்த அபேட்சகர்கள் எல்லாரும் ஒருவர்கூட பாக்கியில்லாமல் வெற்றி பெற்றுவிட்டார்கள். தற்கால தமிழ்நாடு காரியக் கமிட்டியின் திறமையை காட்டுவதற்கு இதை விட வேறு ஆதாரம் வேண்டியதில்லை. ஆகவே காரியக் கமிட்டி நியமித்த தமிழ் நாடு பார்லிமென்டரி போர்டின் திறமையைபற்றியோ காரியக்கமிட்டிக்கும் தமிழ்

நாட்டாருக்கும் உள்ள தொடர்பை பற்றியோ, தமிழ் நாட்டாரின் தேசபக்தியை பற்றியோ யாரும் எந்த விதமான புகாரும் சொல்லுவதற்கில்லை. இந்த நிலைமையில் புதிதாய் காங்கிரஸில் வந்து சேருகிறவர்கள் தங்களையும் கமிட்டியில் சேர்த்துத்தான் ஆகவேண்டும் என்று சொல்லுவது கமிட்டியின் நன்மைக்காகவுமல்ல, காங்கிரஸின் நன்மைக்காகவுமல்ல என்பது நிச்சயம். தங்களுடைய சொந்த நன்மைக்காகவே அம்மாதிரி சொல்லுகிறார்கள். அதாவது தாங்கள் மந்திரி சபையை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரு நோக்கத்தைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு கிடையாது. இப்பேர்ப்பட்டவர்களை பார்லிமென்டரி போர்டில் சேர்க்க வேண்டுமா என்பதை ஸ்ரீ ஆஸப் அலி சிந்திக்க வேண்டும். தமிழ் நாட்டு காங்கிரஸ் ஊழியர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக பார்லிமென்டரி போர்டை அமைப்பது காங்கிரஸின் நன்மைக்கு உகந்ததா என்பதையும் ஸ்ரீ ஆஸப் அலி சிந்திப்பாராக. —(12-12-45)

* * *

பொய்யும் புளுகும்

ராஜீய விஷயங்களில் எதிர் கட்சிகளை தோற்கடிக்க முயற்சி செய்வது சகஜம். அப்படி தோற்கடிப்பதற்கு புதிய புதிய திட்டங்களை ஜனங்களின் நன்மைக்காக வகுப்பதே நியாயமான முறையாகும். ஒரு புதிய முறையை ஹிட்லர் கையாண்டார். தம்முடைய எதிர் கட்சிகள் ஜெர்மன் பார்லிமென்டை கொளுத்தி விட்டதாக புகார் செய்தால் ஜனங்களுக்கு ஆத்திரம் ஏற்படுவது சகஜம். அந்த ஆத்திரத்தை உபயோகப்படுத்தி தமது எதிர் கட்சிகளை நசுக்கி விடலாம் என்று நினைத்தார். இதற்காக பார்லிமென்டை கொளுத்த அவருடைய கட்சியே ஏற்பாடு செய்தது. உடனே ஜெர்மனி எங்கும் ஹிட்லரின் பிடிப்பு இறுகியது. அசைக்க முடியாத விதத்தில் ஹிட்லர்

நமது ஆதிக்கத்தை பலப்படுத்தினர். பொய்யும் புளுகும் சொல்லி எதிர் கட்சிகளை நசுக்க முயற்சிப்பது சர்வாதிகாரிகளின் ஏக போக உரிமையென்று இதுவரை நினைத்திருந்தோம். அந்த முறையை தமிழ் நாட்டிலும் ஒரு கும்பல் கைப்பற்றுவதாக இப்பொழுது தெரிகிறது. ராஜாஜியை சென்னை சட்டசபைக்குள் விடுவதற்கு நமக்கு இஷ்டமில்லையென்று சர்தார் பட்டேல் ஸ்ரீ. வி. வி. கிரியிடம் சொல்லியதாகவும்' ஸ்ரீ கிரி அதை கோவை பஞ்சாலை தொழிலாளர் சங்க தலைவர் ஸ்ரீ. ஜெகநாதனிடம் சொல்லியதாகவும் ஸ்ரீ. ஜெகநாதன் தம்மிடம் அதை சொல்லியதாகவும் ஸ்ரீ. சிவகுருசாமி என்பவர் சர்தார் பட்டேலுக்கு கடிதம் எழுதினராம். அம்மாதிரி தாம் சொல்லவே இல்லையென்றும் அது பச்சை புளுகென்றும் சர்தார் பட்டேல் பதில் எழுதினராம். இந்த பதிலை வைத்துக் கொண்டு ஒரு கும்பல் தமிழ் நாட்டில் அடிக்கிற தம்பட்டம் கொஞ்சமல்ல. சர்தார் பட்டேலின் கடிதத்தை பதினையிரக்கணக்காக அச்சிட்டு விநியோகம் செய்கிறர்கள். ஒரு கீழ்பாக்கம் சஞ்சிகையில் அந்த கடிதத்தை அப்படியே பிரசுரித்து வியாக்கியானம் செய்கிறர்கள். இம்மாதிரி ஏக ஆர்ப்பாட்டமாய் இருக்கிறது.

சர்தார் பட்டேல் பதில் எழுதியது உண்மைதான். ஆனல் அவர் பதில் எழுதுவதற்கு காரணமாய் இருந்த விஷயம் உண்மையானதா? அல்ல. வெறும் பச்சை புளுகு. தாம் அம்மாதிரி பேசியதே இல்லையென்றும், பேசியதாக சொல்லுவது பொய்யென்றும் ஸ்ரீ. கிரி மறுக்கிறர். ஸ்ரீ. கிரி அம்மாதிரி தம்மிடம் சொல்லியதில்லையென்றும், தாமும் அம்மாதிரி ஸ்ரீ. சிவகுருசாமியிடம் பேசியதில்லை யென்றும் ஸ்ரீ ஜகந்நாதன் மறுக்கிறர். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு ஸ்ரீ சிவகுருசாமியும் மௌனம் சாதிக்கிறர். ஆகவே, சர்தார் பட்டேலின் பதிலுக்கு காரணமாய் இருந்த விஷயம் உண்மையல்ல என்பது வெளியாய் விட்டது. பொய் பிரசார கும்பலின் இந்த புளுகு வேரறுந்த மரம்

போல சாய்ந்து விட்டது. என்றாலும் புளுகு பிரசாரத்தால் எவ்வளவு பரபரப்பை உண்டு பண்ண முடியுமோ அவ்வளவையும் உண்டு பண்ணி விட்டார்கள். ஜெர்மன் பார்லிமென்டை ஹிட்லரின் கட்சிதான் கொளுத்தியது என்ற உண்மை பின்னால்தான் வெளியாயிற்று. ஆனால் அது வெளியாவதற்கு முன்பாக, பொய் பிரசாரத்தினால் தமது கட்சிக்கு எவ்வளவு பலத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் தேடிக் கொண்டார். அதே மாதிரி தமிழ் நாட்டிலுள்ள கும்பலும் முயற்சி செய்தது. முயற்சி என்னவோ ஹிட்லரின் வழிதான். என்றாலும் பலன் மட்டும் ஹிட்லருக்கு கிடைத்ததை போல கிடைக்கவில்லை. ஏனெனில் தமிழ்நாடு ஜெர்மனியல்ல. எவ்வளவு பலமாக பொய் கூச்சல் போட்டாலும் தமிழ் நாட்டார் ஏமாந்து விடமாட்டார்கள். அதனால்தான், திருப்பரங்குன்றத்திற்கு முன்பு சாம, தான், பேத, தண்டமாகிய நான்கு உபாயங்களை எதிர் கட்சி உபயோகித்தும் திருப்பரங்குன்றத்தில் படுதோல்வி அடைந்தது. வடநாட்டு தலைவர்களை பற்றி தூஷித்துக் கொண்டிருந்தவர்கள் வடநாட்டு தலைவர்களுக்கு கடிதம் எழுதுவதும், காவடி எடுப்பதுமான வேலையில் இறங்கி இருக்கிறார்கள். இது ஆச்சரியமல்ல. ஏனெனில் ஹிட்லர் முறையில் நம்பிக்கை கொண்டு அதை பின்பற்ற ஆரம்பித்தவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால் அந்த முறைகளால் தமிழ் நாட்டை திருப்பிவிட முடியாது என்பதை அவர்கள் இன்னமும் தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் ஆச்சரியமான விஷயம். இந்த கட்சி வெற்றி பெற்று விட்டால் ராஜியத்தில் ஹிட்லரிஸமே தாண்டவமாடும் என்பதை சொல்லவா வேண்டும்? —(13-12-45)

* * *

சென்னைக்கு வருக

தமிழ் நாட்டில் காங்கிரஸ் வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கும் தகராறுகளை சமரசமாக தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்யுமாறு ஆஸப் அலி வருவதாகவும், அவருக்கு எல்லாவித உதவிகளையும் சகல பிரிவாரும் செய்வதாக நம்புவதாகவும் அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி ஆச்சாரியா கிருபளானி தமிழ் நாடு காங்கிரஸ் பிரஸிடென்ட் ஸ்ரீ காமராஜருக்கு தந்தி கொடுத்திருக்கிறார். தமிழ் நாடு காங்கிரஸில் அபிப்பிராய பேதம் இருப்பது உண்மையே. அந்த அபிப்பிராய பேதம் என்பது என்ன, அதை தீர்த்து வைப்பது சாத்தியமா என்பதை தமிழ் நாட்டார் சிந்திக்க வேண்டும். ஒரு பக்கம் தேச பக்த திருக்கூட்டமும், மற்றொரு பக்கம் ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியாரும் இருக்கிறார்கள். இவர்களுக்குள் இருக்கும் தகராறு என்ன என்பதை ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் மூடி மூடி வைத்தாலும், இனி பகிரங்கமாய் சொல்லித்தான் ஆக வேண்டும். ராஜாஜி மீண்டும் பிரதம மந்திரியாக வர வேண்டும் என்பதுதான் ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியாரின் அபிலாஷை. அது கூடவே கூடாது என்பதுதான் தேச பக்த திருக்கூட்டத்தாரின் கட்சி. இதை சரியல்ல என்று ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் சொல்லுவதாய் இருந்தால் பிரதம மந்திரியாக தான் வரப்போவதில்லை என்று ராஜாஜி பகிரங்கமாய் சொல்லட்டும். மந்திரி சபையில் நோட்ட மில்லையென்றும் பார்லிமென்டரி போர்டில் தங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக கலகத்தை கிளறி கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. பார்லிமென்டரி போர்டில் அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு முயற்சி செய்யுமாறு ஆஸப் அலியை இங்கே கொண்டு வர வேண்டிய அவசியமும் இல்லை. எனவே, ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியாரின் முடிவான

லட்சியம் என்பது மந்திரி சபையை தவிர வேறெதுவுமில்லை. இதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான் தமிழ்நாட்டு தேசபக்தர்களின் முடிவான அபிப்பிராயம். தமிழ்நாட்டில் கரங்கிரஸ் வட்டாரங்களில் உள்ள அபிப்பிராய பேதம் என்பது இதுதான். இதை தீர்த்து வைக்க முயற்சி செய்யவே ஸ்ரீ ஆஸப் அலி வருகிருர். ஸ்ரீ ஆஸப் அலியின் முயற்சி பலிக்குமா? சமரஸத்திற்கு இடம் இருக்கிறதா என்பது அடுத்த கேள்வி.

ராஜாஜி மீண்டும் பிரதம மந்திரியாக வர வேண்டும் என்று சொல்லுகிற கட்சியில் கம்யூனிஸ்டுகள், கள்ள மார்க்கெட்டில் பணம் திரட்டியவர்கள், 1942-ல் மன்னிப்பு கொடுத்து விட்டு ஓடியவர்கள், 1942-ல் காங்கிரஸை விட்டு விலகியவர்கள் ஆகிய பேர்வழிகளும் இருக்கிருர்கள். ராஜாஜி மீண்டும் பிரதம மந்திரியாக வரக் கூடாது என்று சொல்லுகிறவர்கள், தமிழ் நாட்டில் காங்கிரஸ் கொடி இடைவிடாமல் பறக்கும்படி பாதுகாத்து வந்த தேச பக்த திருக்கூட்டத்தாராகும். இவர்களுடைய ஆட்சேபணை ஒன்றே ஒன்றுதான். 1942 ஆகஸ்டில் விரோதமாய் இருந்தவர்கள் யாரும் காங்கிரஸிலோ, காங்கிரஸ் சார்பாகவோ பொறுப்பான பதவி வகிக்கக்கூடாது என்பதுதான் அந்த ஆட்சேபணை. இதில் சமரஸம் என்பதற்கு என்ன இருக்கிறது? எந்த காரணத்திற்காக கம்யூனிஸ்ட்களை காங்கிரஸ் பதவிகளிலிருந்து கல்தா கொடுக்க, இரண்டு தினங்களுக்கு முன்னால் அகில இந்திய காரியக் கமிட்டி கல்கத்தாவில் தீர்மானம் செய்ததோ, அதே காரணத்திற்காக தான் ராஜாஜி மீண்டும் பிரதம மந்திரியாக வரக்கூடாது என்று தமிழ் நாட்டு தேசபக்தர்கள் சொல்லுகிருர்கள். இதில் சமரஸத்திற்கு இடம் எங்கே இருக்கிறது? கம்யூனிஸ்ட்களுடன் சமரஸம் சாத்தியமில்லையானால் ராஜாஜியை பிரதம மந்திரியாக கொண்டு வருவதில் எப்படி சமரஸத்திற்கு இடமே இல்லை. இதுதான் தமிழ் நாட்டு தேச பக்தர்களின் ஏகோபித்த அபிப்பிராயம். இதை

யாரும் அலட்சியம் செய்ய முடியாது. ரொம்ப ரொம்ப சிறிய கூட்டம் ஒன்று ஒலி பெருக்கி மூலம் கூச்சல் போடுவதை கண்டு அதை பெரிய கூட்டம் என்று ஸ்ரீ ஆஸப் அலி நினைத்து விடக்கூடாது. ஹிட்லரின் பிரசார முறைகளை அந்த கோஷ்டி திறமையாக கையாளுவதைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது. அந்த கட்சிக்கு தமிழ் நாட்டில் உள்ள செல்வாக்கை அளந்து பார்க்க வேண்டுமானல் எங்காவது ஒரு ஜில்லாவில் காங்கிரஸ் கமிட்டி தேர்தல்களை நடத்தி பார்க்கட்டும். அந்த கட்சி படுதோல்வி அடைவதை பார்க்கலாம். தமிழ் நாட்டின் உண்மையான உள்ளப்போக்கை ஸ்ரீ ஆஸப் அலி அறிய வேண்டும். 17ல் அவர் சென்னை வருகிறார். இச்சமயத் ராஜாஜி ஆதரிப்பு கட்சியார் பெரிய ஆர்ப்பாட்டங்கள் செய்வார்கள் என்பதை சொல்ல வேண்டியதில்லை. காங்கிரஸ் ஊழியர்கள் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது. ஏராளமாக எல்லா ஜில்லாக்களிலிருந்தும் காங்கிரஸ் ஊழியர்கள் சென்னைக்கு திரண்டு வரவேண்டும். தமிழ் நாட்டு அபிப்பிராயத்தை அழுத்தம் திருத்தமாக ஸ்ரீ ஆஸப் அலிக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். திருப்பரங்குன்றத்தில் காங்கிரஸ் ஊழியர்கள் மகா நாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களை அமுலுக்கு கொண்டுவர வேண்டியது ஊழியர்களின் கடமை. ஆஸப் அலியிடம் விஷயங்களை எடுத்து சொல்லி அவற்றை நிறைவேற்ற வேண்டும். இச்சமயம் தூங்கிக் கொண்டிருக்கக்கூடாது. திருப்பரங்குன்றத்தில் திரண்ட உணர்ச்சியை ஸ்ரீ ஆஸப் அலி நேரில் பார்க்கும்படி சென்னையில் செய்யவேண்டும். சமரஸம் என்பது சாத்தியமில்லை என்பதை அப்பொழுது தான் ஸ்ரீ ஆஸப் அலியும், அவர் மூலம் காரியக்கமிட்டியும் அறிந்து கொள்ளும். அப்படி செய்தால்தான் எதிர்கட்சி காவடி எடுக்கும் வேலை இதோடாவது நிற்கும். சென்னைக்கு திரண்டு வருக! ஜே ஹிந்த்! —(14-12-44)

❋ ❋ ❋

கடைசி போராட்டம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு நெருக்கடியான பாதையில் நிற்கிறது. இந்த சமயத்தில் என்ன விதமாக அது நடக்கிறதோ அதை பொறுத்துதான் தமிழ்நாட்டின் எதிர்காலம் அமையும். தைரியத்துடனும், உறுதியுடனும் அது நடந்து கொள்ளும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. அப்படி நடக்காவிட்டால் தமிழ் நாட்டின் கதி அதோ கதியாகத்தான் இருக்கும். பிற்போக்கான கொள்கைகளும், ஏராளமாக மேல் வகுப்புகளிடம் செல்வாக்குமுள்ள ஒரு கும்பல் சில வருஷங்களுக்கு முன்னால் வரையில் தமிழ் நாடு காங்கிரஸை ஆட்டி வந்தது. கோடிக்கணக்கான ஜனங்கள் தீவிரமான முற்போக்குள்ளவர்களாய் இருந்தும், இந்த பிற்போக்கு கும்பலை தள்ள முடியவில்லை. ஏன்? பத்திரிகைகள் அநேகமாய் அவர்களுடைய கைகளில் இருக்கின்றன. பெரிய பெரிய வர்த்தகர்களும், பணக்காரர்களும், சினிமாக்களும், சினிமா நட்சத்திரங்களும் அவர்களுடைய கைகளில் இருக்கின்றன. எனவே அந்த கும்பலுக்கு பாதகமான எந்த விஷயமும் அம்பலத்திற்கு வர முடியாதபடி அமுக்கி வந்தார்கள். அந்த கும்பலுக்கு எதிர்ப்பே இல்லாதது போல உலகம் நினைக்கும்படியான நடிப்புகளும், ஜோடனைகளும் நடந்து வந்தன. இந்த கொடுமையை பொறுக்க முடியாமல் உண்மையான ஊழியர்கள் கிளம்பினார்கள். இவர்களுடைய கையில் தான் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் சென்ற ஆறு வருஷங்களாக இருந்து வருகின்றன. அடக்குமுறைகள் பலமாய் தாண்டவமாடிய அ வருஷங்களில் காங்கிரஸ் ஸ்தாபனங்களை தாங்கள் கைப்பற்ற அ பிற்போக்கு கும்பல் முயற்சி செய்யவில்லை. ஆனால் மறுபடியும் மந்திரி சபை ஏற்படலாம் என்ற நிலைமை வந்ததும் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற கிளம்பி இருக்கிறார்கள். அவர்களிடம் காங்கிரஸை மீண்டும் ஒப்புவித்து பிற்போக்கிலேயே

பொருட்படு விடுவதா, அல்லது தைரியமாக நின்று போராடி பிற்போக்கு கும்பலை ஓரே அடியாக தோற்கடிப்பதா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. திருப்பரங்குன்றத்தில் நடந்த போராட்டமும் அதுதான். அங்கே படு தோல்வி அடைந்த பின்பு பிற்போக்கு கும்பல் சும்மா இருக்கவில்லை. பொய்யும் புளுகுமாக தங்கள் பத்திரிகைகளில் பிரசாரம் செய்து வந்தார்கள். அதன் பின்னால் அகில இந்திய காரியக் கமிட்டிக்கு காவடி எடுத்து. மேலிடத்திலிருந்து உத்தரவு பெற முயற்சி செய்தார்கள் அதன் பலனைத்தான் ஸ்ரீ ஆஸப் அலி சென்னை வருகிறார்·

பிற்போக்கு கும்பலுக்கு மேலிடங்களில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதை பற்றி தமிழ்நாட்டில் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், எவ்வளவுதான் செல்வாக்கு இருந்தாலும் நியாயத்திற்கு விரோதமாக அகில இந்திய காரியக்கமிட்டி நடக்காது. ஆனால் அந்த காரியக்கமிட்டி பேரால் புளுகுணி பிரசாரம் பலமாய் ஆரம்பமாகலாம். காரியக் கமிட்டி அப்படி செய்துவிடும், இப்படி செய்துவிடும் என்று சிலர் பயமுறுத்தலாம். அதைக் கண்டு யாரும் பயந்துவிடக்கூடாது. திருப்பரங்குன்றம் தீர்மானத்திலிருந்து இம்மி கூட விலகாதபடி தமிழ்நாடு காரியக் கமிட்டியின் உறுதியான நிலையை, என்ன வந்தாலும் ஆதரித்தே தீருவது என்ற மகா உறுதியோடு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி நிற்கவேண்டும். அப்பொழுது தான் பிற்போக்காளர்களை தோற்கடிக்க இது வரை செய்துவந்த முயற்சிகள் பலிதமாகும். இதுதான் தமிழ் நாட்டிலுள்ள பிற்போக்கு கும்பலின் கடைசி போராட்டம். இந்த போராட்டத்தில் கொஞ்சங்கூட சளைக்காமல், பின்வாங்காமல், தாட்சணியத்திற்கு உட்படாமல் நடந்து கொண்டால் வெற்றி பெறுவது நிச்சயம். தமிழ்நாட்டிற்கு நல்ல காலமா, கெட்ட காலமா என்பதை இந்த கடைசி போராட்டமே முடிவு செய்யும். எனவே எது வந்தாலும் சரி, திருப்பரங்குன்றம் தீர்மானத்தை

நிறைவேற்றியே தீருவது என்ற உறுதியோடு தமிழ்நாட்டு காங்கிரஸ் ஊழியர்கள் நடப்பார்களாக. ஜெய்ஹிந்த்!

—(15-12-45)

* * *

வெற்றி நிச்சயம்

எந்த விடுதலை போராட்டத்திலும் தமிழ் நாடுதான் முதன்மையாய் நிற்கும். தென் ஆப்பிரிக்காவில் மகாத்மா ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கத்தில் தமிழரே பேராதரவு கொடுத்தார்கள். மகாத்மாவின் சத்தியாக்கிரகம் என்ற அந்த புதிய ஆயுதம் உலகப் பிரசித்தியடையும்படி செய்த பெருமை தமிழரையே சேரும். அதே மாதிரி மலேயாவில் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆரம்பித்த இந்திய தேசிய ராணுவத்திற்கு பேராதரவாய் நின்று உதவி செய்ததும் தமிழர்தான். இந்த யாகத்தில் தமிழர் அளவு தியாகம் செய்தது வேறு யாருமில்லை இந்தியாவில் எடுத்துக் கொண்டாலும் இங்கு இதுவரை நடந்த ஒவ்வொரு போராட்டத்திலும் வேறு எந்த மாகாணத்திற்கும் சளைக்காத விதத்தில் தமிழர் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி, தேர்தல்களிலும் வேறு எந்த மாகாணமும் பெறாத வெற்றியை காங்கிரஸுக்கு தமிழர் கொடுத்து வருகிறார்கள். இவ்வளவெல்லாம் இருந்தும் மற்ற மாகாணங்களைப் போல், தமிழ் நாடு விளம்பரமடையவில்லை. இதற்கு என்ன காரணம்? ஒரே ஒரு காரணம்தான். தமிழர் எப்பொழுதும் தங்கள் கடமையை செய்வதிலேயே நோக்கமுள்ளவர்கள். அதில்தான் அவர்கள் திருப்தியும் அடைவார்கள். விளம்பரத்தில் அவர்களுக்கு பிரியம் கிடையாது. இந்த ஏகமுடி கொள்கையால் தமிழரின் சேவைக்கும், தேசபக்திக்கும் தகுந்த பிரசித்தம் கிடைக்கவில்லை. ஆகவே, தமிழர் என்றால், காங்கிரஸ் பக்தியுள்ள ஒரு கும்பல் என்ற நினைப்பு வடநாட்டாருக்கு இருக்கிறதே

யொரிய, புத்திசாலித்தனத்திலோ, தீரத்திலோ எந்த வடநாட்டு தலைவர்களுக்கும் சளைக்காத தலைவர்கள் தமிழ் நாட்டில் உண்டு என்ற நினைப்பு வடநாட்டாருக்கு ஏற்படவில்லை. இதனால்தான் தமிழ்நாட்டில் தலைவர் என்பவர் ராஜாஜி ஒருவர்தான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ராஜாஜியின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக எவ்வளவு பலமான அபிப்பிராயம் இருந்தாலும் அது இல்லவே இல்லையென்று கருதுகிறார்கள். அதனால்தான் யரோ சில செல்லாக் காசுகள் காவடி எடுத்துக்கொண்டு போனவுடன் ஸ்ரீ ஆஸப் அலியை இங்கே அனுப்ப நினைக்கிறார்கள்.

இந்த நிலைமை தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டிருப்பது பெரிய துரதிர்ஷ்டமாகும். மற்ற மாகாணங்களை போல் தமிழ் நாட்டு தலைவர்களும் வெளியே வந்து பிரசித்தி பெற வேண்டும். இந்தியா ஒரே நாடாய் இருக்கிறவரையில் மற்ற மாகாணத்தார்களுடன் தமிழ் நாட்டு தலைவர்கள் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியது ரொம்ப ரொம்ப அவசியம். அம்மாதிரி செய்திருந்தால் இன்று தமிழ் நாட்டில் உள்ள அபிப்பிராயத்தை உண்மையாக காரியக் கமிட்டி அறிந்து கொள்ளும்படி செய்ய இவ்வளவு கஷ்டம் இருக்காது. இன்று மௌனம் சாதிக்கும் சென்னையிலுள்ள பல பத்திரிகைகள் இந்த மௌன விரதத்திற்கு துணிந்திருக்கா. ஸ்ரீமான் பிரபலத்திற்கும் ஸ்ரீமான் உண்மை அபிப்பிராயத்திற்கும் தான் தற்சமயம் தமிழ் நாட்டில் போராட்டம் நடக்கிறது. இந்த போராட்டத்தில் உண்மையே வெற்றிபெறும் என்பதைபற்றி சந்தேகமில்லை. பிரிட்டனில் பிரபல பத்திரிகைகள் எல்லாம் சென்ற தேர்தலில் கன்சர்வேடிவ்களையே ஆதரித்தன. யுத்தத்தை வெற்றிகரமாய் நடத்த புத்தி பிரசித்தியோடு கூடிய சர்ச்சிலும் கன்சர்வேடிவ்களை ஆதரித்தார். அப்படியிருந்தும் கன்சர்வேடிவ்கள் படுதோல்வி அடைந்தார்கள். ஏன்? ஜனங்களின் உண்மையான ஆதரவு, தொழிற்

கட்சிக்கே இருந்தது. அதேமாதிரி தமிழ் நாட்டில் இப்பொழுது நடக்கும் போராட்டத்திலும் ஊழியர்களே வெற்றி பெறப்போகிறார்கள். திருப்பரங்குன்றத்தில் அவர்கள் செய்த தீர்மானத்தை உறுதியோடு ஆதரித்து நின்றால் அவர்கள் வெற்றியை எந்த காலடியாலும் எந்த பதவியாலும் அசைத்துவிட முடியாது. இந்த போராட்டத்திலிருந்தாவது வெளி மாகாணங்களோடு தமிழ் நாட்டு தலைவர்கள் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை தெரிந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கிறோம். —(17-12-45)

* * *

எதற்காக வருகிறார்?

ஸ்ரீ ஆஸப் அலி சென்னைக்கு ஏன் வருகிறார், எதற்காக காரியக் கமிட்டி அவரை இங்கே அனுப்பியிருக்கிறது என்பவை முக்கியமான கேள்விகள். தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியோ, அல்லது தமிழ் நாடு காரியக் கமிட்டியோ காங்கிரஸ் சட்ட திட்டங்களுக்கு விரோதமாக நடந்திருந்தால், அகில இந்திய காரியக்கமிட்டி அதை விசாரிக்க வேண்டியது கடமை. அம்மாதிரி எதுவும் தமிழ் நாட்டில் நடந்ததாக இல்லை. ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் கூட அம்மாதிரி எதுவும் சொல்லவில்லை. அப்படியானால் எதற்காக ஸ்ரீ ஆஸப் அலி இங்கே வருகிறார்? யாரோ சிலர் கல்கத்தாவிற்கு போய் என்னவோ சொன்னார்கள் என்பதற்காக ஸ்ரீ ஆஸப் அலியை இங்கே காரியக் கமிட்டி அனுப்புவது பொருத்தமாயில்லை. தமிழ் நாட்டை அவமதிப்பதாக நினைப்பதற்கு கூட அதில் இடம் உண்டு. எதிர் கட்சியார் என்ன புகார் சொன்னார்கள் என்பதை முன்பாகவே தமிழ் நாடு காரியக் கமிட்டிக்கு ஸ்ரீ ஆஸப் அலி அனுப்பியிருக்க வேண்டும். அம்மாதிரியும் செய்யவில்லை. குற்றச்சாட்டுகள் என்ன என்பதை முன்பாகவே தெரிவிக்

காமல் விசாரிக்க புறப்படுவது எந்த நியாயத்திற்கும் பொருத்தமானதல்ல. அதிகாரத்திலுள்ள நபர்களுக்கு விரோதமாக எதிர் கட்சியார் புகார் கூறுவது இயற்கை. அந்த புகார்கள் உண்மையில் பெரிய புகார்களா, அவைகளை பற்றி விசாரிக்க ஆரம்பிப்பதற்கு போதுமான ஆதாரம் இருக்கிறதா என்பதை முதலில் தெரிந்து கொண்டே விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். பாரிஸ்டரான ஸ்ரீ. ஆஸப் அலி இதை ஒப்புக்கொள்ளுவார் என்றே நினைக்கிறோம். ஒரு சிலர் காரியக் கமிட்டியிடம் புகார் செய்தார்கள் என்பதற்காக, அதற்கான ஆதாரங்களை கவனிக்காமல் விசாரிக்க புறப்படுவது என்பது ரொம்ப கெட்ட வழக்கம். இதற்கு இடம் கொடுத்துவிட்டால் எடுத்ததற்கெல்லாம் காரியக் கமிட்டியிடம் காவடி எடுப்பது என்பது சர்வ சாதாரணமாய்விடும். ஒவ்வொரு காவடிக்கும் ஒவ்வொரு விசாரணை விதம் காரியக் கமிட்டி நடத்த ஆரம்பித்தால் அப்புறம் மாகாணத்தில் காங்கிரஸ் வேலைகள் அரோஹரா ஆக வேண்டியதை தவிர வேறு வழியில்லை. இந்த வழக்கத்தை இதோடு காரியக் கமிட்டி கைவிட வேண்டும்.

ராஜாஜி ஆதரிப்பு கோஷ்டியார் எந்த மாதிரி காரியக் கமிட்டியிடம் புகார் செய்திருப்பார்கள்? இரண்டு விஷயங்களை அவர்கள் சொல்லி இருப்பதாக அறிகிறோம். திருப்பரங்குன்றம் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பலாத்கார சுற்றுணர்ச்சியில் கூடியது என்றும், அதனால் தங்கள் கட்சி ஜெயிக்கவில்லை என்பதும் ஒன்று. மாகாண கமிட்டியில் தங்களுடைய கட்சி பெரிய மைனாரிட்டி என்றும், அதனால் பார்லிமெண்டரி கமிட்டியில் தங்களுக்கு ஸ்தானங்கள் வேண்டும் என்றும் சொல்லுவது மற்றொன்று. இரண்டு காரணங்களும் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கின்றன. திருப்பரங்குன்றத்தில் பலாத்கார சுற்றுணர்ச்சி இருந்ததாக சொல்லுவதே அயோக்கியத்தனமான புளுகு. ஹிட்லரின் புளுகுகளையெல்லாம் இது

தோற்கடிக்கிறது. கல்கத்தாவுக்கு காவடி போனவர்கள் எல்லோரும் திருப்பரங்குன்றம் கூட்டத்தில் யாதொரு இடையூறும் இல்லாமல் கலந்து கொண்டிருந்தார்கள். ராஜாஜி கட்சியை ஆதரித்து தீவிரமாக பிரசாரம் செய்தார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்கு மெஜாரிட்டி கிடைக்கவில்லையென்றால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்? தங்களுடைய கட்சி பெரிய மைனாரிட்டி என்று காவடி கட்சி சொல்லுவது ஒன்றே அவர்களுக்கு திருப்பரங்குன்றத்தில் மெஜாரிட்டி இல்லை என்பதை காட்ட போதுமானது. திருப்பரங்குன்றத்தில் நடந்த மாகாண கமிட்டி தேர்தலில் காவடி கட்சி தோற்றுப் போனதும் அவர்களுடைய மைனாரிட்டியையே காட்டுகிறது. ஆகவே திருப்பரங்குன்றத்தில் இருந்ததாக சொல்லப்படும் பலாத்கார சுற்றுணர்ச்சியால் தங்கள் கட்சி ஜெயிக்கவில்லை என்று சொல்லுவது வெறும் அசட்டுத்தனம். மைனாரிட்டி மைனாரிட்டிதானே! எந்த சுற்றுணர்ச்சியில் அது மெஜாரிட்டியாக மாறிவிட முடியும்? எனவே முதல் காரணம் அடிபட்டு போகிறது. இரண்டாவது காரணத்தைப் பார்ப்போம். வகுப்பு மைனாரிட்டிகளுக்கு ஸ்தானங்கள் கொடுப்பதுதான் உலகத்தில் வழக்கம். ராஜீய மைனாரிட்டிக்கு ஸ்தானங்கள் கொடுப்பதென்பது அதிசயமாயிருக்கிறது. அப்படியானால் கட்சிகள், திட்டங்கள், மனோபாவங்கள் என்பவைகளுக்கு அர்த்தமே இல்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சர்ச்சிலின் கட்சி பெரிய மைனாரிட்டிதான். அதற்காக மந்திரி சபையில் தன் கட்சிக்கு ஸ்தானங்கள் வேண்டுமென்று அவர் பிரிட்டிஷ் மன்னருக்கு விண்ணப்பம் செய்யவில்லை. ஏன்? அப்படி விண்ணப்பம் செய்வது ஜனநாயகத்திற்கு விரோதமான அசட்டுத்தனம் என்பது அவர் அறிவார். மந்திரி பதவிகள் பெரிதல்ல. ஜனநாயக முறைகள் தான் பெரியவை யென்பதை அவர் நன்றாக உணர்ந்திருக்கிறார். சர்ச்சில் செய்ய துணியாத காரியத்தை இந்த காவடி கட்சி செய்ய துணிந்திருக்கிறது. எந்த கொள்கை எப்படி

போனாலும் சரி, எங்களுக்கு மந்திரி பதவிகள் வேண்டும் என்று அந்த கட்சி சொல்லுகிறது? இந்த முறை தவறான காரியத்தைக் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகவே இரண்டாவது காரணமும் அடிபட்டு போகிறது. அப்படியானால் எதற்காக ஸ்ரீ ஆஸப் அலி இங்கே வருகிறார்? அது தான் புரியவில்லை. —(18-12-45)

* * *

அவசியமில்லாத கேள்விகள்

ஸ்ரீ ஆஸப் அலியை இரண்டு கட்சியாரும் சென்னையில் சந்தித்து பேசி வருகிறார்கள். ராஜாஜி ஆதரிப்பு கட்சியை விட ராஜாஜி எதிர்ப்பு கட்சிதான் ஏராளமாய் இருக்கிறார்கள் என்பதை சொல்ல வேண்டியதில்லை. எதிர்ப்பு கட்சியாரிடம் ஸ்ரீ ஆஸப் அலி இரண்டு கேள்விகள் கேட்பதாக அறிகிறோம். ஒன்று, ராஜாஜிக்கு பதில் வேறு பிரதம மந்திரி பதவிக்கு தகுதியானவர்கள் யார் இருக்கிறார்கள் என்ற கேள்வி. தேர்தல் நடக்குமுன்பே இதை முடிவு செய்யவேண்டும் என்று ஸ்ரீ ஆஸப் அலி அபிப்பிராயப் படுகிறாராம். இந்த கேள்விக்கு பேட்டி கண்டவர்கள் சரியான பதில் கொடுத்திருக்கிறார்கள். இந்த கேள்வியே பொருத்தமானதல்ல. ஏனெனில் சென்னை மாகாணம் தமிழ் நாடு மட்டும் அடங்கியதல்ல. ஆந்திர, கேரளா, கன்னட நாடுகளும் அடங்கியது. எனவே, பிரதம மந்திரியாக யார் வருவது என்பது இந்த நாலு மாகாணங்களில் உள்ளவர்களையும் கலந்து பொறுக்கி எடுக்க வேண்டிய விஷயம். மேலும் தமிழ் நாட்டில் ராஜாஜியை தவிர, வேறு ஆள் கிடையாது என்று நினைப்பதும் தவறு. ஆள் இருந்தால் இப்பொழுதே சொல்லலாமே என்று கேட்கலாம். அப்படி சொல்லுவது முறையுமல்ல; ராஜ தந்திரமும் அல்ல. ஏனெனில். பிரதம மந்திரியாக யாரை போடுவது என்பதை முன்னதாக

சொன்னால், அதனால் பல கோளாறுகள் ஏற்படும். அதற்காகத்தான் எப்பொழுதும் சொல்லுவதில்லை. சென்ற தேர்தலை எடுத்துக் கொள்ளுவோம். பிரதம மந்திரியார் என்பதை தீர்மானம் செய்யாமல் தான் சென்ற தேர்தல் ஏற்பாடுகள் நடந்தன. ராஜாஜி நியமனப் பத்திரம் தாக்கல் செய்ததே கடைசி நிமிஷத்தில் தான் நடந்தது. அதனால் ஸ்ரீ. சத்தியமூர்த்தி தமது நியமனத்தை தாக்கல் செய்த பின்பு ராஜாஜிக்காக வாபஸ் வாங்கினர். பிரதம மந்திரியாக ராஜாஜி வருவார் என்பதை அபேட்சகர்களை தேர்ந்தெடுத்த காலத்தில் யாராவது நினைத்தார்களா? இல்லவே இல்லை. அப்படியானால், அந்த முடிவு செய்யு முன்பு தேர்தல் ஏற்பாடுகளை செய்தது தவறு என்று ஸ்ரீ. ஆஸப் அலி சொல்லுவாரா? ஒருக்காலும் சொல்லமாட்டார் என்றே நினைக்கிறோம்.

சென்னையை விட்டு விடுவோம். மற்ற மாகாணங்களை எடுத்துக்கொள்வோம். ஸ்ரீ. பி. ஜி. கெர் பம்பாய் பிரதம மந்திரியாக வருவார் என்று யாராவது நினைத்தார்களா? அல்லது ஸ்ரீ. சுக்லா பிரதம மந்திரியாக வர முடியுமென்று யாராவது ஜோசியம் சொல்ல முடிந்ததா? இல்லவே இல்லை. அப்படியானால் தமிழ் நாட்டில் மட்டும் ராஜாஜிக்கு பதில் வேறு யார் இருக்கிறார்கள் என்ற விஷயத்தை இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியம் என்ன? அவசியம் எதுவுமில்லை. ஸ்ரீ. பி. ஜி. கெர் மாதிரி திறமையாக நிர்வாகம் செய்யக் கூடியவர்கள் எத்தனையோ பேர் உண்டு. எப்படி முன்னால் வெளி மாகாணங்களுக்கு தெரியாமல் இருந்த ஸ்ரீ. கெர் திடீரென்று பிரதம மந்திரியாக வந்தாரோ அதே மாதிரி, ஒரு கெர் தமிழ் நாட்டிலோ சென்னை மாகாணத்திலுள்ள மற்ற பிரதேசங்களிலோ தோன்றுவது பெரிய அதிசயமல்ல. காலம் வரும்போது அது தெரியும். எனவே, அதைப் பற்றி ஸ்ரீ. ஆஸப் அலி கேள்வி கேட்காமல் இருப்பதுதான் அழகு. அந்த கேள்விக்கு அவசியமே இல்லை. அடுத்தபடியாக ஸ்ரீ. ஆஸப் அலி கேட்கும் கேள்வி திருச்செங்

கோடு தேர்தலைப் பற்றியது. திருச்செங்கோடு தேர்தல் செல்லுபடியாகும் என்று அகில இந்திய காரியக் கமிட்டி தீர்மானம் செய்தால் தமிழ் நாட்டில் உணர்ச்சி எப்படி இருக்கும் என்று கேட்டாராம். அம்மாதிரி காரியக் கமிட்டி தீர்மானம் செய்தால் தமிழ்நாடு பெரிய ஏமாற்றமடையும். தமிழ் நாடு காரியக் கமிட்டியும் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியும் திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று தீர்மானம் செய்திருக்கிறபடியால், அதற்கு விரோதமாக அகில இந்திய காரியக் கமிட்டி செய்தால் கண்டிப்பாக ஏமாற்ற மடையும். பெப்ருவரி மாதம் புது தேர்தல்கள் நடக்கப் போகிறபடியால், அதற்குள் அவசரமாய் திருச்செங்கோடு தேர்தல் விஷயத்தில், செய்ய வேண்டியது எதுவுமில்லை. எனவே, ஸ்ரீ. ஆஸப் அலி கேட்கும் இரண்டு கேள்விகளும் தற்சமயம் பொருத்தமில்லாதவைகளாய் இருக்கின்றன.

—(20-12-45)

* * *

தவறான தீர்ப்பு

"காசிக்கு போக பணமில்லையானால் கள்ளுக்கடைக்கு போகலாம் வா" என்ற பழமொழியை ராஜாஜிதான் பிரசித்தமாக்கினார். ஸ்ரீ. ஆஸப் அலியின் வேலைகளை பார்க்கும் போது அந்த பழமொழிதான் ஞாபகத்திற்கு வருகிறது. எதற்காக ஸ்ரீ. ஆஸப் அலி இங்கே வந்தார்? அவர் வரவேண்டிய அவசியமேயில்லை என்பதை முன்பே எடுத்துக் காட்டி இருக்கிறோம். என்றாலும் அவர் வந்து விட்டார். அவர் எதற்காக வந்ததாக சொன்னாரோ அந்த வேலையை அவரால் செய்ய முடியவில்லை. ஆகவே 18௳ வந்தவர் 24௳ புறப்பட்டு போய்விட்டார். வந்த வேலையை செய்ய முடியவில்லை என்பதிலிருந்தே அவர் வரவேண்டிய அவசியமில்லை என்பது தெளிவாய்விட்டது. என்றாலும் அவர் சும்மா போகவில்லை. வந்த வேலை நடக்காவிட்டாலும் வேறு எதையா

வது செய்துவிட்டு போவோமே என்று சொல்லுகிறார். இதைப் பார்க்கும்போதுதான் "காசிக்கு போக பணமில்லையானால் கள்ளுக்கடைக்கு போகலாம் வா" என்று ராஜாஜி சொன்ன பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது.

ஏதோ சிலர் கல்கத்தாவிற்கு காவடி எடுத்தார்கள் என்பதற்காக ஒரு காரியக் கமிட்டி அங்கத்தினரை இங்கே அனுப்புவது என்று ஏற்பட்டவுடனேயே தமிழருக்கு சந்தேகம் ஏற்பட்டது. அந்த சந்தேகம் ஸ்ரீ. ஆஸப் அலியை சந்தித்த பிறகு பலமாயிற்று. அவர் வந்ததிலிருந்தே எப்படியாவது ராஜாஜிக்கு தலைமை கொடுப்பதற்கு என்ன வழி என்பதையே இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருந்தார். ஒரு பக்கத்தில் யாரையும் தனியாக நினைக்கும் உத்தேசம் நமக்கு இல்லை என்று சொல்லிக்கொண்டு, மற்றொரு பக்கம் ராஜாஜியை எப்படி தலைவராக்குவது என்பதில் அவர் ஈடுபட்டது பட்சபாதத்தை தவிர வேறு ஒன்றுமில்லை. அவ்வளவு தூரம் பட்சபாதமாய் இருக்கிறவரிடம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. ஆகவே ராஜாஜியை தலைவராக்க முடியாமல் போன பின்பு சில்லறை விஷயங்களில் தமது வேகத்தை ஸ்ரீ. ஆஸப அலி காட்டியதில் ஆச்சரியமில்லை. அதனால்தான் திருச்செங்கோடு தேர்தல் சம்பந்தமாக தீர்மானம் செய்ய தமிழ் நாடு காரியக் கமிட்டிக்கு அதிகாரமில்லை என்று தீர்ப்பு கொடுத்தார். இந்த தீர்ப்பை கேட்டு தமிழ் நாட்டு ஊழியர்களின் உள்ளம் துடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. செல்வாக்கும், பொய்யும், பித்தலாட்டமும் எவ்வளவு தூரம் போகுமென்பதை தமிழ் நாட்டு ஊழியர்கள் நன்றாய் தெரிந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள் ஆத்திரப்படக்கூடாது. பொறுமையோடு நின்று பிற்போக்கு கும்பலுடன் போராடி முறியடிப்பதுதான் அழகு. ஆத்திரப்பட்டு காரியத்தை கெடுத்துவிடக்கூடாது.

திருச்செங்கோடு தேர்தலை பற்றி முடிவு செய்ய காரியக் கமிட்டிக்கு அதிகாரமில்லை என்று ஸ்ரீ ஆஸப் அலி

சொல்லுகிறார். தேர்தல் டிரிபியூனலின் தீர்ப்புக்கே அந்த தகராறை விட்டுவிட்டார் என்று கூறுகிறார். தேர்தல் நடந்திருந்தால் அல்லவா டிரிபியூனலின் தீர்ப்புக்கு விடமுடியும்? தேர்தலே நடக்கவில்லை என்பதல்லவா தமிழ்நாடு காரியக் கமிட்டியின் கட்சி? இதைக்கூட ஸ்ரீ ஆஸப் அலி கவனிக்கவில்லை. தமது தீர்ப்பை விளக்கிச் சொல்லி இருக்கும் அவருடைய வியாக்கியானத்தில் எத்தனையோ தவறுகள் இருக்கின்றன. தேர்தல் நடந்ததை காரியக் கமிட்டி ஆட்சேபிக்கவில்லை என்று சொல்லுகிறார். இது முதல் தவறு. தேர்தலே நடக்கவில்லை என்பதுதான் காரியக் கமிட்டியின் அபிப்பிராயம். வழக்கமான முறையில் தேர்தல் நடந்ததாக ஸ்ரீ ஆஸப் அலி சொல்லுகிறார். அதுவும் தவறு. நடந்ததாக சொல்லப்படும் தேர்தலில் அவசியமானதாகக் கூறப்படும் முறைகள் விடுபட்டுப் போய் விட்டன. காரியதரிசியின் அனுமதியின் பேரில்தான் தேர்தல் நடந்ததாக அவர் கூறுகிறார். இது எல்லாவற்றையும் விட மகாப் பெரிய தவறு. அவர் சொல்லும் காரியதரிசி ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை ஆரம்பத்திலிருந்தே ராஜாஜி கட்சியில் இருந்து வருகிறார். அவர் அனுமதி கொடுத்தது உண்மையாய் இருந்தால் பிரஸிடெண்ட் காமராஜர் ஏன் அந்த விஷயத்தை பிரஸ்தாபித்து அனுமதி பெறவில்லை? தேர்தலுக்கு அனுமதி கொடுத்து எழுதிய கடிதத்திற்கு ஆபிஸில் ஏன் நகல் வைக்கவில்லை? அந்த காரியதரிசியின் மூலம் ஸ்ரீ காமராஜ் [illegible] வேலைகளெல்லாம் நடந்தால் இருக்கும்போது, திருச்செங்கோடு தேர்தலுக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரம் தான் அந்த காரியதரிசி எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமென்ன? இப்படி நிலைமையில் காரியதரிசி அனுமதி கொடுத்திருக்கிறார் என்ற வாதத்தை ஸ்ரீ ஆஸப் அலி சொல்லுவதுதான் ரொம்ப விசித்திரமாயிருக்கிறது. அவர் கூறும் மற்றொரு விஷயம் அதைவிட விசித்திரமானது. திருப்பரங்குன்றத்தில் [illegible] தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் ஓட்டுகளில் மூன்று குறைந்து விட

வேண்டும் என்று அவர் சொல்லுகிறார். காலி ஸ்தானங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர் எந்த தீர்மானங்களிலும் வோட் கொடுக்கவில்லை. ஏனெனில் அவர்களுடைய பெயர்கள் கூட்டத்தின் முடிவில்தான் வெளியிடப்பட்டன.

எனவே குறைப்படுவதற்கு எதுவும் இல்லை. இதைக்கூட சரியாக அறிந்துகொள்ளாமல் ஸ்ரீ ஆஸப் அலி தீர்ப்பு சொல்லியிருக்கிறார். இவ்வளவு தவறுகளை கொண்ட தீர்ப்புதான் திருச்செங்கோடு தேர்தலை பற்றி முடிவு செய்ய காரியக் கமிட்டிக்கு அதிகாரம் இல்லை என்ற தீர்ப்பு. ஆகவே இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. ராஜாஜி கோஷ்டிக்கு சாதகமாக என்ன செய்யலாம் என்ற வழியில் ஸ்ரீ ஆஸப் அலியின் யோசனை சென்றிருக்கிறதே யொழிய, பட்சபாதமில்லாமல் விசாரிக்கும் வழியில் செல்லவில்லை. இதனால் ஸ்ரீ ஆஸப் அலி தமிழ் நாட்டுக்கு ஒரு பெரிய கெடுதியை செய்திருக்கிறார். தமிழ் நாட்டில் இன்னும் அதிகமான மனக்கசப்பை உண்டு பண்ணி விட்டார். ராஜாஜி பெரிய சட்ட நிபுணர். இன்று ஸ்ரீ ஆஸப் அலி சொல்லும் காரணங்கள் பொருத்தமானவைகளாய் இருந்தால் ராஜாஜியே இவைகளை முன்பே சொல்லி இருப்பார்.

அவர் ஸ்ரீ காமராஜருக்கு புனாவிலிருந்து எழுதிய கடிதத்தில் திருச்செங்கோடு தகராறை தமிழ் நாடு காரியக் கமிட்டியின் தீர்ப்புக்கு விடும்படியே எழுதியிருந்தார். தேர்தல் டிரிபியூனலுக்குதான் அதிகாரம் உண்டு என்று சொல்லவில்லை. தமிழ்நாடு காரியக் கமிட்டியும் திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று தீர்ப்பு சொல்லி விட்டது. இவ்வளவுக்கும் பின்னர் ஸ்ரீ ஆஸப் அலி புதிய காரணங்களை கண்டுபிடிக்கிறார். ராஜாஜி கிளப்ப துணியாத வாதங்களை ஸ்ரீ ஆஸப் அலி சொல்லுகிறார். இந்த வேலையை செய்வதற்கு ஸ்ரீ ஆஸப் அலி வந்திருக்கவேண்டாம். அவருடைய நடவடிக்கைகளால் தமிழ் நாட்டில் மனக்கசப்பும் கொதிப்பும் அதிகமாய்விட்டன. ஸ்ரீ ஆஸப் அலிக்கு

தாட்சண்யம் இருக்கலாம். தமிழ் நாட்டு ஊழியர்கள் எந்த செல்வாக்கிற்கும், எந்த தாட்சண்யத்திற்கும் உள்பட்டவர்களல்ல. எனவே யார் என்ன சொன்னபோதிலும் பிற்போக்காளர்களை தோற்கடிக்காமல் விடப்போவதில்லை. இதை வெகு சீக்கிரத்தில் ஸ்ரீ ஆஸப் அலி அறிந்து கொள்ளுவார். —(24-12-45)

* * *

ஓ ய வி ல் லை

ராஜாஜி விவகார விவாதங்களை நிறுத்திவிட வேண்டுமென்று மதுரையில் ஒரு நபருக்கு சர்தார் படேல் பதில் எழுதி இருக்கிறார். சர்தாருக்கு கடிதம் எழுதிய நபர் ராஜாஜி கட்சியை சேர்ந்தவர். விவாதங்களை நிறுத்திவிட வேண்டுமா, இல்லையா என்பதை பற்றி அவருக்கு சந்தேகம் தோன்றியதைக் கண்டு நாம் ஆச்சரியப்பட வில்லை. ஏனெனில் சமரஸம் ஏற்பட்டு பல தினங்கள் கழிந்த பின்பும் அவர்களுடைய தம்பட்டங்கள் நிற்கவில்லை. ராஜாஜி ஆதரவு கட்சியார் செய்யும் ஆர்பாட்டங்களை பார்த்தால் தகராறு ஓய்ந்ததாகவோ ஓயுமென்றோ தோன்ற வில்லை. ஏனெனில் சமரஸ நிபந்தனைகள் பல காங்கிரஸ் ஊழியர்களுக்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. அப்படியிருந்தும் ரொம்ப கஷ்டப்பட்டு அவர்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் ராஜாஜி கட்சியார் ஆர்பாட்டங்கள் செய்து கொண்டிருந்தால் மீண்டும் எதிர்ப்பு பலமாய் கிளம்பும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. தேர்தல் போர்டை அமைத்தாய் விட்டது. அபேட்சகர்களின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அபேட்சகர்களை பொறுக்கி எடுக்க வேண்டியது போர்டின் வேலை. ஆகவே விண்ணப்பம் அனுப்பும்படி தூண்டவோ கட்டாயப்படுத்தவோ முற்படுவது சமரஸத்திற்கு அறி

குறியல்ல. ராஜாஜி கட்சியை ஆதரிப்பவர்கள் என்று ஒரு ஜாப்தாவை எல்லா ஜில்லாக்களுக்கும் ராஜாஜி கட்சியார் தயாரித்திருக்கிறார்கள். அவர்களில் பலருக்கு தந்தி கொடுத்து வர வழைத்து விண்ணப்பங்கள் போடும்படி செய்கிறார்களாம். விண்ணப்பம் போட விருப்பமில்லாதவர்களையும் கட்டாயப்படுத்துகிறார்களாம். இதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அதிகமாய் இருந்தால் காரியக்கமிட்டிக்கு விரோதமாய் அவர்கள் திரும்புவார்கள் என்பதுதான் அந்த காரணம். அம்மாதிரி துவேஷத்தை கிளப்பிவிட முயற்சிப்பது காங்கிரஸின் நன்மைக்கு அடுத்ததா என்பதை அவர்கள் யோசிப்பதாய் தெரியவில்லை. சரியான நபர்களாய் அசம்பிளிக்கு வரவேண்டும் என்ற சிரத்தை அவர்களுக்கு இருப்பதாயும் தெரியவில்லை. யாராய் இருந்தாலும் சரி, தங்கள் கட்சியை ஆதரிப்பவர்களாய் இருந்தால் போதும், அவர்களை அபேட்சகர்களாய் தேர்தலுக்கு நிறுத்த வேண்டும் என்பதே ராஜாஜி ஆதரிப்பு கட்சியாரின் நோக்கமென்று தெரிகிறது. இந்த சண்டையை மாகாண தேர்தல் போர்டில் நடத்தி பார்த்து முடியாவிட்டால் தலைமை பார்லிமென்டரி போர்டிலும் போய் சண்டை போடுவது என்பது அவர்களின் திட்டமாய் இருக்கலாம். அப்படியானால், இவையெல்லாம் தேசசேவையா அல்லது மந்திரி சபையை கைப்பற்றும் சூழ்ச்சியா என்பதை சொல்ல வேண்டியதில்லை. பார்லிமென்டரி போர்டில் தங்களுடைய ஆட்கள் வேண்டும் என்று அவர்கள் போராடி வந்ததன் காரணத்தை சந்தேகமில்லாமல் எல்லோரும் இப்பொழுது புரிந்துகொள்ளலாம்.

எனவே, ராஜாஜி தகராறு விவாதங்கள் முடிந்து போனதாய் தெரியவில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் பாகிஸ்தான் ஏற்படுத்தும் முயற்சியில் எதிர் கட்சியார் தீவிரமாய் இருக்கிறார்கள். இந்த பாகிஸ்தான்கள் ஏற்படவிடாமல் தடுக்க வேண்டுமானால், ஆத்திரப்படாமல் காங்கிரஸ் ஊழியர்கள்

உறுதியோடு வேலை செய்ய வேண்டும். தமிழ் நாட்டின் அபிப்பிராயத்தை மதித்து தேர்தல் போர்டு நடக்குமென்று எதிர்பார்க்கிறோம். —(9-1-46)

* * *

ஜே ஹிந்த்!

ஜே ஹிந்த் கோஷம் இந்தியாவுக்கு புதிது. என்றாலும் இந்தியா முழுவதும் பரவி வேரூன்றி விட்டது. இந்த புதிய கோஷம் அவசியமா என்பதை பற்றி சிலர் வாதங்களை கிளப்பி இருக்கிறார்கள். ஜே ஹிந்த் கோஷத்தை ஆதரிக்காதவர்கள் சொல்லும் முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று. வந்தே மாதரம் என்ற கோஷம் இருக்கிறபடியால், புதிதாக மற்றொன்று வேண்டாம் என்பது. இரண்டாவது காரணம், ஜே ஹிந்த் கோஷம் பலாத்காரத்தை ஞாபகமூட்டக் கூடியது என்பது. இரண்டாவது ஆட்சேபணை ரொம்ப மோசமானது. வந்தே மாதரம், ஜே ஹிந்த் இரண்டும் பிறந்த சரித்திரத்தை மறந்தவர்கள் தான் அதை ஒப்புக்கொள்ள முடியும். இந்திய சுதந்திர பட்டாளம் அந்த ஜே ஹிந்த் கோஷத்தை ஆரம்பித்தபடியால் பலாத்காரத்தை அந்த கோஷம் ஞாபக மூட்டுகிறது என்பதுதான் ஆதரிக்காதவர்களின் வாதம், ரொம்ப சரி. வந்தே மாதரம் பிறந்த கதை என்ன? பங்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய 'ஆனந்த மடம்' என்ற நாவலில்தான் வந்தே மாதரம் பிறந்தது. அந்த நவீனத்தில் வந்தே மாதரத்தை எப்படி உபயோகப்படுத்துகிறார்கள்? அஹிம்சை கோஷமாக உபயோகப்படுத்தவில்லை. சன்னியாசிகள் சேர்ந்து நடத்தும் சுதந்திர யுத்தத்தில் யுத்த கோஷமாக வந்தே மாதரம் உபயோகப்படுகிறது. ஜே ஹிந்த் கோஷம் எந்த சந்தர்ப்பத்தில் பிறந்து எப்படி வானை பிளந்ததோ அதே மாதிரிதான் வந்தே மாதரமும் தோன்றி பரவியது. ஆகவே, ஜே ஹிந்த் கோஷம் பலாத்காரத்தை ஞாபக மூட்டும்

என்று யாராவது சொன்னால், வந்தே மாதரமும் அதே காரியத்தை செய்ய முடியும் என்பதை அவர்கள் மறுக்க முடியாது. ஜே ஹிந்த் கோஷத்திற்கு விரோதமாக சொல்லும் இந்த இரண்டாவது காரணம் அடிபட்டு போகிறது. உண்மையை பார்த்தால், இரண்டு கோஷங்களுமே பலாத்காரத்தை ஞாபகமூட்ட முடியாது. ஏனெனில், நமது சுயராஜ்ய போராட்டம் அகிம்சையை அடிப்படையாக கொண்டது. அடிப்படையே அஹிம்சையாய் இருக்கும் போது, எந்த கோஷம்தான் பலாத்காரத்தை கிளப்பிவிட முடியும்?

வந்தே மாதரத்துக்குப் பதில் ஜே ஹிந்த் அவசியமா என்பது முதல் ஆட்சேபணை. வந்தே மாதரம் என்றால் தாயை வணங்குகிறேன் என்பதுதான் அர்த்தம். இதில் எவ்வித ஆட்சேபணையும் யாருக்கும் இருக்க முடியாது. என்றாலும் காங்கிரஸை எதிர்ப்பதற்காக இதில் பெரிய ஆட்சேபணை இருப்பதாக லீகர்கள் கிளப்பிவிட்டார்கள். அம்மாதிரி ஒரு ஆட்சேபணையோடு உள்ள ஒரு கோஷம் வேண்டியதில்லை என்பதற்காகவே நேதாஜி போஸ் ஜே ஹிந்த் கோஷத்தை சிருஷ்டி செய்தார். ஜனநாயகம் என்றால், உள்நாட்டில் சமரஸ மனப்பான்மை அவசியமாய் இருக்கவேண்டும். ஆகவே, வந்தே மாதரத்தை நீக்கிவிட வேண்டுமென்ற அவசியமில்லை. மகாத்மா சொல்லுகிறபடி வந்தே மாதர கோஷத்தின் அடிப்படையான தியாகத்தையும் சரித்திர பிரசித்தியையும் மறந்துவிட முடியாது. அந்த கோஷத்தோடு கூடவே ஜே ஹிந்த் கோஷமும் இருக்கலாம். மகாத்மாவும் அப்படியே சொல்லுகிறார். ஜே ஹிந்த் கோஷத்தின் அடிப்படையான தியாகமும், போராட்டங்களும் ஆச்சரியமான சம்பவங்களும் கொஞ்சமல்ல. அவற்றையெல்லாம் நினைக்கும் போதே ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமை ஏற்படும். அந்த பெருமையை வெளிக்காட்டும் கோஷமாகவே ஜே ஹிந்த் விளங்குகிறது. எனவே ஜே ஹிந்த் வேண்டா

மென்று சொல்லுவது நேர்மையல்ல. இந்தியாவின் சுதந்திரத்திற்காக செய்த தியாகங்களை மறக்கும் நன்றியற்ற வேலையாய் இருக்கும். ஜே ஹிந்த் கோஷத்தை சந்தோஷமாய் வரவேற்க வேண்டும். வந்தே மாதரமும் இருக்கட்டும். நாளடைவில் எந்த கோஷம் ஜனங்களின் மனதில் நிலைக்கிறதோ அதுவே இந்தியாவின் தேசீய கோஷமாய் அமைந்து விடும். தேசீய கோஷங்களோ கீதங்களோ இன்னதுதான் இருக்க வேண்டுமென்று அடிமை நாட்டில் கட்டாயப் படுத்த முடியாது. ஜனங்களின் மனதிற்கு எது உகந்ததாய் காணப்படுகிறதோ அது தான் நிலைக்கும். மற்றவை யெல்லாம் இடையில் வந்து இடையில் போய்விடும். எனவே ஜே ஹிந்தை யாரும் ஆட்சேபிக்க வேண்டியதில்லை. ஆட்சேபிப்பதால் அது போய்விடாது. நிலைபெறக் கூடிய சக்தி அதற்கு இருந்தால் கண்டிப்பாய் அது நிலைத்தே தீரும். ஜே ஹிந்த்!

—(11-1-46)

[‘ஜெய் ஹிந்த்’ கோஷம் தவறு என்றும், நேதாஜி சுபாஷ் போஸ் போக்கு தவறு என்றும், அவர் ஓட்டை படகு போன்றவர் என்றும், அந்த நேரத்தில் ராஜாஜி பிரசாரம் செய்து வந்தது தமிழ் நாட்டு மக்களுக்கு நினைவிருக்கலாம்.—தொ. ஆ.]

மகாத்மா விஜயம்

வாடி நிற்கும் பயிர்களுக்கு ஒரு முறை மழை பெய்வது எவ்வளவு தூரம் புத்துயிர் அளிக்குமோ அதுபோல் மகாத்மாவின் தரிசனம் தேச மக்களுக்கு புத்துயிரையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது. பசி, வெயில், தூரம் எதுவும் ஜனங்களுக்கு லட்சியமில்லை. அவருடைய தரிசனம் கிடைத்தால் போதும் என்ற ஆவல் மக்களின் உள்ளத்தில் பொங்கி நிற்கிறது. தமிழ் நாட்டிற்கு மகாத்மா தற்சமயம் செய்த விஜயம் தமிழ் நாட்டிற்கே பெரிய உற்சா

கத்தையும், பாப திருப்தியையும் கொடுத்திருக்கிறது. மகாத்மா தரிசனம் கிடைப்பதைவிட இந்த வாழ்க்கையில் வேறு எதுவும் பிரமாதமல்ல என்பதே ஜனங்களின் அபிப்பிராயம். அந்த ஆவல் பூர்த்தியாகும்போது அதனால் ஏற்படும் சந்தோஷத்தை சொல்லவும் வேண்டுமா? மகாத்மாவிடம் ஜனங்களுக்கு எவ்வளவு பக்தியும், அன்பும் இருக்கின்றன என்பதை அவர் போகும் இடங்களில் பாதைகளின் இரு புறங்களிலும் ஏகப்பட்ட கூட்டம் கூடி இருந்தது காட்டியது. இந்த தடவை அவர் விஜயம் செய்தபோது ஒரு நூதன முறையை கையாண்டார். அதாவது கூட்டத்தில் இருப்பவர்கள் எல்லாரையும் பஜனை செய்யும்படி செய்தார். ஆண், பெண், குழந்தைகள் சகலரும் கொஞ்சங்கூட தயங்காமல் பஜனையில் கலந்து கொண்டது ஒரு பெரிய காரியம். ஏனெனில் கூட்டத்தில் இருப்பவர்கள் எல்லோருமே சேர்ந்து பாடும் வழக்கம் ஏற்படவேண்டும். ஜனங்களுக்குள் ஒற்றுமையை வளர்க்க அது ரொம்ப உபயோகமானது. மற்ற நாடுகளில் அந்த வழக்கம் இருக்கிறது. நமது நாட்டில் அதை கொண்டுவர இதுவரை யாரும் முயற்சி செய்யவில்லை. பொதுக் கூட்டங்களில் ஒருவர் இருவர் தேசிய கீதங்களை பாடி மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதைவிட கூட்டத்தில் இருப்பவர்கள் அனைவருமே தேசிய கீதம் பாடுவதென்றால் அது எவ்வளவு மகத்தானதாய் இருக்கும்? அந்த வழக்கத்திற்கு மகாத்மாவின் பஜனை முறை அடிபோடுகிறது ரொம்ப ரொம்ப முக்கியமானது. மகாத்மாவின் விஜயத்தால் அந்த வழக்கத்தை ஜனங்கள் கைக்கொள்ளும்படி ஏற்பட்டதை பாராட்டுகிறோம்.

மகாத்மா விஜயமாகும் இடங்களில் ஜனங்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று எவ்வளவோ பிரசாரம் நடந்தது. அதை அநுசரித்து அநேக இடங்களில் ஜனங்கள் அமைதியாய் இருந்ததை பாராட்டுகிறோம். சில இடங்களில் அம்மாதிரி நடக்காமல் போனதைக் கண்டு

வருந்துகிறோம். அமைதியாகவும் ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் நடக்கத் தெரிகிற வரையில் சுயராஜ்யம் வராது. வந்தாலும் அது தங்காது. மதுரைக் கோவிலுக்குள் ஆயிரக்கணக்கான பேர்களை அனுமதித்து மகாத்மாவின் அமைதியை கெடுத்தது ரொம்ப ரொம்ப வருந்தத்தக்கது. மகாத்மாவின் சுற்றுப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்த ஹரிஜன சங்க நிர்வாகிகளின் நிர்வாக ஊழல் இதில் வெளிப்பட்டது. வேறு யாரிடமாவது இந்த ஏற்பாடு இருந்திருக்குமானால் எவ்வளவோ திறமையாக காரியங்கள் நடந்திருக்கும். அதே மாதிரி ஹிந்தி விழாவில் ஹிந்தி பிரசார நிர்வாகிகள் நடந்துகொண்ட விதமும் ரொம்ப ஊழலானது. ராஜிய பிரிவினைகள் அங்கே காட்டப்பட்டன. ராஜாஜி கோஷ்டியாருக்கு தாராளமாக டிக்கட்டுகள் வழங்கப்பட்டன. மற்றவர்களுக்கு "அனுப்பிவிட்டோமே" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இம்மாதிரி நடத்தையெல்லாம் ஹிந்தி பிரசார சபையின் செல்வாக்கை ரொம்ப குறைந்து விடும். ஹிந்தி பிரசாரம் என்பது யாருடைய குடும்ப சொத்துமல்ல. ராஜாஜி கட்சிக்கோ, எதிர் கட்சிக்கோ எல்லாருக்கும் அது பொதுவானது. ஆகவே ஹிந்தி பிரசார சபை ஏதாவது ஒரு கட்சியில் சேருவதென்றால் அநாவசியமாக எதிர்ப்புக்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுவதாய் இருக்கும். மகாத்மாவின் திட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யும் பொறுப்பு எப்பொழுதுமே பெரிய மனது படைத்தவர்களிடம் இருக்க வேண்டும். அற்பர்களிடம் இருந்தால் அதனால் ஜனங்களுக்கு மட்டுமல்ல, மகாத்மாவுக்கு கூட கஷ்டம் ஏற்படுகிறது. மகாத்மாவின் தமிழ் நாட்டு விஜயத்தால் எல்லாவற்றையும்விட ஒரு பெரிய நன்மை கிடைத்திருக்கிறது. அதுதான் ராஜாஜியைப்பற்றி அவர்வெளியிட்ட அபிப்பிராயம். மகாத்மா ராஜாஜியை ஆதரிக்கிறார் என்று திண்ணை பிரசாரங்கள் பலமாய் நடந்தன. இதை கண்டு அதிருப்தியும் கிளம்பியது. ஆனால் தமிழ் நாட்டின் அபிப்பிராயத்தை மகாத்மா நேரடியாக தெரிந்து கொண்டார். பொய் பிரசாரங்களை மறுக்க

வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொண்டார். ஆகவே தமது அபிப்பிராயத்தை பகிரங்கமாய் வெளியிட்டார். தேர்தல்களில் அவருக்கு சிரத்தை கிடையாது என்றும், ராஜாஜிக்கு சாதகமாக பிரசாரம் செய்ய தாம் வரவில்லை யென்றும், அவ்விஷயத்தில் தலையிடப் போவதில்லை யென்றும் தெளிவாய் அவர் சொல்லியது இந்த மாகாணத்தாருக்கு உள்ளம் குளிர்ந்ததுபோல இருக்கும். மகாத்மா மகாத்மாதான்! வேறு யார் இம்மாதிரி பட்சபாதமில்லாமல் நடக்க முடியும்? மகாத்மா நீடூழி வாழ்க!

—(6-2-46)

* * *

அபேட்சகர் தேர்தல்

சென்னை சட்ட சபை தேர்தலுக்கு அபேட்சகர்களை பொறுக்கி எடுக்க தமிழ்நாடு பார்லிமென்டரி போர்ட் இன்று கூடுகிறது. சென்ற தடவை எதிர் கட்சிகள் போட்டி போட்டபடியால், காங்கிரஸ்காரர்களுக்குள் அபேட்சையில் போட்டி அதிகமாய் இல்லை. சில இடங்களில் தோல்வியை எதிர்பார்த்தே காங்கிரஸ்காரர்கள் போட்டி போட்டார்கள். இப்பொழுது நிலைமை அப்படியல்ல. காங்கிரஸுடன் போட்டி போட்டு யாரும் ஜெயிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, காங்கிரஸ்காரர்களுக்குள் போட்டி பலமாய் இருக்கிறது. ஒரு ஸ்தானத்திற்கு எட்டு பேர், பத்து பேர்கூட போட்டி போடுகிறார்கள். ஆகவே, அபேட்சகர்களை தேர்ந்தெடுப்பது ரொம்ப சிரமமான வேலைதான். இந்த சிரமம் மட்டுமில்லை. மற்றொரு தொல்லையும் பார்லிமென்டரி போர்டுக்கு இருக்கிறது.

ராஜாஜி கட்சிக்கு எப்படியாவது மெஜாரிட்டியை கொண்டு வந்து விடவேண்டுமென்று மைனாரிட்டி கட்சி ப்ரயற்சி செய்கிறது. இந்த கட்சி மேலிடத்து ஆதரவை நம்பிக்கொண்டு வேலைசெய்கிறது. இந்த மைனாரிட்டி கட்சி தான்எப்படி மெஜாரிட்டியாக வருவது என்பதுஒன்றிலேயே கவனமாய் இருக்கிறது. ஆகவேதான் சிபார்சு செய்யும் நபர்கள் உண்மையாக காங்கிரஸ்காரர்களா என்பதை பற்றி கூடஅதற்குகவலையில்லை. தன்னை ஆதரிப்பவர்களாய் இருந்தால் போதும்; அவர்கள் யாராய் இருந்தாலும் சரி; காங்கிரஸை விட்டு 1942-ல் ஓடிப்போனவர்கள், மன்னிப்பு கொடுத்தவர்கள், கள்ள மார்க்கெட்டில் கொள்ளையடித்தவர்கள், காங்கிரஸுக்கு விரோதமாய் வேலை செய்தவர்கள் இவர்களில் யாராய் இருந்தாலும் கொஞ்சங்கூட கூசாமல் அவர்களை ஆதரிக்க தயாராய் இருக்கிறது.

உதாரணம் வேண்டுமானால், ஹரிஜன அபேட்சகர் தேர்ந்தெடுப்பில் பார்க்கலாம். பார்லிமெண்டரி போர்டில் ராஜாஜி கட்சியை சேர்ந்தவர்களும் இருப்பதை நண்பர்கள் அறிவார்கள். அவர்களும் சேர்ந்து ஏகமனதாக தயாரித்த ஒரு சிபார்சு ஜாப்தா தலைமை பார்லிமெண்டரி போர்டுக்கு அனுப்பப்பட்டது. அந்த ஜாப்தாவை அனுப்பிய பின்பு, ராஜாஜி கட்சியை சேர்ந்தவர்கள் அதில் ஒரு பெயரை மாற்றும்படி தலைமை பார்லிமெண்டரி போர்டுக்கு தெரிவித்திருக்கிறார்கள். அம்மாதிரி தெரிவித்ததை தமிழ்நாடு போர்டுக்கு சொல்லவும் இல்லை. ரகசியமாக நடந்திருக்கிறது. உடனே சர்தார் பட்டேல் ராஜாஜியின் கோஷ்டியின் விருப்பப்படி அந்த பெயரை மாற்றிவிட்டார். மாற்றுவதற்கு முன்பு தமிழ் நாடு போர்டின் அபிப்பிராயத்தை கேட்கவுமில்லை. அப்படி மாற்றிய அபேட்சகராவது தள்ளப்பட்ட அபேட்சகருக்கு சமமாக காங்கிரஸ் சேவை செய்திருக்கிறாரா என்றால், அதுவுமில்லை.

தள்ளப்பட்ட ஹரிஜன் நல்ல காங்கிரஸ்காரர். ஜெயில் தண்டனை அடைந்தவர். மற்ற அபேட்சகர் ஜஸ்டிஸ் கட்சி

யில் தீவிரமாக இருந்தவர். இந்த காரியத்திலிருந்து அநேக படிப்பினைகளை தெரிந்துக் கொள்ளலாம். தமிழ் நாட்டில் பிற்போக்கான கொள்கைகள் தலைதூக்காமல் தடுக்க வேண்டுமானால், தீவிர காங்கிஸ்வாதிகளுக்குள் ஒற்றுமை வேண்டும். ஒரு ஸ்தானத்திற்கு பலர் போட்டி போடுவதை விட்டு, ஒருவரையே நிறுத்தி வைத்து அவரை தலைமை போர்ட் அங்கீகரிக்கும்படி போராட வேண்டும். அதை விட்டு தீவிர வாதிகளுக்குள்ளேயே போட்டி போட்டுக் கொண்டிருந்தால், மைனாரிட்டி கட்சியின் காரியம் சுலபமாய் நிறைவேறி விடும். தீவிரவாதிகள் இதை கவனித்து நடந்தால், பார்லிமெண்டரி போர்டின் வேலை சுலபமாய் இருக்கும்.

ஹரிஜன தேர்ந்தெடுப்பில் தலையிட்டதை போல அநாவசியமாக தலைமை போர்டு தலையிடும்படி மாகாண போர்டு விடக்கூடாது. சண்டை போட்டால் தான் நியாயம் கிடைக்கும் என்று தோன்றினால், சண்டை போட மாகாண போர்ட் பின் வாங்கக்கூடாது. பிரதம மந்திரியாக யார் வரவேண்டும் என்பது தற்போதைய பிரச்னையல்ல. யார் பிரதம மந்திரியாக வந்தாலும் சரி, தம் மிஷ்டப்படி பிற்போக்கான காரியங்களை செய்ய அந்த பிரதம மந்திரியை விட்டுவிடாமல் தடுப்பதற்கு தீவிர வாதிகள் மெஜாரிட்டியாய் இருக்க வேண்டும். காங்கிரஸ் மந்திரி சபை ராஜினாமா செய்ய நேரிட்டால் பினாமி மந்திரி சபை அமைக்க யாரும் முயற்சி செய்வதற்கு இடம் இருக்கக் கூடாது. இந்த விஷயங்களை மனதில் வைத்துக் கொண்டு தமிழ்நாடு பார்லிமென்டரி போர்ட் அபேட்சகர்களை தேர்ந்தெடுக்குமாக. (11-2-46)

* * *

ஸ்ரீ. காமராஜ் ராஜிநாமா

தமிழ்நாடு பார்லிமென்டரி போர்டிலிருந்து ஸ்ரீ காமராஜ் ராஜிநாமா செய்துவிட்டார். இதை கேட்டு தமிழ் நாட்டார் மனக்குழப்பம் அடையலாம். என்றாலும் இப்பொழுது உள்ள நிலைமையை நேர்மையாக ஆராய்கிறவர்களுக்கு ஸ்ரீ காமராஜ் செய்ததே சரி என்பது தெரியவரும். இந்த தேசத்தில் தேசத் தொண்டிற்காக முன்வரும்படியும் சகல தியாகங்களையும் செய்யும்படியும் தூண்டி நிற்கும் சக்தி, மகாத்மா காந்தியே ஆகும். அவருக்காகத்தான் இந்நாட்டில் காங்கிரஸ் சேவை செய்வதற்கு லட்சக்கணக்கான பேர்கள் முன் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உற்சாக மூர்த்தியாக காணப்படுகிறவர் மகாத்மா காந்தி தான்; அப்புறம் தான் காங்கிரஸ். மகாத்மாவின் வாக்கு தான் அவர்களுக்கு வேதம். அவர் தவறு செய்யமாட்டார் என்பதுதான் அவர்களுடைய திடமான நம்பிக்கை. அவ்வளவு தூரம் பக்தி கொண்டுள்ள அந்த மகாத்மாவின் மனம் நோகும்படி நடக்க எந்த காங்கிரஸ்காரரும் விரும்பமாட்டார். அந்த மாதிரியான மதிப்புக்குரிய மகாத்மா காந்தி சென்னை காங்கிரஸை பற்றி சொல்லிய அபிப்பிராயங்கள், தமிழ்நாட்டில் நேர்மையான காங்கிரஸ்காரர்கள் எல்லாருடைய மனதையும் புண்படுத்தி விட்டன.

காங்கிரஸ்காரர்களுக்கு புத்திமதி கூற மகாத்மாவுக்கு சகல உரிமைகளும் உண்டு. அந்த புத்திமதிகளை கேட்க காங்கிரஸ்காரர்கள் எப்பொழுதும் தயாராய் இருக்கிறார்கள். அதைபோல காங்கிரஸ் ஜனநாயக சபையாக இருக்கிற வரையில் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடவும் உரிமையுண்டு. இதை மகாத்மாவும் ஒப்புக்கொள்வார். அந்த உரிமையில் நடந்து வரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை ஒரு கும்பல் கோஷ்டியின் செல்வாக்கிற்குள் அகப்பட்டிருப்பதாக மகாத்மா சொல்லியது ரொம்ப ரொம்ப கடுமையான வார்த்தை. தமிழ்நாடு காங்

கிரஸில் ஏற்பட்டிருக்கும் தகராறுகளை, மகாத்மா தமது அபிப்பிராயத்தை தெரிவிக்கு முன்பு, இரண்டு கட்சிகளையும் விசாரித்திருக்க வேண்டும். அம்மாதிரி மகாத்மா செய்யவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் அவரை சந்தித்த போது கூட இதை பற்றி ஒருவார்த்தையும் பேசவில்லை. மகாத்மா தமிழ்நாட்டில் இருந்த வரையில் அவரை சுற்றி இருந்தவர்கள் எல்லாருமே ராஜாஜி கட்சியை சேர்ந்தவர்கள் தான். ஆகவே. அவர்கள் சொன்ன அபிப்பிராயங்கள் மட்டுமே மகாத்மாவுக்கு தெரிந்திருக்க முடியும். அதை கொண்டு மகாத்மா தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு விட்டார்.

இந்தியாவின் விடுதலைக்கும், இந்தியாவின் மேன்மைகளுக்கும், இந்தியாவின் சகல நன்மைகளுக்கும் கண்கண்ட சொரூபமாக மகாத்மாவை காங்கிரஸ்காரர்கள் மதித்திருக்கும் போது, அந்த மகாத்மாவே இரண்டு கட்சிகளையும் விசாரிக்காமல் தவறாக அபிப்பிராயம் சொல்லுவதென்றால், அதை கேட்கும் எந்த காங்கிரஸ்காரருக்கு தான் மனம் புண்படாமல் இருக்க முடியும்? இதை பார்த்துதான் ஸ்ரீ காமராஜ் ராஜிநாமா செய்துவிட்டார். யார் பிரதம மந்திரியாக வந்தால் யாருக்கென்ன? ராஜாஜி தான் பிரதம மந்திரியாகவர வேண்டுமென்பது தலைமை பார்லிமெண்டரி போர்டின் அபிப்பிராயமானால், அதை பகிரங்கமாய் சொல்லி விடலாமே! மாகாண பார்லிமெண்டரி போர்ட் அபேட்சகர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நாடகம் எதற்கு? மாகாண போர்ட் அனுப்பிய பின்பு, ராஜாஜியின் அபிப்பிராயப்படி அதை மாற்றப் போவது நிச்சயம். ஹரிஜன அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பில் அப்படித்தான் நடந்தது. அதைவிட, எல்லா விண்ணப்பங்களையும் தலைமை பார்லிமெண்டரி போர்டே வரவழைத்து, ராஜாஜியையும் வரவழைத்து, அவர் இஷ்டப்படியே அபேசகர்களை பொறுக்கி எடுத்து விடலாம். எனவே இந்த விதமாக தமிழ்நாடு காங்கிரஸை அவமதிக்கும் போது ஸ்ரீ காமராஜ் ராஜிநாமா செய்ய வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

மற்ற பார்லிமெண்டரி போர்ட் அங்கத்தினர்களும் (ராஜாஜி ஆட்களை தவிர) ராஜினாமா செய்யவே விரும்பினர்கள். ஆனால், தேர்தல் தினம் நெருங்குகிறபடியாலும், அதற்குள் மற்றொரு போர்டை அமைக்க அவகாசமில்லாத படியாலும் ராஜினாமா செய்ய வேண்டாமென்று ஸ்ரீ காமராஜ் கேட்டுக்கொண்டார். ஆகவே அவர்கள் தங்கள் வேலையை மிகுந்த கஷ்டத்தோடு நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய சிபார்சுகளில் அநேகம் தலைமை போர்டால் மாற்றப் படுமானால் அதில் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமில்லை. தமிழ்நாட்டில் மகாத்மா விஜயம் செய்த இடங்களிலெல்லாம் கூடியிருந்த அவ்வளவு பெரிய கூட்டங்களும் ராஜாஜிக்காக கூடியிருந்தார்கள் என்று மகாத்மா சொல்லுவது தான் ரொம்ப ஆச்சரியமான விஷயம். அதை கேட்டுக்கொண்டு கொஞ்சங்கூட மறுக்காமல் ராஜாஜி கோஷ்டியார் தலையாட்டிக்கொண்டிருப்பது தான் அதைவிட ஆச்சரியமான விஷயம். மகாத்மாவின் பிரார்த்தனைக்காக சென்னையில் கூடி வந்த லட்சக்கணக்கான ஜனங்களும் ராஜாஜிக்காகத்தான் வந்தார்கள் என்றால் ராஜாஜியை அந்த கூட்டங்களில் ஏன் காணவில்லை? அஸ்ஸாமிலும், வங்காளத்திலும் சமீபத்தில் மகாத்மா விஜயஞ் செய்திருந்த போது கூடிய கூட்டங்களும் ராஜாஜியின் செல்வாக்கினால் தான் கூடினார்களா? ரொம்ப ஆச்சரியமான விஷயம்.

இருக்கிற நிலைமை தற்சமயம் ரொம்ப தெளிவாய் விட்டது. தலைமை பார்லிமென்டரி போர்ட் எப்படி நடக்கப் போகிறது என்பதை யூகித்துக் கொள்ளலாம். என்றாலும் பொதுஜன அபிப்பிராயத்தை நசுக்கி விட முடியுமா என்பதை தலைமை பார்லிமென்டரி போர்டார் நன்றாய் யோசனை செய்து முடிவு செய்வார்களாக. வங்காளத்தில் முன்னால் செய்த தவறுகளை தமிழ்நாட்டிலும் செய்து, தமிழ்நாட்டையும் வங்காள மாக்கிவிடாமல் இருப்பார்களென்று எதிர் பார்க்கிறோம். —(12-2-46)

❋ ❋ ❋

அபேட்சகர்களும் அப்பீலும்

சட்ட சபைக்கு அபேட்சகர்களை நியமிப்பதில் தலைமை பார்லிமெண்டரி போர்டின் தீர்ப்பே முடிவானது என்றும், அப்பீலோ புனராலோசனையோ கிடையாதென்றும் சர்தார் பட்டேல் அறிவிக்கிறார். ரொம்ப சரி. எங்காவது ஒரு இடத்தில் தகராறுகள் முடிய வேண்டும். ஒன்றிற்கு மேல் மற்றொன்றாக அப்பீல்கள் போய்க்கொண்டே இருக்க முடியாது. ஆனால், முடிவாக தீர்ப்பு செய்யும் இடத்திலுள்ளவர்கள் சில முறைகளை பின்பற்ற வேண்டும். தங்கள் மனம் போனபடி நடக்கக்கூடாது. மாகாண பார்லிமெண்டரி போர்டுகள் ஏகமனதாக செய்த சிபார்சுகளை தனிப்பட்டவர்கள் ஒருவர் சொல்லுவதற்காக மாற்றுவதென்ற வழக்கத்தை உடனே தலைமை பார்லிமெண்டரி போர்ட் கைவிட வேண்டும். ஏகமனதான சிபார்சுகளை பற்றி அந்தந்த ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகள் ஆட்சேபனை செய்தால், அப்பொழுது வேண்டுமானால் புனராலோசனை செய்யலாம். அதே மாதிரி மாகாண பார்லிமெண்டரி போர்டுகளில் மெஜாரிட்டியார் செய்த சிபார்சுகளையும் கூடிய வரையில் மாற்றக் கூடாது. காங்கிரஸை விட்டு ஓடிப் போனவர்கள், கோர்ட்டுகளில் மன்னிப்புக் கொடுத்தவர்கள், காங்கிரஸுக்கு விரோதமாக பேசியவர்கள் ஆகியவர்களை யார் சிபார்சு செய்தாலும் தலைமை பார்லிமெண்டரி போர்ட் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளக் கூடாது. தமிழ்நாடு பார்மெண்டரி போர்ட் எம்மாதிரி நடந்து வருகிறது என்பது நமக்கு தெரியாது. ஸ்ரீ காமராஜ் அந்த போர்டில் இருந்திருந்தால், அது பிற்போக்காய் போகும்படி விடமாட்டார்; அவர் விலகியதால், அது பிற்போக்காய்விட்டதென்று நாம் சொல்லவில்லை. அது உறுதியாய் நடந்திருக்கிறதா அல்லது பிற்போக்காய் விட்டதா என்பது அபேட்சகர்கள் ஜாப்தா பிரசுரமான பின்பே தெரியும். அம்மாதிரி பிற்போக்காய் அதன் சிபார்சுகள் இருக்குமானால், அதற்கு பொறுப்பானவர்களை தமிழ்நாடு சுலப

மாய் மறந்துவிடாது. மந்திரி வேலை வேண்டும் என்ற ஆசையினால் லட்சியத்தை மறந்தவர்களுக்கு மந்திரி பதவி கிடைக்கப் போவதில்லை என்பதை இப்பொழுதே எச்சரிக்கிறோம். இந்த விஷயங்களை யெல்லாம் தலைமை பார்லிமென்டரி போர்ட் நன்றாய் யோசனை செய்து, பட்சபாதமில்லாமல் முடிவு கூறுமென்று எதிர்பார்க்கிறோம்

—(15-2-46)

* * *

து ரோ க ம்

அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கும் வேலையை தமிழ்நாடு பார்லிமென்ட்டரி போர்ட் முடித்து விட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஜாப்தாவை பார்த்தால் ஸ்ரீ. காமராஜ் அந்த போர்டிலிருந்து விலகிய பலனை நன்றாய் காணலாம். எந்த லட்சியத்திற்காக ஸ்ரீ. காமராஜின் மெஜாரிட்டி கட்சி போராடி வருகிறதோ அந்த லட்சியத்தை பார்லிமென்டரி போர்டிலுள்ள மெஜாரிட்டி கட்சி காற்றில் பறக்க விட்டு விட்டது. நெருக்கடியான காலங்களில் காங்கிரஸை விட்டு ஓடியவர்கள், கோர்ட்டில் மன்னிப்பு கொடுத்தவர்கள், காங்கிரஸை தாக்கி பேசியவர்கள் முதலியவர்களை தேர்ந்தெடுக்க போர்ட் தயங்கவில்லை. பிற்போக்கை எதிர்த்து தீவிரமாக போராடியவர்களை நட்டாற்றில் கை விட்டு விட அஞ்சவில்லை. லட்சியம் என்பது மறைந்து, தனிப்பட்ட முறையில் தன்னை ஆதரிப்பவர் யாரோ அவரை தேர்ந்தேடுக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்திலேயே சில போர்ட் அங்கத்தினர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பொது நலம் மறைந்து சுயநலம் தலைவிரித்தாடுகிறது. இந்த ஜாப்தாவை பார்த்து பல தேச பக்தர்களின் மனம் புண்படும் என்பதை சுயநலமிகள் கொஞ்சமும் யோசிக்கவில்லை. ராஜாஜி கட்சிக்குரொம்ப தூரம் விட்டுக்கொடுத்து விட்டார்கள்.

ராஜாஜியை எதிர்க்கும் கட்சி தனிப்பட்ட முறையில் அவரை எதிர்க்கவில்லை. அவருடைய கொள்கையையே எதிர்க்கிறார்கள். அந்த கொள்கையை எதிர்க்கும்போது அதற்கு வகுப்புவாதம் சூட்ட சிலர் முயற்சி செய்தார்கள். ராஜாஜி ஒரு பிராமணர் என்பதற்காகவே அவரை எதிர்ப்பதாக கயிறு திரித்தார்கள். இந்த வியாக்கியானம் சுத்த தப்பு என்பதை ராஜாஜியை எதிர்க்கும் சில பிராமண நண்பர்களே காட்டி வந்தார்கள். வகுப்பு வாதத்தை மண்டையில் அடிக்க வேண்டுமானால் இந்த பிராமண நண்பர்களை தேர்ந்தெடுப்பில் சேர்த்திருக்க வேண்டும். ஆனால், என்ன நடந்திருக்கிறது? அவர்களை அடியோடு கைவிட்டு விட்டார்கள். ராஜாஜியை ஆதரிக்கும் பிராமணர்களை கைகழுவி விட்டார்கள். இதற்கு ஸ்ரீ. அவிநாசிலிங்கம் செட்டியாரும். ஸ்ரீ. ராமசாமி ரெட்டியாரும் என்ன பதில் சொல்லுகிறார்கள்? ராஜாஜி கட்சியை சேர்ந்த பிராமணர்களை தள்ளுவதற்கு தங்களுக்கு சக்தி யில்லை என்பதற்காக அவர்களுக்கு உடந்தையாய் இருந்தார்களா? தங்களுடைய கட்சியை சேர்ந்த பிராமணர்களை கைவிட்டு விடுவதற்கு என்ன காரணம்? பொறுப்பான பதவியில் இருக்கிறவர்கள் தங்களுடைய கொள்கையை ஆதரிக்கும் சகல வகுப்பாரையும் பேதா பேதமில்லாமல் அணைத்துக்கொண்டு போக வேண்டியது கடமை. ஜாதி அபிமானமோ, ஜாதி துவேஷமோ இருக்கிறவர்கள் பொறுப்பான பதவிக்கு அருகதை யற்றவர்கள். டாக்டர் சுப்பிரமணியம், டி. கே. சீனிவாசய்யர், வி. சுப்பிரமணியம் போன்ற சிறந்த பிராமண தேச பக்தர்களை தேர்ந்தெடுக்காமல் விட்டது பெரிய தவறு. ஆகவே தங்கள் கட்சியில் இருக்கும் பிராமணர்களை காலை வாரி விட செட்டியாரும், ரெட்டியாரும் பின்வாங்கமாட்டார்கள் என்று தெரிகிறது.

செட்டியாரும், ரெட்டியாரும் இன்று எந்த காங்கிரஸ் ஊழியர்களின் தியாகத்தினால் பொறுப்பான பதவிகளில்

இருக்கிறார்களோ, அந்தகாங்கிரஸ் ஊழியர்களிடமாவது நேர்மையாக நடந்து கொண்டிருக்கிறார்களா? அதுவுமில்லை. பிரபல காங்கிரஸ் ஊழியர்களை தேர்ந்தெடுக்காமல் தள்ளி விட்டார்கள். ஸ்ரீ சிதம்பர பாரதிக்கு மதுரை ஜில்லாவில் இடமில்லை யென்றால்வேறு யாருக்குதான் அந்தஜில்லாவில் அபேட்சகராய் நிற்க யோக்கியதை உண்டு என்பது தெரிய வில்லை. ஸ்ரீ. சிதம்பர பாரதி போன்றவர்களையும் தள்ளி விட துணிந்த காரியத்தை பார்த்தால் தீவிர வாதத்தின் மீதும் செட்டியாருக்கும். ரெட்டியாருக்கும் ரொம்ப துவேஷம் இருப்பதாகவே தெரிகிறது. ஆகவே ஒரு பக்கம் வகுப்பு வாதம், மற்றொரு பக்கம் மிதவாதம் ஆகிய இரண்டு வாதங்களாலும் அவர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் தேர்ந்தெடுத்திருக்கும் ஜாப்தா என்ன லட்சணத்தில் இருக்கும்?

எந்த லட்சியக் கொடியை பறக்க விடுவதற்காக திருப்பரங்குன்றத்தில் தேச பக்தர்கள் பதினாயிரக் கணக்கில் கூடி சபதம் செய்தார்களோ அதை செட்டியாரும், ரெட்டியாரும் உடைத்தெறிந்து விட்டார்கள். தமிழ் நாட்டில் இதுவரை கண்டிராத அவ்வளவு பெரிய புரட்சி வேகத்தை உண்டு பண்ணிய ஊழியர்களுக்கு துரோகம் செய்து விட்டார்கள். இந்த புரட்சியில் தீவிர பங்கெடுத்து உண்மையாக உழைத்து வந்த பிராமண நண்பர்களையும் பலி கொடுத்து விட்டார்கள். தமிழ் நாட்டில் வீசி வரும் மாபெரும் புரட்சிக்கும் துரோகம் பண்ணி விட்டார்கள். எங்கு திரும்பினாலும் துரோகம்; அதனால் எங்கு திரும்பினாலும் சோர்வு; இது தான் இன்றைய தமிழ் நாட்டின் காட்சி. இன்று துரோகம் செய்தவர்களை தமிழ்நாடு மறந்து விடாது. அதற்கு பரிகாரம் தேட தமிழ் நாட்டுக்கு தெரியும். என்றாலும் உடனே செய்ய வேண்டிய வேலைகளை ஊழியர்கள் மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் யார் யாரை போட வேண்டும், யார் யாரை போடக்கூடாது என்பதை உடனே ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகள் தலைமை

பார்லிமென்டரி போர்டுக்கு தந்தி கொடுக்க வேண்டும். மனச்சோர்வை விட்டு உடனே இந்த வேலையை செய்வார்களாக, —(16-2-46)

* * *

மகாத்மா, மகாத்மாதான் - சந்தேகமென்ன?

மகாத்மா, மகாத்மாதான் என்று கீழ்பாக்கம் சஞ்சிகை சொல்லுகிறது. இதுவரை அதற்கு இருந்து வந்த சந்தேகம் இப்பொழுது தீர்ந்து போனதற்காக சந்தோஷமடைகிறோம். ஏனெனில் மகாத்மாவை பற்றி அந்த சஞ்சிகை இதற்கு முன்னால் பல தடவைகள் எழுதியவை, அதன் சந்தேகத்தையே காட்டி வந்தன. "அஹிம்சையா, அரசியலா?" என்ற கட்டுரை எழுதியதை கீழ்பாக்கம் சஞ்சிகை மறந்திருக்காதென்று நினைக்கிறோம். வட இந்திய தலைமையை கண்டித்து எழுதியதையும் அவ்வளவு சீக்கிரம் மறந்திருக்காதென்று நம்புகிறோம். அன்று அந்த சஞ்சிகையால் கண்டிக்கப்பட்ட அதே மகாத்மாதான் இப்பொழுதும் இருக்கிறார். அன்றும் அவர் மகாத்மாதான், இன்றும் அவர் மகாத்மாதான். எனவே மகாத்மா மகாத்மாதான் என்று அந்த சஞ்சிகை சொல்லுவதை பார்த்தால் இப்பொழுதுதான் அதற்கு மகாத்மா மகாத்மாதான் என்ற உண்மை புரிந்திருக்கிறது என்று தெரிகிறது. இவ்வளவு காலம் கழித்தாவது உண்மை அதற்கு புலப்பட்டதற்காக சந்தோஷமடைகிறோம்.

உண்மையை அறியவே இவ்வளவு காலமாயிற்றென்றால், மகாத்மாவின் சகல குணங்களையும் அது அறியாமல் இருப்பது இயற்கையேயாகும். அதனால் மகாத்மாவை சாக்கு வைத்துக் கொண்டு என்னென்னவோ அது எழுதி இருக்கிறது. மகாத்மாவின் குணங்களில் சிறந்தது ஒன்று

உண்டு. அதுதான் எதிர்கட்சியின் அபிப்பிராயங்களை மதிப்பதாகும். எதிர் கட்சியார் தங்கள் அபிப்பிராயத்தை எவ்வளவு தைரியமாக சொல்லுகிறார்களோ அவ்வளவுக்கவ் வளவு அவர்களை மகாத்மா போற்றுவார். இதற்கு உதார ணம் வேண்டுமானல், சென்னைக்கு அவர் வந்திருந்தபோது நடந்த ஒரு காரியத்தை எடுத்துக்கொள்ளலாம். சென்னை யில் அவர் இருந்த காலத்தில் பல தடவைகள், மகா கனம் சீனிவாச சாஸ்திரியாரை போய் பார்த்தார். ஏன்? சாஸ்திரி யார் தமது கொள்கைகளை ஆதரிப்பவர் அல்ல என்பது அவருக்கு தெரியும். அப்படியானல் ஏன் பார்த்தார்? எதிர் கட்சியில் உள்ளவர்களையும் மதிக்கக்கூடிய சிறந்த குணம் மகாத்மாவிடம் இருப்பதால்தான் அவரை போய் பார்த்தார். எனவே எதிர் கட்சியை மகாத்மா வெறுப்பவரல்ல. எதிர் கட்சி சொல்லுவதால் மகாத்மாவை மீறி நடப்பதாக கூறு வது வெறும் பித்தலாட்டம். "உலகம் போற்றும் உத்தம ரின் நல்ல அபிப்பிராயத்தை பெறுவதை காட்டிலும் ஒரு வருக்கு வேறு என்ன நலன் ஏற்படக்கூடும்?" என்று கீழ் பாக்கம் சஞ்சிகை கேட்கிறது. மகாத்மாவுடன் அபிப்பி ராய பேதம் கொள்ளுவதால் அவருடைய நல்ல அபிப்பிரா யத்தை பெற முடியாது என்று சொல்லுவது கோமாளித் தனத்தை தவிர வேறில்லை. சினிமா படங்களை மகாத்மா பார்த்ததே இல்லை. சினிமாவை கண்டித்துக்கூட பேசி இருக்கிறார். அப்படியிருந்தும் மகாத்மாவின் பரமானந்த சீடர்களாக நடிப்பவர்களில் எத்தனையோ பேர் அந்த தொழிலை நடத்தி வருகிறார்கள். மகாத்மாவின் நல்ல அபிப்பிராயத்தை பெறுவதற்காக அந்த தொழிலை விட்டு விட்டார்களா? அல்லது அந்த தொழிலை நடத்தி வருகிறார்களே என்பதற்காக அவர்கள் மகாத்மாவின் நல்ல அபிப்பிராயத்தை பெறாமல் இருந்துவிட்டார்களா? இரண் டும் இல்லை.

தங்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக மகாத்மா பேசும்போது "அறிவீனமா அரசியலா?" என்று கேட்பதும், தங்களுக்கு சாதகமாக அவர் அபிப்பிராயம்

சொல்லும் போது "மகாத்மா, மகாத்மாதான்" என்று புகழ்வதும் நேர்மையானவர்கள் செய்கிற வேலையல்ல. தமிழ் நாட்டில் இப்பொழுதுள்ள தகராறில் மகாத்மா அபிப்பிராயம் சொல்லியபோது "கிளிக்" (தனிநல கோஷ்டி) என்ற வார்த்தையை உபயோகித்தார். அது சரியல்ல என்பதே தமிழரின் கட்சி. "கிளிக்" என்ற வார்த்தைக்கு தனிப்பட்ட சகபாடிகள் கூட்டம் என்று தானே அகராதியில் போட்டிருக்கிறது. அதில் என்ன கடுமை இருக்கிறது என்று கீழ்பாக்கம் சஞ்சிகை கேட்கிறது. ரொம்ப பேஷ்! மாடு என்றாலும் மாடுதான். பசு என்றாலும் மாடுதான். எனினும் "மாடு போல இருக்கிறாயே" என்றால் பழித்து சொல்லுவதாய் இருக்கும். "பசு போல இருக்கிறாயே" என்றால் சிலாக்கியமாய் சொல்லுவதாய் அமையும். அகராதியில் பார்த்தால் இரண்டும் மாடுகளாகவே இருக்கும். அகராதியில் ஒரே அர்த்தம் தானே இருக்கிறது. மாடு என்று ஒருவனை அழைப்பதில் என்ன கடுமை இருக்கிறது என்று கேட்டால் எப்படி இருக்கும்? அந்த மாதிரிதான் கீழ்பாக்கம் சஞ்சிகை சொல்லுவதும் இருக்கிறது. அகராதியில் என்ன அர்த்தம் இருந்தாலும் சரி, வழக்கத்தில் எந்த அர்த்தத்தில் ஒரு வார்த்தை உபயோகிக்கப்படுகிறதோ அது தான் அதற்குள்ள உண்மையான அர்த்தம். "அன்பு" என்ற வார்த்தையில் தவறான அர்த்தமோ, கடுமையான அர்த்தமோ எதுவுமில்லை. என்றாலும், "அன்பே" என்று காதலர்கள்தான் ஒருவரை யொருவர் அழைக்க முடியும். "அன்பு" என்ற வார்த்தையில் தவறு ஒன்றுமில்லையே, கடவுளைக்கூட அது குறிக்குமே என்று சொல்லிக்கொண்டு தெருவில் போகிற பெண்களை யெல்லாம் "அன்பே" என்று யாராவது சொல்லத் துணிந்தால், அடுத்த விநாடி கீழ்பாக்கம் ஆஸ்பத்திரிக்குதான் அவர்களை அனுப்புவார்கள். கிளிக் அல்லது தனிநல கோஷ்டி என்ற வார்த்தை ரொம்ப கடுமையான அர்த்தத்தில்தான் உபயோகமாகிறது. சுயநலத்துக்காக கட்டுப்பாடாக வேலை செய்பவர்களுக்கு தான் அந்த வார்த்தை பொருந்தும். அவ்வளவு கடுமை

யான வார்த்தையை மகாத்மா உபயோகித்ததற்காகத்தான் ஸ்ரீ காமராஜ் ராஜிநாமா செய்தார். ஏனெனில், பொது ஜனங்களின் மெஜாரிட்டி அபிப்பிராயத்தை காரியக் கமிட்டியிலுள்ள மெஜாரிட்டி சொல்லும்போது, அந்த அபிப்பிராயம் ஒரு தனிநல சிறு கோஷ்டியின் அபிப்பிராயம் என்று கூறுவது தவறு என்பதே ஸ்ரீ காமராஜின் கட்சி. இதில் மகாத்மாவுக்கு சந்தேகம் இருந்தால் வோட் எடுத்து பார்த்திருக்கலாம். அதை விட்டு மகாத்மாவை தரிசிக்க வந்த கூட்டங்களெல்லாம் ராஜாஜியை ஆதரிக்க வந்த கூட்டம் என்று வர்ணிப்பது நியாயமல்ல என்பதே தமிழரின் வாதம்.

"பார்லிமெண்டரி வேலை காரணமாகத்தான் தகராறு எழுந்தது, அதனால் நான் பார்லிமெண்டரி போர்டிலிருந்து ராஜிநாமா செய்கிறேன்" என்று ஸ்ரீ காமராஜ் சொல்லுவது சரியல்ல என்று கீழ்பாக்கம் சஞ்சிகை கூறுகிறது. தகராறெல்லாம் திருச்செங்கோடு தேர்தலில் இருந்துதான் எழுந்தது என்று அது வாதஞ் செய்கிறது. இதே சஞ்சிகை "திருச்செங்கோடு தேர்தல் தகராறில் கட்சி பலத்தை பார்க்க வேண்டாம். அது முடிந்து போயிற்று. ராஜாஜி ஆட்களை பார்லிமெண்டரி போர்டுக்குள் விட்டால் போதும்" என்று கதறியதை அதற்குள் மறந்துவிட்டது? ஆச்சரியம். சட்டசபை தேர்தல் இல்லாவிட்டால் காங்கிரஸை விட்டு நீங்கியவர்கள் மறுபடியும் காங்கிரஸுக்குள் வருவதற்கு இவ்வளவு பிடிவாதம் செய்வார்களா? அவர்கள் பிடிவாதம் செய்யாமல் இருந்தால் எதிர்ப்புதான் தோன்றியிருக்குமா? இவ்வளவு சச்சரவுகளுக்கும் மூலகாரணம் பார்லிமெண்டரி வேலைதான் என்பதை மகாத்மாகூட மறுக்கவில்லை. ராஜாஜிக்கு பிரதம மந்திரி பதவி கொடுக்க வேண்டும் என்று அவர் சொல்லுகிறாரே யொழிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் பிரஸிடெண்டாக்க வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. இதற்கு அர்த்தமென்ன? கீழ்பாக்கம் சஞ்சிகை சிந்திக்குமாக. "ஸ்ரீ காமராஜ் தமது

ராஜிநாமா அறிக்கையில் மகாத்மாவின் அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ளுகிறாரா ஆட்சேபிக்கிறாரா என்று தெளிவாக சொல்லவில்லை. மகாத்மாவின் புத்திமதியை தாம் ஏற்றுக்கொள்ளுகிறாரா நிராகரிக்கிறாரா என்றும் தெரிவிக்கவில்லை" என்று அந்த சஞ்சிகை புலம்புகிறது. என்ன எழுதுகிறோம் என்பதை அறியாமல் எழுதுகிறவைகளுக்கு மதிப்பே கிடையாது. உண்மையை எழுதுகிறவர்களுக்கு அந்த சிரமம் ஏற்படப்போவதுமில்லை. பிரஸ்தாப சஞ்சிகை செய்யும் டை வியாக்கியானங்களுக்கு அதுவே மறுபக்கத்தில் பூராணை எழுதி இருக்கிறது. அதே கட்டுரையில் கடைசி பகுதியில் அது சொல்லுவதாவது :—

"மகாத்மா காந்தியின் புத்திமதியை ஏற்றுக் கொள்ளுவதாக சொல்லியிருக்கிறாரா? அதுவுமில்லை. ஸ்ரீ காமராஜின் ராஜிநாமா, மகாத்மாவின் அபிப்பிராயத்தை மதித்து அப்பெரியாரின் புத்திமதியை ஏற்றுக்கொள்ளும் முறையில் செய்த ராஜிநாமாவல்ல. மகாத்மா இப்படி சொல்லிவிட்டாரே என்ற வருத்தத்தினாலும், ஆத்திரத்தினாலும் செய்த ராஜிநாமா தான்."

இந்த மாதிரி எழுதும் சஞ்சிகை முதலில் ஒன்றும் தெரியாதது போல் எதற்காக எழுத வேண்டும்? இதுதான் "சத்திய சோதனையா" முன்னுக்கு பின், எழுத்துக்கு எழுத்து முரணை எழுதுவது பெரிய கலையாய் இருக்கலாம். ஆனால் அந்த கலா நிபுணர்கள் ராஜியத்தில் வந்து தங்கள் கலையை காட்டாமல் இருக்க கடவுள் தான் அருள் புரிய வேண்டும். எத்தனை கலா நிபுணர்களும் ரசிகர்களும் சேர்ந்து கூத்தாடினாலும் தமிழ் நாட்டை ஏமாற்றிவிட முடியாது என்பது இன்னமும் அவர்களுக்கு புரியவில்லை. பரிதாபம்!

—(18-2-46)

* * *

தமிழரின் வெற்றி

"கிளிக்" என்ற வார்த்தையை உபயோகித்ததை பற்றி மகாத்மா எழுதிய அபிப்பிராயங்களை நேற்று முன் தினமும் இன்றும் "தினசரி"யில் நண்பர்கள் படித்திருக்கலாம். இனி, அதை பற்றிய விவாதங்களை விட்டுவிட வேண்டியது தமிழரின் கடமையாகும். மகாத்மாதான் நமக்கெல்லாம் தலைவர். அவரால் தான் இன்றுள்ள இந்தியா சிருஷ்டிக்கப்பட்டது அவர் சொல்லுகிற அபிப்பிராயங்களில் தவறான தகவல்கள் இருந்தால், அவற்றை மரியாதையோடு தெரிவிக்க வேண்டியதுதான் நமது கடமை. அவருடைய கவனத்திற்கு கொண்டு வந்து, அவர் பதில் சொல்லிய பின்பு அந்த வாதத்தை அதோடு விட்டுவிட வேண்டியதுதான் மக்களின் பொறுப்பாகும். கட்டுப்பாட்டிற்கும் அதுதான் அழகு. மகாத்மா சொல்லிய தகவல்கள் சரியல்ல என்பதை தமிழர்கள் ரொம்ப அற்புதமாக எடுத்துக் காட்டினார்கள். தமிழ் நாடெங்கும் ஒரே கண்டனங்களும் மறுப்புகளும் கிளம்பின. தமிழருக்கு எவ்வளவு ராஜீய விழிப்பும், சுய மதிப்பும் இருக்கின்றன என்பதையே இவை காட்டுகின்றன. மகாத்மாவை உபயோகப்படுத்த முயன்ற 'கிளிக்' படுதோல்வியடையும்படி தமிழர் செய்து விட்டார்கள். இதற்காக தமிழ் நாடு பெருமை யடைகிறது. தமிழரின் விருப்பத்திற்கு விரோதமாக எந்த 'கிளிக்'கும் வெற்றி பெற முடியாது என்பதை தமிழ் நாடு காட்டி விட்டது. சர்தார் பட்டேலும் அறிந்து கொண்டார். இந்த விவாதத்தால் கிளம்பிய இவ்வளவு பெரிய உற்சாகத்தை இனி விணுகும்படி விடக்கூடாது. எந்த காரியத்தை நடை செய்ய இந்த விவாதம் கிளம்பியதோ அதில் வெற்றி கிடைத்துவிட்டது. எனவே இந்த விவாதத்தை இதோடு நிறுத்தி விடும்படியும், உற்சாகத்தை சிதறடிக்க வேண்டாமென்றும் தமிழரை கேட்டுக் கொள்ளுகிறோம்.

அடுத்தபடியாக செய்ய வேண்டிய வேலையில் கவனத்தை திருப்பவேண்டும். அபேட்சகர்களை பொறுக்கும் வேலை முடிந்துவிட்டது. அதில் தவறுகள் இருப்பதாக சிலர் குறை கூறலாம். தவறோ குறையோ இல்லாத வேலை எதுவுமே இருக்க முடியாது. கூடிய வரையில் அந்த குறைகளை போக்க முயற்சிக்க வேண்டியதுதான். ஆனால் அபேட்சகர்கள் ஜாப்தா முடிந்து விட்டபடியாலும் இனி வாதப்பிரதி வாதங்கள் நடத்துவதை விட்டுவிட வேண்டும். ராஜாஜி விவகாரம் தோன்றியிருக்காவிட்டால் அபேட்சகர்களின் ஜாப்தாவே வேறு விதமாய் இருந்திருக்கும். அதை பற்றி இனி பேசி பயனில்லை. தமிழ் நாட்டை இரண்டாக்கும் விவகாரம் முடிந்து போனதே பெரிய காரியம். அதற்காக எல்லோரும் சந்தோஷப்பட வேண்டும். வங்காளத்தை இரண்டாக்கிய "கிளிக்"கின் விஷமம் தமிழ் நாட்டில் பலிக்காமல் போனது தமிழ் நாட்டின் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். இந்த அதிர்ஷ்டத்தையும் வெற்றியையும் பெற்றதால் ஏற்படும் உற்சாகத்தை தேர்தல் முனைக்கு திருப்ப வேண்டும். காங்கிரஸ் அபேட்சகர்கள் எல்லாரும் வெற்றி பெறும்படி தமிழர்கள் வேலை செய்ய வேண்டும். அபேட்சகர் தனிப்பட்ட முறையில் எப்படி இருந்தாலும் அவர் காங்கிரஸின் பிரதிநிதியாகவே நிற்கிறார். எனவே, காங்கிரஸின் கட்டு திட்டங்களுக்கு அவர் உட்பட்டே நடக்க வேண்டும். அதுதான் காங்கிரஸுக்குள்ள பலமாகும். எனவே தனிப்பட்டவர்களிடமுள்ள விருப்பு வெறுப்புகளை, காட்டிக் கொள்ளாமல், யாரை அபேட்சகராக போட்டார்கள் யாரை போடவில்லை என்பதில் அபிப்பிராய பேதங்களை காட்டிக் கொள்ளாமல், காங்கிரஸ் அபேட்சகர்கள் எல்லாரும் வெற்றி பெறும்படி வேலை செய்ய வேண்டும். தேச பக்தியில் மற்ற எந்த மாகாணத்திற்கும் தமிழ்நாடு இளைத்ததல்ல என்பதை தேர்தல் வெற்றி மூலமாகவும் காட்ட வேண்டும். தமிழ் நாட்டில் இன்று தோன்றியுள்ள முற்போக்கு உணர்ச்சியை கொண்டாடுவதற்கு அதுதான் சரியான வழி. —(26-2-46)

* * *

யார் பிரதம மந்திரி ?

பிரதம மந்திரி பதவியை ஆந்திரருக்கு கொடுப்பதா என்ற துவேஷ பிரசாரத்தை சிலர் செய்து வருகிறார்கள். ஆந்திரருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லுவது எவ்வளவு அசட்டுத்தனமோ, அதேமாதிரி ஆந்திரர் என்பதற்காக ஒருவருக்கு கொடுக்க கூடாது என்று சொல்லுவதும் அசட்டுத்தனமாகும். ஏனெனில் சென்னை மாகாணம் தமிழ் நாடு மட்டும் அடங்கியதல்ல. தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கன்னடம் ஆகிய நாலு பிரதேசங்களும் சென்னை மாகாணத்தில் இருக்கின்றன. ஆகவே இந்த நாலு மாகாண பிரதிநிதிகளில் பிரதம மந்திரி பதவிக்கு யார் தகுதியானவர் என்று பொறுக்கி எடுப்பதே நியாயமாய் இருக்கும். மெஜாரிட்டி பலம் தன்னிடம் இருக்கிறபடியால் தனக்கே பிரதம மந்திரி பதவி வேண்டும் என்று தமிழ் நாடு சொல்லுவது நியாயமாய் இருக்காது. அதே மாதிரி மைனாரிட்டிகளில் பெரிய மைனாரிட்டியாக தான் இருப்பதால் தனக்கே வேண்டுமென்று ஆந்திரா கேட்கவும் முடியாது. தமிழ் நாட்டுக்கும் ஆந்திராவுக்கும் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை கேரளாவுக்கும் கர்நாடகத்திற்கும் உண்டு. எனவே எந்த பிரதேசத்தை சேர்ந்தவராய் இருந்தாலும் சரி, சட்ட சபை கட்சியில் யாருக்கு அதிகமான ஆதரவு இருக்கிறதோ அவரே பிரதம மந்திரியாக வரவேண்டும். சட்டசபை அங்கத்தினராய் இல்லாத யாரையாவது பிரதம மந்திரி யாக்குவது என்று சிலர் முயற்சி செய்வதாய் தெரிகிறது. அம்மாதிரி செய்வது கட்சியில் தற்சமயம் இருப்பவர்களை அவமதிப்பதாய் இருக்கும். வெளியில் இருக்கும் ஒருவர்தான் வந்து பிரதம மந்திரியாக வேண்டும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு சட்ட சபை கட்சி மோசமாய் போய்விடவில்லை. எனவே அந்த முயற்சியை ஆரம்பத்திலேயே சமாப்தி செய்துவிட வேண்டும். வெளியாரை கொண்டு வரவேண்

டும் என்ற யோசனையை கட்சியில் எதிர்ப்பவர்கள் ரொம்ப பெரிய மெஜாரிட்டியாய் இருப்பார்கள். எனவே அந்த யோசனை பலிக்கப் போவதில்லை. இவ்வளவையும் படித்த பின்பு, பிரதம மந்திரியாக யார் வருவார் என்ற கேள்வியை நண்பர்கள் போடலாம். ரொம்ப இயற்கையான கேள்வி அதைவிட முக்கியமான கேள்வி தற்சமயம் வேறு எதுவு மில்லை. எனவே சில பத்திரிகைகளில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பெயர்களை பிரதம மந்திரி பதவிக்கு ஹேஷ்யம் செய்து வருகிறார்கள்.

பிரதம மந்திரி பதவிக்கு ஸ்ரீ காமராஜ் ஆசைப்படுவதாக சில கிறுக்கர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆசைப்படுவதற்கும் யோக்கியதைக்கும் வித்தியாசமுண்டு. பிரதம மந்திரி பதவிக்கு ஸ்ரீ. காமராஜ் பொருத்தமானவரா என்றால் அதில் சந்தேகமே கிடையாது. யோக்கியதை, திறமை, ராஜ தந்திரம், பணிவு ஆகிய அவசியமான குணங் களெல்லாம் ஸ்ரீ. காமராஜிடம் நிறைந்து விளங்குகின்றன. எனவே அவர் பிரதம மந்திரியாக வந்தால் இந்தியாவிலேயே சென்னை மாகாணம் ரொம்ப சிறப்புற்றதாய் விளங்கும். சட்டசபை கட்சியில் அவருக்கு மெஜாரிட்டி ஆதரவு இருக் குமா என்று கேட்டால் அதில் சந்தேகமே இல்லை. அவருக்கு பூர்ண ஆதரவு கிடைக்கும். ஆகவே யோக்கி யதை, ஆதரவு இரண்டும் அவருக்கு இருக்கின்றன. ஆனால் மூன்றாவது குணமான ஆசை என்பது மட்டும் அவரிடம் இல்லை. யார் வந்து சொன்னாலும் சரி அவர் பிரதம மந்திரி பதவியை ஒப்புக்கொள்ள மாட்டார். எனவே பிரதம மந்திரியாக வருவதற்கு அவருக்கு யோக்கியதை இருந்தபோதிலும் ஆசை இல்லை. ஆசை இல்லாதவரை ஆசைப்படுவதாக பிரசாரம் செய்வது முதல் தரமான அயோக்கியத்தனமாகும். ஸ்ரீ காமராஜ் சம்மதிக்க மாட்டா ரென்றால் வேறு யாரை போடலாம் என்று கேட்கலாம். அடுத்தாற்போல் பார்த்தால் கட்சியில் மதிப்பும், அந்தஸ் தும், யோக்கியதையும் உள்ளவர்களில் ஸ்ரீ. பிரகாசம் முக்

கியமானவராய் விளங்குகிறார். தேசபக்தியிலோ, தியாகத்திலோ, நிர்வாக அனுபவத்திலோ அவர் யாருக்கும் இளைத்தவரல்ல. ரொம்ப உறுதியானவர். முற்போக்கான கொள்கைகள் உடையவர். எனவே அவர் பிரதம மந்திரியாக வருவாரானால் ரொம்ப விசேஷமாய் இருக்கும். சட்ட சபை கட்சியில் அவருக்கு நல்ல ஆதரவு உண்டு. ஸ்ரீ பிரகாசத்தை தவிர வேறு எந்த ஆந்திரருக்கும் சட்ட சபை கட்சியில் அவ்வளவு ஆதரவு கிடையாது. ஸ்ரீ பிரகாசத்தை ஆந்திரர்களில் மெஜாரிட்டியார் ஆதரிக்கிறார்களா அல்லது வேறு எந்த ஆந்திரரையாவது ஆதரிக்கிறார்களா என்பது இன்னம் தெரியவில்லை. ஸ்ரீ பிரகாசத்தை மெஜாரிட்டி ஆந்திரர்கள் ஆதரிக்கவில்லையென்றால் வேறு எந்த ஆந்திரருக்கும் சட்ட சபை கட்சியில் மெஜாரிட்டி ஆதரவு கிடைக்குமென்று தெரியவில்லை. ஸ்ரீ. பிரகாசத்தை பிரதம மந்திரியாக்கக் கூடாதென்று யாராவது சூழ்ச்சி செய்வதாய் இருந்தால் அடுத்தபடியாக பிரதம மந்திரி பதவி யாருக்கு போகும் என்று கேட்கலாம். அதை மற்றொரு நாள் பரிசீலனை செய்வோம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். ஸ்ரீ பிரகாசத்திற்கு பிரதம மந்திரி பதவி கிடைக்கவில்லையென்றால் அப்புறம் வேறு எந்த ஆந்திரருக்கும் அது கிடைக்கப் போவதில்லை. —(29-3-46)

* * *

மற்றொரு சூழ்ச்சி ?

சர்தார் பட்டேலின் அழைப்பின் பேரில்தான் ஸ்ரீமான்கள் மாதவமேனனையும், பக்தவத்ஸலத்தையும் ஸ்ரீ காமராஜ் பம்பாய்க்கு அனுப்பினார். சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைவர் தேர்தலைப் பற்றி யோசிக்கவே சர்தார் பட்டேல் அழைப்பு அனுப்பினார். போனவர்கள் திரும்பி வந்து மூன்று தினங்கள் ஆவதற்குள்ளாக டில்லிக்கு வரும்படி சர்தார் பட்டேலும், ராஷ்டிரபதி ஆஜாதும் தந்தி

கொடுத்திருக்கிறார்கள். பம்பாயில் பேசிய பின்பு மறுபடியும் டில்லியில் புதிதாய் என்ன பேச வேண்டி இருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும், பட்டேலோ, ஆஸாதோ ஏன் சென்னைக்கு வரக்கூடாது? அவர்களில் யாராவது ஒருவர் சென்னைக்கு வந்திருந்தால் 7உ போட்டிருந்த சட்டசபை கட்சி கூட்டத்தை ஒத்தி வைக்க நேரிட்டிருக்காது. கூட்டத்திற்காக சுமார் 200 பேர் வரை சென்னைக்கு வந்து வீணாக திரும்பி போகும்படி நடந்திருக்காது. 7உ கட்சி கூட்டம் போட்டிருப்பது தெரிந்தும் டில்லியில் இருப்பவர்கள் இங்கே வராமல் இங்கே இருப்பவர்களை டில்லிக்கு அழைப்பதுதான் ரொம்ப விசித்திரமாய் இருக்கிறது. 200 பேர்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் கவனிக்காமல், குறிப்பிட்ட தேதியில் போடப்பட்ட கூட்டத்தையும் நடக்க விடாமல் செய்வது கொஞ்சங்கூட நியாயமாய் தெரியவில்லை. எதற்காக திடீரென்று டில்லிக்கு வரும்படி அழைப்பு வந்திருக்கிறது? மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் பிரஸிடெண்டுகளை தவிர வேறு சில ஆந்திர சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அழைப்பு வந்திருப்பதை பார்த்தால் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. சட்டசபை கட்சியின் தலைவராகவும், பிரதம மந்திரியாகவும் ஸ்ரீ பிரகாசம் வருவது சில ஆந்திரர்களுக்கு பிடிக்கவில்லை. ஆகவே ஸ்ரீ பிரகாசம் மீது புகார் கூறி ஆஸாதுக்கும் பட்டேலுக்கும் அவர்கள் தந்தி கொடுத்தார்கள் என்று நினைக்கிறோம். எனவே அதை சாக்கு வைத்துக்கொண்டு விசாரணை செய்வதற்காக டில்லிக்கு அழைத்திருக்க வேண்டும். அதாவது, மற்றொரு ஆஸப் அலி வேலை செய்ய யாரோ சூழ்ச்சி செய்கிறார்கள். இதில் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

ஸ்ரீ பிரகாசம் பிரதம மந்திரியாக வரக்கூடாதென்று ஆந்திரர்களில் சிலருக்கு அபிப்பிராயம் இருந்தால் அதை காரணமாகக் கொண்டு தலைவர் தேர்தலில் பார்லிமெண்டரி கமிட்டி தலையிட இடம் கொடுக்க முடியாது. யாரை தலை

வராக தேர்தெடுப்பது என்ற விஷயம் கட்சியை சேர்ந்த பொறுப்பு. யார் வர வேண்டும், யார் வரக்கூடாது என்று பார்லிமென்டரி போர்ட் சொல்லுவதற்கு அதிகாரம் இருப்பதாக அவர்கள் நினைத்தால் அதை பகிரங்கமாய் சொல்லட்டும். எதற்காக ரகசிய பேச்சுகள் நடத்த வேண்டும்? பழைய யோசனையை இந்த சந்தர்ப்பத்தில் நிறைவேற்றி விடலாம் என்று பார்லிமென்டரி போர்ட் நினைப்பதாய் இருந்தால் அதை சென்னை மாகாணம் எதிர்த்தே தீரும். எந்த காரணத்தை முன்னிட்டாவது ஸ்ரீ. பிரகாசத்தை கட்சி தலைவராக தேர்தெடுக்க வழியில்லாமல் போய்விட்டால், அதனால் வேறு ஆளே இல்லை என்பது அர்த்தமல்ல. ஸ்ரீ. முத்துரங்க முதலியார் இருக்கிறார். ஸ்ரீ மாதவமேனன் இருக்கிறார். இருவரும் அந்த பதவிக்கு ரொம்ப பொருத்தமானவர்கள். நேர்மையும் புத்தியும் உள்ளவர்கள். இதை ஆட்சேபிக்க முடியாது, இந்த இரண்டு பேரில் ஒருவரை தேர்ந்தெடுந்தெடுக்க சட்டசபை கட்சி பின் வாங்காது. இதை பார்லிமென்டரி போர்ட் அறியுமாக —(25-4-46)

❊ ❊ ❊

சூழ்ச்சி பலிக்கவில்லை

சென்ற 7உ நடப்பதாய் இருந்த சட்டசபை காங்கிரஸ் கட்சி கூட்டத்தை திடீரென்று ஒத்தி போடும்படி செய்து, இந்த மாகாணத்து தலைவர்களை டில்லிக்கு போகும்படி சூழ்ச்சி நடந்ததை நண்பர்கள் அறிவார்கள். அந்த சூழச்சியினால் காரியம் பலிக்கவில்லை என்று தெரிகிறது ஏனெனில் யார இந்த மாகாணத்து பிரதம மந்திரி என்பதை டில்லியில் முடிவு செய்ய முடியவில்லை. அல்லது சர்தார் பட்டேல் யாரை பிரதம மந்திரியாக்க வேண்டுமென்று நினைக்கிறாரோ அந்த காரியம் பலிக்கவில்லை என்று தோன்றுகிறது. அதனால்தான் சட்டசபை கட்சி கூட்டத்திற்கு மகாத்மா காந்தி, சர்தார் பட்டேல், ராஷ்டிரபதி ஆஜாத்

ஆகியவர்கள் செய்ய அனுப்புவதென்று முடிவு செய்திருக்கிறார்கள். இன்னாரை பிரதம மந்திரியாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அந்த செய்தியில் சொல்லப்பட்டிருக்குமென்று நினைக்கிறோம். ஆனால் அந்த செய்தி வெறும் சிபார்சே ஒழிய உத்தரவல்ல. இன்னாரைத்தான் தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று உத்தரவிட காரியக் கமிட்டிக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் சுபார்சு செய்யலாம். அந்த சிபார்சை சட்ட சபை கட்சி ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை. இதை சட்டசபை கட்சி ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தங்களுக்கு யாரை வேண்டுமானாலும் தலைவராய் தேர்ந்தெடுக்க உரிமை உண்டு, தங்களுக்கு யாரிடம் நம்பிக்கை இருக்கிறதோ அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். சர்தார் படேலோ, மௌலானா ஆஜாதோ சொல்லுகிறார்கள் என்பதற்காக ஒருவரை தலைவராக தேர்ந்தெடுத்தால், அந்த தலைவர் கட்சியின் அபிப்பிராயப்படி நடப்பார் என்பது நிச்சயமில்லை. மேலிடத்து தயவு இருக்கிறது என்ற மமதையிலேயே நடப்பார். அப்புறம் அவர் மூலம் ஏதாவது காரியம் நடக்க வேண்டுமானால் ஒவ்வொரு தடவையிலும் வட இந்தியாவுக்கு படேலையோ, ஆஜாத்தையோ போய் பார்க்க பிரயாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த மானங்கெட்ட நிலைமையை சட்டசபை கட்சி ஒருக்காலும் ஒப்புக் கொள்ள முடியாது. இச்சமயத்தில் மற்றொரு முக்கியமான விஷயத்தை சட்டசபை கட்சிக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

அதாவது தமிழ் நாட்டில் ராஜாஜி தகராறு ஏற்பட்ட காலத்திலிருந்து, காங்கிரஸ் காரியக் கமிட்டியும் பார்லிமென்டரி போர்டும் ஒரே நோக்கத்தோடே நடந்து வந்திருக்கின்றன. எப்படியாவது ராஜாஜியை பிரதம மந்திரி யாக்கிவிட வேண்டுமென்பதே அந்த மேலிடத்துக்காரர்களின் அபிப்பிராயம். ஆஸப் அலியின் நடவடிக்கைகள் கூட அந்த நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அப்

புறம் சட்ட சபைக்கு அபேட்சகர்கள் தேர்தெடுப்புக்காக நியமிக்கப்பட்ட பார்லிமென்டரி கமிட்டி நியமன விஷயத்திலும் சர்தார் பட்டேல் ரொம்ப எதேச்சாதிகாரமாகவும் ராஜாஜிக்கு சாதகமாகவும் நடந்து கொண்டார். அதன் பின்னல் அபேட்சகர்களை அங்கீகரிக்கும் கட்டத்திலும் ராஜாஜிக்கு சாதகமாக யார் யாரை பொறுக்கி எடுக்க வேண்டும் என்பதில் சர்தார் பட்டேல் தமது பூர்ண அதிகாரத்தை உபயோகித்தார். இவ்வளவு தூரம் பட்சபாதமாக நடந்துங்கூட ராஜாஜியால் நிற்க முடியவில்லை. தேர்தலிலிருந்து விலகி விட்டார். ஆகவே இதிலிருந்து இரண்டு விஷயங்களை தெரிந்து கொள்ளலாம். ஒன்று, ஜனங்களின் அபிப்பிராயத்தை கொஞ்சங்கூட கவனிக்காமல் ராஜாஜிக்கு சாதகமாக எவ்வளவு எதேச்சாதிகாரத்தை உபயோகிக்க வேண்டுமானலும் சர்தார் பட்டேல் பின்வாங்க மாட்டார் என்பது. எனவே இப்படி நடக்கிறவரை எப்படி நம்ப முடியும்? தற்சமயம் கட்சி கூட்டத்திற்கு சிபார்சு செய்தி அனுப்பி இருக்கிறார் என்றல் தமக்கு அதிகாரம் இல்லாததால்தான் சிபார்சு செய்தியை அனுப்பி இருக்கிறார். இந்த உபாயத்தின் மூலம் தமது காரியம் நிறைவேறியதும் நாளை இதே பட்டேல் தமது எதேச்சாதிகாரத்தை ராஜாஜிக்கு சாதகமாக தொடர்ந்து உபயோகிக்க தவற மாட்டார். எனவே சர்தார் பட்டேல் கையாளும் "சிபார்சு" ராஜதந்திரத்தில் யாரும் ஏமார்ந்து விடக்கூடாது. இரண்டாவது விஷயம், சர்தார் பட்டேல் கோஷ்டியார் இவ்வளவு பலமாக ஆதரித்தும் ராஜாஜியால் நிற்க முடியவில்லை. தேர்தலிலிருந்து விலகிவிட்டார். அந்த நிலைமை ஒன்றும் இன்றும் மாறி விடவில்லை. இந்த சமயத்தில் ஏதோ மேலிடத்து சிபார்சை கொண்டு பிரதம மந்திரியாக வர முடிந்தாலும் எத்தனை நாட்களுக்கு அதில் நிலைத்திருக்க முடியும்? இதை ராஜாஜி யோசித்து பார்த்தால் மந்திரி சபைக்கு இருக்கும் திசைக்கே அவர் வரமாட்டார் என்று நினைக்கிறேம். அவரே வருவதற்கு பிரியப்பட்டாலும், மேலிடத்துக்காரர்கள் ஆதரித்தாலும், இந்த மாகாணத்து ஜனங்களின் அபிப்பிராயத்தை

அநுசரித்து நடக்க வேண்டியதுதான் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் கடமை. அந்த அபிப்பிராயம் என்ன என்பதை அங்கத்தினர்கள் அறிவார்கள். மேலிடத்து சூழ்ச்சிகளை இதுவரை வெற்றிகரமாக எதிர்த்து வந்தவர்கள் 18ஆ நடக்கப்போகிற கடைசி கூட்டத்திலும் ரொம்ப உறுதி யோடு நிற்பவர்கள் என்பதில் சந்தேகமில்லை. —(12-4-46)

* * *

எதற்காக பழைய மந்திரி சபை?

சென்னையில் பழைய மந்திரி சபையே வேண்டு மென்று காங்கிரஸ் மேலிடம் சொல்லுகிறார்களாம். இந்த பழைய மந்திரி சபை மீது இவ்வளவு ஆர்வம் எதற்கு என்று கேட்கலாம். மற்ற மாகாணங்களில் பழைய மந்திரி சபைகளே ஏற்பட்டிருக்கின்றன என்று பதில் சொல்லு கிறார்கள். அநேகமாய் உண்மைதான். ஆனால் ஒரு விஷ யத்தை மறந்து விட்டார்கள். மற்ற மாகாண பிரதம மந்திரி கள் யாரும் 1942-ம் வருஷத்தில் காங்கிரஸிலிருந்து விலக வில்லை. இந்த மாகாண மாஜி பிரதம மந்திரி அச்சமயம் காங்கிரஸிலிருந்து விலகிவிட்டார். அப்படி விலகியவரை எதற்காக மீண்டும் பிரதம மந்திரியாக்க வேண்டும்? மாஜி மந்திரிகளே மீண்டும் மந்திரிகளாக வேண்டும் என்ற கொள்கை எந்த விதத்தில் சிறந்தது என்பது தெரியவில்லை. அல்லது அந்த கொள்கையிலிருந்து விலகக் கூடாது என் பதற்கு அது என்ன அவ்வளவு புனிதமானது என்பதும் தெரியவில்லை. அவ்வளவு புனிதமாய் இருந்தால் பம்பாய் மந்திரி சபையில் மாஜி மந்திரியாய் இருந்த ஸ்ரீ கே. எம். முன்ஷியை ஏன் மீண்டும் மந்திரியாய் சேர்த்துக் கொள்ள வில்லை? அவருடைய நிர்வாக திறமையை பற்றியோ நாண யத்தை பற்றியோ யாரும் குறை சொல்ல முடியாது. எல் லாரும் ரொம்ப சிலாக்கியமாய் பேசினார்கள். அவ்வளவு

தூரம் சிறந்த நிர்வாகஸ்தரான ஸ்ரீ முன்ஷியை தற்கால மந்திரி சபையில் சேர்க்காமல் இருக்கும் போது சென்னையில் மட்டும் பழைய மந்திரி சபையே மறுபடியும் வரவேண்டும் என்று எதற்காக சொல்ல வேண்டும்? ஒரிஸ்ஸாவில் பழைய பிரதம மந்திரி ஸ்ரீ விஸ்வநாத தாஸ் வரவில்லையே? அங்கே எதற்காக ஸ்ரீ ஹரிகிருஷ்ண மேதாப் என்பவரை புதிதாக பிரதம மந்திரியாக்க வேண்டும்? இவை யெல்லாம் பெரிய புதிர்களாய் இருக்கின்றன.

சென்னையில் பழைய மந்திரி சபையே மீண்டும் வர வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டால், காங்கிரஸிலி, ருந்து விலகிய ஸ்ரீ ராமநாதனையும், ஸ்ரீ வார்க்கியையும், சட்ட சபையில் அங்கத்தினராய் இல்லாத டாக்டர் சுப்பராயனையும் மந்திரிகளாய் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அர்த்தம். தற்சமயம் சட்டசபை கட்சியில் வேறு தகுதியானவர்கள் இல்லை; அதற்காக இவர்களை சேர்த்துக் கொண்டாக வேண்டும் என்று சொல்லுவதை போலவே இது இருக்கிறது. இது சட்டசபை கட்சியை அவமதிப்பதாகும். காங்கிரஸை திட்டியவர்களையும் காங்கிரஸிலிருந்து ஓடியவர்களையும் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் !அப்புறம் அந்த மந்திரி சபையை காங்கிரஸ் மந்திரி சபை என்றே சொல்ல முடியாது. யார் யாரெல்லாமோ அமைந்த மந்திரி சபைக்கு காங்கிரஸ் கட்சி எதற்காக ஆதரவு கொடுக்க வேண்டும் என்று தெரியவில்லை. ஸ்ரீ ராமநாதனையோ ஸ்ரீ வார்க்கியை யோ சேர்த்துக்கொள்ளும்படி சொல்லவில்லை என்று காங்கிரஸ் மேலிடம் கூறலாம். அப்படியானால் அவர்களை எதற்காக விட்டுவிட வேண்டும் என்பதற்கு சரியான காரணம் சொல்ல வேண்டும். ராஜாஜி என்ன செய்தாரோ அதையேதான் ஸ்ரீ ராமநாதனும் செய்தார். ஸ்ரீ ராமநாதனை சேர்க்கக்கூடாதென்றால் ராஜாஜியை எப்படி சேர்த்துக் கொள்ளலாம்? ராஜாஜியை மந்திரியாக்கலாமென்றால் ஸ்ரீ ராமநாதனை ஏன் மந்திரியாக்கக் கூடாது? ஆளுக்கு தக்கபடி

வாதங்களை மாற்றிவிட முடியாது. சட்டசபை காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இவற்றை யெல்லாம் நன்கு யோசிக்க வேண்டும்.

பழைய மந்திரி சபையையே மீண்டும் நியமிக்க வேண்டும் என்று தீர்மானத்தை 18உ கூட்டத்தில் பிரேரித்து வோட் எடுக்கும்படி காங்கிரஸ் மேலிடம் உத்தர விட்டிருக்கிறார்கள். ராஜாஜியை பிரதம மந்திரியாக கொண்டு வருவதற்கே இந்த சூழ்ச்சி என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. எனவே 18உ வரும் டி தீர்மானத்தை தாட்சண்யமில்லாமல் தோற்கடிக்க வேண்டும். ஏனெனில் சட்ட சபைக்குள் தற்சமயம் இருக்கிறவர்களை தவிர வேறு யாரையும் பிரதம மந்திரியாக நியமிப்பதென்ற கொள்கையையே எதிர்க்க வேண்டும். இரண்டாவதாக காங்கிரஸிலிருந்து விலகியவர்களை மந்திரிகளாக நியமிப்பதுதென்பது ரொம்ப மோசமான கொள்கை. அதை தவிர அம்மாதிரி செய்வது கட்சியில் இருப்பவர்களை அவமதிப்பதாகும். ஆகவே யார் பிரதம மந்திரியாக வந்தாலும் கவலையில்லை; அம்மாதிரி வருகிறவர் சட்ட சபை கட்சியில் தற்சமயம் இருப்பவராகவே இருக்க வேண்டும். இந்த கொள்கையை எந்த காரணத்தை முன்னிட்டும் சட்ட சபை அங்கத்தினர்கள் கைவிடக்கூடாது. மாகாண விஷயங்களில் மேலிடம் தலையிடுவதே ரொம்ப தவறான காரியம். இந்த மாகாணத்தில் அம்மாதிரி தலையிட்டால் பலிக்காது என்பதை மேலிடம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். என்றாலும் ராஜாஜியை கொண்டு வர கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்த்து விடுவோமே என்று நினைக்கிறார்கள். பழைய மந்திரி சபையே வரவேண்டும் என்று சொல்லுவதுதான் அந்த கடைசி முயற்சி. அதுவும் பலிக்காமல் செய்து மாகாண சுதந்திரத்திற்கு வாகைமாலை சூட்ட வேண்டியது சட்ட சபை காங்கிரஸ் அங்கத்தினர்களின் கடமையாகும்

—(15-4-46)

❋ ❋ ❋

ராஜாஜி தோல்வி

ராஜாஜியை தலைவராக தேர்ந்தெடுக்க முடியாதென்று சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி தீர்மானம் செய்துவிட்டது. அதற்காக அந்த கட்சியை இந்த மாகாணத்தின் பெயரால் பாராட்டுகிறோம். ஏனெனில் நெருக்கடியான கட்டங்களில் உறுதியாய் நிற்பதைத்தான்! உண்மையான உறுதி என்று சொல்ல முடியும். இந்த மாகாணத்தின் உரிமையும் கௌரவமும், அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. மேலிடத்து சிபார்சுகளுக்கு பயந்து சட்டசபை கட்சி நடந்திருக்குமானால், அந்த உரிமையும் கௌரவமும் காற்று வாக்கில் போயிருக்கும். அம்மாதிரி செய்யாமல் உறுதியாக நடந்து கொண்டதன் மூலம் அந்த உரிமையையும் கௌரவத்தையும் சட்டசபை கட்சி காப்பாற்றிவிட்டது. ஆகவே அதற்காக அந்த கட்சியை பாராட்டுகிறோம். சட்டசபை தேர்தல் பேச்சு ஆரம்பமானதிலிருந்தே இந்த மாகாணத்தில் தலைமை பதவியை பற்றிய இயக்கமும் ஆரம்பமாய் விட்டது. ஆரம்பத்திலிருந்தே இந்த மாகாண ஜனங்களில் பெரும்பாலோர் ராஜாஜியின் தலைமையை விரும்பவில்லை. அப்படியிருந்தும் ராஜாஜியையே எப்படியாவது இந்த மாகாணத்தின் தலைவராக்கி விடுவது என்று மேலிடத்தார் ஆரம்பத்திலிருந்தே வேலை செய்து வந்தார்கள். காங்கிரஸ் ஸ்தாபனம் ஜனநாயக முறையில் நடக்கிறபடியால் மேலிடத்தார் தலையிடும் குறிப்பிட்ட அளவே இருக்க முடியும். பொதுவான கொள்கைகளை மேலிடத்தார் நிர்ணயிக்க உரிமையுண்டு. மந்திரி சபையை அமைக்கும்படியோ, ராஜிநாமா செய்யும்படியோ சொல்லுவதற்கு மேலிடத்தாருக்கு உரிமையுண்டு. ஆனால் இன்னாரைத் தான் தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஆக்ஞையிட மேலிடத்தாருக்கு அதிகாரம் கிடையாது. குறிப்பிட்ட அளவு சொல்லிப் பார்த்த பின்பும் இந்த மாகாணத்தார் ஒரே பிடிவாதமாக இருப்பதை பார்த்த பின்பாவது மேலிடத்

தார் தங்கள் தலையீட்டை நிறுத்தி இருக்க வேண்டும். அப்படி செய்யாமல் கட்சி கூட்டம் வரையிலும், அவர்கள் பிடிவாதமாய் இருந்தது ரொம்ப ரொம்ப வருந்தத்தக்கது.

யார் தலைவராய் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியது கட்சியின் பொறுப்பு. இன்னார்தான் தலைவராய் இருக்க வேண்டும் என்று மேலிடத்தார் சிபார்சு செய்வது ஜனநாயகமல்ல. மகாத்மா காந்தி தலைமை பதவியிலிருந்து விலகி ஜவாஹர்லால் தலைவராய் வரவேண்டும் என்று அமெரிக்காவில் ஸர். பிரோஸ்கான் நூன் சொன்னார். "அடவைத்தியமே! தலைமை பதவி என்பது ஜனங்களாக கொடுப்பதா அல்லது யாராவது சிருஷ்டிப்பதா? இது கூட உமக்கு தெரியவில்லையா?" என்று ஸர். நூனுக்கு அறிஞர்கள் புத்தி புகட்டினார்கள். அதே மாதிரி தான் சென்னை தலைமை பதவி சம்பந்தமாக நடக்கும் விவாதங்களும் இருக்கின்றன. இந்த மாகாணத்திற்கு தலைவர் யார் என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு இந்த மாகாணத்திற்கே உண்டு. யாரோ ஒரு சிறு கும்பல் இங்கிருந்து மேலிடத்தாருக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பதற்கு மேலிடத்தார் தலையிட்டுக் கொண்டிருப்பது கொஞ்சமும் ஜனநாயகமல்ல. ஆகவே இன்று சட்டசபை கூட்டத்தில் வந்து முடிந்த போராட்டம் ஜனநாயகத்திற்கும் எதேச்சாதிகாரத்திற்கும் நடந்துவந்த போராட்டமாகும். இந்த போராட்ட காலத்தில் ஜனநாயக கட்சியை பயமுறுத்த எத்தனையோ உபாயங்கள் கையாளப்பட்டன. மேலிடத்தாரின் தலையீடுகளை காட்டி பயமுறுத்தப்பட்டன. மேலிடத்துக்கு காவடிகள் போயின இவ்வளவு இடையூறுகள் இருந்தும் ஜனநாயகக் கட்சி ஒரே உறுதியுடன் தங்கள் உரிமைக்காக போராடி வந்தது தான் ரொம்ப பாராட்டத்தக்க விஷயம். கடைசிவரையிலே போராடி முடிவில் வெற்றி பெற்று விட்டது. ராஜாஜியை ஆதரிக்கும் கட்சியோ அல்லது மேலிடமோ இன்றைய தீர்ப்போடு ஒதுங்கி விடுவார்கள் என்று நினைக்கிறோம், அதாவது இம்மாகாணத்து தலைமை பதவி விஷயத்தில்

இனி தலையிடமாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அது தான் கௌரவமாய் இருக்கும். இனியும் தலையிடுவதென்றால், இனியும் எதிர் கட்சிக்கு தோல்விதான் என்பதை சொல்ல வேண்டியதில்லை. தங்களுடைய கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவாவது இனி தலையிடாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இந்த போராட்டத்தில் ஜனநாயகம் அடைந்த வெற்றி சாமான்யமானதல்ல. இம்மாகாணத்தின் எதிர்கால சரித்திரத்தில் இந்த வெற்றி ஒரு முக்கியமான சம்பவமாய் கருதப்படும். —(18-4-46)

* * *

தலைவர் தேர்தல்

சென்ற 18-ந் தேதியன்றே சென்னை பிரதம மந்திரியை தேர்ந்தெடுக்கும் வேலை முடிந்து போயிருக்கும். ஆனால் தங்களிடம் தெரிவித்த பின்பே தேர்தல் நடக்க வேண்டுமென்று மேலிடத்தார் உத்தரவிட்டபடியால் 18-ந் தேதி அந்த வேலை முடியவில்லை. அப்புறம் வெவ்வேறு காரணங்களில் இன்று வரையில் இழுத்துக் கொண்டு போயிற்று. இம்மாதிரி இழுபறியில் நிற்கும்படி மேலிடத்தார் செய்திருகக வேண்டியதில்லை. யாருடைய தலைமை பதவி வேண்டாம் என்று சொல்ல இந்த மாகாணத்தாருக்கு உரிமையுண்டு. அதற்காகத்தான் இதுவரை போராட்டங்கள் நடந்து வந்தன. அதே மாதிரி ஒரு குறிப்பிட்ட நபரை தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று சொல்ல மேலிடத்தாருக்கு உரிமையுண்டு. அந்த உரிமையை தெளிவாக சொல்லிவிட்டால் இவ்வளவு இழுபறிகளுக்கும் இடமில்லாமல் செய்திருக்கலாம். ராஜாஜியை தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டுமென்று மேலிடத்தார் சிபார்சு செய்ததை ஒப்புக்கொள்ளாத சட்டசபை கட்சி, இன்றோர் வேண்டாம் என்று சொல்லும் மேலிடத்தார் யோசனையை எதற்காக ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்கலாம்.

இரண்டிற்கும் வித்தியாசமுண்டு. சென்னை சட்டசபை கட்சி இந்த மாகாணத்திற்கு பொறுப்பானது. மேலிடத்தார் அகில இந்தியாவுக்கும் பொறுப்பானவர்கள். இருவரும் கலந்துதான் வேலை செய்ய வேண்டும். எனவே ஒரு கட்சிக்கு பிடிக்காத ஒரு நபரை பொறுப்பான பதவியில் வைக்க முடியாது. இரண்டு கட்சிகளுக்கும் ஆட்சேபணை இல்லாதவர்களையே பொறுப்பான பதவிக்கு தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த மாகாணத்தாருக்கு ராஜாஜி பிடிக்கவில்லை என்றாலும் மேலிடத்தாருக்கு மற்றொரு நபரை பிடிக்கவில்லையென்றாலும் இரண்டையும் தள்ளிவிட்டு இரு கட்சிக்கும் ஆட்சேபணையில்லாத மூன்றாவது நபரையே தேர்ந்தெடுக்க வேண்டும். இதை சென்னை சட்டசபை கட்சி ஆட்சேபிக்காது. சங்கடம் என்னவென்றால் தங்கள் மனதில் உள்ளதை தெளிவாக சொல்லாமல் மேலிடத்தார் வளைத்து பிடித்து காரியங்களை நடத்திக்கொண்டு போகிறார்கள். இதனால்தான் தலைவரை தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டு வந்தது.

ஒருவருக்கு மேல் தலைவர்களை தேர்ந்தெடுத்து ஜாப்தா அனுப்பும்படி மேலிடத்தார் கேட்டதில் தவறு எதுவுமில்லை. இரு தரப்பாருக்கும் பிடித்த ஒரு தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு அதுதான் ஒரே வழி. அம்மாதிரி ஜாப்தா அனுப்புவதால் ஸ்ரீ. பிரகாசம் பெயர் அடிபட்டு போய்விடுமோ என்று சில ஆந்திரர்கள் சந்தேகபடுகிறார்கள். அப்படி ஏதாவது நடந்தால் அதற்கு தமிழர் பொறுப்பல்ல என்பதை ஆந்திர நண்பர்கள் அறிய வேண்டும். ராஜாஜிக்கு பதிலாக ஸ்ரீ பிரகாசத்தை தலைவராக்குவதற்கு ஆரம்பத்திலிருந்தே தமிழர் சம்மதித்திருந்தார்கள். இன்று மேலிடத்தார் ஸ்ரீ. பிரகாசத்தை ஆதரிக்கவில்லையென்றால் அதற்கு தமிழர் செய்யக்கூடியது எதுவுமில்லை. இருதரப்பாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய எந்த நபரையும் தலைவராய் தேர்ந்தெடுக்க தமிழர் தயாராயிருக்கிறார்கள். இதில் ஆந்திர—தமிழ் என்ற பேதத்திற்கு இடமே இல்லை. ஒரு

தமிழரை தலைவராய் கொண்டு வர தமிழ் நாட்டார் சூழ்ச்சி செய்கிறார்களோ என்று அந்திர நண்பர்கள் நினைக்க வேண்டாம். ஸ்ரீ பிரகாசத்தை மேலிடத்தார் ஆட்சேபிக்க வில்லை யென்றால் இப்பொழுதும் அவரை ஆதரிக்க தமிழ் நாட்டார் தயார். ஸ்ரீ முத்துரங்க முதலியார் பெயரை ஏன் பிரேரித்திருக்கிறார்கள் என்றால், ஸ்ரீ. பிரகாசத்திற்கு சமதை யாக ஆந்திராவிலோ தமிழ் நாட்டிலோ ஸ்ரீ. முத்துரங்க முதலி யாரை தவிர வேறு ஆள் கிடையாது. இதை ஆந்திர நண்பர்களே ஒப்புக் கொள்ளுவார்கள். ஒருவர் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரே பிரதம மந்திரியாய் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அந்த தலைவர் மற்றொரு வரை பிரதம மந்திரியாக நியமிக்கலாம். எனவே ஸ்ரீ. முத்து ரங்க முதலியாரை தலைவராய் தேர்ந்தெடுப்பதால் பிரதம மந்திரி பதவி ஆந்திரர்களிடமிருந்து போய்விடுமோ என்று பயப்பட வேண்டியதில்லை. ராஷ்டிரபதி ஆஜாதிடமிருந்து வந்திருக்கும் தந்தியில் சட்ட சபை கட்சி இஷ்டப்பட்டால் ஒரே தலைவரைத் தேர்ந்தெடுக்கலாமென்றும், இந்த விஷ யத்தில் கட்சியின் அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படியும் கேட்டிருக்கிறார். ஒருவருக்கு மேற்பட்ட ஜாப்தாவையே அவர் விரும்புவதாக தெரிவதால் அம்மாதிரியே செய்வது தான் நல்லது. அப்பொழுதுதான் இருதரப்பாரும் ஒத்துப் போக முடியும். —(22-4-46)

* * *

ஸ்ரீ பிரகாசம் வெற்றி

ஆந்திரகேசரி. பிரகாசம் சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதற்காக அவரை பாராட்டுகிறோம். ஒரே தலைவரை தேர்ந்தெடுப்பதா? ஜாப்தா முறையை கையாளுவதா என் பதில் கட்சியின் அபிப்பிராயத்தை தெரிவிக்கும்படி ராஷ்டி ரபதி ஆஜாத் கேட்டிருந்தார். அதற்கு இடம் கொடுக்காமல்

தேர்தலே நடந்து முடிந்துவிட்டது. இது சரியா தப்பா என்பதை முடிவு செய்யும் பொறுப்பு மேலிடத்தாரை சேர்ந்தது. தேர்தல் நடந்து முடிந்து விட்டபடியாலும், இந்த மாகாணத்தின் நன்மைக்காக ஆந்திரர்களும் தமிழர்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகையாலும் ஸ்ரீ பிரகாசம் காருவை மனப்பூர்வமாய் வரவேற்கிறோம். தேச சேவையிலோ, தியாகத்திலோ, தேச பக்தியிலோ, தீரத்திலோ கேசரி என்றால் அவர் கேசரிதான். இந்த மாகாணத்தில் யாருக்கும் அவர் இளைத்தவரல்ல. இந்த தேர்தலில் 13 அதிகப்படி வோட்டுகளால்தான் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்ற 7உ தலைவர் தேர்தல் நடந்திருந்தால் ஏகமனதாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார் அப்படியானால் இந்த தேர்தலில் முத்துரங்க முதலியார் போட்டி போட காரணமென்ன என்று கேட்கலாம். இதைப் பற்றி நேற்றே எழுதி இருக்கிறோம். நேற்றைய சட்ட சபை கட்சி கூட்டத்தில் தேர்தலுக்கு பின்னால் ஸ்ரீ. காமராஜ் பேசிய போதும் இதைப்பற்றி குறிப்பிட்டார். 7உக்கு பின்னால் ஏற்பட்ட இந்த மாறுதலுக்கு ஒரே ஒரு காரணம் தான். அதாவது பிரகாசத்தை மேலித்தார் விரும்ப வில்லை என்பதுதான் அந்த காரணம். எதற்காக விரும்ப வில்லை என்ற காரணங்களை இப்பொழுது விவரித்துக் கொண்டு போவது பொருத்தமாய் இருக்காது. பிரகா சத்தை தவிர வேறு யாரையாவது தலைவராய் போடுங்கள் என்று மகாத்மா காந்தி காமராஜிடம் சொன்னார். அதனால் தான் முத்துரங்க முதலியாரை நிறுத்த வேண்டியதாயிற்று. முதலியாரை தலைவராய் தேர்ந்தெடுத்து, அப்புறம் அவரை பிரதம மந்திரியாக்குவது என்ற உத்தேசம் பிரகாசத்திற்கு தெரிவிக்கப்பட்டது. பிரகாசம் அதற்கு ஒப்புக் கொள்ள மறுத்து விட்டார். அந்த முறையை ஒப்புக் கொண்டிருந்தால் எல்லாருக்குமே திருப்தியாய் இருந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக அது நடக்காமல் போயிற்று. எனவே போட்டியாளர் முதலியாரை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. தலைமை பதவிக்கு போட்டி போடும்

விருப்பமே முதலியாருக்கு கிடையாது. என்றாலும் மேலிடத்திற்கும் சட்டசபை கட்சிக்கும் சுமுகமான தொடர்பு இருக்க வேண்டுமே என்பதற்காகத்தான் அவர் ஒப்புக் கொண்டார்.

இச்சமயத்தில் ராஜாஜி கோஷ்டியாரின் திருவிளையாடல்களை நண்பர்கள் கவனிக்க வேண்டும். நேற்றைய தேர்தலில் அந்த கோஷ்டியாரில் மூன்று பேருக்கு குறைவில்லாமல் பிரகாசத்திற்கு வோட் கொடுத்தார்கள். சுமார் 25 பேருக்கு மேலாக நடுநிலைமை வகித்தார்கள். பிரகாசம் 13 அதிகப்படி வோட்டுகளால்தான் வெற்றி பெற்றார். இங்கே சுமார் 25 பேர் வோட் கொடுக்காமல் கல்லு பிள்ளையார் மாதிரி இருந்தார்கள். கட்சி கூட்டத்தில் வரும் பிரச்னைகளில் நடுநிலைமை வகிப்பது சகஜம். ஆனால் கட்சிக்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கும் போது, முக்கியமான அந்த விஷயத்தில் கூட நடுநிலைமை வகிப்பதென்பது கொஞ்சங்கூட பொறுப்புள்ளவர்கள் செய்கிற வேலையல்ல. யார் தலைவராய் வந்தாலும் கவலையில்லை என்ற மனப்பான்மையில் இருப்பவர்களுக்கு கட்சியில் வேலையே கிடையாது. அவர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்திருக்க வேண்டும். அம்மாதிரி செய்யாமல் நடுநிலைமை வகித்தது முதல் தரமான கட்சி துரோகமாகும். எங்காவது ஒரு பக்கத்தில் அவர்கள் வோட் கொடுத்திருக்க வேண்டும். பிரகாசத்திற்கு அவர்கள் வோட் கொடுத்திருந்தால் பெரிய மெஜாரிட்டியில் பிரகாசம் வெற்றி பெற்றிருப்பார். அதனால் ஏற்படக் கூடிய பலன்கள் கட்சிக்கு கிடைத்திருக்கும். முதலியாருக்கு வோட் கொடுத்திருந்தால், மேலிடத்தார் அபிப்பிராயத்தை மதித்து நடந்ததாய் இருக்கும். இரண்டும் செய்யவில்லை. ராஜாஜிக்கு சாதகமாக இவர்கள் பிரசாரம் நடத்திய காலத்தில், மேலிடத்தார் அபிப்பிராயத்தை மதிக்க வேண்டுமென்றும், ஆந்திர்களிடம் பறி கொடுத்துவிடக் கூடாதென்றும் இவர்கள் போட்ட கூச்சல் கொஞ்சமல்ல. இன்று அவர்களே அதற்கு நேர் விரோதமாய் நடந்திருக்கிறார்கள். மேலிடத்தார் அபிப்பிரா

யத்தை மதித்தே முதலியாரை அபேட்சகராக நிறுத்தி இருப்பதை அறிந்தும் மேலிடத்தாரை கொஞ்சங்கூட அவர்கள் மதிக்கவில்லை. எனவே, இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சிக்கல்களுக் கெல்லாம் இந்த ராஜாஜி கோஷ்டியே காரணம். திருவழுத்தான் இருந்தும் கெடுத்தான் மறைந்தும் கெடுத்தான் என்ற படி, இந்த ராஜாஜி கோஷ்டியார் தங்களுடைய தோல்விக்கு முன்னால் தமிழ் நாட்டை கெடுத்ததோடு நிற்கவில்லை; தோல்விக்குப் பின்னாலும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களைத்தான் சர்தார் பட்டேல் சட்டசபைக்கு தேர்ந்தெடுத்தார்! இவர்கள் கையில் ஆட்சி போயிருந்தால் என்ன கதி ஆயிருக்கும்? அதோகதிதான். விம்புக்காக என்ன வேண்டுமானாலும் செய்ய பின்வாங்கமாட்டார்கள். இந்த கும்பலை விட பிரகாசம் பத்தாயிரம் மடங்கு சிலாக்கியமானவர். எனவே, அவர் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

—(23-4-46)

* * *

காமராஜே வேண்டும்

வியாழக்கிழமை (16உ) யன்று தமிழ் நாடு காங்கிரஸுக்கு பிரசிடெண்ட் தேர்தல் நடைபெறுகிறது. யார் பிரசிடெண்டாய் வருவது என்பதைப்பற்றி இந்த வருஷத்தை பொறுத்த வரையில் சந்தேகமே கிடையாது, காமராஜேதான் பிரசிடெண்டாய் வரவேண்டும். சென்ற ஒரு வருஷமாக ரொம்ப திறமையாக காங்கிரஸ் காரியங்களை ஜனநாயக முறையில் நிர்வாகம் செய்து மற்றவர்களால் சாதிக்க முடியாத அரும் பெரும் காரியங்களை அவர் சாதித்திருக்கிறார். அந்த வேலைகளை பூர்த்தி செய்து நிரந்தரமாக்குவதற்கு அவரே இந்த வருஷமும் பிரசிடெண்டாய் வரவேண்டும். சட்ட சபை தேர்தல்களில் இதற்கு முன்னால் ஏற்பட்டதைவிட அதிகமான வெற்றிகளை

பெரும்படி காமராஜ் செய்திருக்கிறார். தமிழ் நாட்டெங்கும் சோர்வு நீங்கி புது உற்சாகமும் புத்துயிரும் பரவும்படி செய்திருக்கிறார். சென்ற ஒரு வருஷத்தில் அவர் செய்து முடித்த காரியங்களை ஒரு பெரிய புரட்சியால் கூட செய்து முடிக்க முடியாது. இதை இப்பொழுது அறிந்து கொள்ள முடியாதவர்கள் பின்னால் சரித்திரம் மூலம் தெரிந்து கொள்வார்கள். பிற்போக்காளர்களிடமிருந்து தமிழ் நாடு காங்கிரஸை அவர் காப்பாற்றியது சாமான்யமான வேலையல்ல. அந்த பிற்போக்காளர்கள் மீண்டும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியை கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். வெவ்வேறு ரூபத்தில் அவர்கள் வேலை செய்யலாம். வெவ்வேறு காரணங்களை அவர்கள் சொல்லலாம். இவற்றிலெல்லாம் கமிட்டி அங்கத்தினர்கள் ஏமாந்து விடக்கூடாது. ஒருவரே தொடர்ச்சியாக இந்த வருஷமும் பிரஸிடெண்டாய் இருக்க வேண்டுமா என்று சிலர் கேட்கிறார்கள். ஏன் இருக்கக் கூடாது? ஆந்திர கமிட்டியின் பிரஸிடெண்டாக பிரகாசம் எத்தனையோ வருஷங்களாக இருந்து வருகிறார். அதே மாதிரி சர்தார் படேல் குஜராத் காங்கிரஸில் இருந்து வருகிறார். பாபு ராஜேந்திர பிரசாதும் அதைப் போலவே பல வருஷங்களாக இருக்கிறார். அதில் என்ன தப்பு? அவர்கள் எல்லோரும் அம்மாதிரி இருக்க முடியுமானால் தமிழ் நாட்டில் மட்டும் ஏன் இருக்கக்கூடாது?

மாகாண கமிட்டிகளில் ஜனங்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் எத்தனை வருஷங்கள் சேர்ந்தாற்போல இருந்தாலும் அது நல்லதே ஒழிய கெடுதல் அல்ல. சென்ற சட்ட சபை தேர்தல்களில் தங்களுடைய மனோபீஷ்டம் நிறைவேறாதவர்கள் காமராஜை மீண்டும் பிரஸிடெண்டாய் வரவிடாமல் சூழ்ச்சி செய்கிறார்கள். இதில் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கும்படி அங்கத்தினர்களை வேண்டிக் கொள்ளுகிறேன். காமராஜை மீண்டும் பிரஸிடெண்டாய் தேர்ந்தெடுத்தால்தான் சென்ற வருஷம் அவர்

செய்த அபூர்வமான வேலைகளை அங்கீகரிப்பதாய் இருக்கும். அவரையே தேர்ந்தெடுத்தால்தான் மந்திரி சபையும் திறமையாய் வேலை செய்ய முடியும். மந்திரி சபைக்கு மேலிடத்து ஆதரவில்லை என்ற அபிப்பிராயத்தில் பல விஷயங்களில் தலையிட கவர்னர் முயற்சி செய்யலாம். இங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகளின் ஆதரவும் இல்லை என்று கவர்னருக்கு தெரியுமானால் அப்புறம் தலையிடுவதற்கு அவர் கொஞ்சங்கூட யோசிக்கமாட்டார். இங்குள்ள கமிட்டிகளின் ஆதரவு பூர்ணமாய் இருக்கிறதென்று தெரிந்தால் தலையிடவே அவர் துணியமாட்டார். குலசேகரபட்டணம் வழக்கு ஸ்ரீமான்கள் ராஜகோபாலனும், காசி ராஜனும் விடுதலை யடைவதில் ஏற்பட்ட தாமதமே இதற்கு சரியான உதாரணம். காமராஜ் மீண்டும் பிரஸிடென்டாய் வரக்கூடாது என்று முயற்சிப்பவர்களின் நோக்கமே மந்திரி சபையை கவிழ்ப்பதுதான். இதற்கு எவ்விதத்திலும் இடம் கொடுக்கக்கூடாது. மந்திரி சபையை காப்பாற்ற வேண்டுமானால், காமராஜ் சென்ற வருஷம் செய்த புரட்சிகரமான வேலைகளை ஸ்திரப்படுத்த வேண்டுமானால், அந்த வேலைகளை தமிழ் நாடு ஆதரிப்பாய் காட்ட வேண்டுமானால், காமராஜே மீண்டும் பிரஸிடென்டாய் வர வேண்டும். யார் என்ன சூழ்ச்சி செய்தபோதிலும் அவரே மீண்டும் பிரஸிடென்டாய் வருவார் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. —(15-5-46)

* * *

வாழ்க காமராஜ் !

காமராஜே திரும்பவும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதில் ஆச்சரியம் எதுவுமே இல்லை. ஆனால், இதிலிருந்து வெளியாகி யிருக்கும் உண்மைகள்தான் ரொம்ப முக்கியமானவை. தமிழ் நாட்டில் குழப்பத்தையும் குதர்க்கத்தையும் உண்டாக்க முயன்ற

வர்கள், ஒன்று சொல்லி வந்தார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகத்திலிருப்பவர்களில் பெரும்பான்மையாகவுள்ள ஒரு கோஷ்டிதான் தங்களுக்கு எதிராக இருக்கிறதே யன்றி, பொது மக்கள் ஆதரவெல்லாம் தங்கள் பக்கமே இருக்கிற தென்று சொன்னார்கள். அது சுத்த புளுகு எனபதை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல் பகிரங்கப்படுத்தி விட்டது. அவர்களுக்கு பொதுஜன ஆதரவு அதிகமிருக் கிறது என்பது உண்மையாக இருந்திருக்குமானால், சமீபத்தில் நடந்த தமிழ் நாடு காங்கிரஸ் மெம்பர்கள் தேர்த லில் அவர்கள் கட்சி அதிக பலமுள்ளதாகி யிருக்க வேண் டும். ஆனால், அதுதான் இல்லை. பணமும், செல்வாக்கும் மாத்திரமின்றி பத்திரிகை ஏஜன்ஸியைக் கொண்டு கூட எவ்வளவோ பிரயத்தனம் செய்து பார்த்தும் மிகச் சிலரே அவர்களில் தமிழ் நாடு காங்கிரஸ் மெம்பர்களாக முடிந்தது பொது ஜன ஆதரவு தங்களுக்கு பிரமாதமாக இருக்கிறது என்று அவர்கள் சொன்னதெல்லாம் புளுகுணிப் பிரசாரம் என்பதும் பகிரங்கமாக புரிந்து விட்டது. வெளிமாகாணத் தினரும், மேலிடத்தாரும்கூட இந்த உண்மையை சுலப மாக தெரிந்து கொள்ள முடிந்தது. இவ்விதம் படுதோல்வி யடைந்த பிறகும் இந்த 'கிளிக்' தன்னுடைய விஷமத் தனத்தை விடாததுதான் பெரிய மானக் கேடான செய்கை.

தமிழ் நாடு தலைமைப் பதவிக்கு போட்டி போட்டு பார்க்கலாம் என்று நினைக்கக் கூட பலமற்றுப் போன இந்த 'கிளிக்' புதிதாக ஒரு சதியை செய்ய கிளம்பியது. சொந்த ஆசை பிடித்த சிலரை தேடிப் பிடித்தார்கள். தாங்கள் பக்க துணையாக இருப்பதாக சொல்லி, அவர்களை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டி போடும் படி தூண்டினார்கள். தலைமைப் பதவி தங்களுக்கு எந்த ஜென்மத்திலும் கிடைக்கப் போவதில்லை என்பது இந்த 'கிளிக்'க்கு நிச்சயமாக தெரியும். தங்களுக்கு இல்லாத போது தமிழ் நாடு காங்கிரஸுக்குள் கட்சிகளையும் புகைச் சலையுமாவது கிளப்பித்திருவது என்பதே "கிளிக்"கின்

சதி. ஆனல் முடிவில் இந்த கொம்பேறிமூக்கன்கள் இதிலும் படுதோல்வியையும், பெரிய ஏமாற்றத்தையுமே அடைந்தன. எத்தனை சூழ்ச்சிகள் நடந்தாலும் சத்தியம் ஒன்றே நிலைக்கும் என்பதை தமிழ் நாடு காங்கிரஸ் மெம்பர்கள் நிரூபித்து விட்டார்கள். என்ன முயன்றாலும், எந்த வேஷத்தில் வந்தாலும், யார் பின்னல் ஒளிந்து கொண்டு தமிழ் நாடு காங்கிரஸை கைப்பற்ற பார்த்தாலும், பிற்போக்கு கும்பலை இனி தலை தூக்கி விடப்போவதில்லை என்பதை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி காட்டி விட்டது. நேர்மையும், திறமையும், மக்களின் உண்மையான அன்பும் பெற்றவர்களை யல்லாமல் வேறு யாரையும் இனி ஒருநாளும் தமிழ் நாடு தலைவர்களாக ஏற்காது. இன்று நடந்த தேர்தல் முடிவு அதற்கு சரியான ஒரு சான்று. சென்ற ஒரு வருஷ காலமாக தமிழ் நாடு காங்கிரஸின் கௌரவத்தையும், அதன் ஜனநாயக தத்துவத்தையும், தமிழன் மானத்தையும் காக்க காமராஜ் எத்தனையோ ஒப்பற்ற காரியங்களை செய்திருக்கிறார். இந்த காரியங்களை யெல்லாம் தமிழ் நாட்டு மக்கள் வெறுக்கிறார்கள் என்றும், இனி பொறுக்க மாட்டார்கள் என்றும் பொய்ப் பிரசாரங்கள் நடந்தன. ஆனல் அதே காமராஜை தமிழ் நாடு தன் உத்தம தலைவராக மீண்டும் பெருமையோடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் அவர் செய்த காரியங்கள் முற்றிலும் சரி என்று தமிழ் மக்கள் அங்கீகார முத்திரையும் வைத்து விட்டனர். அவர் செய்த காரியங்களை, முழு மனதுடன் ஆதரிப்பது மாத்திரமல்லாமல் அக்காரியங்கள் முற்றிலும் பூர்த்தியாவதற்கும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு அவருக்கு பக்க பலமாக நிற்கிறார்கள். அவர் திரும்பவும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதன் அர்த்தமும் இதுதான். சோதனைகள் எத்தனையோ வந்தன. சூழ்ச்சிகள் எவ்வளவோ நடந்தன. என்றாலும் தங்களுக்கு தேவையான சிறந்த தலைவரை தேர்ந்தெடுத்துக்கொள்ளுவதில் தமிழர் சிந்தனை சிதறிவிடாது என்பதை உறுதியுடன் காட்டிவிட்ட தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களை பாராட்டுகிறோம். அவர்கள் முழு அன்பிற்கும் பாத்திரமான காமராஜுக்கு நமது வாழ்த்து. வாழ்க காமராஜ்!

—(16-5-46)

* * *

காரியக் கமிட்டியில் ராஜாஜி

பண்டித ஜவாஹரின் புதிய காரியக் கமிட்டியை பற்றி "சுதேசமித்திரன்" அபிப்பிராயம் சொல்லுகிறது. அதாவது:—

"நெடுநாளாக இந்த மத்திய பீடத்தில் அங்கம் வகித்து வந்திருக்கும் பழுத்த தலைவர்களில் பலரை புதிய கமிட்டியில் காணேம். அவர்களுக்கு பதிலாக இதுவரை பின்னணியில் இருந்த பலர் நியமனம் பெற்றிருக்கின்றனர். காரியக் கமிட்டி புத்துரம் பெற்று விளங்க வேண்டுமென்பதே ஜவாஹரின் கருத்து."

இந்த அபிப்பிராயத்தை பூர்ணமாய் நாம் ஆதரிக்கிறேம். பழுத்த பத்திரிகையான சுதேசமித்திரன் இந்த விஷயத்தில் நேர்மையான அபிப்பிராயம் காட்டியிருப்பதை வரவேற்கிறேம். ஆனல், அந்த கட்டுரை முழுவதிலும் அந்த நேர்மையான அபிப்பிராயத்தை காணவில்லை. கட்டுரையின் பின் பகுதியில் சுதேசமித்திரன் தன்னுடைய வக்கிர புத்தியை காட்டுகிறது. ராஜாஜி காரியக் கமிட்டியில் இடம் பெற்றிருப்பதை அது பாராட்டுகிறது. நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனல், அதோடு அது நிறுத்தவில்லை. தமிழ் நாட்டு காங்கிரஸ் நிர்வாகிகள் ராஜாஜிக்கு தமிழ் நாட்டு காங்கிரஸில் இடம் இல்லாமல் செய்ய முயற்சித்தார்களாம். ஆகவே, ராஜாஜி காரியக் கமிட்டியில் இடம் பெற்றிருப்பது, தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு ஒரு பாடமாகுமாம். இன்னம் என்னவெல்லாமோ சொல்லுகிறது. இங்கே தான் சுதேசமித்திரன் தன்னுடைய நேர்மையை கைவிட்டு சுயநல கும்பல் பாடத்தை பாராயணம் செய்கிறது. சுதேசமித்திரனிடமிருந்து பாடம் கேட்கக் கூடிய துரதிர்ஷ்டமான நிலைமையில் தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் இல்லை. ராஜாஜியை காரியக் கமிட்டியில் ஜவாஹர்லால் ஏன் நியமித்தார் என்று கேட்கலாம். வடக்கே உள்ள காங்கிரஸ் தலைவர்கள் சென்னை மாகாணத்

தில் இரண்டே தலைவர்கள் தான் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று பட்டாபி. மற்றொன்று ராஜாஜி. அதனால்தான் இந்த இருவரே மாறி மாறி காரியக் கமிட்டியில் பல வருஷங்களாகஇருந்துவருகிறார்கள். வெகு காலமாக பட்டாபி இருந்து வந்ததால் ஒரு மாறுதல் இருக்கட்டுமே என்று ராஜாஜியை இந்த தடவை சேர்த்திருக்கிறார்கள். அப்படி செய்யும்போது சென்னை மாகாணத்தின் உண்மையான அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள ஜவாஹர் தவறி விட்டார். வேறு பல மாகாணங்களில் பல பழுத்த தலைவர்களுக்கு பதிலாக பின்னணியில் இருந்த பலர் காரியக் கமிட்டியில் நியமனம் பெற்றிருப்பதாக சுதேசமித்திரனே சொல்லுகிறது. அதற்கு காரணம் "காரிய கமிட்டி புத்துரம் பெற்று விளங்க வேண்டுமென்பதுதான்" என்று சுதேசமித்திரனே ஒப்புக் கொள்ளுகிறது. அதே அவசியத்தை சென்னை மாகாணத்திற்கு ஏன் கவனிக்கவில்லை? இங்கேதான் ஜவாஹர் கவனியாமல் விட்டு விட்டார்.

மற்ற பல மாகாணங்களில் பின்னணியில் இருந்தவர்களை காரியக் கமிட்டியில் நியமிப்பதற்கு என்ன அவசியம் இருந்ததோ அதே அவசியம் சென்னை மாகாணத்திற்கும் உண்டு. ராஜாஜி பிரச்னை சம்பந்தமாக சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை மேலிடத்தார் அறிவார்கள். பொதுஜன எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் சட்ட சபை தேர்தலிலிருந்தே ராஜாஜி விலகிப் போக நேரிட்டதையும் மேலிடத்தார் அறிவார்கள். பின்னல் ராஜாஜியையே பிரதம மந்திரியாக்க வேண்டுமென்று மேலிடத்தார் செய்த சிபார்சை சட்ட சபை கட்சி ஒப்புக்கொள்ளாததையும் மேலிடத்தார் அறிவார்கள். இவ்வளவிற்கும் பின்னல் ராஜாஜியை காரியக் கமிட்டியில் ஜவாஹர்லால் சேர்த்திருப்பது கொஞ்சங்கூட பொருத்தமானதல்ல. சென்னை மாகாணத் முற்போக்கான அபிப்பிராயத்தை எதிர்ப்பதாகவே இந்த காரியம் இருக்கிறது. தேர்தலில் தோற்றுப் போனவர்களை

நியமனம் செய்வது, பிரிட்டிஷ் சர்காரின் வழக்கம். ராஜாஜி யின் நியமனமும் அதே மாதிரிதான் இருக்கிறது. பம்பாயில் ராஜாஜியை பற்றி டாக்டர் சுப்பராயன் பேசியதை ஜவாஹர் கவனித்திருப்பார் என்று நினைக்கிறோம். 1942-ல் ராஜாஜி சொல்லியது 1945-ல் சரியாய் வந்து விட்டது என்று டாக்டர் சுப்பராயன் சொன்னார். அதாதவது 1942-ல் காங்கிரஸ் செய்த தீர்மானமோ தியாகமோ எல்லாம் உபயோகமில்லாதவை என்றுதான் இதற்கு அர்த்தம். இம் மாதிரி டாக்டர் சுப்பராயன் பேசியதை ராஜாஜி மறுத்ததாகவும் தெரியவில்லை. 1942-ல் நடந்த அடக்கு முறைகளை கண்டிப்பதற்காக ஒரு நாள் கூட பத்திரிகையை நிறுத்தி வைக்க முடியாது என்று சொல்லிய தேச பக்த தியாக சீல சுதேசமித்திரன் 1942-ல் காங்கிரஸை எதிர்த்த ராஜாஜியை ஆதரிப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை. ஆனால் காங்கிரஸ் மேலிடத்தார் கூட இந்த மாகாணத்து ஜனங்களின் அபிப்பிராயத்தை சரியாய் தெரிந்து கொள்ளாமல் நடப்பதுதான் ரொம்பவும் வருத்தப் பட வேண்டிய விஷயம். —(11-7-46)

* * *

காமராஜ் மீது பழி

சென்னை மந்திரி சபை மாறுதலை பற்றி சென்னை பத்திரிகைகளில் பலவிதமான கதைகள் வந்து கொண்டிருக்கின்றன. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு சில பத்திரிகைகள் ஸ்ரீ காமராஜை தூற்றுவதற்கு கிளம்பி இருக்கின்றன. ஜன நாயக ஆட்சியில் மந்திரி சபையை ஆதரிக்கவோ அல்லது தாக்கவோ எல்லாருக்கும் உரிமை யுண்டு. ஆனால் தவறான விஷயங்களை பிரசாரம் செய்வது ஜனநாயக உரிமையல்ல; அது வெறும் முட்டாள் தனமே ஆகும். யாரோ

செய்யும் முயற்சியை வேறு யார் மீதோ சாட்டி அவதூறு செய்வது ஜனநாயக உரிமை யல்ல; அது வெறும் அற்பத் தனமே ஆகும். ராஜாஜியை முன்னால் ஆதரித்து வந்த சில பத்திரிகைகளே தற்சமயம் இந்த முறை கெட்ட பிரசாரத்தில் இறங்கி இருப்பது குறிப்பிடத் தக்கது. ராஜா ஜியை ஆதரித்தவர்களில் சிலர் இன்று பிரகாசம் மந்திரி சபைக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு சீறிப்பாய காரணமென்ன? காரணங்கள் எத்தனையோ உண்டு. அவை தான் மர்மமான விஷயங்கள். ஸ்ரீ காஸா சுப்பாராவ் என்ற ஆந்திர; "சுதந்திரா" என்றொரு ஆங்கில வாரப் பத்திரிகை நடத்துகிறார். ராஜாஜியின் தலைமையை ஆதரிப்பதற் காகவே அந்த பத்திரிகையை ஆரம்பித்ததாக முதல் இதழில் அவர் சொன்னார். ரொம்ப தீவிரமாக ஆதரித்தும் வந்தார். இதில் அதிசயம் என்ன வென்றால், ராஜாஜி தோல்வியுற்று பிரகாசம் பிரதம மந்திரியாய் வந்ததும் உடனேபிரகாசத்தையும்ஆதரிக்க ஆரம்பித்தார்.அவருடைய முதல் கொள்கைக்கு இது எப்படி பொருத்தமாய் இருக் கிறது என்று கேட்கலாம். பொருத்தத்தை பற்றியோ முன்னுக்கு பின் முரணை பற்றியோ அவர் கவலைப்படுகிற வரல்ல. இல்லையென்றால் மானேஜிங் ஆசிரியர்களை தாக் கிக் கொண்டிருந்தவர் அவர்களிடம் போய் சரணாகதி அடைவாரா? அவருடைய அந்திர அபிமானம் அவ்வளவு பலமானதாய் இருக்கிறபடியால் ராஜாஜியை ஆதரித்து வந்தவர் திடீரென பிரகாசத்தை ஆதரிக்க பல்டி அடிப்பது அவருக்கு ஒரு பிரமாதமான விஷயமாய் தோன்றவில்லை. எத்தனை பல்டிகள் வேண்டுமானாலும் அவர் அடிக்கட்டும். அதை பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால் இல்லாததை இருப்பதாக அவர் எழுதினால் அதை யாரும் விட்டுக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள்.

பிரகாசம் மந்திரி சபையை கவிழ்ப்பதற்கு ஸ்ரீ காமராஜ் முயற்சிப்பதாக ஸ்ரீ காஸா சுப்பாராவ் குற்றஞ்சாட்டுகிறார். கௌரவமான முறையில் அவர் எழுதி இருந்தாலும் பரவா

யில்லை. ரொம்ப கேவலமான முறையில் ஸ்ரீ காமராஜுக்கு கெட்ட குணங்களை கற்பித்து எழுதுகிறார். அவர் சொல்லும் அற்புதமான தூற்றல்களை இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியதில்லை. பிரகாசம் மந்திரி சபையை கவிழ்ப்பதற்கு காமராஜ் முயற்சிக்கிறார், அதற்காக சட்டசபை அங்கத்தினர்களிடம் கையெழுத்து வாங்கி இருக்கிறார் என்பதுதான் முக்கியமான விஷயம். இவை இரண்டும் கலப்பற்ற புளுகுகள். ராஜாஜியை ஆதரிக்கும் பத்திரிகைகளில் ஒன்றிரண்டுதான் காமராஜ் மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை சுமத்துகிறபடியால் சில உண்மைகளை வெளியிட வேண்டியது அவசியமென்று நினைக்கிறோம். முதலில் பிரகாசம் மந்திரி சபையை கவிழ்ப்பதற்கு பல அங்கத்தினர்களிடம் கையெழுத்து வாங்கி மேலிடத்திற்கு காமராஜ் அனுப்பியதாக சிலர் தூற்றுகிறார்கள். இது வெறும் கலப்பற்ற புளுகு. மேலிடத்திற்கு காவடி எடுக்கும் வழக்கம் காமராஜுக்கு கிடையாது. அந்த வழக்கம் யாருக்கு உண்டு என்பதை எல்லாரும் அறிவார்கள். அந்த கோஷ்டியார்தான் மேலிடத்திற்கு இப்பொழுதும் காவடி எடுத்திருக்கிறார்கள். அதற்கும் ஸ்ரீ காமராஜுக்கும் சம்பந்தமே இல்லை. பிரகாசம் மந்திரி சபையை மாற்றி அமைக்க வேண்டுமென்ற விண்ணப்பத்தில் கையெழுத்து போட்டவர்களில் தமிழர் யாருமே கிடையாது. கையெழுத்து போட்டவர்கள் எல்லாருமே ஆந்திரர்கள் தான். அதுவும் 42 பேர்தான். நூறு பேரல்ல. எனவே காமராஜ்தான் பிரகாசம் மந்திரி சபையை கவிழ்க்க முயற்சி செய்வதற்காகவோ, விண்ணப்பத்தில் கையெழுத்து வாங்கியிருப்பதாகவோ, மேலிடத்திற்கு அனுப்பி இருப்பதாகவோ சொல்லுவதெல்லாம் வெறும் பித்தலாட்டம். பிரகாசம் மந்திரி சபையை மாற்ற வேண்டுமென்று காமராஜ் தீர்மானம் செய்வாரானால் அந்த மந்திரி சபையை எந்த நிமிஷமும் வேண்டுமென்றாலும் மாற்றி விடமுடியும். சுப்பராவின் தூற்றல் பிரசாரங்களால் அதை தடுத்து விடமுடியாது.

ஏனெனில், கையெழுத்து போட்டிருக்கும் ஆந்திரர்களும் தமிழர்களும் சேர்ந்து விட்டால் மிகப்பெரிய மெஜாரிட்டியாய் விடும். எனவே இதுவரை பிரகாசம் மந்திரி சபை கவிழவில்லையென்ருல் அதற்கு காரணம் அந்த மந்திரி சபையை மாற்ற வேண்டுமென்று காமராஜ் கோஷ்டி இன்னம் தீர்மானம் செய்யவில்லை என்பதுதான் அர்த்தம். உண்மை இப்படி இருக்கும் போது காமராஜ் மீது எதற்காக சீறிப்பாய வேண்டும் என்று கேட்கலாம். மற்ருெரு விஷயத்தை மறைப்பதற்காகவே இந்த தூற்றல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பிரகாசம் மந்திரி சபையை கவிழ்க்க வேண்டும் என்பதில் தீவிரமாய் இருப்பது காமராஜ் கோஷ்டி யல்ல, ராஜாஜி கோஷ்டியே ஆகும். காமராஜ் கோஷ்டி அதைப்பற்றி எவ்வித முடிவுக்கும் வரவில்லை. இதனுல் பிரகாசம் மந்திரி சபை மீது காமராஜ் கோஷ்டியார் பூர்ண திருப்தியோடு இருக்கிருர்கள் என்பது அர்த்தமல்ல. அது வேறு விஷயம். இப்பொழுது நடக்கும் முயற்சியில் காமராஜ் கோஷ்டிக்கு இதுவரை சம்பந்தமில்லை என்பதுதான் முக்கியமான விஷயம். இதில் தீவிரமாய் இருப்பது ராஜாஜி கோஷ்டியும் 42 ஆந்திரர்களும் தான். 42 ஆந்திரர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தையும் ராஜாஜியிடமே அவர்கள் கொடுத்தார்கள். மேலிடத்திற்கு சமர்ப்பிக்கும் பொறுப்பை அவரே மேற்கொண்டார். விஷயம் இப்படி இருக்கும்போது காமராஜ் மீது பழி சுமத்துவது யோக்கியமான செய்கையா என்பதை கண்பர்களே சுலபமாய் முடிவு செய்து கொள்ளலாம். ராஜாஜி கோஷ்டி ஏன் அந்த விண்ணப்பத்தில் கையெழுத்திடவில்லை என்று கேட்கலாம். ராஜாஜியே முன்னின்று நடத்தும்போது அவருடைய கோஷ்டியின் கையெழுத்துக்கு அவசியமே இல்லை. மேலும் காமராஜ் கோஷ்டி கையெழுத்து போட்டாலொழிய மெஜாரிட்டி கிடைக்கப் போவதில்லை. இந்த நிலைமையில் ராஜாஜி கோஷ்டியின் கையெழுத்துக்கு மதிப்பே இல்லை. அதனுல்தான் அவர்களுடைய கையெழுத்து சேர்க்கப்படவில்லை. இவை தான் உண்மையான விஷயங்கள், உண்மையை மறைப்பதற்காக காமராஜ் மீது புகார் சொல்ல கிளம்புவது நேர்மையானவர்களின் செய்கையல்ல. —(30-9-46)

❋ ❋ ❋

ஸ்ரீ பிரகாசத்தின் அணு குண்டு

இந்த மாகாணத்தின் தலையில் ,முக்கியமாக தமிழ்நாட்டின் தலையில் ஒரு அணு குண்டை போட்டதை போல பிரதம மந்திரி பிரகாசம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதாவது இந்த மாகாணத்தில் இனிமேல் புதிதாக நூல் மில்லோ நெசவு மில்லோ ஏற்படுத்த அநுமதி கொடுக்கப் போவதில்லையாம். இருக்கிற மில்களை விஸ்தரிப்பதற்கும் விடப் போவதில்லையாம். விஸ்தரிப்பதற்காக ஏற்கனவே கொடுத்த அநுமதிகளும் ரத்துச் செய்யப்படும் என்பதுதான் இதற்கு அர்த்தம். இந்த அறிவீனமான அறிக்கையை போல, தமிழ் நாட்டுக்கு கெடுதல் செய்யக் கூடியது வேறு எதுவுமில்லை. ஏனெனில், தமிழ் நாட்டில் தான் மில்கள் அதிகம். மேற்படி அறிக்கையினால் தமிழ் நாடே அதிகம் பாதகமடையப் போகிறது. இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திலும் இந்த கண் மூடித்தனமான கொள்கையை கையாளவில்லை. அப்படியானால் சென்னை மாகாணத்தில் மட்டும் எதற்காக இதை கையாளவேண்டும்? இந்த கொள்கையில் ஸ்ரீ பிரகாசத்திற்கு உண்மையாகவே நம்பிக்கை இருக்குமானால், ஆந்திராவில் மட்டும் இதை கையாளட்டும். நமக்கு ஆட்சேபணையே இல்லை. எப்படியும் இரண்டு மூன்று வருஷங்களில் ஆந்திரா மாகாணம் தனியாக பிரிந்து போய்விடும். அதற்குள்ளாக தமிழ் நாட்டை பாதிக்கும்படியான ஒரு கொள்கையை கைக்கொள்ள பிரகாசத்திற்கு உரிமையோ அதிகாரமோ கிடையாது. இந்த கொள்கை மாகாணத்தின் பொருளாதாரத்தையே பாதிக்கக் கூடிய ரொம்பவும் முக்கியமான பிரச்னை. எனவே சட்ட சபையை கலந்து கொள்ளாமல் இதை கைக்கொள்ள பிரதம மந்திரிக்கு அதிகாரம் கிடையாது மந்திரி சபையில் இந்த கொள்கைக்கு ஆதரவு இருக்கிறதாகவோ மந்திரி சபையில் இவ்விஷயம் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை. ஸ்ரீ

பிரகாசமே ஏதேச்சாதிகாரமாய் இதை ஆரம்பித்திருக்கிறார். மந்திரி ஸ்ரீ குமாரசாமி ராஜாவின் பிரசங்கமே இதற்கு போதுமான ஆதாரம். சட்ட சபையின் அனுமதியை பெறாமல் இவ்வளவு பெரிய காரியத்தில் இறங்கக் கூடாதென்று ஸ்ரீ குமாரசாமி ராஜா சொல்லியிருப்பதை பாராட்டுகிறோம்.

சட்ட சபையின் அனுமதி இல்லாமல் இந்த பாதகமான கொள்கையை பிரகாசம் கைக்கொள்ள முன்வந்திருப்பது ரொம்ப துணிச்சலான காரியம். எனவே இந்த மோசமான கொள்கையை உடனே நிறுத்த வேண்டியது முக்கியமாக காங்கிரஸ்காரர்களின் கடமை. தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கர்னாடக மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் இந்த கொள்கையை ஆதரிக்கின்றனவா? உடனே அந்த மாகாண கமிட்டிகள் விசேஷ கூட்டம் போட்டு, இதை பற்றி முடிவு செய்ய வேண்டும். சட்ட சபை காங்கிரஸ் கட்சி உடனே கூடி, இதைப் பற்றி தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும். மந்திரி பதவியில் அமர்ந்து விட்டால், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அபிப்பிராயத்தை சட்ட சபை காங்கிரஸ் கட்சி உடனே மண்டையில் அடிக்க வேண்டும். இந்த மாகாணத்தில் இத்தனை மில்கள் இருக்கும்போதே ஜனங்கள் துணிக்கு திண்டாடும் போது, மில்களை ஒழித்து விடுவதால் துணி பஞ்சத்தை தீர்த்து விட முடியும் என்று பிரகாசம் சொன்னால் அதை யார் நம்ப முடியும்? பிரகாசத்தின் கதர் திட்டம் எவ்வளவு தூரம் பலிக்கப் போகிறது என்பது யாருக்கும் தெரியாது. வேலையில்லா திண்டாட்டத்தை ஓரளவு நீக்குவதற்கு கதர் திட்டம் பயனளிக்குமே யொழிய, சகல ஜனங்களுக்கும் வேண்டிய துணியை சப்ளை செய்வதற்கான நிலைமையில் கதர் திட்டம் எப்பொழுதுமே வர முடியாது. எனவே, சர்க்கா வேலையும் மில் வேலையும் பிணைந்து ஒரு திட்டம் போட்டு நடத்துவது தான் காரிய சாத்தியமானது. அதை விட்டு மில்களை

பூராவையும் எடுத்துவிட்டு எல்லாருக்கு கதர் சப்ளை செய்யப்போகிறோம் என்று சொல்லுவது வெறும் பைத்தியக்காரத்தனமாகும். இந்த பைத்தியக்கார யோசனையை ஸ்ரீ பிரகாசம் ஆந்திராவில் நிறைவேற்றட்டும். நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், தமிழ் நாட்டில் நிறைவேற்ற அவர் முயற்சிப்பாரானால் அதை தமிழர்கள் விடப்போவதில்லை.

தமிழ் நாட்டிலுள்ள மில்களை தொலைப்பதற்கு இது ஒரு சூழ்ச்சியோ என்று சந்தேகம் ஏற்படுகிறது. சென்னை மாகாணத்தில் புது மில்களை ஏற்படுத்தவோ, இருக்கிற மில்களை விஸ்தரிக்கவோ கூடாதென்றால், பம்பாய் மில்களிலிருந்து எதற்காக சென்னைக்கு துணிகளை வரவழைக்க வேண்டும்? இங்கே புதுமில்கள் கூடாதென்று ஸ்ரீ பிரகாசம் உண்மை சிரத்தையோடு சொல்லுவதாய் இருந்தால், முதலில் வெளி மாகாணங்களிலிருந்து இங்கே மில் நூலோ துணியோ வருவதை உடனே தடுக்க வேண்டும். இந்த மாகாணத்திலிருந்து வெளியேநூலோ துணிலோ ஏற்றுமதியாவதை அடுத்தபடியாக நிறுத்த வேண்டும். இந்த இரண்டையும் செய்ய பிரகாசம் முன்வருவாரா? அப்படி செய்ய அவருக்கு தைரியமிருந்தால், முதலில் அதை செய்துவிட்டுதான் அப்புறம் இந்த மாகாணத்தில் புது மில்கள் கூடாதென்று அவர் தடுக்க வேண்டும். அப்படி செய்யவில்லையென்றால், பிற மாகாண மில்களுக்கு இரையாக சென்னை மாகாணத்தை ஆக்குவதற்கே அவர் முயற்சிக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இந்த முயற்சிக்கு இடம் கொடுத்துக்கொண்டு இம்மாகாண வாசிகள், முக்கியமாக தமிழர்கள் இருக்கப்போவதில்லை. உடனே இந்த கொள்கையை ஸ்ரீ பிரகாசம் வாபஸ் வாங்கவேண்டும். சட்ட சபையை கலந்து கொள்ளாமல் இம்மாதிரி செய்ய அவருக்கு அதிகாரம் கிடையாது. சட்ட சபையை உடனே கூட்டி, இந்த அணை குன்டைபோடலாமா என்பதற்கு அனுமதி கோரட்டும். இம்மாகாண ஜனங்களின்

உண்மையான நோக்கம் அப்பொழுதுதான் வெளிப்படும். அதற்கு முன்பு அவசரப்பட்டுக்கொண்டு ஸ்ரீ பிரகாசம் இந்த கொள்கையை நிறைவேற்ற முற்சிப்பாரானால் அதனால் மந்திரி சபை கவிழ நேருமே ஒழிய, ஸ்ரீ பிரகாசத்தின் நோக்கம் நிறைவேறாது என்பதை இப்பொழுதே எச்சரிக்கிறோம். —(7-10-46)

* * *

மகாத்மாவை குறை சொல்ல முடியாது

பிரகாசம் காருவின் "மில் ஒழிப்பு" நாச வேலையை ஆதரிப்பவர் ஒருவர் கூட இந்த மாகாணத்தில் இருப்பதாய் தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே கண்டனமாய் இருக்கிறது. மகாத்மா இந்த கொள்கையை ஆதரிக்கிறாரே அதை எப்படி கண்டனம் செய்வது என்று கேட்கலாம். மகாத்மாவின் லட்சியமே வேறு. அதனால் அவருடைய போக்கு அலாதியாய் இருக்கும். சென்ற யுத்தம் ஆரம்பமான சமயத்தில், "பிரிட்டனுடன் பூர்ணமாக இந்த யுத்தத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்" என்று மகாத்மா சொன்னார். அதை காங்கிரஸ் ஒப்புக்கொண்டதாக? இல்லை. காங்கிரஸ் ஒப்புக் கொள்ளவில்லை என்பதற்காக காங்கிரஸுக்கு விரோதமாக மகாத்மா நடந்தாரா? இல்லை. காங்கிரஸ் என்ன தீர்மானம் செய்கிறதோ அதையே மகாத்மா ஒப்புக்கொள்ளுவார். அதை போலவே காங்கிரஸ் என்ன தீர்மானம் செய்கிறதோ அதையே ஜனங்களும் காங்கிரஸ் மந்திரிகளும் செய்ய வேண்டும். மில்களை ஒழிக்கும்படி காங்கிரஸ் தீர்மானம் செய்யவில்லை. காரியக் கமிட்டி அங்கத்தினர்களைக் கொண்ட இந்திய தேசிய சர்க்கார், நூல் மில்களுக்கு வேண்டிய யந்திரங்களை வாங்க நூறு

கோடி ரூபாய்க்கு திட்டம் போட்டு ஒரு தூது கோஷ்டியை அதற்காக மேல் நாடுகளுக்கு அனுப்புகிறது. அந்த காரியக் கமிட்டி அங்கத்தினர்களை விட மகாத்மா விடமோ அவருடைய கொள்கைகளிலோ அதிகமான பற்றுதல் பிரகாசம் காருவுக்கு இருப்பதாக யாரும் சொல்ல முடியாது.

வனஸ்பதி உற்பத்திக்காக தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை மகாத்மா பலமாய் கண்டிக்கிறார். பிரகாசம் காருவுக்கு இது தெரிந்திருந்தும் இந்த மாகாணத்தில் வனஸ்பதி தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை அவர் நிறுத்தவில்லை. ஏன்? அவையெல்லாம் ஆந்திரர்களின் கையில் இருக்கின்றன. இந்தியா சட்டசபைக்கு போக வேண்டாம் என்று ஒரு காலத்தில் மகாத்மா சொல்லிய போது, அதை மீறி நமது பிரகாசம் காரு இந்தியா சட்டசபைக்கு போனார். இந்த மந்திரி சபையை எடுத்துக் கொள்ளுவோம். இதில் மந்திரியாக இருக்கவே கூடாது என்று நேரில் பிரகாசம் காருவிடம் மகாத்மாவே சொன்னார். அதை எவ்வளவு தூரம் ஸ்ரீ பிரகாசம் மதித்துவிட்டார்? இவ்வளவு விஷயங்களிலும் மகாத்மாவின் அபிப்பிராயத்தை காற்று வாக்கில் விட்ட பிரகாசர் பந்துலு மில் ஒழிப்பு நாச வேலையில் மட்டும் எதற்காக மகாத்மாவை பின்பற்றுகிறார்? இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது, தன்னுடைய அபிலாஷைகளுக்கு இடையூறாய் இருக்கிற விஷயங்களில் மகாத்மாவின் உபதேசங்களை காற்று வாக்கில் விடுவதும், தனக்கு சாதகமாக இருக்கிற விஷயங்களில் மகாத்மா மீது பாரத்தைப் போட்டு காரியத்தை செய்வதுமே பிரகாசர் காருவின் சுபாவம் என்பது நிச்சயமாகிறது.

ஆந்திராவில் நூல் மில்கள் அதிகமாய் இருந்தால், இந்த நாச வேலையில் பிரகாசம் இறங்கியே இருக்கமாட்டார். ஒருவேளை அவர் விரும்பி இருந்தாலும் அவருடைய உபதேசியார்களான ஸர். எஸ். வி. ராமமூர்த்தியும் ஸ்ரீ. வி.

ராமகிருஷ்ணையர் அதற்கு விட்டிருக்கமாட்டார்கள். தமிழ் நாட்டின் தலையில் கைவைத்து மகாத்மாவிடம் ஒரு நல்ல பெயர் வாங்கிக் கொள்ளலாமே என்ற குயுக்தி யோசனையினால்தான் இந்த நாச வேலையில் இறங்கத் துணிந்தார். மகாத்மாவிற்கு கதர்தான் உயிர். பிரகாசத்திற்கோ பிரதம மந்திரி பதவிதான் உயிர். அந்த பதவியை இழக்காமல் இருப்பதற்காக மகாத்மாவிடம் நல்ல பெயர் வாங்க முயற்சிக்கிறார். ஆனால், இந்த மாகாண வாசிகளுக்கோ பொருளாதாரந்தான் உயிர். யார் பிரதம மந்திரியாக வந்தாலும் சரி, யார் போனாலும் சரி அதைப் பற்றி கவலை இல்லை. எனவே, இந்த மாகாணத்தின் பொருளாதாரத்தை சீர்குலைக்க எந்த பிரதம மந்திரி முயற்சி செய்தாலும் சரி, அவருக்கு சீட்டு கொடுத்து வீட்டுக்கு அனுப்ப இந்த மாகாணம் பின்வாங்காது.

பிரகாசத்தின் மில் ஒழிப்பு நாச வேலைக்கு மகாத்மாவை குற்றஞ் சொல்லுவது நியாயமல்ல. மகாத்மா உயர்ந்த லட்சியங்களை கொண்டவர். அவர் எத்தனையோ லட்சியங்களை சொல்லுகிறார். உதாரணமாக, சர்க்காரே கூடாது என்பது அவர் லட்சியம். எல்லோரும் பிரமச்சாரிகளாக இருக்க வேண்டுமென்பது அவர் லட்சியம். இவற்றையெல்லாம் எல்லோரும் பின்பற்ற முடியுமா? அதை போலவே மில்கள் எல்லாம் ஒழிந்து கதர் பரவ வேண்டுமென்பது அவர் லட்சியம். இப்பொழுதுள்ள நிலைமையில் நமது நாட்டிற்கு அவருடைய லட்சியங்களில் எதை பின்பற்ற முடியுமோ அதைத்தான் புத்தியுள்ளவர்கள் பின் பற்றுவார்கள். நூல் மில்களை வளர விடக்கூடாது என்ற தமது லட்சியத்தை பிரகாசம் காருவிடம் மட்டும் மகாத்மா சொல்லவில்லை. வேறு சில பிரதம மந்திரிகளிடமும் அவர் சொல்லி இருக்கிறார். அவர்கள் எல்லோரும் அது சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார்கள். பிரகாசம் பந்துலுவும் அதே மாதிரி மகாத்மாவிடம் சொல்லி இருந்தால், அவர் வற்புறுத்தப் போவதில்லை. ஆனால்,

பிரகாசம் காரு அப்படி சொல்லவில்லை. மகாத்மாவை திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காக ரொம்ப ஜம்பமாக அதை ஒப்புக்கொண்டு வந்து விட்டார். இதற்கு மகாத்மாவை எப்படி குற்றஞ் சொல்ல முடியும். எனவே, பிரகாசம் பந்துலுவின் நாச யோசனைக்கு மகாத்மாவை குறை கூறுவது நியாயமல்ல. பிரகாசம் காருவே அதற்கு பூர்ணமாக ஜவாப்தாரியானவர். மகாத்மாவின் செல்வாக்கில் மறைந்து அவர் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. சட்ட சபை காங்கிரஸ் கட்சி கூட்டத்தை உடனே கூட்டி, அதன் அபிப்பிராயப்படி நடந்துகொள்ளுவதுதான் இதிலிருந்து தப்புவதற்கு ஸ்ரீ பிரகாசத்திற்கு உள்ள ஒரே வழி. அந்தப்படியே அவர் செய்வாரென்றும், வீணாக ஜம்பம் செய்து மந்திரி சபையை கவிழ்த்து விட மாட்டாரென்றும் எதிர்பார்க்கிறோம். —(9-10-46)

* * *

ஏன் இந்த தந்திரம்?

பிரகாசம் காருவின் மில் ஒழிப்பு நாச வேலைக்கு எங்கும் எதிர்ப்பும் கொதிப்பும் கடுமையாக தோன்றியிருக்கிறது. பொறுப்பை உணர்ந்து நடக்கும் ஒரு பிரதமராக அவர் இருப்பாரானால் தாம் செய்த தவறை அவர் கட்டாயம் இதற்குள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த நாச வேலையையும் அவர் உடனே கைவிட்டிருக்க வேண்டும். ஆனால் பிரகாசம் பந்துலு இந்த இரண்டையும் செய்யவில்லை. இதற்கு மாறாக முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் முட்டாள் தனமான காரியத்தில் இறங்குகிறார். காங்கிரஸ் கொள்கையோ, இப்பொழுதிருக்கும் சென்னை சர்க்காரின் கொள்கையோ பிடிக்காதவர்களே தம்முடைய மில் ஒழிப்பு வேலையை எதிர்க்கிறார்கள் என்று பிரகாசம் காரு சொல்லுகிறார். நேற்று நாம் எடுத்துக் காட்டியிருப்பதை போல், மில் ஒழிப்பு திட்டம் எதையும்

காங்கிரஸ் செய்யவில்லை. நூல் மில்களை ஒழிப்பதும் காங்கிரஸ் கொள்கையல்ல. ஆகையால் பிரகாசத்தின் மில் ஒழிப்பு நாச வேலைக்கும் காங்கிரஸின் கொள்கைக்கும் எந்த வித சம்பந்தமுமே கிடையாது. ஆகையால் காங்கிரஸின் கொள்கையே அல்லாததும், இந்த மாகாணத்தின் பொருளாதாரத்தையே குட்டிச்சுவராக்குவதுமான ஒரு காரியத்தில் பிரகாசம் பந்துலு இறங்கியதுமல்லாமல் அதை எதிர்ப்பவர்களெல்லாம் காங்கிரஸ் கொள்கை பிடிக்காதவர்களே என்றும் சொல்லுகிறார் என்றால் இதைவிட மோசமான பேச்சு என்ன இருக்க முடியும்? தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி, ஸ்ரீ. பிரகாசத்தின் இந்த நாச வேலையை கண்டித்தது. மந்திரி பதவியை விட மாகாணத்தின் க்ஷேமமே முக்கியம் என்று நினைக்கும் எல்லா காங்கிரஸ்காரர்களுக்குமே பிரதமரின் இந்த போக்கு கொதிப்பை உண்டாக்கியிருக்கிறது. அவருடைய மந்திரிகளில் அநேகரும் ஆட்சேபிக்கிறார்கள். இவர்களெல்லாம் காங்கிரஸ் கொள்கை பிடிக்காதவர்கள் என்று பிரகாசம் சொல்கிறாரா? இப்பொழுதிருக்கும் சர்க்காரின் கொள்கை பிடிக்காதவர்களே இவர்கள் என்பதும் அவருடைய அபிப்பிராயமா? மில் ஒழிப்பு நாச வேலையை எதிர்ப்பவர்கள், காங்கிரஸின் உண்மையான கொள்கையை மதிப்பவர்கள். பிரகாசம் சர்க்காரின் இந்த கொள்கை இவர்களுக்கு பிடிக்கவில்லை யென்றால், அது அவ்வளவு மோசமான கொள்கை என்பதையே இது காட்டுகிறது. அந்த கொள்கை உடனே ஒழிந்தாக வேண்டும் என்பதற்கே இது அறிகுறி.

மந்திரி சபையை கூட்டி ஆலோசித்து முடிவு செய்த பிறகே இந்த மில் ஒழிப்பு வேலையில் தாம் இறங்கியதாக பிரகாசம் கூறுகிறார். இது நிஜமா? போன 29-ந் தேதி தாமும் மற்றும் 7 மந்திரிகளும் கூடி விவாதித்து முடிவு செய்தபிறகே இந்த கொள்கையை தாம் வெளியிட்டதாக அவர் சொல்லுகிறார். பிரதமர் வீட்டில் மந்திரிகள் கூடியிருக்கலாம்; அன்று இந்த மில் ஒழிப்பு திட்டத்தைப்பற்றி

பிரகாசம் காரு பிரஸ்தாபித்து இருக்கவும் கூடும். ஆனால் மந்திரி சபை கூட்டங்கள் எந்த முறையில் நடக்க வேண்டுமோ அந்த முறையில் அன்று நடத்தப்பட்டதா? இதைப் போன்ற முக்கியமானவிஷயங்களை எந்த வகையில் மந்திரி சபை விவாதித்து முடிவுக்கு வரவேண்டுமோ அந்த வகையில் முடிவு செய்யப்பட்டதா? அழைப்பின் பேரில் சில மந்திரிகள் பிரதமரின் வீட்டுக்கு போயிருக்கலாம். பல விஷயங்களைப் பற்றியும் பேச்சு நடந்திருக்கும். இந்த சந்திப்பை மந்திரி சபை கூட்டமாகவோ, அங்கு நடந்த சாதாரண பேச்சை மந்திரி சபை செய்துவிட்ட முடிவாகவோ எப்படி ஆக முடியும்? 29-ந் தேதி நடந்தது மந்திரி சபை கூட்டமே அல்ல என்பதை பிரகாசத்தின் அறிக்கையே வெட்ட வெளிச்சமாக்குகிறது. சரியான மந்திரி சபை கூட்டம் அன்று நடந்திருந்தால் எல்லா மந்திரிகளும் அதற்கு ஆஜராகியிருக்க வேண்டும். தம்மை தவிர 7 மந்திரிகளே அன்று வந்திருந்தார்கள் என்று பிரகாசமே சொல்லுகிறார். 5 மந்திரிகள் வராதபோது அந்த கூட்டம் எப்படி முழு மந்திரி சபை கூட்டமாக முடியும்? மில் ஒழிப்பு கொள்கை ரொம்ப பெரியவிஷயம். இவ்வளவு முக்கியமான விஷயத்தை எல்லா மந்திரிகளுமடங்கிய கூட்டத்தில் வைத்து தீர விவாதித்து திட்டமான முடிவுக்கு வர வேண்டியதுதான் நியாயம். ஆனால் பிரகாசம் காரு அப்படி செய்யவில்லை. முதலில் 7 மந்திரிகளிடம் பிரஸ்தாபித்திருக்கிறார். அவர்களுடைய ஏகோபித்த முடிவை பெற்று விட்டதாக தாமே முடிவு செய்து கொண்டார். பின்னால் இரு மந்திரிகளின் சம்மதத்தை பெற்றதாகவும் சொல்லுகிறார். மீதமிருக்கும் 3 மந்திரிகளையும் பிடித்துவிடப் போவதாகவும் கூறுகிறார். இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. முழு மந்திரி சபையையும் கூட்டி விவாதித்தால் தம் ஜம்பம் சாயாது என்பதற்காக, மந்திரிகளிடம் தனித் தனியாக பிரஸ்தாபித்து விட்டு சம்மதம் பெற்று விட்டதாக முடிவு கட்டிவிடும் தந்திரத்தையே பிரகாசம் காரு கையாண்டிருக்கிறார் என்பது நிச்சயமாகிறது. ஆகையால் மில் ஒழிப்பு

நாச வேலை, மந்திரி சபை முடிவு என்று நம்ப யாரும் தயாரா யில்லை. மந்திரி சபை முடிவு என்று பிரகாசம் பந்துலு சாதிக்கிறார் என்பதற்காக இம்மாகாண மக்கள் மயங்கிவிடப் போவதுமில்லை. ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறு வதைபோல, பிரகாசத்தின் கதர்அபிவிருத்தி திட்டம் உருப் படப்போவதாகவே வைத்துக் கொண்டாலும், இந்த மாகாண வாசிகளுக்கு 100 பேருக்கு 9 கெஜம் வீதமே அதிக துணி கிடைக்கும். இப்பொழுதே கட்ட துணி போதாமல் ஜனங் கள் தவிக்கிறார்கள். இந்த நிலைமையில் மில் ஒழிப்பு நாச வேலையிலும் பிரகாசம் இறங்கியிருக்கிறார். ஆனாலும் பொதுஜனங்கள் கஷ்டப்படாமல் சர்க்கார் பார்த்துக்கொள் ளும் என்று அவர் சொல்லுகிறார்! மாகாணத்தின் பொருளா தாரத்திலேயே மண்ணைப்போட துணிந்து விட்ட ஒருவர் ஜனங்களுக்கு கஷ்டம் வராது காப்பாற்றப் போவதாகவும் ஜம்பமாக சொல்லுகிறார் என்றால் அதுதான் பெரிய வெட்கக்கேடு. —(10-10-46)

* * *

ஞாபக மூட்டல்

பிரதம மந்திரி பிரகாசம் காரு ஒரு விசித்திரமான அறிக்கை வெளியிட்டிருக்கிறார். மந்திரி குமாரசாமி ராஜா விடம் அவர் கேட்டாராம். சென்ற மாதம் 29ல் நடந்த மந்திரிகளின் ஆலோசனை கூட்டத்தில் மில் ஒழிப்பு விஷயம் பற்றி பேசிய விஷயம் மீண்டும் ஆலோசனைக்கு வருமென்று குமாரசாமி ராஜா நினைத்துக் கொண்டிருந்தாராம். அப்படியல்ல, 29ல் கூட்டத்தில் நடந்ததுதான் முடிவான தென்றும், அந்த கூட்டத்தில் ஆஜராய் இல்லாத மந்திரிகள் உள்பட சகல மந்திரிகளையும் அது கட்டுப்படுத்துமென்றும் அவருக்கு எடுத்துக் காட்டப்பட்டதாம். அப்படியானால் சரியென்று அவர் சொல்லிவிட்டாராம். ஆகவே மந்திரி சபையில் பிளவு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று

பிரகாசம் காரு சொல்லுகிறார். இதில் என்ன விசித்திரங்கள் இருக்கின்றன என்பதை கவனிக்க வேண்டும். 29உ கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட விஷயம் மீண்டும் ஆலோசனைக்கு வரும் என்று ஒரு மந்திரி நினைப்பதற்கு இடம் கொடுக்கக் கூடிய விதத்தில்தான் அந்த கூட்டம் நடந்திருக்கிறது. சென்ற 7உ நடந்த மந்திரி சபை கூட்டத்தில் 29உ கூட்டத்தில் நடந்ததே முடிவானது என்று பிரகாசம் காரு தீர்ப்பு கூறினாரென்றும், ஆகவே அதைப் பற்றி இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை யென்றும் மந்திரி குமாரசாமி ராஜா சொல்லுகிறார். ஆகவே 29உ கூட்டத்தில் அந்த விஷயம் முடிவு செய்யப்பட்டது என்பதை சொல்லுவதற்கு பிரகாசம் காருவின் தீர்ப்பு அவசியமாய் இருந்திருக்கிறது. அதில் சாதகமாகவோ பாதகமாகவோ சொல்லக்கூடியவர்களின் வோட்டை எண்ணவில்லை என்பது இதிலிருந்தே நிச்சயமாகிறது. இவ்வளவு வழவழப்பாக நடந்த ஆலோசனையை தீர்மானம் நிறைவேறியதாக சொல்லுவதுதான் முதலாவது விசித்திரம்.

29உ கூட்டத்தில் இம்மாதிரி விசித்திரமாக முடிவு செய்யப்பட்ட ஒரு விஷயம் ஆஜராய் இல்லாத மந்திரிகளையும் கட்டுப்படுத்தும் என்று சொல்லுவதுதான் அடுத்த விசித்திரம். வந்திருந்தவர்கள், வராமல் இருந்தவர்கள், ஒப்புக்கொண்டவர்கள், ஒப்புக் கொள்ளாதவர்கள் எல்லாரையுமே 29உ கூட்டம் கட்டுப்படுத்தும் என்று சொல்லிவிட்டு, அதே மூச்சில் மந்திரி சபையில் பிளவு இல்லை என்று சொல்லுவது தான் எல்லாவற்றையும்விட பெரிய விசித்திரம். எல்லா மந்திரிகளையும் கட்டுப்படுத்தும் என்று அதிகார தோரணையில் சொல்லும்போது பிளவு என்பதற்கு இடமேது? பிளவு என்பது நடக்காத காரியம் என்று பயமுறுத்திவிட்டு, பிளவு என்பது இல்லை என்று சொல்லுவதற்கு அர்த்தமே இல்லை. ஆகவே பிரகாசம் காரு தமது அதிகாரத்தை உபயோகித்து பிளவு இருந்தாலும் சட்ட பூர்வமாக பிளவு

கிடையாது என்பதை ஸ்தாபிக்கிறார். மந்திரி சபை அபிப்பிராயம் என்பது எந்த விதமாக உருவாகிறது என்பதை பிரகாசம் காரு வெளிப்படுத்தியதற்காக அவரை பாராட்டுகிறேன். அவருடைய அறிக்கையிலிருந்து வெளியாகிற ஒரு முக்கியமான விஷயத்தையே நண்பர்கள் கவனிக்க வேண்டும். அதாவது பிரகாசத்தின் மில் ஒழிப்பு கொள்கைக்கு மந்திரி சபையில் மெஜாரிட்டி ஆதரவில்லை என்பது நிச்சயமாகிறது.

கட்டுப்பாடு என்ற வார்த்தையை உபயோகித்து மந்திரிகளை வாய் மூடும்படி பிரகாசம் செய்திருக்கிறார். எனவே இந்த மில் ஒழிப்பு கொள்கைக்கு பிரகாசம் ஒருவரேதான் பொறுப்பு. மற்ற மந்திரிகள் மீது குற்றத்தை சுமத்த முடியாது. ஆகவே பிரகாசம் காருதான் இதன் பலாபலன்களை அநுபவிக்க வேண்டும். யார் என்ன சொன்னாலும் சரி மில் ஒழிப்பு கொள்கையை விடப்போவதில்லை என்ற தோரணையில் பிரகாசம் பேசுகிறார். இந்த மாகாணத்திற்கு எஜமானர் அவர் அல்ல என்பதையும், ஜனங்கள்தான் எஜமானர் என்பதையும் அவர் மறந்து விட்டார் என்று நினைக்கிறேன். நாலு ஜில்லாக்களில் மட்டும்தான் மதுவிலக்கு செய்வேன் என்று அவர் சொல்லியபோதும் அதே மாதிரிதான் மறந்து நின்றார். சட்டசபை காங்கிரஸ் கட்சி அவருக்கு அதை ஞாபகம் மூட்டியது. உடனே நாலு ஜில்லாக்களில் மதுவிலக்கு என்பதை 8 ஜில்லாக்களில் மதுவிலக்கு செய்யப்போவதாக மாற்றினார். அதே மாதிரி மில் ஒழிப்பு கொள்கையிலும் பல்டி அடிப்பாரா அல்லது முன் வைத்த காலை பின்வாங்காத வீராய் இருப்பாரா என்பது நமக்கு தெரியாது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். பிரகாசம் காருவின் மில் ஒழிப்பு கொள்கையை ஒழித்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பது என்று தமிழர்கள் தீர்மானம் செய்து விட்டார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அதற்கு வழி காட்டி இருக்கிறது. எனவே சட்டசபை காங்கிரஸ் கட்சியின்

அடுத்த கூட்டத்தில் இந்த பிரச்னை கிளப்பப்படுமென்பது நிச்சயம். அப்படி கிளப்பப்படும்போது, பிரகாசம் காருவின் மில் ஒழிப்பு கொள்கையை கண்டித்து கா. கட்சி கூட்டம் தீர்மானம் செய்யுமென்பது நிச்சயம். அதற்கப்புறமும் பிரதம மந்திரியாய் பிரகாசம் காரு இருந்து கொண்டு மில் ஒழிப்பு கொள்கையை நடத்த முடியாது. சட்ட சபை கட்சியின் தீர்மானத்திற்கு கட்டுப்பட்டுதான் மந்திரி சபை நடக்க வேண்டும். இதை பிரகாசம் காருவுக்கு இப்பொழுதே ஞாபகமூட்டுகிறோம். —(11-10-46)

* * *

சமாதானம்!

மில் ஒழிப்புக்கு தாம் போட்டிருக்கும் திட்டம் நியாயம் என்று விளக்க பிரதமர் பிரகாசம் ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். தாம் செய்வது சரி என்பதற்கு அவர் முக்கியமாக கூறும் சமாதானங்கள் இரண்டு. மில் ஒழிப்பு வேலையால் இம்மாகாணத்தின் துணி நிலைமை இப்பொழுது இருப்பதை விட இன்னும் மோசமானதாகி விடாது என்பது பிரகாசம் காருவின் முதல் சமாதானம். கதர் அபிவிருத்திக்கு இந்த மாகாண மக்களின் மனோபாவத்தை மாற்றியாக வேண்டியிருக்கையால் மில்கள் ஏற்படும் என்ற எண்ணத்திற்கே இடமில்லாதபடி செய்ய வேண்டியது அவசியம் என்பது அவர் சொல்லும் இரண்டாவது சமாதானம். இவைகளினால் தான் மில் ஒழிப்பு வேலையில் தாம் துணிச்சலாக இறங்கியிருக்கிறது என்று பிரகாசம் காரு சொல்லுகிறார். இப்பொழுது இருக்கும் துணிக் கஷ்டம் தமது திட்டத்தினால் நீங்கி விடும் என்று அவர் சொல்லவில்லை. நிலைமை இன்னும் மோசத்திற்கு வந்து விடாது என்று மாத்திரமே சொல்லுகிறார். பிரகாசம் காரு இதையாவது சொன்னதற்காக சந்தோஷப்படுகிறோம். நிலைமை இன்னும் மோசமாகிவிடாது என்று அவர் சொல்லுவது

சரி என்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால் இப்பொழுது இருக்கிற நிலைமை என்ன? இன்றுள்ள ஜவுளி ஏற்பாட்டின்படி ஒரு ஆளுக்கு வருஷத்திற்கு பத்தே முக்கால் கெஜம் விதம் துணி கோட்டாவே இந்த மாகாணத்திற்கு இருக்கிறது. இதில் ஆரறை கெஜம் கைநெசவு துணி, நாலேகால் கெஜம் மில் துணி. பிரகாசம்காரு கொஞ்சம் சிந்தித்து பார்த்திருப்பாரானால் ஆளுக்கு வருஷத்திற்கு பத்தேமுக்கால் கெஜம் துணிதான் என்பது மகாமோசமான தரித்திர நிலைமை என்பதை அவரே உணர்ந்திருப்பார். இதன்படி ஒரு பெண்ணுக்கு ஒரு புடவையும் அதற்கு மேல் கொஞ்சம் துணியுமே வருஷத்திற்கு கிடைக்கும். ஆணுக்கு இரண்டு வேஷ்டியும் இரண்டு சட்டையும் கிடைப்பது துர்லபம். வசதி யிருப்பவர்கள் அதிகமாக துணியை வாங்கி விட்டால் ஏழைகளுக்கு 4 முழ துண்டுக்கும் திண்டாட்டமாகிவிடும். இதுதான் இப்பொழுதிருக்கும் துணி நிலைமை. இந்த நிலைமைக்கு மோசம் வந்து விடாமல் தமது திட்டம் பார்த்துக்கொள்ளும் என்றுதான் பிரகாசம்காரு இப்பொழுது சமாதானம் சொல்லுகிறார். ஆனால் இவர் சொல்லுகிறாரே என்பதற்காக கட்டத் துணிக்கு இப்படியே திண்டாடி தவிக்க இம்மாகாண மக்கள் சம்மதிக்க முடியுமா என்பதுதான் இப்பொழுது கேள்வி.

ஜனங்கள் க்ஷேமமாக வாழ வேண்டுமானால் அதற்கு முதலில் அவர்களுக்கு வயிறார சோறும் மடைதிர கட்டத் துணியும் வேண்டும். தேசிய நிர்மாண கமிட்டி ஒவ்வொருக்கும் குறைந்தது 30 கெஜம் துணியாவது வேண்டும் என்று முடிவு கட்டியிருக்கிறது. அது உடனே சாத்தியமில்லை என்றே வைத்துக் கொண்டாலும் குறைந்த பட்சம் 20 கெஜமாவது வேண்டும். இதற்கு இம்மாகாணத்திற்கு 100 கோடி கெஜம் தேவை. வெளி மாகாணங்களிலிருந்து வருவது, இங்கே தயாராவது எல்லாம் சேர்ந்து இப்பொழுது 54 கோடி கெஜமே கிடைக்கிறது. ஆளுக்கு 20 கெஜமாவது கிடைக்க வேண்மானால் 46 கோடி கெஜம் ஜவுளி

இன்னும் அதிகமாக தயாராக வேண்டும். பிரகாசம் காருவின் கதர் திட்டத்தால் இந்த 46 கோடி கெஜம் உற்பத்தியாகுமா? 1914-45 கணக்குப்படி இம்மாகாணத்தில் மொத்த கதர் உற்பத்தியே 2 லட்சம் கெஜம்தான். பிரகாசம் காருவின் கதர் அபிவிருத்தி திட்டம் ஒழுங்காக நடக்கப் போகிறது என்று வைத்துக் கொண்டாலும் அதனுல் 46 லட்சம் கெஜம் கதரே கிடைக்கும். ஆளுக்கு 20 கெஜம் வீதம் கிடைக்க அப்பொழுதும் 41 கோடி கெஜத்திற்கு மேல் இம்மாணத்திற்கு ஜவுளி பற்றாக்குறையாகிறது. இந்த நிலைமையில் மில் ஒழிப்பு வேலையும் நிறைவேறு மானல் இம்மாகாண வாசிகள் நிரந்தரமாக துணிக்கு வழி யற்று தவிப்பவர்களாகவே ஆகிவிடுவார்கள்.

பிரகாசம் காருவின் இரண்டாவது சமாதானம் இன்னும் ரொம்ப வேடிக்கையானது. நூல் மில்கள் ஏற்படும் என்ற எண்ணம் ஜனங்களுக்கு இருந்தால் கதர் அபிவிருத்தி திட்டத்தில் அவர்களுக்கு உற்சாகமில்லாது போய்விடு மாம். ஆகையால் இந்த உற்சாகம் இருக்கும்படி செய்வதற் காக மில் ஒழிப்பு திட்டம் அவசியம் என்று அவர் சொல்லு கிறார். மக்கள் மனேபாவத்தையே மாற்ற பிரகாசம் காரு வின் வித்தை இது. மில்கள் இருக்கப்போவதே இல்லை யென்றுல் ஜனங்கள் என்ன செய்வார்கள்? நிர்வாணமாக நிற்க சம்மதிக்கமாட்டார்கள். வேறு வழியில்லாததால் எல்லோரும் கையால் நூற்று கதரை கட்டிக்கொள்ள முற் படுவார்கள். ஆகையால் கதர் அபிவிருத்திக்கு மில் ஒழிப்பு முக்கியம் என்பதற்கு பிரகாசத்தின் அழகான சமாதானம் இது! ஆனல் மற்ற மாகாணங்களிலோ மில்கள் ஒழிந்து விடப்போவதில்லை. அங்கே மில்கள் பெருகவே ஏற்பாடுகள் நடக்கின்றன. வெளி மாகாணங்களிலிருந்து மில் துணி வந்து கொண்டிருக்கும் என்று பிரகாசம் காரு கூறுகிறார். மில்கள் வரும் என்ற எண்ணமிருக்கிறவரை யில், கதர் மீது ஜனங்களுக்கு உற்சாகம் வராது என்றுல், வெளி மாகாணத்திலிருந்து மில் ஜவுளியே வருவதால்

மாத்திரம் கதரின் பேரில் ஜனங்களுக்கு உற்சாகம் குறையாமல் இருந்து விடுமா? ஒருக்காலும் இருக்காது. வேறு விதியில்லாததினால் கதரை உபயோகிக்க வேண்டும் என்ற கேவலமான மனோபாவத்தையே பிரகாசத்தின் இந்த யோசனை உண்டாக்கும். இந்த மனோபாவமே மக்களுக்கு இருக்குமானால், வெளி மாகாணத்திலிருந்து வரும் மில் ஜவுளியையே தேடி வாங்கிக் கொண்டிருப்பார்கள். எதற்காக இந்த மில் ஒழிப்பு வேலையெல்லாம் என்று பிரகாசம் காரு கூறுகிறாரோ அந்த கதர் அபிவிருத்தியும் உருப்படாது போய்விடும். இங்கு மில்களை ஒழித்து மற்ற மாகாணங்களுக்கு இந்த மாகாணத்தின் க்ஷேமத்தை பலியிடுவதில் தான் பிரகாசம் காருவின் திட்டம் போய் முடியும்.

ஆகையால் பிரகாசம் கூறும் சமாதானம் யாருக்கும் திருப்தியளித்து விட முடியாது. இம்மாகாண வாசிகளுக்கு துணிப் பஞ்சம் தீரவேண்டும். மாகாண பொருளாதார விருத்தியும் முக்கியம். இந்த இரண்டுக்கும் பிரகாசம் காருவின் மில் ஒழிப்பு திட்டம் உலைவைப்பதாக இருக்கிற வரையில் அவருடைய உதவாக்கரை சமாதானங்களை பார்த்து விட்டு யாரும் சும்மா இருந்துவிட முடியாது. —(12-10-46)

* * *

வெளியேறுக!

பிரகாசத்தின் பிரதம மந்திரி பதவிக்கு ஆபத்து வந்து விட்டது. இது எல்லோரும் எதிர்பார்த்ததுதான். பிரகாசம் கொஞ்சம் தீர்க்கமாய் யோசித்திருந்தால் அவரும் இதை முன்பே தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் பிரதம மந்திரி பதவியில் அவருக்கு இருந்த ஆசையானது தீர்க்கமாய் அவர் யோசிக்கும்படி விடவில்லை. சென்ற வருஷம் அவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அவர்

ராஜிநாமா செய்திருக்க வேண்டும். ஏனெனில் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் மெஜாரிட்டி ஆதரவை அவர் பெறவில்லை. ராஜாஜி கோஷ்டி நடுநிலைமை வகித்ததால் தான் சொற்ப வோட்டு வித்தியாசத்தால் அவர் வெற்றி பெற முடிந்தது. ராஜாஜி கோஷ்டி எதிர் கட்சியில் சேர்ந்தால் அவரை ஆதரிப்பவர்கள் மைனாரிட்டியில்தான் இருப்பார்கள். இதை தெரிந்த பின்பும் அவர், கட்சி தலைவர் பதவியை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தார். இதுதான் பெரிய தவறு. ஒன்று தமக்கு மெஜாரிட்டி இருக்க வேண்டும், அல்லது ராஜிநாமா செய்ய வேண்டும். மாகாணத்தின் நன்மையை கவனிப்பவர்கள் ராஜிநாமா செய்திருப்பார்கள். பிரதம மந்திரி பதவியை பெரிதாய் நினைப்பவர்கள் மைனாரிட்டியை மெஜாரிட்டியாக்க முயற்சி செய்வார்கள் இதைத்தான் பிரகாசம் இதுவரை செய்து வந்தார். இந்த வேலையிலேயே அவருடைய கவனமெல்லாம் சென்று வந்தபடியால் மாகாணத்தின் நன்மைகள் கவனிக்கப்படாமல் போயின. இதனால் மாகாண நிலைமை பலவிதங்களில் மோசமாயிற்று. கடையியில் பிரகாசத்தின்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதில் வந்து முடிந்திருக்கிறது. பிரகாசம் எப்படியாவது பிரதம மந்திரியாய் இருந்தாக வேண்டும் என்பது முக்கியமான பிரச்னையல்ல. மாகாணத்தின் நன்மைக்கு யார் பிரதம மந்திரியாய் இருப்பது நல்லதோ அவரே பிரதம மந்திரியாய் இருக்க வேண்டும். அந்த விதத்தில் பார்க்கும்போது கட்சியில் மெஜாரிட்டி பேரின் நம்பிக்கையை பெறாதவர்கள் உடனே வெளியேற வேண்டியதுதான் நியாயம்.

பிரகாசம் பிரதம மந்திரியாக வந்த பின்பு இந்த மாகாணத்திற்கு எந்த விதமான நன்மையும் கிடையாது. நன்மை இல்லா விட்டாலும் பாதகமில்லை; கெடுதலாவது இல்லாமல் இருக்கிறதா என்றால் அதுவுமில்லை. முதலில் சர்க்கார் தலைமை காரியாலய நிர்வாகம் மகா மட்டரகமா யிற்று. எந்த பைல் எங்கே இருக்கிறதென்று கண்டு

பிடிப்பதே பெரிய பிரம்ம வித்தையாய் இருக்கிறது. நிர்வாகத்திற்கு பேர்போன சென்னை மாகாணத்திற்கு இந்த பெயர் வந்தது ரொம்ப துரதிர்ஷ்டமானதாகும். சில மந்திரிகள் ரொம்ப திறமையாக நிர்வாகம் செய்தாலும் பொதுவாக மந்திரி சபையின் நிர்வாகம் ரொம்ப மட்டமாய் விட்டது. இதற்கு காரணம் முக்கியமான இலாகாக்களை யெல்லாம் பிரகாசம் தமது கையிலேயே வைத்துக் கொண்டிருப்பதேயாகும். ஏராளமாக சர்க்காரின் கையிலிருக்கும் பணத்தை சாமர்த்தியமாக உபயோகமுள்ள வழிகளில் செலவழிப்பதை விட்டு கண்மூடித்தனமான திட்டங்களில் செலவிடுகிறார்கள். இந்த விதமாக போகும்படி விட்டால் ஒரு வருஷத்தில் சென்னை மாகாணம் பாப்பராய் விடும். இதை தடுப்பதற்காகவாவது பிரதம மந்திரி பதவியை விட்டு பிரகாசம் போக வேண்டும். துணி பஞ்சத்தால் நாடு திண்டாடும்போது கோயம்புத்தூர் மில்களில் வேலை நிறுத்தம் ஏற்படும்படி பார்த்துக் கொண்டிருப்பது பிரகாசம் கோஷ்டியின் கையாலாகாத்தனத்தை நன்றாய் நிரூபிக்கிறது. அந்த கோஷ்டிக்கு சாமர்த்தியமும் தைரியமும் இருந்தால் கோயம்புத்தூரில் வேலை நிறுத்தம் ஏற்படாமல் தடுத்திருக்கலாம். தொழிலாளரின் குறைகளை கவனிக்காதது மட்டுமல்ல, விவசாயிகளையும் அப்படியே விட்டுவிட்டார்கள். இதனால் கம்யூனிஸ்ட்கள் ஆர்ப்பாட்டங்களும் குழப்பங்களும் செய்வது சுலபமாயிற்று. இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட்களின் அட்டகாசம் குறைவாய் இருந்த இடம் சென்னை மாகாணம்தான். அந்த மாகாணம் இன்று இந்தியாவிலேயே கம்யூனிஸ்டுகளின் குழப்பங்களுக்கு நல்ல சிறந்த இடமாய் விளங்குகிறது. இம்மாதிரி வளரும்படி விட்டதற்கு காரணம் விவசாயிகள், தொழிலாளரின் குறைகளுக்கு பரிகாரம் தேடாமல் இருந்ததேயாகும். செய்ய வேண்டிய கடமையை செய்யாமல் சும்மா இருந்து விட்டு திடீரென்று அவசர சட்டம் போட்டு கம்யூனிஸ்ட்களை பந்தோபஸ்தில் வைப்பதென்றால் அதைக் கண்டு ஜனங்கள் பயந்து விட மாட்டார்கள். எனவே கம்யூனிஸ்ட்களின் அட்டகாசங்களை இந்த மாகாணத்தில் வளர விட்டதற்காக பிரதம மந்திரி பதவியை விட்டு பிரகாசம் போக வேண்டும்.

நாட்டில் எங்கே திரும்பினாலும் கள்ள மார்க்கெட்டுகள். எந்த சரக்கு வேண்டுமானாலும் சுலபமாய் அகப்படுவதில்லை. இதற்கு காரணம் மந்திரி சபைதான். இந்திய சர்க்காரின் கன்ட்ரோல்கள் போனவுடன் இந்த மாகாணத்தில் கன்ட்ரோல்களை ஏற்படுத்தி இருந்தால் இத்தனை கள்ள மார்க்கெட்டுகள் ஏற்பட்டிருக்க முடியாது. இதைகூட தெரிந்து கொள்ள முடியாத ஒரு மந்திரி சபை பதவியில் இருந்து என்ன பிரயோசனம்? ஜனங்களின் கஷ்டத்தை நீக்க முடியாவிட்டால் மந்திரிகள் தாங்களாக ராஜிநாமா செய்வதுதான் கௌரவமான விஷயம். அப்படி அவர்கள் ராஜிநாமா செய்யாவிட்டால் அவர்களை வெளியேற்ற வேண்டியது பிரதிநிதிகளின் கடமை. அதைத்தான் இப்பொழுது சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களில் மெஜாரிட்டி பேர் செய்து வருகிறார்கள். முதலிலேயே வெளியேறுவிட்டாலும் இவ்வளவு தூரம் நடந்த பின்பாவது மரியாதையாக பிரகாசம் காரு ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறுவதுதான் கௌரவமாயிருக்கும். —(15-2-47)

* * *

28-ந்தேதி கூட்டம்

கடைசியாக இம்மாதம் 28-ந்தேதி கட்சி கூட்டத்தை கூட்டுவதென்று பிரகாசம் காரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். நம்பிக்கையில்லா தீர்மானத்தை பற்றி விவாதிப்பதற்கே இந்த கூட்டமாகும். பிரகாசம் காரு இந்த கூட்டத்தை கூட்டா விட்டால், நோட்டீஸ் கொடுத்தவர்களே கூட்டத்தை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்த பின்புதான் 28-ந்தேதி கூட்டத்தை கூட்டுவதென்று பிரகாசம் காரு அறிக்கை யிட்டிருக்கிறார். முன்பே இதை செய்திருந்தால் கௌரவமாய் இருந்திருக்கும். 28-ந்தேதி கட்சியை கூட்டுவது என்ற இந்த முடிவோடு பிரகாசம் காரு நின்றிருந்தால் யோக்கியமாய் இருந்திருக்கும். ஆனால் மற்றொரு காரியத்தையும் அவர் செய்திருக்கிறார். அதாவது சட்ட சபை கட்சிக்குள் அநேக கோஷ்டிகள் இருக்கின்றனவாம். அம்

மாதிரி கோஷ்டிகளாய் இருப்பது, சட்ட சபை கட்சியின் விதிகளுக்கு விரோதமாம். எனவே அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமிக்கிறார். அந்த கமிட்டி 27-ந்தேதி கூடுமாம். கோஷ்டி பிரிவினைகள் கட்சியில் இருக்கின்றனவா இல்லையா என்பது வேறு விஷயம். அதைப் பற்றி இப்பொழுது விசாரணை செய்ய வேண்டிய அவசரம் என்ன வந்து விட்டது? கோஷ்டி பிரிவினையை பற்றி பிரகாசம் காரு அவ்வளவு பலமான அபிப்பிராயம் கொண்டிருப்பாரானல், இந்த விசாரணையை முன்பே வைத்திருக்கலாம். அல்லது 28-ந்தேதி கூட்டத்தைப் பார்த்துக்கொண்டு அதில் தப்பிப் பிழைத்தால் அப்புறம் வைத்திருக்கலாம். இரண்டையும் விட்டு, 28-ந்தேதி நம்பிக்கையில்லா தீர்மானம் வரும் போது, 27-ந்தேதி விசாரணை கமிட்டி விசாரிக்கப் போகிறதென்றால், அங்கத்தினர்களைப் பயமுறுத்துவதைத் தவிர வேறு எதுவும் இருப்பதாய்த் தெரியவில்லை. விசாரணைக்குப் பயந்து பல அங்கத்தினர்கள் தம்மை ஆதரிக்க முன்வருவார்கள் என்று பிரகாசம் காரு நினைக்கிறாரா? அல்லது தமக்கு விரோதமானவர்களை கட்சியிலிருந்து தள்ளிவிட்டு தமது மைனாரிட்டியை மெஜாரிட்டி ஆக்கிவிடலாமென்று நினைக்கிறாரா? இரண்டும் நடக்கப்போகிற காரியமல்ல. எதற்கும் சென்னை மாகாணம் தயாராகவே இருக்கிறது. டாக்டர் கரேயின் கதியை மனதில் வைத்துக் கொண்டு பிரகாசம் காரு நடப்பாராக.

அதிகப்பிரசங்கித்தனம்

பிரகாசம் மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்ற மகஜரில் கையெழுத்திட்ட சட்டசபை ஆந்திர அங்கத்தினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்று ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருக்கிறதாம். ஹிட்லர் ராஜ்யமாய் இருக்கிறதே ஒழிய ஜனநாயகமாய் தோன்றவில்லை. ஆந்திர காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானம் நியாயமானது என்று யாராவது சொன்னால், அவர்களுக்கு ஒரு விஷயத்தை விளக்க விரும்புகிறோம். பிரகாசத்துக்குத் தமிழ் அங்கத்தினர் எவரும் ஆதரவு கொடுக்கக்கூடாதென்றும், கொடுத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்ப

தென்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தீர்மானிப்பதாய் வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால், பிரகாசம்காருவின் நிலைமை என்னவாகும்? மகஜரில் கையெழுத்து போட்ட 37 பேரும் பிரகாசத்தை ஆதரிக்க புறப்பட்டாலும் கூட அவரை காப்பாற்றிவிட முடியாது. ஏனெனில், மொத்தமுள்ள சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் அங்கத்தினர் 196 பேரில் ஆந்திரர்கள் 65 பேர்தான். அவர்கள் அவ்வளவு பேரும் ஒன்று சேர்ந்து நின்றாலும் பிரகாசம் மந்திரி சபையை கீழே விழாமல் தடுத்து விட முடியாது. தமிழ் அங்கத்தினர்கள் 100 பேர் இருக்கிறார்கள். எனவே, ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானம் புத்திசாலித்தனமானதாய் தோன்றவில்லை. சட்டசபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் காங்கிரஸின் கொள்கைகளுக்கு விரோதமாக நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் காங்கிரஸ் கமிட்டியின் கடமை. மற்றப்படி மந்திரி சபை அமைப்பு முதலிய விஷயங்களை கவனிக்க பார்லிமெண்டரி போர்ட் இருக்கிறது. அதிலே மாகாண காங்கிரஸ் தலையிட முடியாது. பார்லிமெண்டரி போர்டை கலந்து கொண்டு சென்னை சட்ட சபை கட்சியில் உள்ள மெஜாரிட்டியார் காரியங்களை செய்து வரும் போது, ஆந்திர மாகாண கமிட்டி இடையில் புகுந்து பயமுறுத்துவது வெறும் அதிகப்பிரசிங்கிதனமாகும்.

மில்களை சர்க்கார் நடத்தட்டும்

கோவையில் வேலை நிறுத்தத்தில் புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முதலில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தார்கள். இப்பொழுது முதலாளிகள் கதவடைப்பு செய்து விட்டார்கள். ஆகவே, தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் சமரசம் செய்து வைக்க நடந்து வந்த பேச்சு முறிந்து போயிற்று. கதவடைப்பு என்பது பெயரளவில் இருக்கிறதே ஒழிய, அதற்கு விசேஷ அர்த்தம் இல்லை என்று முதலாளிகள் சொல்லுகிறார்கள். ஏனெனில், ஏற்

கனவே வேலை நிறுத்தத்தால் மில்கள் கதவடைத்துதான் கிடக்கின்றன என்றும் கதவடைப்பு என்று சொல்லுவதால் புதிதாக ஏற்படவில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள். விசேஷ அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ, கதவடைப்பு என்று முதலாளிகள் சொல்லியதால் தொழிலாளரை அநாவசியமாக கோப மூட்டிவிட்டார்கள். சமரஸமாக போக தொழிலாளர்கள் விரும்புவதாய் இருந்தாலுங் கூட அப்படி செய்ய விடாமல் முதலாளிகளின் கதவடைப்பு நோட்டீஸ் செய்து விட்டது. எனவே, இருக்கிற நிலைமையை பார்த்தால் கோவை வேலை நிறுத்தம் சமீபத்தில் முடிவதாய் தோன்றவில்லை. இந்த தகராறில் முதலாளிகள் சொல்லுவது சரியா, தொழிலாளர் சொல்லுவது சரியா என்று கேட்கலாம். சட்டபூர்வமாக முதலாளிகள் சொல்லுவது சரியாக இருந்தாலும் கூட தொழிலாளரின் கோரிக்கைகளை முதலாளிகள் பூர்த்தி செய்வதால் கெட்டுப்போவது எதுவுமில்லை. போட்ட முதலுக்கு மேல் லாபம் அடித்த பின்பு, தொழிலாளருக்கு ஆறுமாத போனஸ் கொடுப்பதற்கு முதலாளிகள் தாராள மனம் வைத்திருக்கலாம். அவர்களுக்கு மனம் இல்லாமல் போனாலும் அவர்களை கொடுக்கும்படி சர்க்கார் செய்திருக்கலாம். ஏனெனில், தகராறு என்னதான் இருந்தாலும் இப்பொழுது இருக்கும் துணி பஞ்சத்தில் வேலை நிறுத்தம் நடை பெறும்படி விடக் கூடாது.

இந்த விஷயத்தில் முதலிருந்தே மந்திரி சபை தைரியமாகவோ தீர்க்கபுத்தியுடனோ நடக்க தவறி விட்டது. இப்பொழுதாவது மந்திரி சபை தன்னுடைய கடமையை உடனே செய்ய வேண்டும். கதவடைப்பு நோட்டீஸை முதலாளிகள் கொடுத்துவிட்டபடியாலும் அதனால் சமீபத்தில் சமரஸம் ஏற்படுமென்று தோன்றாதபடியாலும் சர்க்கார் உடனே நடவடிக்கை எடுத்து துணி பஞ்சத்தை கடுமையாக்காமல் தடுக்க வேண்டும். அதற்குள்ள வழி ஒன்றே ஒன்றுதான். அதாவது முதலாளி

களுக்கும் தொழிலாருக்கும் சமஸரம் ஏற்படுகிற வரையில் கோவை மில்களை சர்க்காரே நடத்தி வரவேண்டும். இதில் ஒரு நாள் கூட தாமதம் செய்யக்கூடாது. இப்பொழு துள்ள மந்திரி சபையே திண்டாட்டத்தில் இருக்கும்போது, இந்த பெரிய வேலையை எப்படி செய்யுமென்று கேட்க லாம்- எந்த மந்திரி சபை வந்தாலும் போனாலும் சர்க்கார் நடந்து கொண்டுதான் இருக்கும். போகிற மந்திரிகளாய் இருந்தாலும் கூட அந்த சர்க்கார் நடைபெறும் வேலையில் அவர்கள் தாமதம் காட்ட முடியாது. அதை போலவே கோவை நெருக்கடியை தீர்ப்பதற்கும் மந்திரி சபை உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி செய்ய தைரியம் இல்லாவிட்டால், உடனே ராஜிநாமா செய்துவிட்டு மந்திரி சபை வெளியேறட்டும். செய்யவும் தைரியமில்லாமல் பதவியையும் விடாமல் பிடித்துக் கொண்டிருப்பது, யோக்கியமானவர்கள் செய்யும் வேலை யல்ல. —(20-2-47)

* * *

ஸ்ரீ பிரகாசத்தின் தந்திரம்

பிரகாசம் காரு மீது நம்பிக்கை இல்லை என்று சட்ட சபை அங்கத்தினர்கள் கொடுத்திருக்கும் நோட்டீஸை எதிர்த்து பிரசாரம் செய்வதற்காக பிரகாசம் காரு ஆந்திராவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஜனங்களின் அபிப்பிராயத்தை தெரிய வேண்டும் என்று உண்மையாகவே பிரகாசம் காரு விரும்பியிருந்தால் தமிழ் நாட்டிலும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்திருக்க வேண்டும். அப்படி செய்யாமல் ஆந்திராவில் மட்டும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்ததை பார்த்தால் ஆந்திரர்களின் உணர்ச்சியை கிளப்பி விடும் வேலையாய் இருக்கிறதே ஒழிய நேர் பாதையான வழியாய் தோன்றவில்லை. நம்பிக்கையில்லா மகஜரில் கையெழுத்திட்ட ஆந்திரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி-

செய்த தீர்மானத்தை ஸ்ரீ பிரகாசம் ஆதரிக்கிறார். ஆனால் அதே மூச்சில் மந்திரி சபையைப்பற்றி தீர்ப்பு கூறவேண்டியவர்கள் ஜனங்களே ஒழிய காங்கிரஸ் மேலிடமல்ல என்று சொல்லுகிறார். காங்கிரஸ் மேலிடத்திற்கு அதிகாரமில்லை என்றால் மாகாண கமிட்டிக்கு எப்படி அதிகாரம் வந்து விடும் என்பது புரியவில்லை. எப்படியாவது தமது பிரதம மந்திரி பதவியை விட்டுவிடக் கூடாது என்பதைத் தவிர வேறெதுவும் பிரகாசம் காருவுக்கு தோன்றுவதாய் தெரியவில்லை. ஒன்று சட்ட சபை அங்கத்தினர்களில் மெஜாரிட்டியாரின் ஆதரவை பெறவேண்டும், அல்லது பதவியை விட்டுவிலக வேண்டும். இரண்டில் எதையும் செய்யாமல் பிடித்த பதவியை விடக்கூடாது என்பதற்காக குயுக்திகள் செய்ய கிளம்பினால் அம்மாதிரி மனிதர்கள் ஜனநாயகத்திற்கே விரோதமானவர்கள். அப்படிப்பட்டவர்களால்தான் பாஸிஸம் ஒரு நாட்டில் ஏற்படுகிறது. எனவே ஜனநாயகத்தை காப்பாற்றி பாஸிஸத்தை பரவ விடாமல் தடுப்பதற்காகவாவது பிரகாசம் காருவை மந்திரி சபையிலிருந்து தள்ளவேண்டும்.

பிரகாசம்காரு போகிற போக்கை பார்த்தால், மேலிடத்திற்கு அதிகாரமில்லை என்று அவர் வியாக்கியானம் செய்வதைப்பார்த்தால் டாக்டர் கரேயின் வழியை பின்பற்றுவாரோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. நம்பிக்கையில்லா தீர்மான வேண்டுகோளை பற்றி ஆலோசிப்பதற்கென்று 28உ-யை குறிப்பிட்டு விட்டு, 27உ ஏதோ விசாரணை செய்யப்போவதாக சொல்லுவது அசல் பாஸிஸ வழியாகும். சட்ட சபை காங்கிரஸ் கட்சிக்குள் கோஷ்டிகள் இருப்பதை விசாரிப்பதற்கு இப்பொழுது திடீரென்று அவசியம் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. கோஷ்டிகள் ஏதாவது இருக்குமானால் அவற்றை உண்டாக்கியவர் பிரகாசம் காருதான். இல்லாத கோஷ்டிகளை இருப்பதாக பாவித்துக் கொண்டு அவைகளை சரிக்கட்ட மந்திரி பதவிகளை கொடுக்க முன் வந்தவர் இதே பிரகாசம் தான். சமீபத்தில் ஸ்ரீ வெங்கட்ட

ரத்தினத்தை மந்திரியாக நியமிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் வரையில் எத்தனை பேருக்கு மந்திரி பதவிகள் கொடுப்பதாய் தாம் பேரம் பேசினார் என்பதை ஸ்ரீ பிரகாசம் பகிரங்கமாய் சொல்ல முடியுமா? அந்த முயற்சி பலிக்காமல் போனதால்தான் தாம் மனோ ராஜ்யம் செய்த கோஷ்டிகள் மீது நடவடிக்கை எடுக்க அவர் முன் வந்திருக்கிறார் என்பதை அவர் மறுக்க முடியுமா? எனவே கோஷ்டிகள் ஏதாவது இருக்குமானால் அதற்கு பிரகாசம்காருதான் காரணம். எனவே அவரே அதைபற்றி விசாரிப்பதற்கு தகுதி கிடையாது. முதலில் நம்பிக்கையில்லா தீர்மானத்தை முடிவு செய்து கொண்டு அதன் பின்னால் தான் பிரகாசம் காரு மீது சாட்டப்படும் கோஷ்டி பிரிவினை குற்றத்தை பின்னால் வரும் தலைவர் விசாரிக்கவேண்டும்.

27௳ விசாரணை கமிட்டியை கூட்டுவதால் அந்த விசாரணை முடிகிற வரையில் நம்பிக்கையில்லா தீர்மான விவாதத்தை ஒத்தி வைக்க அதை ஒரு காரணமாக 28௳ கூட்டத்தில் பிரகாசம் காரு உபயோகிக்கலாம். இதனையெல்லாம் பிரதம மந்திரி பதவியை காப்பாற்றி விட முடியாது. ஆனால் அநாவசியமாக இந்த தகராறை இழந்துக் கொண்டு போகவும், மாகாண நிர்வாகம் சீர் குலையும்படி செய்யவும் அது உபயோகப்படலாம். பிரகாசம் காருவை அப்படி செய்யவிடாமல் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்னதாகவே செய்ய வேண்டும். முதலாவதாக பிரகாசம் காருவின் மந்திரி சபை கொள்கைகளிலோ, நிர்வாக போக்கிலோ பிடித்தமில்லாத மந்திரிகள் உடனே ராஜினாமா செய்ய வேண்டும். இரண்டாவதாக 28௳ கூட்டத்தில் வரப்போகும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை பிரகாசம் காரு தடுப்பதற்கு வழியில்லாமல் செய்ய வேண்டும். இதை செய்ய வேண்டுமானால் ஒன்று, மேலிடத்தாரின் பிரதிநிதி யாராவது இங்கே வரவேண்டும். அல்லது 28௳ கூட்டத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் வராதபடி பிரகாசம் காரு செய்தாரானால் உடனே அங்கத்

தினர்கள் ஒரு கூட்டம் போட்டு நம்பிக்கையில்லா தீர்மா னத்தை வோட்டுக்கு விட்டு அதன் முடிவை உடனே மேலிடத்திற்கு அறிவிக்க வேண்டும். பிரகாசகாருவின் போக்கு நேர்மையான ஜனநாயகத்தை கைக்கொள்ளுவ தாய் இல்லையாகையால் அதற்கு தக்கபடி நடந்து கொள்ள அங்கத்தினர்கள் தயாராய்இருக்க வேண்டும். —(25-2-47)

* * *

பிரகாசத்தின் கடமை

மந்திரி சபை என்பது ஜனங்களின் சொத்து. ஜனங் களின் சம்மதம் இருக்கிற வரையில்தான் மந்திரி சபையில் ஒருவர் நியாயமாய் இருக்க முடியும். இதை அநேகமாய் பலர் மறந்து போகிறார்கள். மந்திரி பதவிக்கு வந்ததும் அதை தங்கள் சொந்த சொத்தாக பாவிக்கிறார்கள். எனவே அதை விட்டு விலக நேரும் போது பதறி புலம்பு கிறார்கள். அதை விட்டு விலகாமல் இருப்பதற்கு சூழ்ச்சி செய்ய ஆரம்பிக்கிறார்கள். இதுதான் இப்பொழுது பிரகாசம் மந்திரி சபையின் நிலைமை. கட்சியில் மெஜா ரிட்டி பேரான 114 பேர், என்று பிரகாசத்தின் மீது நம்பிக் கையில்லை என்ற மகஜரில் கையெழுத்து போட்டார்களோ அன்றே பிரகாசம் காரு தமது பிரதம மந்திரி பதவியை உதறி இருக்க வேண்டும். அப்படி செய்யாமல் கையெழுத்து போட்டவர்களில் சிலரை நயத்தாலோ பயத்தாலோ தமது கட்சியில் சேர்க்க முயற்சிப்பது, எப்படியாவது தமது பிரதம மந்திரி பதவியை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஆசையை காட்டு கிறதே ஒழிய நேர்மையை காட்டவில்லை. பிரகாசம் காரு சென்ற வருஷம் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதே மைனாரிட்டி வோட்டுகளால்தான் என்பதை அவர் மறந்து விட்டார். தலைவர் தேர்தலில் ராஜாஜி கோஷ் டியார் தங்கள் கடமையை உணர்ந்து நடு நிலைமை வகிக்கா

மல் இருந்திருந்தால் இன்று இந்த நெருக்கடியே ஏற்பட்டிருக்காது. அன்று நடுநிலைமை வகித்தவர்கள் எப்பொழுதும் அப்படி இருக்க மாட்டார்கள் என்பதை பிரகாசம் காரு அப்பொழுதே உணர்ந்திருக்க வேண்டும். மெஜாரிட்டி ஆதரவு இல்லாததால் தலைமை பதவியை ஒப்புக் கொள்ள முடியாதென்று அவர் அப்பொழுதே மறுத்திருக்க வேண்டும். அல்லது மெஜாரிட்டியாரின் ஆதரவை பெற உடனே ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இரண்டில் எதையும் செய்யாமல் இத்தனை மாதங்களாக அவர் காலம் கடத்தி விட்டார். இன்று, முன்னால் நடு நிலைமை வகித்தவர்கள் எதிர் கட்சியில் சேர்ந்து கொண்டதால் எதிர் கட்சி மெஜாரிட்டியாய் விட்டது. இதை தெரிந்த பின்பும் மெஜாரிட்டி கட்சியை மைனாரிட்டியாக்க பிரகாசம் காரு முயற்சி செய்கிறார். பிரிட்டிஷார் செய்து வரும் தந்திரங்களை காப்பி யடிப்பதாய் இது இருக்கிறதே ஒழிய நேர்மையான ஜனநாயகமாய் இல்லை.

பிரகாசம் காருவை போன்ற தலைவர்கள் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் நேர்மையாகவும், கம்பீரமாகவும் நடந்து மாகாணத்தில் சிறந்த சம்பிரதாயங்களை ஏடுற்பத்த வேண்டும். சுயராஜ்யத்திற்காக போராட வேண்டிய கட்டங்களெல்லாம் கழிந்து விட்டன. ஜனநாயக முறையில் ஆட்சி நடப்பதற்காக சிறந்த சம்பிரதாயங்களை ஏற்படுத்த வேண்டிய கட்டத்தில் தற்சமயம் நமது நாடு இருக்கிறது. போராட்ட காலங்களில் எந்த உயர்ந்த லட்சியத்தையும் தியாகத்தையும் தலைவர்கள் காட்டினார்களோ அவற்றை இப்பொழுதும் காட்ட வேண்டும். பதவிகளில் போய் இருந்தவுடன் பழைய லட்சியங்களையும் தியாக புத்தியையும் மறப்பது உண்மையான தலைவர்களுக்கு அழகல்ல மற்ற மாகாணங்களிலும், தலைமை சர்க்காரிலும், காங்கிரஸ் தலைவர்கள் பழைய பெருமைக்கு பாதகமில்லாமல் நடந்து வருகிறார்கள். சென்னையில் அதற்கு விரோதமாக நடக்க பிரகாசம் காரு முயற்சிப்பாரானால் இந்த மாகாணத்

திற்கு அதைவிட அதிகமாக அவரால் வேறு கெடுதல் செய்ய முடியாது. நமது நாடு இப்பொழுது ஒரு பெரிய சோதனையை எதிர்த்து போராடிக்கொண்டிருக்கிறது. இச்சமயத்தில்தான் நேர்மை, தியாகம், தைரியம் ஆகிய குணங்களை தலைவர்கள் காட்டி ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கான சம்பிரதாயங்களை ஏற்படுத்த வேண்டும். மெஜாரிட்டியார் ஒருவரை வேண்டாம் என்று சொன்னால் எதற்காக அப்புறம் அந்த ஆசாமி தமது பதவியை காப்பாற்றிக் கொள்ள சூழ்ச்சி செய்ய வேண்டும்? இதுதான் சகிக்க முடியாத நிலைமை. வேண்டாம் என்று சொன்ன விநாடியே பதவியை துறந்து விட்டு வெளியேறுவதுதான் கௌரவமாய் இருக்கும். தேசத்திற்கும் நன்மையாய் இருக்கும். அப்படி செய்யாமல் வோட்டுகளை பெறுவதற்கு சூழ்ச்சி செய்து கொண்டு போனால் இந்த சூழ்ச்சியிலேயே மந்திரிகள் கவனம் செலுத்துவார்களே ஒழிய நேர்மையான நிர்வாகத்தில் செலுத்த மாட்டார்கள். யார் பிரதம மந்திரியாய் வந்தாலும் ஜனங்களுக்கு கவலை இல்லை. கட்சியில் மிகப்பெரிய மெஜாரிட்டியின் ஆதரவை பெற்றவர் ஒருவர் பிரதம மந்திரியாய் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமான விஷயம். எனவே இந்த மாகாணத்தில் ஒரு நிலையான மந்திரி சபை ஏற்பட பிரகாசம் காரு உதவியாய் இருப்பாரென்றும், தள்ளாடிக் கொண்டிருக்கும் தமது பதவியை காப்பாற்ற சூழ்ச்சி செய்ய மாட்டாரென்றும் எதிர்பார்க்கிறோம்.

—(27-2-47)

* * *

மந்திரிகள் ராஜிநாமா

பிரகாசம் மந்திரி சபையிலிருந்து ஸ்ரீமான்கள் பக்தவத்ஸலம், குமாரசாமி ராஜா, அவிநாசிலிங்கம், டேனியல் தாமஸ் ஆகிய நாலு மந்திரிகளும் ராஜிநாமா செய்துவிட்டார்கள். இவர்கள் ராஜிநாமா செய்ததுதான் நேர்மை

யான செய்கை. காங்கிரஸ் சட்ட சபை கட்சியில் மெஜாரிட்டி பேர் பிரகாசம் காருவிடம் நம்பிக்கையில்லை என்று தெரிவித்த பின்பு, அந்த மந்திரி சபையை விட்டு விலகுவதுதான் பொதுவாக எல்லா மந்திரிகளுடையவும் கடமையாகும். பிரகாசம் காருவே இதைசெய்து மந்திரி சபையை கலைத்திருந்தால், ரொம்ப கௌரவமாய் இருந்திருக்கும். அந்த புத்தி அவருக்கு ஏற்படவில்லை. அவருக்கு ஏற்படாவிட்டால் அடுத்தபடியாக மந்திரிகளே தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுப்பதுதான் ஒரே வழி. அதை அனுசரித்து நாலு மந்திரிகள் ராஜிநாமா செய்ததை வரவேற்கிறோம். ஜனநாயகத்தை மதித்து மெஜாரிடியின் அபிப்பிராயத்தை கௌரவிப்பதற்காக தங்கள் மந்திரி பதவிகளை ராஜிநாமா செய்ததற்காக அவர்களை பாராட்டுகிறோம். பிரதம மந்திரிதான் பதவியில் ஆசைகொண்டு ஜனநாயகத்தை மதிக்காமல் நடந்தாலும் மற்ற மந்திரிகளாவது மதித்து நடந்திருக்கலாம். மேலே குறிப்பிட்ட நாலு மந்திரிகளைத் தவிர, மற்ற மந்திரிகளுக்கு அம்மாதிரி யோசனை தோன்றவில்லை. ஆகவே, இனி கட்சி அங்கத்தினர்கள் செய்யக்கூடிய வேலை ஒன்றே ஒன்றுதான். அதாவது பிரகாசம் காரு மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதோடு பிரகாசம் காருவின் மந்திரி சபையிலுள்ள ராஜிநாமா செய்யாத மந்திரிகளிடமும் நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட வேண்டும். மெஜாரிட்டியின் அபிப்பிராயத்தை மதிக்காத மந்திரிகளிடம் எப்படி கட்சி அங்கத்தினர்கள் நம்பிக்கை வைக்க முடியும்? ஜனநாயகத்தை மதிக்காத கும்பலை கூண்டோடு விரட்டுவதை தவிர வேறு வழியில்லை. அந்த வேலையை சட்ட சபை காங்கிரஸ் கட்சி இன்று செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

பிரகாசம் காரு மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைப் பற்றி வெவ்வேறு விதமாக பிரகாசம் கோஷ்டியார் சாதிக்கிறார்கள். ஒன்று இதை ஆந்திரா—தமிழ் சச்சரவு என்று கூறுகிறார்கள். அதாவது பிரகாசம் காரு

ஆந்திராய் இருப்பதால் அவரை தலைமை பதவியிலிருந்து தள்ளுவதற்கு தமிழர்கள் முயற்சிக்கிறார்களாம். இது வெறும் அபத்தம். ஏனெனில், காங்கிரஸ் கட்சியிலுள்ள ஆந்திர சட்ட சபை அங்கத்தினர்களில் மெஜாரிட்டி பேர் நம்பிக்கையில்லா மகஜரில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். ஆந்திரர்களில் மெஜாரிட்டியாரே பிரகாசத்தை வேண்டாம் என்று சொல்லும் போது அதை எப்படி ஆந்திரா—தமிழ் சண்டை என்று சொல்ல முடியும்? மற்றொரு சரடு என்னவென்றால், பிரகாசம் காரு மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுவதற்கு காரணங்களை சொல்லவில்லை என்பதாகும். காரணங்கள் சொல்லுவதென்றால், ஒன்றிரண்டு அல்ல பதினாயிரம் காரணங்கள் சொல்லலாம். அப்படியானால் ஏன் சொல்லவில்லை என்று கேட்கலாம். பிரகாசம் காரு பிரதம மந்திரியாகவோ வெறும் மந்திரியாகவோ வரக் கூடாது என்று ஆதியில் மகாத்மா சொன்னாரே ஏன் சொன்னார்? அதற்கு காரணங்கள் காட்டி அச்சமயம் "ஹரிஜன்" பத்திரிகைக்கு மகாத்மா ஒரு கட்டுரை எழுதினார். கடைசி நிமிஷத்தில் அந்த கட்டுரை பிரசுரமாவதை மகாத்மா நிறுத்தி விட்டார். அந்த கட்டுரையில் பிரகாசம் காரு பிரதம மந்திரியாக வரக்கூடாது என்பதற்கு மகாத்மா என்ன காரணங்கள் சொன்னாரோ, அவற்றையே தற்சமயம் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு காரணங்களாய் எடுத்துக் கொள்ளலாம். எதற்காக அந்த கட்டுரையை பிரசுரிக்காமல மகாத்மா நிறுத்தினாரோ அதே நோக்கத்தையே காரணங்களை வெளியிடாமல் இருப்பதற்கும் எடுத்துக்கொள்ளலாம். எனவே, காரணங்களை சொல்லவில்லையே என்று கத்திக் கொண்டிருப்பதால் பலன் எதுவும் கிடைக்கப் போவதில்லை. தேசத்தினுடையவும் காங்கிரஸினுடையவும் நன்மையை கருதி சில விஷயங்களை பகிரங்கமாய் சொல்ல முடியாமல் இருக்கலாம். அதனால் பிரகாசம் காரு மீது குற்றஞ் சாட்ட இடமே இல்லை என்று பிரசாரம் செய்வது வெறும் பித்தலாட்டமாகும். தவிர காரணம் இருக்கிறதா இல்லையா என்பது ஒரு பிரச்னையே அல்ல. காரணம் இருந்தாலும்

சரி, இல்லாமல் போனாலும் சரி, எந்த விநாடியில் மெஜாரிட்டியார் ஒரு தலைவர் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறார்களோ அந்த விநாடியே தலைமை பதவியை துறந்து விட்டு வெளியேறுவதுதான் கௌரவமான வேலையாகும் அந்த கௌரவமான வேலையைச் செய்யும்படியே சட்ட சபை காங்கிரஸ் கட்சி கேட்கிறது. பிரகாசம் காரு கௌரவமாய் அதை ஒப்புக்கொண்டால் ரொம்ப சரி. ஒப்புக் கொள்ளாவிட்டால், நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறை வேற்றி, அவரை வெளியேற்றுவதுதான் சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் ஒரே வழியாகும். இதை அங்கத்தினர்கள் இன்று செய்து முடிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த நெருக்கடியான நிலைமையை சமாளிப்பதற்கு உதவியாக ராஜிநாமா செய்த மந்திரிகளை மீண்டும் பாராட்டுகிறோம். —(28-2-47)

* * *

மந்திரிகள் ராஜிநாமா

பிரகாசம் மந்திரி சபையிலிருந்து ஸ்ரீமான்கள் பக்தவத்ஸலம், குமாரசாமி ராஜா, அவனுசிலிங்கம், டேனியல் தாமஸ், கூர்மையா ஆகிய ஐந்து மந்திரிகள் ராஜிநாமா செய்து விட்டார்கள். இவர்கள் ராஜிநாமா செய்ததுதான் நேர்மையான செய்கை. காங்கிரஸ் சட்ட சபை கட்சியில் மெஜாரிட்டி பேர் பிரகாசம் காருவிடம் நம்பிக்கை இல்லை என்று தெரிவித்த பின்பு, அந்த மந்திரி சபையை விட்டு விலகுவதுதான் பொதுவாக எல்லா மந்திரிகளுடையவும் கடமையாகும். பிரகாசம் காருவே இதை செய்து மந்திரி சபையை கலைத்திருந்தால், ரொம்ப கௌரமாய் இருந்திருக்கும். அந்த புத்தி அவருக்கு ஏற்படவில்லை. அவருக்கு ஏற்படா விட்டால் அடுத்தபடியாக மந்திரிகளே தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுப்பதுதான் ஒரே வழி. அதை அநுசரித்து ஐந்து மந்திரிகள் ராஜிநாமா செய்ததை வரவேற்

கிறோம். ஜனநாயகத்தை மதித்து மெஜாரிட்டியின் அபிப்பிராயத்தைக் கௌரவிப்பதற்காக தங்கள் மந்திரி பதவிகளை ராஜிநாமா செய்ததற்காக அவர்களை பாராட்டுகிறோம். பிரதம மந்திரிதான் பதவியில் ஆசைகொண்டு ஜனநாயகத்தை மதிக்காமல் நடந்தாலும் மற்ற மந்திரிகளாவது மதித்து நடந்திருக்கலாம். மேலே குறிப்பிட்ட ஐந்து மந்திரிகளைத் தவிர, மற்ற மந்திரிகளுக்கு அம்மாதிரி யோசனை தோன்றவில்லை. ஆகவே, இனி கட்சி அங்கத்தினர்கள் செய்யக்கூடிய வேலை ஒன்றே ஒன்றுதான். அதாவது பிரகாசம் காரு மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதோடு பிரகாசம் காருவின் மந்திரி சபையிலுள்ள ராஜிநாமா செய்யாத மந்திரிகளிடமும் நம்பிக்கையில்லை என்று சொல்லிவிட வேண்டும். மெஜாரிட்டியின் அபிப்பிராயத்தை மதிக்காத மந்திரிகளிடம் எப்படி கட்சி அங்கத்தினர்கள் நம்பிக்கை வைக்க முடியும்? ஜனநாயகத்தை மதிக்காத கும்பலை கூண்டோடு விரட்டுவதைத் தவிர வேறு வழியில்லை

துர் பிரசாரம்

சென்ற சில தினங்களாக பிரகாசம் கோஷ்டியார் செய்து வரும் துர் பிரசாரங்களுக்கு அளவே இல்லை. விதவிதமாக சாடு விடுகிறார்கள். நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வருவது ஆந்திரா—தமிழ் சச்சரவு என்பது அந்த சாடுகளில் ஒன்று. அதாவது பிரகாசம் காரு ஆந்திரராய் இருப்பதால் அவரை தலைமை பதவியிலிருந்து தள்ளுவதற்கு தமிழர்கள் முயற்சிக்கிறார்களாம். இது வெறும் அபத்தம். ஏனெனில், காங்கிரஸ் கட்சியிலுள்ள ஆந்திர சட்ட சபை அங்கத்தினர்களில் மெஜாரிட்டி பேர் நம்பிக்கையில்லா மகஜரில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். ஆந்திரர்களில் மெஜாரிட்டியாரே பிரகாசத்தை வேண்டாம் என்று சொல்லும்போது அதை எப்படி ஆந்திரா-தமிழ் சண்டை என்று சொல்ல முடியும்? மற்றொரு சாடு என்னவென்றால், பிரகாசம் காரு மீது நம்பிக்கை யில்லை என்று சொல்லுவதற்கு காரணங்களை சொல்ல வில்லை

என்பதாகும். காரணங்கள் சொல்லுவதென்றால், ஒன்றிரண்டு அல்ல, பதினாயிரம் காரணங்கள் சொல்லலாம். அப்படியானால் ஏன் சொல்லவில்லை என்று கேட்கலாம். பிரகாசம் காரு பிரதம மந்திரியாகவோ வெறும் மந்திரியாகவோ வரக்கூடாது என்று ஆதியில் மகாத்மா சொன்னாரே ஏன் சொன்னார்? அதற்கு காரணங்கள் காட்டி அச்சமயம் "ஹரிஜன்" பத்திரிகைக்கு மகாத்மா ஒரு கட்டுரை எழுதினார் கடைசி நிமிஷத்தில் அந்த கட்டுரை பிரசுரமாவதை மகாத்மா நிறுத்தி விட்டார். அந்த கட்டுரையில் பிரகாசம் காரு பிரதம மந்திரியாக வரக்கூடாது என்பதற்கு மகாத்மா என்ன காரணங்கள் சொன்னாரோ, அவற்றையே தற்சமயம் நம்பிக்கை யில்லா தீர்மானத்திற்கு காரணங்களாய் எடுத்துக்கொள்ளலாம். எதற்காக் அந்த கட்டுரையை பிரசுரிக்காமல் மகாத்மா நிறுத்தினாரோ அதே நோக்கத்தையே தற்சமயம் காரணங்களை வெளியிடாமல் இருப்பதற்கும் எடுத்துக்கொள்ளலாம். எனவே, காரணங்களை சொல்லவில்லையே என்று கத்திக்கொண்டிருப்பதால் பலன் எதுவும் கிடைக்கப் போவதில்லை. தேசத்தினுடையவும் காங்கிரஸினுடையவும் நன்மையை கருதி சில விஷயங்களை பகிரங்கமாய் சொல்ல முடியாமல் இருக்கலாம். அதனால் பிரகாசம் காரு மீது குற்றஞ் சாட்ட இடமே இல்லை என்று பிரசாரம் செய்வது வெறும் பித்தலாட்டமாகும். தவிர காரணம் இருக்கிறதா இல்லையா என்பது ஒரு பிரச்னையே அல்ல. காரணம் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி, எந்த விநாடியில் மெஜாரிட்டியார் தலைவர் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறார்களோ அந்த விநாடியே தலைமை பதவியை துறந்து விட்டு வெளியேறுவதுதான் கௌரவமான வேலையாகும். அந்த கௌரவமான வேலையைச் செய்யும்படியே சட்ட சபை காங்கிரஸ் கட்சி கேட்டது. அதில் தவறு என்ன இருக்கிறது? எதற்காக அதைப்பார்த்து வயிற்றெரிச்சல் கொள்ள வேண்டும்.

—(1-3-47)

* * *

மந்திரி சபையை கலைக்கவேண்டும்

தேர்தல் முடிந்தவுடன் சட்டசபைகளில் எந்த கட்சி மெஜாரிட்டி பலத்தோடு இருக்கிறதோ, அந்த கட்சியின் தலைவரை அழைத்து மந்திரி சபை அமைக்கும்படி கேட்பதுதான் கவர்னரின் சம்பிரதாயம். அந்த தலைவர் அந்த கட்சியின் நம்பிக்கையை இழந்து விட்டால் அவரை பிரதம மந்திரி பதவியிலிருந்து நீக்க வேண்டியதும் கவர்னர் கடமை என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இந்த நிலைமை தான் இந்த மாகாணத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சட்ட சபை காங்கிரஸ் கட்சியில் மொத்தம் 196 பேர்கள் இருக்கிறார்கள். பிரகாசத்தின் மீது நம்பிக்கை இல்லை யென்றும் ஸ்ரீ ராமசாமி ரெட்டியாரை தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் 114 பேர் கையெழுத்திட்டு மேலிடத்திற்கு சமர்ப்பித்தார்கள். பிரகாசம் காரு கௌரவமாய் நடக்க விரும்பியிருந்தால் ஷ விஷயத்தை கேள்விபட்ட உடனேயே தமது ராஜிநாமாவை கவர்னரிடம் கொடுத்திருக்க வேண்டும். அப்படி அவர் செய்யவில்லை. காங்கிரஸ் மேலிடத்தார் அம்மாதிரி செய்யும்படி பிரகாசம் காருவுக்கு யோசனை கூறியும், அவர் அம்மாதிரி செய்ய மறுத்து விட்டார். அப்படியானால் நம்பிக்கையில்லா தீர்மானத்தை பற்றி முடிவு கூறுவதற்காக கட்சி கூட்டத்தை கூட்டும்படி மேலிடத்தார் வற்புறுத்தினார்கள். அதன் மேல் வெள்ளிக்கிழமை பகல் 1-மணிக்கு கூட்டத்தை கூட்டினார். அந்த கூட்டத்திலாவது நம்பிக்கையில்லா தீர்மானத்தை வோட்டுக்கு விட்டிருக்க வேண்டும். அப்படியும் அவர் செய்யவில்லை. ஏதோ காரணம் சொல்லி நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவர கூடாதென்று நிராகரித்து விட்டார். சட்ட நுணுக்கங்கள் எப்படி இருந்தாலும் சரி, மெஜாரிட்டியார் விரும்பவில்லை யென்றால் அவர்கள் தீர்ப்பை தெரிவிக்கும்படியான சந்தர்ப்பம் கொடுப்பது தான் ஜனநாயகம். அதை அமுக்க பார்ப்பது சுயநலத்தோடு கூடியபாஸிஸமாகும். இதைதான் பிரகாசம் காரு

கட்சி கூட்டத்தில் செய்தார். என்றாலும் கட்சி அங்கத்தினர்கள ஏமாந்து போய் விடவில்லை. இம்மாதிரி நடக்கலாம் என்பதை எதிர்பார்த்து அவர்கள் தயாராகவே வந்திருந்தார்கள். எனவே கூட்டத்தை பிரகாசம் கலைத்தவுடன் சொற்பபேரே கூட்டத்திலிருந்து வெளியே போனார்கள். அதாவது வந்திருந்த 164 பேரில் 29 பேர்தான் வெளியேறினார்கள். 134 பேரும், பிரகாசமும் அங்கேயே இருந்தார்கள். 134 பேருக்கு சட்ட சபை கட்சியின் உபதலைவரான ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் தலைமை வகித்தார். அந்த கூட்டம் ஒழுங்கான கூட்டமல்லவென்று பிரகாசம் நினைத்திருப்பாரானால் உடனே அவரும் வெளியே போயிருப்பார். அவர் வெளியேறாமல் அங்கேயே இருந்தது ஒன்றே எதிர்கட்சியின் பலத்தை அவர் அறிந்து கொண்டார் என்பதை காட்டுகிறது. அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசியான ஸ்ரீ சங்கரராவ்தேவும் இரண்டாவது கூட்டத்தில் பிரசன்னமாய் இருந்தார். அந்த கூட்டத்தில் சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் தலைவரான பிரகாசத்தின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் 134 பேர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது. கட்சி கூட்டத்தின் தலைவராக ஸ்ரீ ராமசாமி ரெட்டியாரை 134 வோட் கொடுத்து தேர்ந்தெடுத்தார்கள். எனவே நம்பிக்கையில்லா பிரச்னை ரொம்பத் தெளிவாய் விட்டது.

மேலிடத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தவர்களின் எண்ணிக்கை 114 தான். ஆனால் கட்சி கூட்டத்தில் வோட் கொடுத்தவர்களின் எண்ணிக்கை 134 ஆகும். 20 வோட்டுகள் அதிகமாய் விட்டன. கையெழுத்து போட்டவர்களில் சிலரை நயத்தாலும் பயத்தாலும் பின் வாங்கும்படி செய்ய பிரகாசம் கோஷ்டியார் பகீரத பிரயத்தனம் செய்தார்கள். ஒன்றிரண்டு பேர் வேறு அசௌகரியங்களால் கூட்டத்திற்கு வர முடியவில்லை. இவ்வளவெல்லாம் இருந்துங்கூட வந்திருந்த 164 பேரில் 134 பேர் பிரகாசம் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்திற்கு

வோட் கொடுக்கிறார்கள். ஆகவே 196 பேருள்ள கட்சியில் 134 பேர் பிரகாசத்தின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லி விட்டு ஸ்ரீ ராமசாமி ரெட்டியாரை தலைவராக தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே சட்ட சபையிலுள்ள மெஜாரிட்டி கட்சியான காங்கிரஸ் கட்சி ஸ்ரீ பிரகாசத்தை தள்ளிவிட்டு ஸ்ரீ ராமசாமி ரெட்டியாரை தலைவராக தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆகவே மெஜாரிட்டி கட்சி தலைவரை அழைத்து மந்திரி சபை அமைக்கும்படியும் தற்கால மந்திரி சபையை ராஜினாமா செய்யும்படியும் கேட்க வேண்டியது கவர்னரின் கடமையாகும். அசெம்பிளியை மட்டும் எடுத்துக் கொண்டாலும் அசெம்பிளியிலுள்ள 215 அங்கத்தினர்களில் 112 பேருக்கு மேலாக பிரகாசத்திற்கு விரோதமாக கட்சி கூட்டத்தில் வோட் கொடுத்திருக்கிறார்கள். எனவே, எந்த விதமாக பார்த்தாலும் பிரகாசத்திற்கோ அவருடைய மந்திரி சபைக்கோ தற்காலம் மெஜாரிட்டி பலம் இல்லை. இதை கவர்னர் கவனித்தால் பிரகாசத்தை ராஜினாமா செய்யும்படி சொல்ல வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை தெரிந்து கொள்ளலாம். கவர்னர் உடனே செய்ய வேண்டிய இந்த கடமையிலிருந்து விலக மாட்டார் என்று எதிர்பார்க்கிறோம். பிரகாசத்தின் போக்கை பார்த்தால் டாக்டர் கரேயின் போக்கைப் போலவே இருக்கிறது. அந்த கரேக்கு உதவி செய்வதற்காக அக்காலத்தில் மத்திய மாகாணத்தில் இருந்த கவர்னர் ஜனநாயகத்திற்கு விரோதமாக நடந்தார். அதனால் கவர்னர் அவமானமடைந்தார். டாக்டர் கரேயும் வெற்றி பெறவில்லை. அந்த வழியில் சென்னை கவர்னர் செல்லமாட்டாரென்றும், பிரகாசத்தை உடனே ராஜினாமா செய்யும்படி கேட்பாரென்றும் எதிர்பார்க்கிறோம். —(2-3-47)

பிரகாசம் தகராறு முற்றிற்று

பிரகாசம் காரு தகராறு ஒரு விதமாக முடிவுற்றதைக் கேட்டு சந்தோஷமடைகிறோம். 11உ மாலை சென்னையில் நடந்த சட்ட சபை காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் ராஷ்டிரபதி கிருபளானி இந்த செய்தியை அறிவித்தார். கவர்னர் சென்னைக்கு வந்த பின்பு பிரகாசம் காரு தமது மந்திரி சபையின் ராஜிநாமாவை சமர்ப்பித்து விடுவாராம். புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு கட்சி கூட்டம் 21உ யன்று நடைபெறுமாம். எனவே, சென்ற 28உ நடந்த கூட்டம் செல்லுபடியாகாதென்று பிரகாசம் காரு சொல்லியும் கூட, தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர கட்சி விதிகள் இடம் கொடுக்கவில்லை என்று பிரகாசம் காரு தீர்ப்பு கொடுத்தும் கூட, 28உ நடந்த இரண்டாவது கூட்டத்தில் நிறைவேறிய நம்பிக்கையில்லா தீர்மானத்தை பிரகாசம் காரு ஒப்புக்கொண்டு விட்டார். இதை அன்றே செய்திருந்தால் ரொம்ப கௌரவமாய் இருந்திருக்கும். நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஒப்புக்கொண்ட பிரகாசம் காரு அன்றைய கூட்டத்தில் நடந்த தலைவர் தேர்தலை மட்டும் ஒப்புக்கொள்ள மறுப்பது வேடிக்கையாய் இருக்கிறது. எதற்காக இன்னொரு தடவை தலைவர் தேர்தல் நடக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதை யோசித்து பார்த்தால் ஒரே ஒரு காரணம்தான் தெரிகிறது. அதாவது மீண்டும் பிரகாசம் காருவை தலைவராக தேர்ந்தெடுக்க முயற்சி செய்யலாம் என்ற நம்பிக்கை பிரகாசம் காரு கொண்டிருப்பதையே அது காட்டுகிறது. கடலில் விழுந்தவன் துரும்பை பற்றிக் கொண்டிருக்கும் பரிதாபத்தை போலவே இது காணப்படுகிறது. பிரதம மந்திரி பதவி மீது அவ்வளவு ஆசை! இம்மாதிரி ஆசை ஒரு காங்கிரஸ் காரருக்கு இருப்பதுதான் ரொம்ப துரதிர்ஷ்டமான விஷயம். மெஜாரிட்டியார்

எப்பொழுது வேண்டாமென்று சொல்லுகிறார்களோ, அப்பொழுதே பதவியை துறந்து விட்டு வெளியேறுவதுதான் உண்மையான காங்கிரஸ்காரர்களுக்கு அழகு. பதவிக்காக பிரகாசம் காரு இவ்வளவு தூரம் குழப்பத்தை உண்டு பண்ணியது அவருக்கும், காங்கிரஸுக்கும் ரொம்ப அவமானமான விஷயமாகும். பிரகாசத்தை போன்ற தலைவர்கள் ஜனநாயகத்தை வளர்ப்பதற்கான நல்ல சம்பிரதாயங்களை ஏற்படுத்த வேலை செய்ய வேண்டும். அதைவிட்டு ராஷ்டிரபதி சென்னைக்கு வந்து "ராஜிநாமா கொடுக்கிறீரா? நடவடிக்கை எடுக்கட்டுமா?" என்று கேட்கிற வரையில் பதவியை பற்றிக் கொண்டு பரிதாபகரமாய் கதறிக்கொண்டிருந்தது ரொம்ப வருந்தத்தக்கதாகும்.

டாக்டர் கரேயின் வழியை கடைசிவரை பின்பற்றாமல் இவ்வளவோடாவது பிரகாசம் காரு நின்று விட்டதை பார்த்து சந்தோஷமடைகிறோம். 11ஆ கூட்டத்தில் ராஷ்டிரபதி அறிவித்தபடி கவர்னர் வந்தவுடன் ராஜிநாமாவை கொடுத்துவிட்டு பிரகாசம் காரு விலகிவிடுவாரென்றும், புதிய தகராறுகளை உண்டுபண்ண மாட்டாரென்றும் எதிர்பார்க்கிறோம். புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் வேலையை உடனேயே செய்திருக்கலாம். 21ஆ வரை அதை தள்ளிப் போட்டிருப்பது அவசியமில்லாத வேலை. புதிய தலைவர் தேர்ந்தெடுப்பு வேலையில் பிரகாசம் கோஷ்டியும் மெஜாரிட்டியோடு ஒத்துழைப்பதாய் இருந்தால் நன்றாய் இருக்கும். ஒத்துழைக்காவிட்டால், மெஜாரிட்டியாராவது ஒற்றுமையுடன் இருந்து தங்கள் தலைவரை தேர்ந்தெடுப்பார்களாக. யார் தலைவராய் வந்தாலும் சரி கட்சியிலுள்ள மெஜாரிட்டியார் ஒற்றுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இருந்தால்தான் இந்த நெருக்கடியான காலத்தை சமாளிக்கவும், காங்கிரஸின் பெருமையை உயர்த்தவும் முடியும். யார் தலைவராய் வந்தாலும் சரி, அம்மாதிரி தலைவராக வருகிறவர் மெஜாரிட்டியாரை தமக்கு ஆதரவு கொடுக்கும்படி செய்யாம

கூடியவராகவும், நேர்மையான நிர்வாகம் நடத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும். பிரகாசம் காரு மந்திரி சபையே மைனாரிட்டி பலத்தால்தான் பதவிக்கு வந்தது. ராஜாஜி கோஷ்டியார் பிரகாசம் தேர்தலில் நடுநிலைமை வகிக்காமல் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்திருந்தால் இன்று வரை நடந்துள்ள இத்தனை கோளாறுகளையும் நடக்க விடாமல் தடுத்திருக்கலாம். அந்த கோஷ்டி அன்று நடுநிலைமை வகித்ததால் நமது மாகாணத்திற்கே பெரிய கெட்ட பெயர் ஏற்படும்படி செய்து விட்டது. இந்த கெட்ட பெயரை மாற்றி நல்ல பெயர் எடுக்கும்படியான விதத்தில் புது மந்திரி சபை அமையவேண்டும். திறமையுள்ளவர்களையும், நேர்மையானவர்களையும் புது மந்திரி சபையில் நியமிக்க வேண்டும். பதவிக்காக காக்கா பிடிப்பவர்களை மந்திரிகளாய் போட்டால் இந்த நெருக்கடியான காலத்தை சமாளிக்க முடியாது. எனவே, சட்ட சபை அங்கத்தினர்களின் பொறுப்பு மகத்தானது என்பதை அவர்கள் உணர வேண்டும். உணர்ந்து நல்ல மந்திரி சபையை அமைத்து, இந்த மாகாணத்திற்கு நல்ல பெயரை தேடி வைப்பார்களாக. —(12-3-47)

❋ ❋ ❋

பிரகாசம் காரு போட்டி போடலாமா?

21ல் நடைபெறப்போகும் சட்ட சபை காங்கிரஸ் கட்சி தலைவர் தேர்தலில் பிரகாசம் காருவும் போட்டி போடப்போவதாக வதந்தி உலாவுகிறது. பிரகாசம் காரு அந்த ஆதரவு தேடுவதற்காக பலர் மூலமாக வேலை செய்கிறார்கள். ஊர் ஊராக சென்று தந்தி கொடுக்க சிலர் ஏற்பாடு செய்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்தால்,

பிரகாசம் காரு மீண்டும் தலைவர் தேர்தலில் போட்டிபோட லாம் என்றே தோன்றுகிறது. போட்டி போடுவாரானால் இது ஒரு முக்கியமான பிரச்னையை கிளப்புகிறது. பிரகாசம் காரு எதற்காக ராஜிநாமா செய்தார் என்பது முதல் கேள்வி. அவர் மீது நம்பிக்கை இல்லை என்று மெஜாரிட்டியார் வோட் கொடுத்ததால்தான் அவரை ராஜிநாமா செய்யும்படி காங்கிரஸ் காரியக் கமிட்டி கேட்டது. அதன்படிதான் அவர் ராஜிநாமா செய்தார். 21உ நடைபெறும் தலைவர் தேர்தல், தற்கால தலைவர் மீது நம்பிக்கையில்லையென்று மெஜாரிட்டியார் சொல்லி, அதனால் அவர் ராஜிநாமா செய்த தால் ஏற்பட்டிருக்கும் காலிஸ்தானத்தை பூர்த்தி செய்வதற் காக ஏற்படும் தேர்தலே ஆகும். இது வருஷாந்தர தலைவர் தேர்தல் கூட்டமல்ல. வருஷாந்திர தேர்தலானால் பிரகாசம் காரு மீண்டும் தேர்தலுக்கு நிற்க உரிமையுண்டு. நம்பிக் கையில்லையென்று சொல்லி, அவர் ராஜிநாமா செய்த பின்பு நடைபெறும் தேர்தலில் கலந்து கொள்ள அவருக்கு உரிமை கிடையாது. ஆகவே, அவர் கலந்துகொள்ளுவது என்பது இதுவரை எங்கேயும் கேள்விப்படாத நியாய மாகவே இருக்கும். கண்டனம் செய்து பதவியிலிருந்து நீக்கப்பட்டவர் மீண்டும் தேர்தலில் போட்டிபோடுவதென் றால், அவர் ராஜிநாமா செய்திருக்கவே வேண்டாம்.

மெஜாரிட்டி அங்கத்தினர்கள் அவர் மீது நம்பிக்கை இல்லையென்று சொல்லி மூன்று வாரங்களுக்குள் எவ்வித மாறுதலும் ஏற்பட்டுவிடவில்லை. நம்பிக்கை இழந்தவர் களுக்கு மீண்டும் நம்பிக்கை ஏற்படும்படியான எந்த காரி யத்தையும் இந்த மூன்று வாரங்களுக்குள் பிரகாசம் காரு செய்து விடவில்லை. அம்மாதிரி எதுவும் நடக்காமல் இருக்கும்போது மூன்று வாரங்களுக்குள் விரோதமாக வோட் போட்ட அங்கத்தினர்களில் சிலரோ பலரோ சாதக மாக வோட் போடுவார்கள் என்று எதிர்பார்ப்பது அந்த அங் கத்தினர்களை ரொம்ப மோசமாக மதிப்பிடுவதாய் இருக்கும்.

பதவிகளுக்கு ஆசைப்பட்டு அவர்கள் திரும்பிவிடுவார்கள் என்று நினைப்பதாய் இருக்கும். இம்மாதிரி முறையில் ராஜீயத்தை நடத்தும்படி விடுவது மாகாண நன்மைக்கு அடுத்ததல்ல. முன்னால் வோட் போட்டவர்களில் ஒருவர் கூட திரும்பி விடுவார் என்று நாம் நினைக்கவில்லை. ஒரு வேளை திரும்புவார்கள் என்று நம்பிக்கொண்டு அந்த வழியில் வேலை செய்து கொண்டு போவதோ, வேலை செய்யும்படி விடுவதோ நாணயப் பொறுப்பல்ல. எனவே, யார் என்ன சொன்ன போதிலும் ராஜீய நாணயத்தை உத்தேசித்தாவது பிரகாசம் காரு மீண்டும் தேர்தலுக்கு நிற்கமாட்டார் என்று எதிர்பார்க்கிறோம். அதையும் மீறி அவர் தேர்தலுக்கு நிற்பாரானால் என்ன செய்வது? அதை தான் இப்பொழுது சட்ட சபை காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் யோசிக்க வேண்டும். நம்பிக்கையில்லை என்பதற்காக ராஜிநாமா செய்தவரின் பதவிக்காக நடக்கும் தேர்தலில் கண்டிக்கப்பட்டவரே மீண்டும் போட்டி போடுவது என்பது ஒழுங்கு முறைக்கு விரோதமானது. இந்த பிரச்னையை தேர்தல் நடைபெறும் சட்டசபை காங்கிரஸ் கட்சியில் கிளப்பவேண்டும். தேர்தல் கூட்டத்திற்கு தலைமை வகிப்பவர் இந்த ஆட்சேபணையை மறுக்க முடியாது. எனவே இம்மாதிரி பிரச்னை கிளம்பினால், பிரகாசம் காரு தலைவர் தேர்தலில் போட்டி போடக்கூடாது என்று தலைவர் தீர்ப்பு கூறி ஒதுக்க வேண்டிய அவசியத்தை பிரகாசம் காரு வைத்துக்கொள்ள மாட்டார் என்று எதிர்பார்க்கிறோம். அவசியம் வந்தால் அம்மாதிரி ஒதிக்கி வைத்து தேர்தல் நடத்துவதுதான் ஒழுங்கானதோடு கூட, சட்டசபை கட்சியின் கௌரவத்திற்கும் அடுத்ததாய் இருக்கும். கண்டனம் செய்யப்பட்டவர் போட்டியில் கலந்து கொள்ளுவதும் அவருக்கு வோட் எடுப்பதும் எந்த ஜனநாயகத்திற்கும் பொருத்தமானதல்ல. —(20-3-47)

* * *

புதிய பிரதம மந்திரி

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சிக்கு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். சென்ற மாதம் 27உ யன்று நடந்த இரண்டாவது கூட்டத்தில் மெஜாரிட்டியார் செய்த முடிவையே இப்பொழுதும் மீண்டும் செய்திருக்கிறார்கள். சென்ற வருஷம் நடந்த பிரகாசம் காரு தேர்தலுக்கும் இதற்கும் வித்தியாசமுண்டு. பிரகாசம் காரு தேர்தலில், அங்கத்தினர்களில் ஒரு பகுதியார் நடுநிலைமை வகித்ததால், பிரகாசம் காருவுக்கு கிடைத்த வோட்டுகள் கட்சியில் மைனாரிட்டியே ஆகும். இப்பொழுது அப்படியல்ல. கட்சி வோட்டுகளில் மெஜாரிட்டி வோட்டுகளை ரெட்டியார் பெற்றிருக்கிறார். எனவே ஜனநாயக முறையை அநுசரித்து மெஜாரிட்டி தீர்ப்பை மைனாரிட்டியும் ஏற்றுக் கொண்டு ஒற்றுமையாய் வேலை செய்யவேண்டும். ரெட்டியாரின் தலைமையை ஒப்புக் கொண்டு காங்கிரஸ் கட்சியில் கட்டுப்பாட்டோடு நடந்து கொள்ள வேண்டும். ரெட்டியார் தமது மந்திரி சபையை அமைக்கும்போதும் இதை கவனிக்க வேண்டும். கட்சியிலுள்ள சகல பிரிவினர்களுக்கும் திருப்தி ஏற்படுகிற விதத்தில் மந்திரி சபை ஏற்பட வேண்டும். சட்ட சபை அங்கத்தினர்களில் பலர் மந்திரிகளாய் இருக்க ஆசைப்படுகிறார்கள். காங்கிரஸ் காரர்களுக்கு இருக்க வேண்டிய சேவை, தியாகம் முதலிய குணங்களை இந்த மந்திரி பதவிகளுக்காக யாராவது விட்டுவிடுவதாய் இருந்தால், அது ரொம்ப பரிதாபமாய் இருக்கும். ஆசை ஏற்படுவது மனித இயற்கை. அதை அடக்கி ஆளுவது தான் தேவ குணம். தலைவர்களாய் இருப்பவர்கள் இதற்கு வழி காட்ட வேண்டும். பிரகாசம் காருவை போன்ற வயது முதிர்ந்த தலைவர்கள் பதவி ஆசையை கட்டுப் படுத்த முடியாமல் விட்டுவிடுவதால்தான் மற்றவர்களும் அம்மாதிரி ஆசை கொள்ள ஆரம்பிக்கிறார்கள். இதை தடுத்து

சேவையில் கவனத்தை திருப்பும்படி புதிய தலைவர் ரெட்டியார் வேலை செய்ய வேண்டும். மந்திரி பதவிகள் யாருக்கும் பிதுரார்ஜித சொத்தல்ல. ஜனங்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களும் திறமையுள்ளவர்களுமே மந்திரிகளாய் வரவேண்டும். மந்திரிகளாய் வருகிறவர்கள் தாங்கள் அந்த பதவிகளில் ஒட்டிக்கொண்டிருக்க விரும்பவில்லை என்பதை காட்டவேண்டும். அப்பொழுதுதான் நல்ல சம்பிரதாயங்களை ஜனநாயக முறையில் ஏற்படுத்த முடியும். அப்பொழுதுதான் ராஜீய நடவடிக்கைகளை உயர்த்த முடியும்.

புதிய மந்திரி சபை ஏற்படும்போது, சட்ட சபை அங்கத்தினர்களுக்கு வர்த்தக விஷயத்தில் தனி சலுகை காட்டும் வழக்கத்தையும் ரெட்டியார் ஒழிக்க வேண்டுகிறோம். காங்கிரஸின் லட்சியப்படி ஜனங்களுக்கு நன்மை செய்வதற்காக காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுகிறதே ஒழிய, காங்கிரஸ் பெயரை சொல்லிக் கொண்டு தனிப்பட்டவர்கள் லாபம் சம்பாதிப்பதற்காக காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படவில்லை. இதை அடிக்கடி அங்கத்தினர்களுக்கும் மந்திரிகளுக்கும் ஞாபகமூட்ட வேண்டியதை தமது முதல்கடமையாக ரெட்டியார் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரதம மந்திரியாக வருகிறவர் ஆங்கிலத்தில் சரமாரியாக பிரசங்கம் செய்யக்கூடியவராய் இருக்க வேண்டும் என்று ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே, ரெட்டியாரால் அம்மாதிரி செய்ய முடியாதே என்று சிலர் கேட்கிறார்கள். ஆங்கில படிப்பு படித்து பட்டம் பெற்றவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு புத்தி கிடையாது என்ற அபிப்பிராயத்தின் மீதே இம்மாதிரி சந்தேகம் கிளம்புகிறது. முதலில் அந்த அபிப்பிராயமே தவறானது. பாஷை ஒரு பிரமாதமல்ல. நாணயமும் புத்தி கூர்மையுமே திறமையான நிர்வாகத்திற்கு அடிப்படையாக வேண்டிய விஷயங்கள். ரொம்ப நெருக்கடியான வருஷங்களில் காங்கிரஸ் பிரஸிடெண்டாய் இருந்து ரொம்ப திறமையாக மௌலானா ஆஸாத் நிர்வாகம் செய்திருக்கிறார். இன்று அவர் இந்திய சர்க்காரில் கல்வி மந்திரியாகவும் இருக்

கிறார். எனவே, ஆங்கிலத்தில் பிரசங்கமாரி பொழியக்கூடிய சாமர்த்தியம் பிரதம மந்திரிக்கு இருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவுமில்லை. இன்னம் இரண்டு வருஷங்களில் பாஷாவாரி மாகாணங்கள் ஏற்பட்டே தீரும். அப்புறம் தாய் பாஷையில் சட்ட சபை நடவடிக்கைகள் இருக்குமே ஒழிய ஆங்கிலத்தில் இருக்க முடியாது. அதற்கிடையில் ஆங்கிலமும் அவசியமென்றால் அதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் நன்றாக பிரசங்கம் செய்யக் கூடிய ஒருவரை உதவி பிரதம மந்திரியாக போட்டுக் கொள்ளலாம். ரெட்டியார் மேல் சபை அங்கத்தினராகையால் அசெம்பிளிக்கு தனியாக ஒரு லீடரை போட்டுக் கொள்ளலாம். அப்படியெல்லாம் செய்வது பிரமாதமல்ல. மெஜாரிட்டியாரால் ஆதரிக்கப்படும் ஒருவர்தான் தலைவராய் இருக்க முடியும். அந்த முறையில் ரெட்டியார் தலைவராய் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறபடியால், அவரே தலைமை வகித்து காரியங்களை நடத்த வேண்டும். —(22-3-47)

* * *

புது மந்திரி சபை

சென்னையில் புதுமந்திரி சபை அமைந்துவிட்டது. சென்ற மாதம் 28-ந்தேதி நடந்த சட்ட சபை கட்சி இரண்டாவது கூட்டத்தில் பிரகாசம் காருக்கு நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறிய உடனேயே கவர்னர் விழித்திருந்தால் பட்ஜெட் விவாதங்கள் வேறு விதமாய் நடந்திருக்கும். அல்லது பிரகாசம் காரு ராஜிநாமா செய்த உடனே கவர்னர் கொஞ்சம் சுறுசுறுப்பாய் இருந்தால் இந்த மந்திரி சபை அன்றே ஏற்பட்டிருக்கும். அப்படி கவர்னர் செய்யாமல், பட்ஜெட் நிறைவேறுகிற வரையில் பிரகாசம்

காரு பதவியில் இருக்க வேண்டிய அவசியத்தை பற்றியும், 93-வது பிரிவை பற்றியும், பெரிய பிரசங்கம் செய்தார். இன்று அதே கவர்னர் தான் பட்ஜெட் முடியும் முன்பு புது மந்திரி சபை அமைக்க சம்மதித்திருக்கிறார். அவர் பயமுறுத்தியபடி 93-வது பிரிவை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லாமலே புது மந்திரி சபை அமைப்பு விஷயத்திலும், பிரகாசம் காருவின் ராஜிநாமாவை ஒப்புக் கொள்ளுவதிலும் சென்ற 14-ந் தேதி கவர்னர் பெரிய தவறு செய்து விட்டார் என்பது அசைக்க முடியாத உண்மையாய் விட்டது. 21வ கூட்டத்தில் தமக்கு மெஜாரிட்டி கிடைக்குமென்று பிரகாசம் காரு சொல்லிக் கொண்டிருந்திருக்கலாம். அந்த நினைப்பில்தான் அவர் கடைசி வரையில் போட்டி போட்டுக் கொண்டிருந்தார். என்றாலும் கவர்னராய் இருப்பவர்கள் சட்டப்படியுள்ள நேர்வழியில் போக கடமைப்பட்டிருக்கிறார்கள். மெஜாரிட்டியை மைனரிட்டியாக்க முயற்சிக்கும் ஜால வித்தைகளில் கொஞ்சம்கூட சிரத்தை கொள்ளக் கூடாது. சென்னை கவர்னர், பிரகாசம் காருவின் ராஜிநாமாவை அன்றே ஒப்புக் கொண்டிருந்தால், சட்ட சபையை இரண்டு தடவை ஒத்திவைக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடைசியில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை என்னவென்றால், பிரகாசம் காரு மந்திரி சபை போயே போயிற்று; முடிவு பெறாமல் இருக்கும் பட்ஜெட்டை முடித்து வைக்க பிரகாசம் மந்திரி சபை காத்திருக்கவில்லை; புதிய மந்திரி சபையே பட்ஜெட்டை பூர்த்தியாக்கும் வேலையை செய்யப் போகிறது. அந்த வேலையை புது மந்திரி சபை ரொம்ப திறமையாக செய்து முடிக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. தவிர புது மந்திரி சபை இந்த மாகாணத்திற்கு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைக்குமென்றும் நம்புகிறோம். ஏனெனில் மொத்தத்தில் சென்ற மந்திரி சபையில் இருந்தவர்களை விட புது மந்திரி சபையில் இருப்பவர்கள் அதிக திறமையும் உறுதியும் உள்ளவர்கள். மந்திரி சபை

யின் எண்ணிக்கையை 12-க்கு மேல் கூட்டாமல் காளா வெங்கட்ட ராமையரும், கிறிஸ்தவ, தென் கன்னட, ஹரிஜன் பிரதிநிதி மந்திரிகளையும் சேர்த்து அமைத்து விட்டால் ரொம்ப சிக்கனமான மந்திரி சபையாய் விளங்கும்.

புது மந்திரி சபையில் குமாரசாமி ராஜாவை எதற்காக விட்டு விட்டார்கள் என்பது தெரியவில்லை. மந்திரி சபையின் எண்ணிக்கையை கூட்டப் போவதாக ஒரு வதந்தி இருக்கிறது. அப்படி கூட்டுவதாய் இருந்தால் அந்த மந்திரி சபையிலாவது குமாரசாமி ராஜாவுக்கு இடம் இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். அவரை சேர்த்துக் கொள்ளுவதற்காக மந்திரி சபையை விஸ்தரிப்பதாய் இருந்தாலும் ஒரு தேசிய முஸ்லிமை சேர்த்துக் கொள்வதற்காக விஸ்தரிப்பதாய் இருந்தாலும் அர்த்தமுண்டு. மந்திரி சபையையும் விஸ்தரித்து இந்த இரண்டையும் செய்யாமல் விடுவதென்றால் அந்த விஸ்தரிப்புக்கு நியாயமே கிடையாது. ராஜாஜி கோஷ்டியை சேர்ந்தவர்களும் புது மந்திரி சபையில் சேர்ந்திருப்பதால் இனி சட்ட சபை காங்கிரஸ் கட்சியில் பிளவுக்கு இடர் ஏற்படாது. பிரகாசம் காரு கட்சியை சேர்ந்தவர்கள் இல்லையே என்று கேட்கலாம். பிரகாசம் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு கட்சி கிடையாது. மற்ற கட்சிகளில் இடம் பெறாதவர்களும் பதவி ஆசைபிடித்தவர்களுமான உதிரிகளே பெரும்பாலும் பிரகாசத்தை ஆதரித்து வந்தார்கள். அவர்களுடைய பிடிப்பிலிருந்து இந்த மாகாணம் விடுபட்டதே இந்த மாகாணத்திற்கு பெரிய நன்மையாகும். அப்பேர்ப்பட்டவர்கள் புது மந்திரி சபையை ஆதரிக்காவிட்டால் அதுவே புது மந்திரி சபைக்கு பெரிய பலமாய் இருக்கும். பெர்மிட் வேட்டை, உத்தியோக வேட்டை முதலியவைகளில் ஈடுபட்டுள்ள அங்கத்தினர்களிடம் புது மந்திரி சபை ரொம்ப உஷாராய் இருக்குமென்று நம்புகிறோம். புது மந்திரி சபையில் இருப்பவர்கள் திறமையுள்ளவர்களாகையால் பிரகாசம் மந்திரி சபையால் ஏற்பட்ட நிர்வாக ஊழலையும்

நாட்டில் ஏற்பட்டுள்ள மற்ற ஊழல்களையும் நிவர்த்திக்க தீவிரமாய் வேலை செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறார். சென்னை மாகாணத்திற்கு முன்பிருந்த நிர்வாக பெருமையை சீக்கிரம் நிலை நாட்டுவதோடு, தங்களையே ஏமாற்றிக் கொள்ளும் பிரகாசம் காருவின் காகித திட்டங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு, இந்த மாகாணத்தில் முதலாளிகள்—தொழிலாளர், மிராசுதார்—விவசாயிகள் ஆகியவர்களுக்குள் நல்லெண்ணமும், ஒற்றுமையும் பரவும்படி செய்யவேண்டும். கள்ள மார்க்கெட்டுகளிலிருந்து விடுதலை யடைவதை ஜனங்கள் உடனே எதிர்பார்க்கிறார்கள். பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை யடைவதை விட கள்ள மார்க்கெட்டுகளிலிருந்து விடுதலை அடைவதே பெரிய சிரமமாய் இருப்பதால், அந்த வழியில் புது மந்திரிகள் உடனே வேலை செய்து உணவுப் பொருள் பஞ்சத்தை நீக்கி ஜனங்களுக்கு சந்தோஷத்தை கொடுப்பார்களாக.

(25-3-47)

* * *

“நம்பிக்கையில்லை” மர்மம்

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 20ல் நடைபெறப்போகிறது. அச்சமயத்தில் ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர சிலர் முயற்சி செய்து வருகிறார்கள். எதற்காக நம்பிக்கையில்லா தீர்மானம் என்று நண்பர்கள் கேட்கலாம். அதுதான் யாருக்குமே தெரியவில்லை. நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவர முயற்சி செய்கிறவர்களுக்கு கூட அது தெரியவில்லை. அது மட்டுமல்ல; முயற்சி செய்கிறவர்களில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராய் இல்லாதவர்களே மும்முரமாய் இருக்கிறார்கள். அவர்களும் அநேக

மாய் பிரகாசம் காருவின் மந்திரி சபையை ஆதரித்து பிரசாரம் செய்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவே, இதிலிருந்து ஒன்று நிச்சயமாகிறது. பிரகாசம் மந்திரி மந்திரி சபையை காப்பாற்ற அவர்கள் செய்த முயற்சி தோற்றுப் போனதால், பதிலுக்கு ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றி விடவேண்டும் என்பதே அவர்களின் முக்கியமான நோக்கம் என்பது தெளிவாகிறது. இதனைத்தான் ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கு அவர்களால் காரணம் சொல்ல முடியவில்லை. இந்த அதிருப்திகாரர்களின் பட்டியலை புரட்டிப் பார்த்தால் பிரகாசம் மந்திரி சபையின் தயவினால் பெர்மிட் வாங்கி சம்பாத்தியம் செய்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர் என்பது விசித்திரமாய் இருக்கும்.

ஆகவே, பெர்மிட் கிடைத்தவர்கள் பிரகாசம் காருவுக்கு விசுவாசமாய் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அந்த விசுவாசம் பொதுஜன நன்மைக்கு அடுத்ததா அல்லது சுயநன்மைக்கு அடுத்ததா என்பதே முக்கியமான கேள்வி. பிரகாசம் மந்திரி சபை உயிரோடு இருந்த சொற்ப காலத்திற்குள் எத்தனையோ பதவிகளை புதிதாய் சிருஷ்டித்து தன்னுடைய பக்தர்களுக்கு கொடுத்து வந்தது. அம்மாதிரியான பதவிகளை தங்களுடைய உற்றாருக்கும் உறவினருக்கும், நண்பர்களுக்கும் வாங்கிக்கொடுத்த ஆசாமிகள் பலர் ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கு பின்பலமாய் இருக்கிறார்கள். பிரகாசம் மந்திரி சபையின் தயவினால் காண்ட்ராக்டுகள் எடுத்து லட்சக்கணக்காய் சம்பாதித்தவர்களும் உண்டு. அவர்களும் இவ் அதிருப்திகாரர்களுக்கு உதவி செய்து வருவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. எனவே, வெவ்வேறு காரணங்களால் அதிருப்தி அடைந்தவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள்.

ஜனநாயக முறைப்படி நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர அங்கத்தினர்கள் விரும்பினால், அவர்களுக்கு உரிமையுண்டு. எனவே, நம்பிக்கையில்லா தீர்மானத்தை பற்றி நாம் எதுவும் சொல்லவில்லை. கவனிக்க வேண்டிய விஷயமென்னவென்றால், அந்த உரிமையை சுயநலத்திற்காக உபயோகிக்கும்படி விடலாகா என்பதே ஆகும். இந்த சுயநல உபயோகத்தை விதிகள் போட்டு தடுக்க முடியாது. பொதுஜன அபிப்பிராயத்தாலேயே தடுக்க வேண்டும். சுயநல நோக்கம் கொண்டு சில ராஜீய வாதிகள் ஜனநாயக உரிமைகளை உபயோகிக்க ஆரம்பித்தால், அதை தடுப்பதற்கு பொதுஜன அபிப்பிராயம் உருவாக வேண்டும். அப்படி செய்தால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதையே தொழிலாக கொண்டிருக்கும் ராஜீய வாதிகள் வெளியே தள்ளப்படுவார்கள். ராஜீய காரியங்களில் ஜனங்கள் எவ்வளவு விழிப்பாயிருக்கிறார்களோ அதற்கு தக்கபடிதான் ஜனநாயகத்தில் கிடைக்கக் கூடிய நன்மைகளையும் உரிமைகளையும் ஜனங்கள் பெற முடியும். ஆகவே, ராஜீய வாதிகளாயிருப்பவர்கள் பொறுப்போடும் கண்ணியத்தோடு நடக்கும்படி ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அந்த நிலைமையை உண்டுபண்ணத்தான் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருகிறவர்கள் தங்களை அறிந்தோ அறியாமலோ முயற்சி செய்கிறார்கள். அதற்கு ஜனங்கள் இடம் கொடுக்கக்கூடாது. தாழ்ந்த நோக்க முயற்சிப்பவர் மீதும், மகாணத்தின் நன்மைக்காக உழைப்பதை தவிர வேறு வகையிலே நினைக்காதவர் மீதும், கடுகளவு கூட சுயநலம் இல்லாதவர் மீதும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதென்றால், இப்படிப்பட்ட குணமுள்ளவர்கள் பொறுப்பான பதவிகளில் இருக்கக்கூடாது என்பது நினைப்பா? அல்லது இந்த குணங்கள் இல்லாதவர்கள்தான் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் பிரஸிடென்டாய் இருக்க வேண்டும் என்பது

அதிருப்திகாரர்களின் எண்ணமா? அவர்களுடைய நினைப்பும் எண்ணமும் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இந்த பிற்போக்காளர்களுக்கு பொது ஜனங்கள் உதவி அளிக்கப் போவதில்லை என்பது நிச்சயம். அவர்களுக்கு தைரியம் இருந்தால், பொதுஜன கூட்டம் போட்டு ஆதரவு தேடட்டும் பார்க்கலாம். இந்த அதிருப்திகாரர்களின் பேச்சைக் கேட்டு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என்பது நிச்சயம். நம்பிக்கையில்லா தீர்மானம் என்ன கதியை அடையும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. ஆனால், இம்மாதிரி அதிருப்திகாரர்களின் அக்கிரமமான ராஜீய போக்கை கண்டித்து பொது ஜனங்கள் தடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகிறோம். —(16-4-47)

* * *

ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கை

ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்ற சிலர் செய்த முயற்சி ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கை இருக்கிறது என்பதில் வந்து முடிந்தது. பிரகாசம் மந்திரி சபையை ஆதரித்தவர்கள் சிலர் பிரஸ்தாப நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு பின்பலமாய் நிற்கிறார்கள் என்பதைபற்றி முன்பே எழுதி இருந்தோம். அந்த நபர்களுக்கு மெஜாரிட்டி ஆதரவு கிடைத்து பிரகாசம் மந்திரி சபை நிலைத்திருந்தமானால் இந்த மாகாணத்தின் கதி எவ்வளவு மோசமாய் போயிருக்கும் என்பதை இன்றைய குண்டூர் நிலைமையிலிருந்து அறிந்து கொள்ளலாம். வெளி ஜில்லாக்களுக்கு ஏற்றுமதி செய்யும் நிலைமையில் இருந்த குண்டூர் ஜில்லாவில் இன்று அரிசி கிடைக்காமல் ஜனங்கள் திண்டாடுகிறார்கள். ஏன்? பிரகாசம் காரு அதிகமாக கூட்டுறவு கொள்முதல் ஏற்பாடே இந்த மோசமான பஞ்ச

நிலைமைக்கு காரணம். நல்ல வேளையாக பிரகாசம் காரு பதவியை விட்டு நீங்கி புது மந்திரி சபை ஏற்பட்டதால் குன்றூர் பிழைத்தது. கூட்டுறவு கொள் முதல் ஏற்பாட்டை புதிய மந்திரி சபை உடனே ரத்து செய்ததால் அரிசி கொள் முதல் அதிகமாய் நடக்கிறது. ஜனங்களின் கஷ்டமும் குறைய ஆரம்பித்திருக்கிறது. இவ்வளவு பெரிய ஆபத்தை கொண்டு வந்து விட்ட பிரகாசம் காருவை ஆதரித்தவர்கள்தான் ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றவும் முயற்சித்தார்கள். பிரகாசம் மந்திரி சில காடுகளை ஏலத்திற்கு விட்ட விநோதங்களும், வியாபாரமே செய்திராதவர்களுக்கு கலெக்டர்களின் அபிப்பிராயங்களையும் மீறி நேரடியாக பெர்மிட்கள் கொடுத்த விசித்திரங்களும் அவசியம் வரும் போது பட்டவர்த்தனமாகும். இப்பேர்ப்பட்ட ஊழல்களுள்ள மந்திரி சபை வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவர முயற்சி செய்தார்கள்.

இந்த பேர்வழிகளுக்கு துணையாக மற்றொரு திருக் கூட்டம் இருக்கிறது. அவர்கள்தான் ஜில்லா போர்ட் பெருச்சாளிகள். ஸ்ரீ காமராஜ் பதவியில் இருந்தால் தங்களுக்கு ஜில்லா போர்ட் ஆதிக்கம் கிடைக்காது என்பது அவர்களின் நினைப்பு. அதனால் தான் ஜில்லா போர்ட் தேர்தல் கமிட்டியில் தங்களுக்கு ஸ்தானம் கொடுத்தால் தாங்கள் நம்பிக்கையில்லாத தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்று பேரம் செய்ய ஆரம்பித்தார்கள். இதிலிருந்தே எப்பேர்ப்பட்ட பேர்வழிகள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்தார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம். இவற்றிற்கெல்லாம் ஸ்ரீ காமராஜ் அசையவில்லை. நம்பிக்கையில்லா தீர்மானத்தை காங்கிரஸ் விதிப்படி அவர் பார்த்தால் அதை அனுமதிக்க முடியாதென்று ஸ்ரீ காமராஜ் சொல்லி தப்பித்துக் கொள்ளுவார் என்று அதிருப்திக்காரர்கள் பிரசாரம் செய்தார்கள். [illegible] பின்பற்று

கிறவர் பிரகாசம் காருவே ஆகும். அவருடைய சகவாச தோஷத்தால் அவருடைய சீடர்கள் அம்மாதிரி நினைக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அப்படி போகக் கூடியவர் ஸ்ரீ காமராஜ் அல்ல. ஆகவே நம்பிக்கையில்லா தீர்மானம் விதிப்படி அனுமதிக்கக் கூடியதல்லவானாலும், தம்மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை வோட் மூலம் பார்த்துவிட வேண்டும் என்று காமராஜ் அறிவித்தார். அதிருப்திகாரர்களுக்கு மெஜாரிட்டி தங்களுக்கு இல்லையென்பது நன்ருய் தெரியும். அதனால் தான் விதிப்படி நம்பிக்கையில்லா தீர்மானத்தை அவர்கள் அனுப்பவில்லை. ஆகவே ஸ்ரீ காமராஜின் அறிவிப்பு அவர்களை திணற வைத்துவிட்டது. அவர்களை நம்பிக்கையில்லா தீர்மானத்தை பற்றிய விதிகளை எடுத்துச் சொல்லி வோட் எடுக்க வேண்டியதில்லை என்று ஆட்சேபித்தார்கள். உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும் என்ற நிலைமை அவர்களுக்கு வந்து சேர்ந்தது. ஆனால் ஸ்ரீ காமராஜ் விடவில்லை.

நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்று பேச்சு வந்துவிட்டபடியால் வோட் எடுத்துத்தான் ஆகவேண்டும் என்று சொல்லிவிட்டார். வோட் எடுத்தபோது 183 பேரில் 119 பேர் ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கை இருக்கிறது என்று வோட் கொடுத்தார்கள். நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறவர்களை கையை தூக்கும்படி கேட்டபோது ஒருவர்கூட கைதூக்கவில்லை. இந்த விதமாக நம்பிக்கையில்லா தீர்மானப்படலம் முடிவு பெற்றது. தமிழர்கள் தங்கள் நிதான புத்தியை இழக்கவில்லை என்பதை ஸ்ரீ காமராஜ் மீது நம்பிக்கை இருக்கிறது என்று வோட் கொடுத்தது மூலம் மீண்டும் காட்டிவிட்டார்கள். எந்த பேய் பிரசாரத்திற்கும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் மெஜாரிட்டியாய் இருப்பவர்கள் அசையப்போவதில்லை என்பது தெளிவாய் விட்டது. எதிர் கட்சிக்காரர்கள் இத்துடன் தங்களுடைய எதிர்ப்பு வேலைகளை விட்டு விடுவார்கள் என்று எதிர்பார்க்

கிறோம். ஏனெனில் மேல் லோகத்தில் கழுதை கத்தினு லும் கூட பிரகாசம் காரு மீண்டும் பிரதம மந்திரியாய் வர முடியாது. எனவே அந்த உருப்படாத வேலையில் இனியும் ஊக்கம் காட்டுவதால் பயன் எதுவும் ஏற்படாது. இரண் டாவதாக காங்கிரஸ்காரர்களுக்குள் சச்சரவு போட்டுக் கொள்வதற்கு இது காலமல்ல. ஜில்லா போர்டும், முனிசி பாலிட்டியும், சட்ட சபையும், மந்திரி சபையும் பெரிய காரியங்களல்ல. தேசத்தின் விடுதலையே முக்கியமானது. விடுதலை அடையப் போகிற இந்த முக்கியமான சந்தர்ப்பத் தில் எல்லா காங்கிரஸ்காரர்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டும். சில்லறை அபிப்பிராய பேதங்களேயும், பொறாமையையும் மறக்கவேண்டும். சகிப்புத் தன்மையும், பணிவும், கட்டுப் பாடுமே இப்பொழுது வேண்டிய முக்கிய மான விஷயங்கள். எனவே நெய்க்கு தொன்னே ஆதாரமா தொன்னேக்கு நெய் ஆதாரமா என்ற விஷம்பரிட்சை செய் வதை இச்சமயத்தில் விட்டு விட்டு எல்லா காங்கிரஸ்காரர் களும் ஒற்றுமையுடன் வேலை செய்வார்களாக.

(23-4-47)

* * *

உணவு நிலைமை

நமது மாகாணத்து உணவு நிலைமை பற்றி அசெம் பிளியில் டாக்டர் ராஜன் செய்த பிரசங்கம் ரொம்ப தெளி வானது. தற்கால உணவு நெருக்கடிக்கு எத்தனே காரணங் கள் இருந்தாலும் அவைகளில் மூன்று காரணங்கள் முக்கிய மானவை. ஒன்று, உணவு கமிட்டிகள் பொதுவாக திருப்தி கரமாக வேலை செய்யவில்லை. மற்றொன்று, உற்பத்தி

யாளர்—வாங்குவோர் சங்கங்களில் பல படுத்து விட்டன. இன்னென்று, தானியங்கள் வைத்திருப்போர் பலர் சர்க்காருக்கு விற்பனை செய்யாமல் பதுக்கி விட்டார்கள். இந்த மூன்றும் பிரகாசம் கோஷ்டியின் திருவிளையாடல்கள் என்பதை கூசாமல் சொல்லலாம். டாக்டர் ராஜன் கொடுத்திருக்கும் கணக்குகளை பார்த்தால் இன்றிலிருந்து அக்டோபர் முடிகிற வரையில், அடுத்த மகசூல் நெல் வருகிற வரையில், நமது மாகாணத்திற்கு குறைந்தது இரண்டு லட்சம் டன் தானியம் வேண்டும். இது கிடைக்காவிட்டால் மாகாணத்தில் பஞ்சம் ஏற்படும். பஞ்சம் ஏற்படாமல் தடுப்பதற்காகத் தான் தற்கால மந்திரி சபை தீவிர முயற்சி செய்து வருகிறது. இவ்விஷயத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் காட்டும் தீவிரத்தையும், உறுதியையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. இரண்டு லட்சம் டன் தானியம் நமது மாகாணத்தில் இல்லையென்றால் அது வேறு விஷயம். டாக்டர் ராஜன் கொடுக்கும் கணக்குகளை பார்த்தால் இரண்டு லட்சம் டன் தானியம் நமது மாகாணத்தில் இருக்கிறதென்பது நிச்சயமாகிறது. அப்படியானால் அந்த தானியத்தை கொடுக்காமல் மிராசுதார்கள் ஏன் சண்டித்தனம் செய்கிறார்கள் என்று கேட்கலாம். இங்கேதான் ராஜீயம் தலை காட்டுகிறது. இந்த மந்திரி சபைக்கு சங்கடம் உண்டு பண்ணுவதற்காக அரிசியை விற்பனை செய்ய வேண்டாமென்று சில ஆந்திரர்கள் பிரசாரம் செய்கிறார்கள். மகன் செத்தாலும் சரி மருமகள் தாலியறுத்தால் போதும் என்ற மனோபாவமே ஆந்திர கோஷ்டிக்கு இருக்கிறது. நமது மாகாணத்தில் பஞ்சம் ஏற்பட்டாலும் சரி, தங்கள் கோஷ்டிக்கு மந்திரி பதவிகள் வேண்டும் என்று ஒரு சிலர் பிரசாரம் செய்வதைக் கண்டு மந்திரி சபை பின்வாங்கி விட முடியாது. அதனால் தான் அவசியமானால் பலாத்காரத்தை உபயோகித்தாவது பதுக்கல்களை வெளியே கொண்டு வருமே ஒழிய ஜனங்களை பட்டினியால் சாக விடமாட்-

டோம் என்று பிரதமர் கர்ஜித்தார். இவ்வளவு தைரியமாக வேறு எந்த பிரதம மந்திரியும் சொல்லியிருக்க மாட்டார். இந்த நெருக்கடியான சமயத்தில் ஓமந்தூர் ஸ்ரீ. ராமசாமி ரெட்டியாரை பிரதம மந்திரியாக பெற்றிருப்பது இந்த மாகாணத்தின் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

அதிக விலே கொடுத்தால் பதுக்கல் அரிசி வெளியே வந்து விடுமென்றும், நிர்ப்பந்த முறைகளை கையாளுவது அவசியமில்லே யென்றும் சில ஆந்திரர்கள் சொல்லுகிருர்கள். அதிக விலே கொடுக்க சென்னைசர்க்கார்விரும்பினுலும் இந்திய சர்க்கார் சம்மதிக்கவில்லே யென்று சர்க்கார் தரப்பில் சொல்லப்படுகிறது. தற்போதுள்ள விலேயை உயர்த்தக் கூடாதென்று இந்திய சர்க்கார் சொல்லுவதற்கு சரியான காரணம் இருக்கிறது. தற்சமயம் நமது நாட்டில் அகவிலேகள் எல்லாம் உயர்ந்து கொண்டே போகின்றன. அக விலே உயருவதால் சம்பளமும் அதிகரிக்கிறது. சம்பளம் அதிகரிப்பதால் மறுபடியும் அகவிலே உயருகிறது. இம்மாதிரி மாறி மாறி ஏறிக் கொண்டே போனுல் முடிவில் சர்வ நாசத்திலேயே வந்து முடியும். இதை தடுக்க வேண்டுமாளுல் அரிசி விலே குறைய வேண்டும். அரிசி விலே எப்படி இருக்கிறதோ அதை பொறுத்துதான் அகவிலேயும் இருக்கும். எனவே அகவிலே குறைய வேண்டுமாளுல், சம்பளம் குறைந்து உற்பத்தி செலவும் குறைய வேண்டுமாளுல், அரிசி விலே இறங்க வேண்டும். அரிசி விலே இறங்கினுல் தற்சமயமுள்ள அநேக பிரச்னைகள் தீர்ந்து விடும். இதற்கு என்ன செய்வது என்பதுதான் கேள்வி. அரிசி விலேயை உயர்த்தினுல்தான் அரிசியை அதிகமாய் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படுமென்றும், உற்பத்தி அதிகமானுல்தான் பஞ்சம் தீருமென்றும் சொல்லப்படுகிறது. உண்மைதான். பஞ்சம் ஏற்படாமல் தடுக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு தூரம் அகவிலே உயர்வால்

பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் தடுக்க வேண்டியதும் அவசியம். இந்த இரண்டையும் செய்து முடிக்கக்கூடிய வழிகளை பற்றியே யோசிக்க வேண்டும். அதற்கு விவசாய செலவை குறைப்பதுதான் சரியான வழி. அரிசிக்கு அதிகவிலை கொடுத்து வாங்கி குறைந்த விலைக்கு ஜனங்களுக்கு கொடுத்து நஷ்டப்படுத்துவதைவிட, அந்த நஷ்டத்தை விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களை மலிவான விலைக்கு கொடுப்பதில் செலவிடுவது புத்திசாலித்தனமாய் இருக்கும். அப்படி செய்தால் அரிசிக்கு அதிக விலை வேண்டுமென்று விவசாயிகள் கேட்க மாட்டார்கள். அதிக விலை கொடுப்பதால் அகவிலை அதிகரிப்பையும் இதனால் தடுத்து விடலாம். தவிர நஞ்சை நிலங்களில் தானியங்களை தவிர மற்ற பொருள்களையும் பயிரிடுவதற்கு கன்ட்ரோல் ஏற்படுத்த வேண்டும். இந்த இரண்டையும் செய்தால் செய்தால் நமது மாகாணத்தில் பஞ்சம் தலைகாட்டாமல் காப்பாற்றி விடலாம். பிறரை எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் ஏற்படாது. —(16-9-47)

* * *

அதற்கு யார் பொறுப்பு?

நெல்லை பதுக்கி வைத்திருப்பவர்கள் அதை உடனே கொடுத்து விடாவிட்டால் போலீஸைக் கொண்டு பதுக்கிய நெல்லை பலாத்காரமாக கைப்பற்றுவோம் என்று பிரதமர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் கூறினர். அப்படி பலாத்காரத்தை உபயோகிப்பதாக சொல்லலாமா என்று பிரகாசம் கோஷ்டியார் கூச்சல் போடுகிறார்கள். ஏன் உபயோகிக்கக் கூடாது? திங்கட்கிழமை சென்னை அசெம்பிளியில் உணவு

நிலைமை விவாதத்தின் போது பேசிய ஸ்ரீ தெனனேட்டி விஸ்வநாதம், பலாத்காரத்தை உபயோகிப்பதாக சர்க்கார் சொல்லக் கூடாது என்றார். அப்படி சர்க்கார் சொல்லுவதால் கிராமப்புறங்களில் சில்லுண்டி அதிகாரிகளின் அட்டகாசம் அதிகரித்து விடும் என்றும் கூறுகிறார். ஒரு வேளை கெடுபிடிகள் அதிகரிக்கக் கூடும் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு? ஜனங்களின் ஒத்துழைப்பை பெற்று அதன் மூலம் நெல் கொள்முதலை செய்வதுதான் சரி என்று ஸ்ரீ தென்னேட்டி சொல்லுவதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். கொள் முதலில் ஜனங்களின் ஒத்துழைப்பு பூரணமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சர்க்கார் எவ்வளவோ பாடுபட்டது. விவசாயிகள் நெல்லை பதுக்காமல் தானாக கொடுக்க வேண்டும் என்பதற்காகவே, மாகாணத்தில் உணவு நிலைமை எவ்வளவு நெருக்கடியானதாக இருக்கிறதென்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டி இச்சமயத்தில் உதவ முன்வரும்படியும் சர்க்கார் கேட்டுக் கொண்டார்கள். பதுக்கியவர்கள் கொடுத்து விடும்படி தூண்டுவதற்காகவோ போனஸ் கொடுப்பதென்றும் முடிவு செய்தார்கள். இவ்வளவிற்கும் அசையாமல் ராஜீய விஷமிகளின் பேச்சை கேட்டுக்கொண்டு நெல்லைப் பதுக்கி வைத்து கள்ள மார்க்கெட்டில் விற்று கொள்ளை லாப மடிப்பதென்ற விவசாயிகள் சில பகுதிகளில் இருப்பார்களானல் அதன் பிறகும் எந்த சர்க்கார் சகித்துக் கொண்டிருக்க முடியும்? பதுக்கிய நெல்லை பறிக்கா விட்டால் மக்கள் பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலைமை வந்துவிட்ட பிறகு பலாத்காரத்தை உபயோகித்து பறிப்பதை தவிர சர்க்கார் வேறு என்னதான் செய்ய முடியும்?

பிரகாசம் கோஷ்டியின் பேச்சைக் கேட்டு பதுக்கியவர்களுக்கு, சர்க்கார் பலாத்காரத்தை உபயோகிப்பதால் கஷ்ட முண்டானல், இந்த நிலைமையை உண்டாக்கிய

பிரகாசம் கோஷ்டினர்தான் அதற்கு பொறுப்பேயன்றி பிரதமர் கொண்ட உறுதி ஒருக்காலும் தவருக முடியாது. இந்த கஷ்டத்திற்கெல்லாம் யார் காரணஸ்தர்களோ அவர்கள் மீது சர்க்கார் முன்னுடியே கடுமையான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனல் சர்க்கார் பொறுமை காட்டி, மன்னித்து, சும்மா இருந்து விட்டது. இதற்காக பிரகாசம் கூட்டத்தினர் நன்றி காட்ட வேண்டியிருக்க, அதை விட்டு சர்க்கார் பலாத்காரத்தை உபயோகிக்கும் என்றது பெரிய குற்றம் போல தென்னேட்டி விஸ்வநாதம் பேசக் கிளம்பியிருப்பது மானங்கெட்ட செய்கை. கள்ள மார்க்கெட்டும் பதுக்கலும் எங்குமே இருக்கும்போது ஒரு பகுதியில் மாத்திரமே அது இருப்பதாக சர்க்கார் சொல்லுவது சரியா என்றும் அவர் தர்ம நியாயம் பேசுகிருர். அத்தகைய தீயவர்கள் எங்கும் இருக்கிருர்கள் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனல் எங்கே அதிகம் என்பதுதான் இப்பொழுது கேள்வி. உணவு மந்திரி டாக்டர் ராஜன் திங்கட்கிழமையன்று அசெம்பிளியில் வெளியிட்ட அறிக்கையில், காணும் புள்ளி விவரம் ஒன்றே அதைக் காட்ட போதுமானது. தமிழ் நாட்டில் தஞ்சை ஜில்லாதான் பெரிய நெல் உபரி ஜில்லா. 1946-47-ல் அந்த ஜில்லா 2,64, 200 டன் கொள் முதலுக்கு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்து. ஆகஸ்டு 31-ந் தேதிக்குள் 2,12,354 டன் அங்கு கொள் முதலாகி விட்டது. ஆந்திராவில் கிழக்கு, மேற்கு கோதாவரி ஜில்லாக்கள் கிருஷ்ண, குண்டூர், நெல்லூர் ஆகிய ஜில்லாக்களே முக்கியமான நெல் உபரி ஜில்லாக்கள். இந்த ஜில்லாக்கள் 7,45,300 டன் கொடுக்க வேண்டுமென நிர்ணயித்திருந்ததில் ஆகஸ்ட் 31-ந் தேதி வரையில் 4,77,433 டன் மாத்திரமே கொள் முதலாகி யிருக்கிறது. முந்திய வருஷத்தில் நிர்ணயித்ததை விட அதிகமாக கொடுத்த இந்த ஆந்திர ஜில்லாக்களில் இந்த வருஷம் சுமார் இரண்டே முக்கால் லட்சம்

டன் அரிசியை இன்னும் கொடுக்காமல் சண்டித்தனம் செய்கிறார்களென்றால் ஆந்திரர்கள் கள்ள மார்க்கெட்டும் பதுக்கல் வேலையும் அதிகம் கையாளுகிறார்கள் என்று சொல்லுவதில் என்ன தவறு? இவர்களிடமிருக்கும் இந்த நெல்லைப் பறித்தாலன்றி பட்டினிச் சாவு நேரும் என்ற நிலைமை இருக்கும்போது சர்க்கார் இதற்காக பலாத்காரத்தை உபயோகிப்பதென்பது எப்படி குற்றமாகும்? மக்களுடைய உயிரைக் காப்பதற்காக அக்கிரமக்காரர்கள் மீது சர்க்கார் பலாத்காரத்தை உபயோகிப்பதுதான் ஒரு நல்ல சர்க்காரின் கடமை. சர்க்காருக்கு சங்கடத்தை உண்டாக்க வேண்டுமென்பதற்காக சதி செய்தவர்கள் என்ன தான் கத்தினாலும் சர்க்கார் தனது கடமையை நிறைவேற்றிதான் தீரும். —(17-9-47)

* * *

ராஜாஜியின் உபதேசம்

ராஜாஜி சென்னையை விட்டு வங்காளம் புறப்பட்டு போகும் போது ஒரு செய்தி விடுத்திருக்கிறார். இப்பொழுது வேண்டிய ரொம்ப அவசியமான காரியம், நேர்மையானவும் திறமையானவுமான நிர்வாகம்தான் என்று ராஜாஜி கூறுகிறார். இதை நாம் பூர்ணமாய் ஆதரிக்கிறோம். இதை எதிர்ப்பவர்கள் யாருமே இருக்க முடியாது. அதிகாரிகள் நேர்மையாகவும் திறமையாகவும் தங்கள் வேலைகளை செய்ய ஆரம்பித்தால் இப்பொழுது ஜனங்களுக்கு இருக்கும் கஷ்டங்கள் வெகு தூரம் குறைந்துவிடும் என்று ராஜாஜி சொல்லுகிறார். இது முற்றிலும் உண்மை. விஷயம் என்ன வென்றால், அதிகாரிகளில் பெரும்பாலோர் ஆகஸ்ட் 15-ந் தேதி எற்

பட்ட மாறுதலை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. ஜனங்களை அடக்கி ஆளுவதற்கு பிரிட்டிஷார் எம்மாதிரி மனோபாவத்தை இந்த அதிகாரிகளிடம் உண்டுபண்ணி வைத்திருந்தார்களோ அந்த மனோபாவம் இன்னும் மாறவில்லை. இந்த தேசம் சுயராஜ்யம் அடைந்து விட்டது என்பதையோ தாங்கள் ஜனங்களின் சேவகர்கள் என்பதையோ, இந்நாட்டில் சிக்கனமான, திறமையான நிர்வாகம் நடைபெறும்படி செய்ய வேண்டியது தங்கள் கடமை என்பதையோ அவர்கள் உணர்ந்ததாக தெரியவில்லை. பழைய டம்ப தர்பாரையே இன்னமும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கீழ் அதிகாரிகள் மேல் அதிகாரிகளுக்கு சப்ளை செய்வது இன்னமும் நிற்கவில்லை. அந்த சப்ளைக்காக ஜனங்களை சுரண்டுவது இன்னமும் ஒழியவில்லை. மாமூல்கள் வாங்குவதும் கொடுப்பதும் இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவையெல்லாம் மாறாத வரையில் நேர்மையானதும் திறமையானதுமான நிர்வாகம் எப்படி ஏற்பட முடியும்? காங்கிரஸ் மந்திரிகள் எவ்வளவுதான் திறமையுள்ளவர்களாய் இருந்தாலும் மாமூலில், ஊறிப்போன அதிகார வர்க்கத்தின் போக்கு மாறாமல் இருக்கிற வரையில் புதிய கொள்கைகளை எப்படி திறமையாக நடத்தி வைக்க முடியும்? ராஜாஜியின் செய்தியை பார்த்த பின்பாவது அதிகார கோஷ்டியின் போக்கு மாறுமென்று நம்புவோமாக. அடுத்தபடியாக, ஜனங்களுக்கு சில உபதேசங்களை ராஜாஜி சொல்லுகிறார். சர்க்காரை நடத்தும் தலைவர்களை ஆதரித்து அவர்கள் சொல்லுகிறபடி நடக்க வேண்டுமே ஒழிய, தனிப்பட்டவர்களுடையவோ ஒரு வகுப்பினுடையவோ நன்மைகளை மட்டும் கவனிக்கும்படி அவர்களை திருப்ப முயற்சிக்க வேண்டாம் என்று ராஜாஜி கூறுகிறார். ராஜாஜியின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள்தான் இந்த உபதேசத்தை முக்கியமாக கவனிக்க வேண்டும்.

ஏனெனில் தற்கால மந்திரி சபை ஏற்பட்டதிலிருந்து அதை சகல விதங்களிலும் தூற்றுவதிலேயே சிலர் ஈடு பட்டிருக்கிறார்கள். ஸ்ரீ. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிரதம மந்திரியாக இருக்கிறார் என்பதை தவிர வேறு அதற்கு எவ் வித காரணமும் இல்லை. ஸ்ரீ. ரெட்டியார் ஏன் பிரதம மந்திரி யாக இருக்கக் கூடாது? ஸ்ரீ. ரெட்டியாரை போல நேர்மை யும், திறமையும் உள்ள வேறு ஒருவரை அவர்களால் காட்ட முடியுமா? அவற்றை பற்றி யெல்லாம் அவர்களுக்கு கவலை இல்லை. ஸ்ரீ. ரெட்டியார் பிரதம மந்திரியாக இருக்கக் கூடாது என்ற ஒரே நோக்கத்தில் சிலர் எதிர் பிரசாரம் செய்து வரு கிறார்கள். அவர் வகுப்புவாதி என்றுகூட பகிரங்கமாக தூற்றுகிறார்கள். மந்திரி சபை என்ன செய்தாலும் ஸ்ரீ ரெட்டி யாரை திட்டுகிறார்கள். ஒரு உதாரணம். இரண்டு ஐ. ஸி. எஸ். அதிகாரிகள் திறமையில்லாமல் நடந்து கொண்டார் கள். ஒருவர் செய்த செய்கைகள் சென்னை மந்திரி சபைக்கே பெரிய அவமானத்தை விளைவிப்பனவாய் இருந் தன. நல்லவேளையாக சரியான சமயத்தில் கண்டு பிடிக் கப்பட்டு அந்த அவமானம் நேராமல் தடுக்கப்பட்டது. மற் றொரு அதிகாரியின் நிர்வாகத்திலிருந்த இலாகாவை பற்றிய ஊழல்கள் சந்தி சிரித்தன. கோர்ட்டுகளிலெல்லாம் அடிபட் டன. இந்த அதிகாரிகளை அந்த வேலைகளிலிருந்து மாற்றி வேறு வேலைகளில் மந்திரி சபை போட்டது. நேர்மையான, திறமையான நிர்வாகத்தை விரும் புகிறவர்கள் இதை ஆதரித்திருப்பார்கள். ஆனால் சிலர் இதை எதிர்த்தார்கள். ஜாதி துவேஷம் இருப்பதாக பெயர் களை குறிப்பிட்டு பிரசாரம் செய்தார்கள். இம்மாதிரி பேர் வழிகள் ராஜாஜியின் உபதேசங்களை கேட்டு கடைத்தேறு வார்களாக. ஒவ்வொரு காரியத்திலும் ஜாதியை புகுத்து வதோ, ஜாதி நோக்கத்தோடு பார்ப்பதோ நேர்மையான, திறமையான நிர்வாகத்திற்கு உதவி செய்வதாகாது. யார்

மந்திரியாய் இருந்தாலென்ன? யார் பிரதம மந்திரியாய் இருந்தாலென்ன ? திறமையான நிர்வாகம் நடக்க வேண்டும் என்பதில் நோக்கமுள்ளவர்கள் ஜாதி பூசல்களைபுகுத்தக்கூடாது. ராஜாஜியின் உபதேசங்களை கேட்டபின்பாவது தமிழ் நாட்டில் ஜாதி பூசல்கள் குறையுமாக. —(17-10-47)

* * *

போலீஸ் இலாகா தகராறு

சென்னை மந்திரி சபையில் டாக்டர் சுப்பராயனிடம் போலீஸ் இலாகா இருந்தது. சில தினங்களுக்கு முன்னால் அந்த இலாகாவை பிரதம மந்திரி தம்மிடம் எடுத்துக் கொண்டார். இதைக் கண்டு டாக்டர் சுப்பராயனுக்கு மன வருத்தம் ஏற்பட்டிருப்பதாகவும், போலீஸ் இலாகாவை திரும்பவும் அவரிடம் கொடுக்காவிட்டால் அவர் மந்திரி பதவியை ராஜிநாமா செய்துவிடப் போவதாகவும் ஒரு வதந்தி உலாவிக்கொண்டிருக்கிறது, எந்த இலாகாவை வேண்டுமானாலும் தாம் எடுத்து கொள்ளவோ ஒரு மந்திரியிடமிருந்து மற்றொரு மந்திரிக்கு மாற்றவோ பிரதம மந்திரிக்கு பூர்ண அதிகாரமுண்டு. அம்மாதிரி இலாகாக்களை மந்திரி சபைகளில் மாற்றி அமைப்பது ரொம்ப சகஜம். அதற்காக யாரும் ராஜிநாமா செய்ததாக இதுவரை கேள்விப்பட்டதில்லை. ஆனால் அதற்காக ராஜிநாமா செய்ய வேண்டுமென்று எந்த மந்திரியாவது விரும்பினால் அவருக்கு அப்படி செய்ய பூர்ண சுதந்திரமுண்டு. ஒரு இலாகாவை கொடுக்காவிட்டால் ராஜிநாமா செய்து விடுவேன் என்று சொல்லுவது பயமுறுத்தலாகவே இருக்கும். அம்மாதிரி பயமுறுத்துவதோ, அந்த பயமுறுத்தலுக்கு

பணிவதோ நாட்டின் நன்மைக்கு அடுத்ததல்ல. டாக்டர் சுப்பராயனிடம் இன்று அனுதாபம் காட்டி போலீஸ் இலாகா மாற்றத்தை பிரமாதப் படுத்திக்கொண்டிருப்பது யார் தெரியுமா? அதுதான் ரஸமான விஷயம். மந்திரி பதவிகளுக்காக கெரட்டாவி விட்டுக்கொண்டிருக்கிறவர்கள், ஜமீன்தார் இனும்தார் மசோதாக்களை எதிர்க்கிறவர்கள், கள்ள மார்க்கெட்டுக்காரர்கள், ஜாதி துவேஷம் கொண்டவர்கள், டாக்டர் சுப்ராயனை மந்திரியாக எடுக்க கூடாது என்று முன்னல் ஆரவாரம் செய்தவர்கள் ஆகிய இவர்கள்தான் இன்று போலீஸ் இலாகா மாற்றத்தைப் பற்றி பிரமாதப் படுத்துகிறார்கள். இவர்கள் ஐக்கிய முன்னணி ஏற்படுத்திக்கொண்டு பெரிய புரட்சி வீரர்களைப் போல கூச்சல் செய்கிறார்கள். இவர்களுக்கு இதில் ஏன் இவ்வளவு சிரத்தை என்பதுதான் கேள்வி. தற்சமயமுள்ள மந்திரி சபையை கவிழ்த்து விட்டால் தங்களுக்கு அனுகூலமான மந்திரி சபை ஏற்படலாம் என்பதுதான் அவர்களுடைய அந்தரங்க நோக்கமே ஒழிய, டாக்டர் சுப்பராயனிடமுள்ள அபிமானமல்ல. இதை முதலில் டாக்டர் சுப்பராயன் தெரிந்துகொள்ள வேண்டும்.

சென்னை சட்ட சபை காங்கிரஸ் கட்சியில் ராஜாஜி கோஷ்டி என்று ஒன்றிருக்கிறது- ராஜாஜிக்கும் இந்த கட்சிக்கும் தற்சமயம் யாதொரு சம்பந்தமும் கிடையாது. அப்படியிருந்தும் இந்த கோஷ்டி இன்னமும் தனியாக கூட்டம் போடுவதும் பேசுவதுமாய் இருக்கிறது. புதன் கிழமை இரவு இந்த கோஷ்டி தனியாக கூடி போலீஸ் இலாகாவை மீண்டும் டாக்டர் சுப்பராயனிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்ததாம். டாக்டர் ராஜன் அந்த கோஷ்டியை சேர்ந்தவராய் இருந்தும் அவர் அந்த

கூட்டத்திற்கு வராதது குறிப்பிடத்தக்கது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களும் சொற்ப பேர்கள்தான். அவர்களிலும் பெரும்பான்மையோர் இனம்தார் மசோதாவை எதிர்ப்பவர்கள். சிலர் மந்திரி பதவிகளுக்காக ஏங்கி நிற்பவர்கள் இதிலிருந்தே அன்று கூடியவர்களின் அந்தரங்க அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த வீரர்களின் கூட்டத்தில் போலீஸ் இலாகாவை 18 மணி நேரத்திற்குள் திருப்பி கொடுக்கா விட்டால் டாக்டர் சுப்பராயன் ராஜிநாமா செய்துவிட வேண்டும் என்று கூட பேசினார்களாம். இந்த பயமுறுத்தல் சில பத்திரிகைகளில் பிரசுரமும் ஆய்விட்டது. இம்மாதிரி பிரசுரமாகும்படி செய்தற்கு இரண்டு காரணங்களே இருக்க வேண்டும். ஒன்று, செய்தி பிரசுரமான பின்பு போலீஸ் இலாகாவை திரும்பவும் பிரதம மந்திரி மாற்றினல், பயமுறுத்தலுக்கு அவர் பணிந்து விட்டார் என்று ஏற்படும். அதனல் பிரதம மந்திரியின் மதிப்பைக் குறைக்கலாம் என்பது ஒரு காரணம். போலீஸ் இலாகாவை மாற்றுவிட்டால் டாக்டர் சுப்பராயன் ராஜிநாமா செய்து விடுவார்; அதைக் கொண்டு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்பது மற்றொரு காரணம். இரண்டும் இந்த மாகாணத்தின் தற்கால நிலைமைக்கு பாதகமானவை. மாகாணத்தின் அமைதியை குலைக்க லீகர்கள் முயற்சி செய்யும் இச்சமயத்தில் தற்கால மந்திரி சபையை தகர்க்க யார் முயற்சி செய்தாலும் சரி அதை நசுக்க வேண்டியது ஜனங்களின் கடமை. இனம்தார் மசோதாவை எதிர்ப்பவர்களுக்கு தைரியமிருந்தால் தங்கள் சட்ட சபை அங்கத்தினர்கள் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு மறு தேர்தலுக்கு நிற்கட்டும் பார்க்கலாம். அதை விட்டு நகட்டு விஷமம் செய்தால் அதை ஜனங்கள் மறந்து விடமாட்டார்கள். இந்த சூழ்ச்சிகளிலெல்லாம் டாக்டர் சுப்பராயன் சிக்கமாட்டாரென்று நம்புகிறேம். —(28-11-47)

* * *

மீண்டும் பிரகாசம் காரு ?

மாஜி பிர்தமர் பிரகாசம் மீண்டும் பிரதமராவதற்கு கடு முயற்சி செய்து வருகிறார். எதற்காக தற்கால பிரதமர் போக வேண்டும், எதற்காக முன்னால் வெளியேற்றப்பட்ட பிரகாசம்காரு திரும்ப வரவேண்டும் என்ற கேள்விகள் பிறக்கின்றன. நிர்வாக திறமையிலோ, நேர்மையிலோ, நாணயத்திலோ பிரதமர் ராமசாமி ரெட்டியாரைவிட பிரகாசம் காரு சிலாக்கியமானவரென்றோ அல்லது சமமானவரென்றோ யாரும் சொல்ல முடியாது. பிரகாசம்காரு பிரதமராய் இருந்த காலத்தில் தமது பதவியை காப்பாற்றிக் கொள்ளுவதற்காக எத்தனையோ காரியங்களை செய்தார். எத்தனையோ பேருக்கு வேலை கொடுத்து சோம்பேறிகளாய் இருக்கும்படி செய்தார். பிரதமர் ரெட்டியார் அப்படி செய்வதில்லை. பிரதம மந்திரி பதவி இருந்தாலும் சரி போனாலும் சரி, ஜனங்களின் நன்மைக்கான காரியங்களையே செய்வேன் என்று பிடிவாதமாய் இருக்கிறார். அநாவசியமான சிப்பந்திகளை ஆயிரக் கணக்காய் வேலையிலிருந்து எடுத்து பொது ஜனங்களின் பணத்தை மிச்சப்படுத்தி வருகிறார். மாகாணத்தின் நன்மை எப்படி போனாலும் சரி தமக்கு ஆதரவு கிடைத்தால் போதும் என்ற நினைப்புடன் பிரகாசம் காரு வெள்ளையரையும் முஸ்லிம் லீகர்களையும் தட்டிக் கொடுத்து வந்தார். பிரதமர் ரெட்டியார் அப்படி செய்யவில்லை. முக்கியமான பதவிகளிலிருந்த வெள்ளையருக்கு சீட்டு கொடுத்துவிட்டு லீகர்களுக்கு புத்தி வரும்படி செய்திருக்கிறார். பிரகாசம் காரு மீது சென்ற வருஷம் நம்பிக்கையில்லா தீர்மானம் வந்த போது அதிலிருந்து தப்புவதற்கு சாம, தான, பேத, தண்டம் ஆகிய நால்வகை உபாயங்களையும் உபயோகித்தார். புதிதாக ஒரு மந்திரியை நியமித்தார். வேறு பலருக்கு மந்திரி பதவிகள் கொடுப்பதாய் உறுதி கூறினார். தமக்கு எதிராய் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக பயமுறுத்தி ஒரு விசாரணையை ஆரம்பித்தார். நம்பிக்

கையில்லா தீர்மானத்திற்காக கட்சி கூட்டத்தை கூட்டிய பின்பு, நம்பிக்கையில்லா தீர்மானத்தை பிரேரிக்க கட்சி விதிகளில் இடமில்லை என்று கூறி கூட்டத்தையும் கலைத்து விட்டு கூட்டத்திலிருந்து வெளியேறினர். மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் நிறைவேறிய பின்பும் பிரகாசம் காரு ராஜிநாமா செய்யாததை பார்த்து காரியக் கமிட்டி தனது அதிருப்தியை தெரிவித்தது. அச்சமயம் பிரகாசம் காரு என்ன சொன்னர் தெரியுமா?

மந்திரி சபை மீது அபிப்பிராயம் கூறுவதற்கு மக்களுக்குதான் அதிகாரம் உண்டே ஒழிய காரியக் கமிட்டிக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னர். பிரதமர் ரெட்டியார் இப்படியெல்லாம் சொல்லவில்லை. தமது பதவியை காப்பாற்றிக் கொள்ளுவதற்காக யாரையும் திருப்தி செய்ய அவர் தயாராயில்லை. மலையே புரண்டு வந்தாலும் சரி நியாயத்தை மீறி எதையும் அவர் செய்வதில்லை. அவர் இவ்வளவு கண்டிப்பாய் இருப்பதற்காக அவர் பிரதமராய் இருக்கக் கூடாதென்று யாராவது நினைப்பதாய் இருந்தால் நமது மாகாணத்தை அத்தகையவர்களிடமிருந்து கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். சென்ற வருஷம் பிப்ரவரியில் பிரகாசம் காரு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறியது. அதனல் சென்ற வருஷம் சட்டசபை காங்கிரஸ்கட்சி தலைவர் தேர்தல் நடந்தபோது ஸ்ரீ. ரெட்டியார் போட்டி போடவும் அவரை தேர்ந்தெடுக்கவும் அவசியம் ஏற்பட்டது. தற்சமயம் ஸ்ரீ. ரெட்டியார் மீது யாரும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற வில்லை. அப்படி இருக்கும்போது எதற்காக இருக்கிற பிரதமரை மாற்றி இன்னெருவரை போடவேண்டும்? இதுதான் புரியவில்லை. ஸ்ரீ. ரெட்டியார் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர யாருக்கும் தைரியமில்லை. இந்த நிலைமையில் அவரை பிரதமராய் இருப்பதிலிருந்து மாற்ற முயற்சிப்பது மாகாணத்திற்கே பெரிய கெடுதல் செய்வதாய்

இருக்கும். சென்ற வருஷம் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறிய பின்புகூட ராஜிநாமா செய்யாமல் ஸ்ரீ. பிரகாசம் சண்டித்தனம் செய்து கொண்டிருந்தார். சட்டசபையில் பகிரங்கமாய் நம்பிக்கையில்லா தீர்மானம் வரும் என்று தெரிந்த பின்புதான் ராஜிநாமா செய்தார். இவ்வளவு தூரம் சண்டித்தனம் செய்யக் கூடிய ஒருவரை மீண்டும் பிரதம ராக்க சிலர் முயற்சி செய்வதுதான் விசித்திரமாய் இருக்கிறது. நேர்மையாக நிர்வாகம் செய்து வரும் ஸ்ரீ. ரெட்டியாரே அடுத்த பொது தேர்தல் வரையில் பிரதமராய் இருப்பதுதான் இந்த மாகாணத்திற்கு ரொம்ப அநுகூலமானதோடு கூட அவசியமானதுமாகும். அதற்கு எதிராய் நடப்பவர்கள் இந்த மாகாணத்தின் நன்மையை கவனிக்காத சுய நல பேர்வழிகள் என்பதே தீர்மானமான முடிவு. எனவே, 26-ந் தேதி நடைபெறும் தலைவர் தேர்தலில் ஸ்ரீ. ரெட்டியாரே தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவாரென்று எதிர்பார்க்கிறோம். —(24-3-48)

* * *

தலைவர் தேர்தல்

இன்று நடைபெறும் சட்ட சபை காங்கிரஸ் கட்சி தலைவர் தேர்தலில் ஸ்ரீ பிரகாசம் போட்டிக்கு வருவதே அக்கிரமம் என்பதை முன்பே எழுதி இருக்கிறோம். ஸ்ரீ பிரகாசத்தை அம்மாதிரி போட்டி போடும்படி தூண்டி விட்டதே சில தமிழ் நாட்டு அங்கத்தினர்கள்தான் என்பது தான் வெட்கக்கேடான காரியம். இந்த தேர்தலில் ஸ்ரீ வைத்தியநாத ஐயர் போன்றவர்கள் வகுப்பு உணர்ச்சியினாலும் வேறு சிலர் மந்திரி பதவி மோகத்தினாலும் பிரகாசம் காருவை ஆதரித்தாலும் ஆந்திரா, தமிழ் என்ற மாகாண

உணர்ச்சிகிளம்பாமல்|இருப்பதை பாராட்டுகிருேம். ஆந்திர மாகாணம் தனியாக பிரிந்து |போவதை பற்றி தமிழருக்கு எப்பொழுதுமே ஆட்சேபணை இருந்தது ।கிடையாது. எனவே ஆந்திரா பிரிவினைக்கு பிரகாசம் காரு பிரதம மந்திரியாய் இருந்தால்தான் நடக்கும் என்பதில்லை. பிரகாசம் காரு பிரதமராய் இருந்தால்தான் சீக்கிரமாக பிரிவினை ஏற்படும் என்று யாராவது சொல்லுவதாய் இருந்தால், பிரகாசம் காரு முன்னல் பிரதமராய் இருந்த காலத்திலேயே பிரிவினை வந்திருக்க வேண்டும். எனவே ஆந்திரா பிரிவினைக்கும் பிரகாசம் காரு பிரதமராய் இருப்பதற்கும் சப்பந்தமே இல்லை. இதை ஆந்திரர்கள் நன்ருய் அறிந்திருக்கிருர்கள். அதனல்தான் பிரகாசம் காருவுக்காக வேலை செய்ய ஸ்ரீ ரங்கா வரவில்லை. அதனைல்தான் ஸ்ரீ ரெட்டியாரை முன்பு ஆதரித்த ஆந்திரர்களில் பெரும்பாலோர் இன்றும் ஸ்ரீ ரெட்டியாரையே ஆதரிக்கிருர்கள். எனவே ஆந்திரா—தமிழ் என்ற துவேஷ பிரசாரத்திற்கு இடமே இல்லாமல் போயிற்று. இந்த மகிழ்ச்சி தரும் நிலைமையை எல்லாரும் வரவேற்பார்கள். தலைவர் தேர்தலில் தற்சமயம் தோன்றி இருக்கும் மோசமான அறிகுறி சில தமிழரை பற்றி இருக்கும் பதவி ஆசையாகும். சென்ற வருஷம் பிரகாசம் காருவுக்கு விரோதமாக வோட் கொடுத்த தமிழரில் சிலர் இன்று பிரகாசம் காருவுக்கு சாதகமாய் இருக்க காரணமென்ன? பதவி ஆசையை தவிர வேறு எதுவுமில்லை.

எனவே மந்திரி பதவியோ பார்லிமென்டரி காரியதரிசி பதவியோ கிடைக்காவிட்டால் கட்சி மாறுவது என்று சிலர் இருக்கிருர்கள். இவர்கள்தான் தமிழ் நாட்டின் நன்மைக்கு முதல்தரமான துரோகிகள் ஆவார்கள். மாகாண நன்மை, மக்கள் நன்மை எதுவும் அவர்களுக்கு பெரிய காரியமில்லை. அவர்களுக்கு பதவி வேண்டும். அது கிடைக்காவிட்டால் யார் மீது வேண்டுமானலும், கடவுள் மீது வேண்டுமானலும் நம்பிக்கை இல்லை என்று வோட் கொடுக்க அவர்கள் பின்வாங்குவதில்லை. அவர்களுக்கு இருக்கும் வோட் உரிமை அவர்கள் சொந்த சொத்தல்ல. பல்லாயிரக் கணக்கான ஜனங்களே அவர்களை நம்பி கொடுத்து வைத்திருக்கும் பொக்கிஷமாகும்.

மாகாணத்தின் நன்மைக்காக உபயோகிப்பதற்காகவே அந்த பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் அந்த பொக்கிஷத்தை அவர்களிடம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த அரிய பொக்கிஷத்தை அவர்கள் சுய நலத்திற்காக உபயோகிப்பதென்றால், மந்திரி பதவிக்காக எல்லா கூறுவதென்றால், அந்த ஜனங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு துரோகம் செய்வதாகும். எனவே எவ்வித குற்றத்தையும் சுமத்த முடியாத தற்கால பிரதமருக்கு விரோதமாக யார் வோட் கொடுத்தாலும் அவர்கள் இந்த மாகாணத்திற்கு முதல் தரமான துரோகிகளாவார்கள். அத்தகைய துரோகிகளுக்கு தமிழ் நாட்டில் இனி பொது வாழ்க்கையில் இடம் கொடுக்க கூடாது. பிரதமர் ரெட்டியாருக்கு விரோதமாக இன்று யார் வோட் கொடுத்தாலும் சரி, அவர்கள் தமிழ் நாட்டு ராஜீய வாழ்க்கையில் இனி தலைகாட்ட முடியாதபடி செய்யவேண்டியது தமிழரின் முதல் கடமை. —(26-3-48)

* * *

ஸ்ரீ ரெட்டியார் வெற்றி

ஸ்ரீ ராமசாமி ரெட்டியாரே சட்டசபை காங்கிரஸ் கட்சிக்கு திரும்பவும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். பிரதமர் ஸ்ரீ ரெட்டியார் பெற்றிருக்கும் இந்த வெற்றி நேர்மையும் யோக்யப் பொறுப்பும் அடைந்திருக்கும் வெற்றி. ஸ்ரீ ரெட்டியார் தோற்றிருந்தால் அவருக்கு நஷ்டமே இல்லை. இம்மாகாண மக்களுக்குத்தான் அது சகிக்க முடியாத நஷ்டமாக இருந்திருக்கும். அவருடைய நேர்மையும், நிர்வாக திறமையும், யோக்யப் பொறுப்பும் இனி இருக்க

முடியாதோ என்ற பெரிய பயங்கரமான நிலைமையும் இம் மாகாணத்திற்கு உண்டாயிருக்கும். ஆகையால், இத்தேர் தல் முடிவை அறிய ஏராளமான ஜனங்கள் ராஜாஜி மண்டபத்திற்கு முன்னால் வெகு ஆவலுடன் காத்துக் கொண்டிருந்ததிலோ, ஸ்ரீ ரெட்டியாரே வெற்றி பெற்றார் என்பதைகேட்டதும் மக்கள் குதூகலமடைந்ததிலோ ஆச்சரியமே இல்லை. இந்த மாகாணத்தின் ஆட்சி அதிகாரம், பதவி வேட்டை பச்சோந்திகள் கைக்கும், பணஞ்சுருட்டிகள் கைக்கும், பொதுநல துரோகிகள் கைக்கும் போய்விடக் கூடாது என்ற அக்கறை உள்ளவர்கள் எல்லாருமே ஸ்ரீ ரெட்டியாரின் மந்திரி சபையே திரும்பவும் ஸ்திரமாக இருக்கப் போகிறதென்பது உறுதியானதை கேட்டு ஆனந்தப் படுவதுடன் ஆறுதலும் அடைவார்கள் என்பது நிச்சயம். அப்படியானால் இந்த மந்திரி சபையை தொலைத்து விட வேண்டும் என்று ஏன் சிலர் முயற்சித்தார்கள்? எதற் காக இவர்கள் ஒவ்வோர் சமயத்திலும் எப்படியாவது ஸ்ரீ ரெட்டியாரின் மந்திரி சபையை கவிழ்த்துவிட வேண்டும் என்று பாடுபட்டார்கள்? மாசற்ற ஸ்ரீ ரெட்டியாரையும் அவருடைய மந்திரி சபையையும் எதற்காக இந்த பதர்கள் நாக்கில் நரம்பில்லாமல் தூற்றியும் வந்தார்கள்? பிரகாசம் காரு மீது நம்பிக்கை இல்லை என்று போன வருஷம் தான் சட்ட சபை காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருந்தும் அதே பிரகாசம் காருவை சில தமிழ் நாட்டு அங்கத்தினர்கள் இந்த வருஷம் தூண்டி விட்டு ஸ்ரீ ரெட்டியாருக்கு போட்டியாக நிறுத்தி வெற்றியடைய பொய்யையும் புரளியையும் கொண்டு பகீரத பிரயத்தனம் செய்ததின் அந்தரங்கம் என்ன? இப்படிப்பட்ட துரோகிகளால் இனி மேலும் தொல்லைகள் ஏற்படாமலிருக்க வேண்டுமானால் இவர்கள்

இன்னுரென்பதையும் இவர்கள் நோக்கம் என்ன என்பதை யும் மக்கள் மனதில் வைத்திருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்.

புளுகும் புனைசுருட்டுகளும் ஜெயிப்பதென்பது இனி பலிக்காது. சுயநலக்காரர்களின் சதியோ அல்லது வகுப்பு வாதிகளின் வெறியோ நிறைவேற யாரும் விடப்போவதே இல்லை. என்ன குட்டிக்கரணம் போட்டுப் பார்த்தும் ஸ்ரீ ரெட்டியார் மந்திரி சபையை அசைக்க முடியவில்லை என்பதை கண்ட பிறகாவது அவர்களுக்கு இந்த உண்மை புரிந்திருக்குமானுல் சரி. இன்னும் புத்தி வராமல் திரும்ப வும் விஷமம் செய்து கொண்டிருக்கலாம் என்ற நினைவி லேயே இருப்பார்களானுல் அவர்கள் தமிழ் நாட்டு ராஜீய வாழ்க்கையில் இனி எக்காலத்திலும் தலைகாட்ட முடியாத படி செய்ய வேண்டியது தமிழர் பொறுப்பு. இக்கடமையை செய்ய தமிழர் தவறமாட்டார்கள் என்பது நிச்சயம். எவ்வ ளவோ தகிடுதத்தங்களும் தந்திரங்களும் நடந்திருந்தும் ஜன பிரதிநிதிகளான, காங்கிரஸ் சட்டசபை மெம்பர்களில் ஏராளமானவர்கள் ஸ்ரீ ரெட்டியாரையே திரும்பவும் தலைவ ராக தேர்ந்தெடுத்திருப்பதால் இந்த மந்திரி சபை மக்களின் பரிபூரண நம்பிக்கைக்கு பாத்திரமானது என்பது மீண்டும் உறுதியாகியிருக்கிறது. ஆகையால் இந்த மந்திரி சபையை யாராவது அக்கிரமமாக தூஷணை செய்தால், மானங்கெட் டத்தனமாக மந்திரி சபைக்கு விரோதமாக திண்ணைப் பிரசாரம் செய்வார்களானுல், அது மக்களை தூஷித்து அவர்களுடைய மந்திரி சபையை அவமதிக்கும் அட்டூழி யமே யாகும். தங்கள் மந்திரி சபையை இவ்விதம் துஷிப்ப வர்களை மக்கள் சகிக்கமாட்டார்கள் என்பது தெரிந்தாலே விஷமிகள் தாங்களே வாலை சுருட்டிக் கொண்டு விடுவார்

கள். துரோகிகள் தொலைவதற்கு இதுதான் முதல் வழி. சதிகாரர்களின் வலையில் சிக்காமல் உறுதியுடனிருந்து ஆட்சியில் ஒழுக்கமும் நேர்மையும் ஓங்க ஸ்ரீ ரெட்டியாரை மீண்டும் தலைவராக்கிக் கொண்ட 112 சட்ட சபை காங்கிரஸ் மெம்பர்களை பாராட்டுகிறோம். என்ன வந்தாலும், எதிரிகள் எவ்வளவுதான் சூழ்ச்சிகளை செய்தாலும், அவைகளையெல்லாம் சட்டை செய்யாது சத்தியநெறி ஒன்றிலேயே தீரமாக நின்று சத்தியமே ஜெயிக்கும் என்பதை நிரூபித்துக்காட்டி வெற்றி பெற்றிருக்கும் ஸ்ரீ ரெட்டியாரை வாழ்த்துகிறோம். —(27-3-48)

❋ ❋ ❋

குமாரசாமி ராஜா மந்திரி சபை

"அக்காலத்தில் வருஷா வருஷம் சட்ட சபை காங்கிரஸ் கட்சி தலைவரை தேர்ந்தெடுப்பது வழக்கம். . .1949 லும் தேர்தல் நடந்தது. இச்சமயம் ராஜாஜி கோஷ்டியும் பிரகாசமும் ஒன்று சேர்ந்து டாக்டர் சுப்பராயனை நிறுத்தினார்கள். ரெட்டியாருக்கும் காமராஜுக்கும் சுமுகமான உறவு அச்சமயம் இல்லை. அது மட்டுமல்ல, காமராஜ் கோஷ்டியிலிருந்து பலருக்கு ரெட்டியார் மீது விருப்பம் குறைந்தது. ரெட்டியார் தேர்தலுக்கு நின்றால் வெற்றி பெற முடியாது என்ற நிலைமை தோன்றியது. பக்தவத்

சலத்தை தலைவராக நிறுத்த வேண்டும் என்று காமராஜ் கோஷ்டியில் பலருக்கு விருப்பமாய் இருந்தது. இந்த விஷயத்தை ரெட்டியாருக்கு எடுத்துச் சொல்ல குமாரசாமி ராஜா, சி. சுப்பிரமணியம், நான் (டி. எஸ். சொக்கலிங்கம்) ஆகிய மூவரும் போனோம். ஆனால், பக்தவத்சலத்தை ஒப்புக்கொள்ள ரெட்டியார் மறுத்தார். மறுநாள் குமாரசாமி ராஜாவை தலைவராகப் போடுவதென்றால், தாம் விலகிக் கொள்ள தயார் என்று ரெட்டியார் தெரிவித்தார். அந்த ஏற்பாடு தமக்கு சம்மதம் என்று காமராஜ் என்னிடம் தெரிவித்தார். நானும் சி. சுப்பிரமணியமும் ரெட்டியாரிடம் விஷயத்தைச் சொல்லி அவர் சம்மதம் பெற்ற பின்பு, ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்த குமாரசாமி ராஜாவிடம் போய் தெரிவித்தோம். ராஜாவுக்கு அது பெரிய ஆச்சரிய மாய் இருந்தது. அவர் எதிர்பார்க்கவே இல்லை. இந்த காரியத்திலும் காமராஜின் ராஜ தந்திரம் வெற்றியை கொடுத்தது. ரெட்டியார் கோஷ்டியும் காமராஜ் கோஷ்டி யும் சேர்ந்து நின்றிருக்காவிட்டால், ராஜாஜி கோஷ்டியும் பிரகாசம் கோஷ்டியும் அன்று வெற்றி பெற்றிருக்கும்.”

—(“காமராஜ்” என்ற நூலில் பேராசிரியர்).

* * *

முடிவுரை

1952 பொதுத் தேர்தலுக்குப் பிறகு ராஜாஜி மந்திரி சபை ஏற்பட்டது. சுமார் இரண்டாண்டு காலம் ராஜாஜி மந்திரி சபை நடந்து இறுதியில் கவிழ்ந்தது. அப்படி கவிழ்ந்ததற்குரிய காரணங்களை சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், ராஜாஜி அடிக்கடி 'பிராமணர்-சூத்திரர்' என்ற வார்த்தைகளை உபயோகித்து வந்ததும், "நான் பிராமணன், என் வார்த்தையை கேளுங்கள்" என்று உபதேசித்து வந்ததும், வேலையிலிருந்து விலகிய பிராமணர் பலருக்கு மீண்டும் சர்க்காரில் பதவிகளைக் கொடுத்தும், கலாசாலைகளில் பிராமணரல்லாதாருக்கு ஒதுக்கி வைத்திருந்த ஸ்தானங்களை ரத்து செய்ததும், எல்லாவற்றிற்கும் மேலாக அவரவர்கள் ஜாதித் தொழில்களை அவரவர்களே கற்க வேண்டும் என்று அழுத்தமாகச் சொல்லி, "குலக் கல்வி திட்ட'த்தை தம்கட்சியின் அனுமதியில்லாமல் கொண்டுவர ஏற்பாடு செய்ததுமாகும் என்பதை அனைவரும் அறிவர்.

பிறகு தலைவர் தேர்தல் நடந்து, தவிர்க்க முடியாதபடி காமராஜ் அவர்களை முதலமைச்சராகி, இன்று வரை ஸ்திரமான மந்திரி சபை அமைப்புடன் நாடாளும் பொறுப்பில் இருந்து வருகிறார். காமராஜ் பதவி ஏற்றது முதற்கொண்டு ராஜாஜி ஆதரவாளர்கள் குறிப்பாக ஒரு வகுப்பார் எவ்வளவு கீழ்த்தரமான அபிப்பிராயங்களை கூறிவந்துள்ளனர் என்பதையும், எவ்வளவு சிறுமைப்படுத்தி பேசி வந்துள்ளனர் என்பதையும் நாம் இங்கே குறிப்பிடத் தேவையில்லை. அவற்றையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள்நன்கறிவர்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில்தான் ஜாதி ஆணவமும் ஆதிக்க ஆசையும் எந்த அளவுக்கு தமிழ் நாட்டில் தலை தூக்கி நின்றன என்பதை நாம் தெளிவாகக் கண்டோம். இவற்றையெல்லாம் நாம் ஆழ்ந்து நோக்குவோமானால், இம்மாதிரி பிணக்குகளுக்கெல்லாம் மூல காரணம் எந்த தனி நபரும் அல்ல என்பதையும், நம்முடைய சமூக அமைப்பிலுள்ள மேல்-கீழ் என்கிற ஜாதிப் பிரிவினைகளே என்பதையும் தெளிவாகக் காணலாம்.

எனவே, இந்த ஜாதி அமைப்பை அடியோடு தகர்த்து நிர்மூலமாக்கும் ஒரு சோஷலிஸ அமைப்பை காண்பதற்கு தமிழ் மக்கள் தங்கள் அறிவையும் ஆற்றலையும் பயன் படுத்துவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அன்பன்,

மயிலைநாதன்

அட்டவணை

[கவனிக்க: இந்நூலில் 'பிரதம மந்திரி' என்கிற வாச
கள் முதல் மந்திரியை குறிப்பிடுவனவாகும். அன்
அப்படித்தான் குறிப்பிட்டு வந்தார்கள்.—தொ. ஆ.]

Anelly
6 6 86

Wrapper Printed at
GNANODAYA PR
11, Anderson St., Mac